॥ ओ३म् ॥

॥ श्रीभगवद्गीता ॥

ஸ்ரீ பகவத்கீதை.

॥ कर्मगीता ॥

கர்மகீதை.

॥ सप्तश्लोकीगीता ॥

ஸப்தசுலோகிகீதை.

122 1/18 118 148 68

பிரஹ்மநிஷ்டபண்டித
தஞ்சை ஸ்ரீகுப்புஸ்வாமிராஜூ என்னும்
பூர்வாசிரமநாமம்பூண்டிருந்த
ஸ்ரீ பிரஹ்மாநந்தஸ்வாமிகளால்
மொழிபெயர்க்கப்பட்டு

தஞ்சை ஸ்ரீசங்கரவிலாசசாரதாமந்திர பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

ருதிரோத்காரி௵] 1923. [சித்திரை மீ

Copy-Right-Registered.

रर वसु पद बाविस ज्या वेद स्तन शोभती शिरें सात ।
पुच्छें पांच अयाला स्मरतां दे मुक्ति अल्प दिवसांत ॥

மெழில் வசுவ தாகக் கால்களைல் இருத்தி ரர்தா
ருமடங் காக வெய்தி யெழின்மறைத் தனங்க ளா
முய ரிருடி யாகச் சிறந்தவாற் பாண மாக [கச்
ஆறு மதனை யுன்னி லுயர்கல மளிக்கு மாசே.

தத்ஸத்ப்ரஹ்மணே நம

ஸ்ரீ பகவத்கீதைவ

முகவுரை.

இங்கு அசாரமான சம்சாரத்தில் பரமகல்யாண சாதனமாகிய பகவத்விஷயக்ஞானத்தினைப் பெறுவிப்பதான ஸ்ரீமத்பகவத்கீதை சகல புருஷார்த்த சாதனத்தன்மையால் செவ்வையாய்ப் பிரகாசிக்கின்றது. இது ஸ்ரீ பகவானால் திருவாய்மலர்ந்தருளப்பட்டதாய், சகல உபநிஷத்துகளிலும் பிரதிபாதிக்கப்பட்டுள்ள அர்த்தங்களின் சாரபூத

மாய், எவ்விடத்தும் மேலாக விளங்குவதாய் மிகப் பிரசித்தி பெற்றுளது. இது வேதத்தின் உபப்பிரஹ்மணமாயிருத்தலால் இதற்கு முன்னோர்களான பகவத்பூஜ்யபாத ஸ்ரீசங்கராசாரியர் முதலிய அவதாரபுருஷர்களாலும், பின்னோர்களான ஸ்ரீதரர் முதலிய பெரியபெரிய வித்வான்களாலும், மற்றும் இராமானுஜாசாரியர் முதலிய பிறராலும் சம்ஸ்கிருதத்தில் அநேக வியாக்கியானங்கள் செய்யப்பட்டுள்ளன. அன்றியும் இக்கீதை உலகத்திலுள்ள அநேக பாஷைகளில் உரையெழுதப்பட்டும் மொழிபெயர்க்கப்பட்டுமுளது. இத

…गवद्गीतेची — ஸ்ரீபகவத்கீதை அம்மை.

இத்தகைய பரமப்பிரமாணமாகிய இந்நூல் தமிழிலும் கத்திய
பத்தியரூபமாகவும் உரைகளுடனும் பலவாக வெளிப்பட்டு
ளது. அவையாவும் பற்பலவிதமாய் விரிந்தும் சுருங்கியும்
சில மூலத்திற்கு முரண்பட்டும் மூலசுலோகத்தின் அபிப்பிரா
யத்தை இஃதுவென நிச்சயத்திற்குப் போதுமானவைகளாயி
ல்லாமையைநோக்கி, தஞ்சை ஸ்ரீபிரஹ்மாநந்தஸ்வாமிகள் சம்ஸ்
கிருதத்திலுள்ள பாஷியாதி பல வியாக்கியானங்களைத் தழுவி,
இக்கீதையின் சுலோகங்கட்கு அத்தியந்தம் நேராக மந்தரு
ம் உணரத்தக்க எளிய தமிழ்நடையில் முமுக்ஷுக்களுக்கு
உபயோகமாமாறு வசனரூபமாகத் தமிழில் மொழிபெயர்த்த

ருளினர். கீதாபடனமுதலியவற்றின் பயனும் மாகாத்மியமும் வராகம் பத்மமுதலிய புராணங்களாலும் உலகத்துள்ள வித்துவச்சிரேஷ்டர்களால் பலபாஷைகளாலும் கூறப்பட்டிருத்தலின் பிரசித்தமேயாம். ஆதலால் கீதையினைப் பாராயணஞ்செய்யவும் அதன்சரியான பொருளைத் தெரிந்துகொள்ளவும் தமிழர்கட்கு இந்நூல் மிக்க உபயோகமுள்ளதாயிருத்தல்கருதி, இதனைச் சட்டைப்பையில்வைத்துக்கொள்ளத்தக்க சிறிய அளவினதாகதேவநாகர எழுத்தில் மூலசுலோகங்களுடன் அச்சிட்டு, இதன் முகப்பில் ஸ்ரீமத் ஸ்வாமிகள் இயற்றியருளிய ஸ்ரீபகவத்கீதாசம்பந்தியான அத்தியாத்மபிரசங்கத்தினை விளக்கும்

ரூபகாலங்காரமும் சேர்க்கப்பட்டுளது. அதில் திருதராஷ்டிரன் முதலியோர் யாவரும் தத்துவசொரூபமெனக் காட்டப்படுதலின் பாரதகதையினால் தத்துவசிந்தனம்பண்ணிச் சுலபமாய்த் திடஞானம் பெறுதற்கு ஏதுவாக அமைந்துளது.

இதில் **கர்மகீதை, ஸப்தசுலோகிகீதை**களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இது சர்வசுருதிசாரமாயிருத்தலால் புக்தி முக்தி காமிகள் யாவருக்கும் அத்தியந்த முபயோகமுள்ளதெனக்கருதி நித்தியம் பாராயணஞ் செய்வதற்கும் மூலசுலோகங்களோடு அவற்றின் பொருளை நேராய் அறிவதற்கும் யோக்கியமாகத்

தஞ்சை பிரஹ்மநிஷ்டபண்டித ஸ்ரீ வி. குப்புஸ்வாமி ராஜு என்னும் பூர்வாசிரமநாமம் பூண்டிருந்த ஸ்ரீபிரஹ்மாநந்த ஸ்வாமிகள் மொழிபெயர்த்தருளிய தமிழ் வசனத்துடன் பகவத்கீதாகதாசம்பந்தியான அத்தியாத்மப்பிரசங்க ரூபகாலங்காரமும் சேர்த்து சிறிய பாக்கெட் சைஜில் அச்சிட்டுளது. இதன் முகப்பிலுள்ள ரூபகாலங்காரமோபாரதகதை வாயிலாகத்தம்முள் தத்துவார்த்தங்களை எளிதில் அநுசந்திக்க அத்தியந்தவுபயோகமுள்ளதாம். மிக அருமையானது.

தூத்துக்குடி ரா. மா. கம்பேனி மகா-ள-ள-ஸ்ரீ கோ. சுந்தரம்பிள்ளை அவர்களால் ரூ 400 உதவி செய்யப்பட்டது.

☞ சு. பாக்கியம் பிள்ளை, மானேஜிங் டிரஸ்டி.

உ

சிவமயம்.

சிறப்புக்கவி.

தஞ்சாவூர் பிரஹ்மஸ்ரீ சதாவதானம்
சுப்பிரமணிய ஐயர் அவர்களியற்றியது.

விருத்தம்.

பஞ்ச பாண்டவர் தம்மு ணடுவனும்
பார்த்தன் சோர்ந்துகை விட்ட தருவதைத்
துஞ்ச லின்றி மீட்டுந்தொடக் கண்ணன்முன்
சொற்ற கீதையத் தியான்மிக மெய்ப்பொருள்

சிறப்புக்கவி.

விஞ்சு ரூபகா லங்காரத் தான்முத்தி
வீட்ட கத்தை யலங்கரித் திட்டனன்
தஞ்சை வாழ்பிர மாநந்த யோகியாந்
தத்து வப்பொரு டோர்ந்தசஞ் ஞானியே.

ஓம்.

தத்ஸத்ப்ரஹ்மணே நம:

ஸ்ரீபகவத்கீதாசம்பந்தியான

அத்யாத்மபிரசங்கத்தினை விளக்கும்

ரூபகாலங்காரம்.

மங்கலம்.

பத்திதரு முத்திதரும் பலகாலு மேத்தினர்க்குஞ்
சித்திதரு ஞானத் திருவளிக்கு—மத்திமுகன்
றுங்க முனிவோர்க ளேய வுளக்கமலந்
தங்குந் திருவடிக டாம்.

பாகியப் பிரபஞ்சமாகிய தபோவனத்திலும் மனுஷ்ய தேகமாகிய ஹஸ்தினபுரத்திலும் கிரமமாகச் சுத்தசத்துவ குணப்பிரதான மாயாமயப் பிரகிருதியின் பாகவடிவ கன்னிப்பருவமுள்ளசத்தியவதியினிடத்து ஜகத்தின் அத்தியக்ஷரான பிரஹ்மசேதனவடிவ பராசரரின் பிரதிபிம்பவடிவ ஈசுவரரூப வியாசரும், ஜாக்கிரசொப்பனங்களில் புத்தி ரூபமாகப்பரிணமிக்கும் அவித்தியாமயப் பிரகிருதியின் பாகவடிவ பக்குவமடைந்தசத்தியவதியினிடத்தில் தேகமாகிய புரத்தின் அத்தியக்ஷனான கூடஸ்தசேதனவடிவ மனிதத்தன்மையால் பராசரரின் அபின்னனான சந்தநு என்பவனது

பிரதிபிம்பவடிவ ஜீவரூப சித்திரவீர்யன் என்னும் புத்திரனும் பிறந்தார்கள். சித்திரவீர்யனுக்கு இரண்டு இராணிகளும் ஒரு தாசியும் இருந்தார்கள். அச்சீவரூபசிதாபாஸமய சித்திரவீர்யன் சுழுத்தி மரணம் மூர்ச்சை முதலிய அவஸ்தையில் புத்தியாகிய உபாதியின் விலயத்தால் நாசமாக. முற்கூறிய சத்தியவதீமாதாவின் இச்சையாகிய ஆஞ்ஞையினாலும் பதி பிரியப்பெற்றதோஷதிருஷ்டிவடிவ கங்கையில் கூடஸ்தசேதனவடிவ சந்தநுவினின்றும் பிறந்த விராகத்தின் மந்தத்தன்மைவடிவ பீஷ்மரது பிரேரணையினாலும் ஈசுவரவடிவ வியாசரால் ஜீவனாகிய பிராதாவின் ஸ்திரீகளிடத்தில் மூன்று புத்திரர்களுண்டானார்கள்.

அங்குச் சுழுத்தியவஸ்தையாகிய வீட்டில் வசிப்ப வளான தாமஸீ திரவ்யசக்திவடிவ மூடியகண்களுடைய இராணியினிடத்தில் சத்ஸங்கமும் விவேகமுமான இரண்டு நேத்திரங்களுமில்லாத அவிவேகத்தின் பரியாயமான மோக மய சாக்ஷியாகிய ஆத்மாவோடு பிரமஜதாதாத்மியமு டைய அகங்காரமாகிய அந்தக்கரணத்தின் பரிணாமஸ்வரூப வடிவ ஜேஷ்டபுத்திரனான திருதராஷ்டிரன் உண்டானான்.

உ. ஜாக்கிரதவஸ்தையாகிய வீட்டில் வசிப்பவளான இரண் டாவது கிரியாசக்தியாகிய இராஜஸக்கிரியாரூப வெண்மை நிறத்தோடுகூடிய இராணியினிடத்தில் இரஜோகுணப்பிர

ஞானமாகிய வியவகாரநிபுணமனேமைய அந்தக்கரணத்தின் பரிணாமவடிவ மத்ஜியமபுத்திரனை பாண்டு உண்டானன். விக்ஷேபத்தினைச் செய்யும் இரஜோகுணத்தினால் தமோ குணம் அமிழ்த்தப்படுதலின் அந்தப் பாண்டு முதலில் ஜாக் கிராவஸ்தாதிகாலத்தில் இராஜ்யத்திற்கு அதிகாரியானன். பின்னர்ச் சுழுத்தியாதிகாலத்தில் இரஜோகுணம் விலயமா கத் தமோகுணத்தின் வலியால் தமப்பிரதானரூபபோக்தா வாகிய அகங்காரவடிவ திருதராஷ்டிரன் ராஜாவானன். அவன் சாத்துவிகீபுத்திவிருத்தியின் காரியமான உபசார மாகச் சொல்லப்படும் பாண்டுவின் புத்திரரான பதார்த்த

சோதனாதி சாதனவடிவ பாண்டவர்களை வலியற்றவர்களாகக்கண்டு, அவர்களது பிரஹ்மாத்மாவின் ஏகத்துவமய இராஜ்யமாகிய பாத்தியத்தைச் சுவாதீனமாக்கிக்கொண்டான். மற்றும், ௩, ஸ்வப்னாவஸ்தையாகிய வீட்டில் வசிப்பவளான மூன்றாவது ஞானசக்திவடிவ வஸ்திரபூஷண உற்சாகங்களோடுகூடிய இராஜதாசியினிடத்தில் சத்துவகுணப்பிரதான ஹரிஸ்மரணமயதர்மமுடைய சித்தரூப அந்தக்கரணத்தின் பரிணாமவடிவ கநிஷ்ட புத்திரனான பக்தனும் தர்மாவதாரனுமாகிய விதுரன் உண்டானான். அவன் திருதராஷ்டிர ராஜாவுக்கு நற்புத்தி சொல்லும் மந்திரியானான்.

அவனுக்குப் பகவானிடத்தில் பக்தி(பிரீதி)வடிவ் மனைவி யிருந்தாள். அந்தத் திருதராஷ்டிரனுக்கு இரண்டு ஸ்திரீ கள் இருந்தனர். ஒருத்தி, ஜீவப்பிரஹ்மஐக்கியத்தின் அசம்பவவடிவ சுபல ராஜாவினால் பேதவாதிகளின் சம்பந்த வடிவமாதாவினிடத்தில் உண்டானவளும், பேதஞானமா கிய சூதில் சமர்த்தனும், மனனவடிவ சகதேவனால் பேதத் தைப் பாதிப்பனவும் அபேதத்தைச் சாதிப்பனவுமாகிய எண்ணிறந்த யுக்திவடிவ சஸ்திரங்களால் தனதுள்ளிருக் கும் பேதசமூகவடிவ சைனியங்களோடு நாசமாகத்தக்க வனுமான பிரமேயகதசம்சயவடிவ சகுனியின் தங்கையும்,

மூடத்தன்மையாகிய கண்மூடுதலையுடையவளும், முற்கூறிய பதியினைவிட வீவேகவடிவ அந்நியபுருஷனை ஒருபோதும் பாராதவளும், தனது திருஷ்டியினால் துரியோதனனை அரைத்தலமொழிந்த மற்றையவெல்லா அங்கங்களாலும் திடமாக்குகிறவளும் பதிவிரதையுமான இராஜஸகோர விருத்திவடிவ காந்தாரியாவள். மற்றவள் பேததிருஷ்டி வடிவ வைசியை. இவ்விருவரும் மனைவிகளானார். அவர்களுள், அக்காந்தாரியினிடத்தினின்றும் ஞானவடிவ பீமனால் பெரும்பாலும் நாசமாகத்தக்க [க] விபரீதஞானமய விபரீதவடிவ துரியோதனன், [உ] காமவடிவ சித்திரசேனன்,

[௩] குரோதவடிவ துர்முகன், [௪] உபாதிவடிவ துரௌபதியினை விக்ஷேபப்படுத்தும் மகாபாவியான லோபவடிவ துச்சாஸனன், [௫] பிரமாதவடிவ விகர்ணன் என்பவர் முதலிய ஆசுரிசம்பத்திமய இராஜஸ தாமஸ மனதின் பரிணாமவடிவ நூறு புத்திரர் உண்டானார்கள். அன்றியும், சற்சங்காதிப் பிரசங்கத்தில் வருவதான நித்திரையினாரம்பத்திலுண்டாம் ஆலசியமய தந்திரையென்னும் பரியாயமுள்ள சோம்பல் வடிவ ஜயத்ரதனுடைய பத்தினியாகிய நித்திரைவடிவ துச்சலை யென்னும் ஒரு கன்னிகையும் உண்டானாள். இரண்டாமவளான பேததிருஷ்டிவடிவ வைசியாஸ்திரீயினிடத்

தில் பயவடிவ் யுயுத்ஸு என்னும் புத்திரன் உண்டானான். அத்திருதராஷ்டிரனுக்கு விதுரன் மந்திரியும் சாத்துவிக பரிணாமவிசேஷவடிவ சஞ்சயன் சாரதியும் ஆனார்கள். அவ்விருவரும் அவனுக்கு நற்புத்தி சொல்லுங்கால் பாண்டவர்களுக்குச் சிறிது அநுகூலமுண்டாகிறது; அந்தச் சகுனி கர்ணன் முதலிய துர்புத்தி மந்திரிகள் துர்புத்தியைப் போதிக்கும்போது அவற்றினும் பிரதிகூல முண்டாகிறது. (க) மனதோடுகூடிய பதினொரு இந்திரியங்களின் வழியாய் வெளிப்பட்ட சாஸ்திரசம்ஸ்காரமின்றிச் சுபாவிகமான இராஜஸமாகிய கோரமும் தாமஸமாகிய மூடமுமான எண்

ணிறந்த அந்தக்கரணத்தின் பரிணாமங்களது பதினொன்றின் சமூகம் ஆசுரிசம்பத்திமய பதினொரு அக்குரோணிக் கணக்குள்ள திருதராஷ்டிராபுத்திரர்களான துரியோதனாதியருக்குச் சகாயஞ்செய்யும் சேனையாயிற்று.

அச்சேனையின் எட்டுநாயகர்களைக் கூறுவாம்:—

[க] லெளகிகவைதிகவிசாரமாகிய சஸ்திரவித்தையின் சிக்ஷகரும், தைவஆசுராபரிணாமவடிவ கௌரவர் பாண்டவரிருவர்களதுபக்ஷத்திருப்பவரும், நிஷ்காமதவமாகிய அக்னிகுண்டத்தினின்று வெளிப்பட்டவரும் அப்பாண்டவர்களோடு சம்பந்தவடிவ விவாகத்திற்கு முன் ஜிஞ்ஞாஸை (ஞானவிருப்ப)

வடிவினளாயிருந்து பின்சாந்தியின் பரியாயமான உபரதிரூப மானவளும், போதவடிவ அர்ஜுனனிடத்தில் விசேஷமான பிரீதி யுள்ளவளும், அப்பஞ்சபாண்டவர்களான பார்த்தாக் களை வரித்தவளுமான துரௌபதியோடு அவ்வக்னிகுண் டத்தினின் றுண்டானவனும் தோஷதர்சனஜந்திய அபர (அதிட) வைராக்கியவடிவ துருபதனது புத்திரனுமான வா சனாக்ஷயவடிவ திருஷ்டத்யும்னனால் நாசமாகத்தக்கவரு மான விவேகத்தின் மந்தத்தன்மைவடிவ துரோணாசாரியர். [உ] முற்கூறிய துருபதனுடைய இரண்டாவது புத்திரனும், முதலில் விவேககாலத்தில் விஷயங்களில் பரோக்ஷமித்தியா

புத்திவடிவ துருபதனது பத்தினியிடத்தில் அதிடவிரக்தி வடிவ புத்திரித்தன்மையால் வெளிப்பட்டு, பின் போதகாலத்தில் கூறப்பட்ட அர்ஜுனனது புண்ணியரூபபாக்கியத்தினுலுண்டாகிய பிரபஞ்சத்தினது அபரோக்ஷமித்தியாத்தன்மையின் நிச்சயமயமான ஸ்தூணகர்ணயக்ஷனால் பா (திட) வைராக்கியத்தன்மைவடிவ புருஷத்தன்மையினை யடைந்தவனுமான சிகண்டியோடு திடஜீபாதவடிவ அர்ஜுனனால் நாசமாகத்தக்கவரும், தைவாசுரஉபயபக்ஷபாதியும் கூடஸ்தரூபசந்தநுவினின்றும் வியோகமடைந்த (மந்த) தோஷதிருஷ்டிவடிவ கங்கையினிடத்தில் பிறந்தவருமான வைராக்கி

யத்தின் மந்தத்தன்மைவடிவ பீஷ்மர். [ரு] மந்த முமுக்ஷுத்தன்மைவடிவ சூரியனால் சாத்துவிகபுத்திவடிவ குந்தியினிடத்தில் உற்பத்தியானவனும், மோக்ஷசாதனவடிவ சுப கர்மங்களில் பிரவிருத்திக்கு ஏதுவும், மூவித சாஸ்திர வாசனையும், நால்வகைத் தேகவாசனையுமாகிய சகிகளிடத்திலும் அநுசூதமாயிருக்கும் "ஒருவனும் என்னை நிந்திக்கலாகாது, எல்லோரும் துதிக்கவேண்டும்" என்னும் புத்திவாசனைமய லோகவாசனைவடிவ ராதையாகிய தாசியினோடு சம்பந்தத்தினால் முற்றும் கூடாததான சர்வலோகத்திலும் நிந்தையின்மைக்கும் கீர்த்திக்கும் காரணமான கர்மத்தில் பிரவிருத்

இக்கு ஏதுவானவனும், இதனாலேயே மேற்சொல்லப்படும் கடோற்கசனைக்கொல்லுபவனும், நிடபோதவடிவ அர்ஜுன னால் நாசமாகத்தக்கவனுமான விதிநிஷேதரூபவேதத்தின் ஆஞ்ஞைக்குக் கிங்கரனாய்க் கர்மத்தினைச் செய்தல்வடிவமா கிய கர்மத்தின் கர்த்தவ்யத்தன்மைவடிவ கர்ணன். [சு] கூறிய துரோணருடைய பத்தினியாகிய பிரவிருத்திவடிவ கிருபியின் பிராதாவான வியாவகாரிகப் பெருமுயற்சிவடிவ கிருபாசாரியர். [எ] உபராமவடிவ அபிமன்யுவின் வேறான சமதமாதி ஐந்து சாதனவடிவ துரௌபதியின் ஐந்து புத்தி ரர் முதலிய எஞ்சிய சேனையினைப் பெருமுயற்சிவடிவ கிருபா

சாரியாலும் மந்தஜீவத்வைதவடிவ கிருதவர்மனலும் தகைக்கப்பட்டதுவாரமுடையதும், தைவாசுரபரிணமங்களினது விஷயங்களின் சமூகவடிவ குருக்ஷேத்திரத்தின்கண் உள்ள விவேக ஞானி ஸ்ரீ கிருஷ்ணன் பஞ்சபாண்டவர் சாத்தியகி யென்னும் எழுவரது நிவாசஸ்தானமாகிய பிரஹ்மாத்மாவின் அபேதத்தன்மையில் முடிதல்வடிவ *சிபிரத்தினும் வேறானதுமான இருதய(அந்தக்கரண)வடிவ சிபிரத்திற்சென்று நாசஞ்செய்தவனும், அதனல் சித்த நிரோதமய சமாதிக்கும் சாந்திக்கும் பரியாயமான உபரதி

* யுத்தகளத்தில் பாதுகாப்புள்ள இடம் சிபிரம் எனப்படும்.

வடிவ துரௌபதியினை விக்ஷேபப்படுத்தியவனும், போத வடிவ அர்ஜுனனால் பிரபலப்பிரபாவவடிவ சிரோமணி யிழந்தவனும், கூறிய துரோணர் கிருபி யென்பவர்கள் புத்திரனுமான போதத்திற்குப் பின்னும் பிரஹ்ம விசாரமய பிரஹ்மாப்பியாசத்தின் அபாவவடிவ அசுவத்தாமா. [சு] பீமனால் நாசமாகுபவனாகிய சர்வசுபசாதனங்களையும் சிதில மாக்கும் அவசியஞ்செய்யவேண்டிய காரியத்தினைமறத்தல் மயமான பிரமாதவடிவ விகர்ணன். (எ) போதவடிவ அர்ஜுனனால் சேதிக்கப்பட்டகையுடையவனும், ஸமவடிவ சாத்திய கியினால் நாசமாகத்தக்கவனும் பேதஞானவடிவ சோமதத்த

னுடைய புத்திரனுமான எங்கும்விஷமத்தன்மைவடிவு பூரிசிரவா. [அ] முன் சகுணோபாசனகாலவடிவ வனவாசத்தில் சகுணத்தியானவடிவ பீமனால் தோல்வியடைந்தவனும், விசாரமாகியபோரில்திடபோதவடிவ அர்ஜுனனால் விவேகவடிவ ஸ்ரீகிருஷ்ணனது சகாயத்தால் நாசமாகத்தக்கவனும், யதார்த்தசோதனமுதலியபஞ்சசாதனவடிவ பாண்டவர்களுக்குப்பிரதிபந்தகனாயிருத்தலால் சத்துருவுமான தந்திரை (சோம்பல்) வடிவ ஜயத்ரதன். இவ்வெண்மரும்ஆசுரிசம்பத்திவடிவ கௌரவசேனைகளின் நாயகர்.

(உ) இப்போது தைவீசம்பத்திவடிவ பாண்டவர்களை யும் அவர்களது சேனையையும் வர்ணிப்பாம்:—

[க] சூக்ஷ்ம சாத்துவிகீபுத்திவடிவ குந்திக்குச் சத்ச மாகம (பெரியோர்நல்வரவுஏற்றல்)வடிவ துர்வாசரது சேவை யினற் கிடைத்த சாஸ்திரசம்ஸ்காரரூப மந்திரத்தின் பிரபா வத்தால், முதலில் ஆவிர்பவித்த மந்தமோக்ஷகாமவடிவ சூரி யனுல் மோக்ஷசாதனங்களின் கர்த்தவ்யத்தன்மைவடிவ கர்ணனென்னும் புத்திரன் உண்டானன். பின் விஷயங்களில் இராகவடிவ ரிஷியின் மாரணவடிவ நிமித்தத்தால் நிர்பலத் தன்மைவடிவ விதவைத்தன்மையினையடைந்த விஷயவாசனு

வடிவ ரிஷிபத்தினியின் "ஸ்திரீசங்கத்தால் மிருத்தியுவை யடைவாய்" என்னும் சாபத்தினைப்பெற்றவனான மலவிக்ஷேபமாகிய தோஷத்தினால் மலினமும் இந்திரியவாயிலாகவெளிப்படுமியல்பினதுமான இதுவென்னும் வடிவ அந்தக்கரணத்தின் இரஜோகுணப்பிரதானபரிணாமமய மனவடிவ பாண்டுராஜாவோடு (க) சூக்ஷ்ம(தீவிரமும்அந்தர்முகமுமான) புத்திவிருத்திவடிவ குந்திக்கும், (உ) பதார்த்தசோதனவடிவ யுதிஷ்டிரரால் நாசமாகத்தக்கவனும், விசாரத்தின் பீஜமாயிருத்தலால் சிரவணமனனவடிவ நகுல சகதேவர்களுடைய அம்மானுமான சுத்தசத்துவகுண தத்துவம்பதார்த்

தத்தின் சத்பாவத்திலிருப்பதான சம்சயவடிவ சல்லிய னுடைய தங்கையுமான மாத்திரிக்கும் சம்பந்தவடிவ விவாக முண்டாயிற்று. ஆனால் சாபத்தினாலாம் மரணத்தின் பயத் தால் அப்பாண்டு கூறிய அந்த ஸ்திரீகளின் சங்கத்தினின் றும் நீங்கியவனாயிருந்தான். அப்போது அப்பதியின் இச்சை வடிவ ஆஞ்ஞையால் அவ்விரண்டு ஸ்திரீகளும் தத்துவஞான மும் அதன் சகாயவடிவ பதார்த்த சோதனாதி சாதனமய விசாரவடிவமுமான சந்தானங்களினது உற்பத்தியின்பொருட்டு, நிஷ்காமகர்மத்தோடுகூடிய சிவவிஷ்ணுவாதி பஞ்ச தேவர்களின் உபாசனைவடிவ ஆவாகனத்தாற்பெற்ற சித்தக்

தின் சுத்தியையும் ஏகாக்கிரத்தன்மையையும் முன்னிட்ட நான்கு சாதனங்களின் சம்பத்திவடிவ ருதுகாலத்தில் உபாசிய தேவனுன காரணப்பிரஹ்மஈசுவரனே அவ்வச்சாதனங்களின் உற்பத்திக்குத்தகுதியான வாக்கியோபதேசத்தின் பேதத்திலுலாவது அல்லது கோபமுடையவர், வாத்ஸல்யமு (பிரீதியு)டையவர், ஓதுவிப்பவர், சம்சயமொழிப்பவர், சாந்தரூபர் என்னும் பேதத்திலுலாவது சிவ விஷ்ணு கணேச சூரிய கங்காதேவிமய ஐந்து குருரூபமாகப் பிராப்தமா(மதிக்கப்படுபவரா)கின்றார். அக்குருவடிவ தருமன் வாயு இந்திரன் அசுவினிகுமாரரிருவர் என்னும் ஐந்து

தேவர்களின் வாக்கியத்தினலாகும் சம்ஸ்காரவடிவ பீஜத்தி னல் யதார்த்த சோதனை சாதனமய பஞ்சபாண்டவவடிவ சந்தானங்களைப்பெற்றனர். அவர்களுள், வியாபக ஈசுவரத் தியானவடிவ மானஸஉபாசனையுடையதும் அந்தர்முகமா யிருத்தலால் சூக்ஷ்மமுமான புத்திவிருத்திவடிவ குந்தியான வள் (க) வியவகாரதசையிலும் பரமார்த்ததசையிலும் எங் கும் காணப்படுதலாலும் ஞானசிரவணுதிகளைவிட முதலில் உண்டானதாயிருத்தலாலும் ஜேஷ்ட ராஜாவாகிய தத்துவம் பதார்த்தத்தின் சோதனமய ஞானத்தின் முக்கிய சாதன வடிவ யுதிஷ்டிரராஜாவையும், (உ) முதலில் சகுணத்தின்

பின்னர் நிர்க்குணத்தின் தியானமயமும், போதத்திற்கு முன்னர் அபேக்ஷிக்கப்படுவதாயிருத்தலால் போதத்தை விடப்பெரிதுமான நிதித்தியாசனவடிவமாய் எண்ணிறந்த ஆசுரிசம்பத்திகளை நாசஞ்செய்யும் மகாபலமுடைய பீமனையும், (௩) அபேதத்தினைப் போதிக்கும் மகாவாக்கியத்தினது சிரவணத்தின் சம்ஸ்காரமாகிய குருவடிவ இந்திரபீஜத்தினாலாகிய, முதலில் பரோக்ஷரூபமும், பின்னர் விசாரரூபமும், யுத்தசமயத்தில் சம்சயவிபரியயாதி தோஷரூப துரியோதனாதியரின் சம்பந்தத்தினால் மந்தஅபரோக்ஷரூபமும், பின் மிகுந்த விவேகவடிவ ஸ்ரீ கிருஷ்ணரது உபதே

சத்தால் திடமாகிய அபரோக்ஷரூபமுமாய் எண்ணிறந்த தோஷரூப யுத்தவீரரையழிக்கும் தத்துவபோதவடிவ அதிரதியாகிய அர்ஜுனனையும் பெற்றாள். மூர்த்திபூஜனமுதலிய காயிக வாசிக பாகிய உபாசனையுடையதான சிறிது பகிர்முகமாயிருத்தலால் ஸ்தூலபுத்திவிருத்திவடிவ மாத்ரியானவள், (க) சுத்தியின் சொற்பத்தன்மையால் புத்திமந்தத்தன்மையும் குதர்க்கமுமான தோஷத்தினிருப்பால் * அபேக்ஷிக்கப்படுவதும், சாரீரக சாஸ்திரத்திற் கூறியுள்ள சர்வ சுருதிகளது ஏக (ஒரு)வாக்கியத்தன்மையின் விவேகரூப

* இது சிரவணத்திற்கு விசேஷணம்.

ஸ்ரீ கிருஷ்ணனால் ரக்ஷிக்கப்பட்டவனும், அக்கிருஷ்ணனால் நானா சுருதிவடிவ ராஜ்யம் கன்னிகைகள் முதலிய சர்வசொத்துக் களும் கவர்ந்துகொள்ளப்பட்டவனும், நாநாசுருதிவாக்கிய வடிவ ஆயிரக்கணக்கான ராஜகன்னிகைகளைக் கவர்ந்தவனு மான சுருதி நாநாத்துவவடிவ பௌமாசுரனுடையபௌத் திரனும், கூறிய அர்ஜுனனால் நாசமாகத்தக்க சுருதிநாநாத் துவத்தின் திடசம்ஸ்காரவடிவ மகாப்பிரபல பகதத்தனு டைய புத்திரனுமாயுள்ளவனைத் தாற்பரியத்தினை நிச்சயிப் பனவாகிய உபக்கிரமோபசங்காராதிஷட்லிங்கவடிவ சஸ்தி ரங்களால் நாசஞ்செய்பவனுமான, குருமுகமாகச் செய்யும்

சாஸ்திரவிசாரரூப அசுவினி குமாரனும் பிறந்த சர்வ உப நிஷத்துக்கட்கும் அத்வைதப்பிரஹ்மத்தில் தாற்பரிய நிச்சயமய சிரவணவடிவ நகுலனையும், (உ) தனதுள்ளிருப்ப தான அநேக பேதரூப சேனையோடுகூடிய பிரமேயகதசம் சயவடிவ சகுனியையும் குதர்க்கவடிவ சல்லியவம்மான் மகனையும் நாசஞ்செய்யும் மனனவடிவ சகதேவனையும் பெற்றான். பின் ஸ்தூலசாத்துவிகீபுத்திவிருத்திவடிவ மாத்ரியின் சங்கத்தால் மலவிக்ஷேபரூப தோஷத்தோடுகூடிய இராஜோகுணப்பிரதான மனோமய பரிணாமவடிவ பாண்டுவின் திரஸ்காரவடிவ நாசமுண்டாயிற்று. அப்போது பாகிய விக்

கிரகபூஜையின் பாவனையோடுகூடிய புத்தி விருத்திவடிவ மாத்ரிக்கும் சிதிலத்தன்மைவடிவ தாகமுண்டாயிற்று. முதலில் சகுணப்பிரஹ்மத்தினை விஷயஞ்செய்தலால் மந்தவலியுடைய அப்பாண்டவர்களுக்கு நிர்குணப்பிரஹ்மபாவனைவடிவ இந்திரப்பிரஸ்தத்தில் இராஜ்யம் கொடுத்தார்கள். அங்கு விபரியயவடிவ துரியோதனனது பிரேரணையால் தேகாபிமானரூப அரக்கு மாளிகையில் வசிக்க மூவிததாபவடிவ அக்கினி மூண்டது. ஆனால் ஹரிஸ்மரணமய சாத்து விகசித்தவடிவ விதுரனது கிருபையால் அப்பாண்டவர்கள் தகிக்கப்படாமல் நிர்க்குணஉபாசனைவடிவ இந்திரப்பிரஸ்த

நகரத்தினைவிட்டு, பேதத்தோடுகூடிய சகுணோபாசனைவடிவ வனத்தில் சஞ்சரித்தனர். அங்குச் சகுணப்பிரஹ்மத்தியானவடிவ பீமன், பகிர்முகத்தன்மைவடிவ ஹேடம்பன் (இடும்பன்) என்னும் இராக்ஷசனையும் சித்தத்தின் மலதோஷவடிவ பகாசுரனையும் கொன்று, தியானரூப பீமனுடைய பரிபக்குவ அவஸ்தாமய சமாதிவடிவ துரௌபதியின் *சபத்தினியாகிய தூரசிரவணம்தரிசனமுதலியவற்றின் சக்திவடிவ ருதம்பரையெனும் புத்திவடிவ ஹேடம்பா (இடும்பி)

* தன்கணவனை வரித்தமற்றவள் சபத்தினி எனப்படுவோள். அவளை உலகினர் சக்களத்தி யென்பர்.

ராக்ஷசியான தனதுஸ்திரீயின் ஆறுமாசபரியந்தமான சம்பந்தத்தால் அணிமாதிசித்திமய ஐசுவரியவடிவ கடோற்கசனென்னும் புத்திரனைப்பெற்றாள். அன்றியும், பதபதார்த்தங்களின் சிந்தனைமய தியானரூப அந்தப் பீமனை காவியாலங்காரதர்க்காதி வித்தியாரூப காளி யென்னும் பெயருள்ளவளாய் முன்கிருகத்திலுள்ள வேறு ஸ்திரீயினிடத்தில் முன்னமே தோல்வியடையும் சேனையின் பக்ஷபாதியும், எவ்வொருபக்ஷத்திலும் நிலையின்றியவனும், தெய்வஆசுரரூப சர்வயுத்தவீரர்களது நாநாயுக்திகற்பனைவடிவ மரண நிமித்தத்தினை அறிபவனும், சாஸ்திராப்பியாசஜந்நிய விற்பத்தி

மயபோதரூபசிரமுடையவனும், மரணகாலத்தில் மகேசுவரனது ஸ்துதி பாடங்களைச் செய்தல்வடிவ தலைமாலையில் உபயோகியாய் நிலைப்பவனும், அந்த ஜீவனோடு கூடிய சிரசினைக் கூறிய கிருஷ்ணனது வசனபூர்வகமாக வாளோடுகூடிய கையினால் வெட்டுவிக்கப்பட்டு, சுபாசுப அர்த்தசமூகத்தின் நிர்ணயவடிவ இரணஸ்தம்பத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, கூறிய கௌரவ பாண்டவர்களது இருபக்ஷங்களின் வெற்றி தோல்விகளைப்பக்ஷபாதமின்றிய தன்மையாகக்கண்டு, ஜீவனோடுகூடிய தனது சிரத்துள்ள வாயினால் அநுவாதமாத்திரம் செய்பவனுமான காவியாலங்காரதர்க்கங்களைச் செய்த

லாகிய கலைத்தேர்ச்சிவடிவ பர்பரீகனென்னும் பிறரால் ஜயிக்கப்படாத மற்றோர் புத்திரனையும் பெற்றிருந்தான். பரோக்ஷஞானவடிவ அர்ஜுனனானவன், விசாரமாகிய போரில் சகாயமாகும் புத்தியின் திவிரத்தன்மைவடிவ காந்தர்வவித்தையினை அடைந்தான். அன்றியும், ஆத்மஞானத்தினால் நீக்கப்படும் பவிஷ்யத்துக்கசாதனமாகிய சரீரமுதல் அஞ்ஞானபரியந்தமான பதார்த்தங்களின் விசாரவடிவ மச்சத்தினைத் துளைத்தல் வாயிலாகச் சர்வ பாண்டவர்களுக்கும் சமமானவளான ஜிஞ்ஞாஸை (ஞானவிருப்ப)வடிவ துரௌபதியினையும் அடைந்தான். சுபசாதனவடிவ சேனையோடு

கூடிய அபரவைராக்கியவடிவ துருபதனதுசகாயத்தையும் பெற்முன். அப்போது பயத்தோடுகூடிய திருதராஷ்டிரன் பாண்டவர்களை அழைத்து, மறுபடியும் நிர்குண உபாசனை வடிவ இந்திரப்பிரஸ்தத்தின் இராஜயத்தினைக் கொடுத்து விட்டான்.

அங்கு ஒருகால் கலகஞ்செய்யும் மனபரிணும விசேஷ வடிவ நாரதமுநியின் பிரேரணையால் உபரதிவடிவ துரௌபதியின் ஏகாந்த சங்கத்தினது பேதத்தின் சங்கேதவடிவ நிமித்தத்தால் அவ்வர்ஜுனன் உபரதிவடிவ நிர்குணப்பிர ஹ்ம ஜிஞ்ஞாஸைவடிவ துரௌபதியின் வியோகவடிவ பிர

ஹ்மசரியத்தினைக்கொண்டு, பன்னிரண்டு வருஷம் வரையில் சகுணஉபாசனைவடிவ வனத்தில் சஞ்சரிப்பவனும், பிராண ரூப நாகனுடைய ஹடசமாதிவடிவ உலூபி யென்னும் கன்னிகையோடு பிரஹ்மரந்திரமாகிய நாகலோகத்திற்சென்று, பிராணநிரோதமய ஹடயோகவடிவ இராவந்தன் என்னும் புத்திரனைப் பெற்றான். நாசிவடிவ மணிபுரத்தில் கமனுக மனம் செய்வதான பிராணவிருத்திவடிவ அஜபாமந்திரமய மணிபுரபதியினுடைய சித்திராங்கதை யென்னும் புத்திரியின் அப்பியாசவடிவ சங்கத்தினால் மனோவிருத்தி நிரோதமய இராஜயோகவடிவ பப்புருவாகனன் என்னும்புத்திரனைப்

பெற்று, ஏகாந்தவாசவடிவ துவாரகையில் ஸ்ரீ கிருஷ்ண னுடைய தங்கையான சத்ஸங்கதிவடிவ சுபத்திரையினை ஸ்வீகரித்து, அவளிடத்தில் கூறிய அபிமன்னியுவென்னும் புத்திரனையும் பிறக்கச் செய்தான். மற்றும், அவ்வர்ஜு னன் கூறிய ஸ்ரீ கிருஷ்ணன் முதலியவர்களோடு இந்திரப் பிரஸ்தத்தில் வந்து சுபவாசனமய சம்ஸ்காரவடிவ அக்னி யின் பிரார்த்தனையினால் சுபகர்மவடிவ அக்கினியஸ்திரத்தி னால் பாபசமுதாயவடிவ காண்டவவனத்தினை எரித்து, அவ்வக்கினியினைப் புஷ்டியுள்ளவனாக்கி அக்ஷய (ஒழியாத) பக்திவடிவ தூணீரத்தினை (அம்புக்கூட்டை)ப் பெற்றான்.

அங்கு நிஷ்காம புண்ணியவடிவ மயனுகியதானவனது சம்ரக்ஷணைத்தால் கூறிய யுதிஷ்டிர ராஜன் பொருட்டுத் துரிய பதத்தில் நிலைத்தல்வடிவ சபையினையும், கூறிய பீமன் பொருட்டுத் திடத்தன்மைவடிவ கதையினையும், தன்பொருட்டு அபேதத்தினைப் போதிக்கும் அஜபாதி மந்திரங்களின் ஜபவடிவ தேவதத்த மென்னும் சங்கத்தினையும் சம்பாதித்தான். பின் பாண்டவர் அங்கு நாநாநற்குணவடிவ ராஜாக்களை நிரோதிப்பவர்களான அநாத்மாவில் ஆத்மாவை யறிதற்றன்மைவடிவ ஜராசந்தன் முதலிய துஷ்டராஜாக்களின் நாசபூர்வகமாகச் சற்குணவடிவ சிரேஷ்டராஜாக்களை

வசப்படுத்தி, அதனை நினைத்தல், அதனைப் பேசுதல், ஒருவ ரோடொருவர் அதனைப் போதித்தல்மயமான பிரஹ்மாப்பி யாசவடிவ இராஜசூயயாகத்தினைச் செய்து, அதில் புத்தி பூர்வகமாகச் செய்யப்பட்ட பாபங்களோடுகூடிய நாநாவிஷ யங்களிலுண்டாம் இராகவடிவ ஹவியினை ஹோமஞ் செய் தனர். எப்போது அக்கூறிய ராஜ்யத்திற்குத் தீவிரத்தன் மையுண்டாகத் தொடங்கியதோ, சாக்ஷித்தன்மைவடிவ மய தானவனால் பெற்ற சபையில் பாண்டவர்களுக்கு நிலைப்பு உண்டாயிற்றோ, அப்போது முற்கூறிய துரியோதனனால் முற்கூறிய சகுனி வாயிலாகக்கூறிய யுதிஷ்டிராராஜாவைப்

பேதஞானவடிவ சூதாடுவித்து, சர்வஐசுவரியங்களையும் கவர்ந்து கொண்டு, தாஸத்தன்மைமய ஜீவத்தன்மைவடிவ தாரித்திரியத்தையும் பேதமாகிய துக்கத்தோடு கூடிய சகுணோபாசனைவடிவ வனத்திற்செல்லுதலையும் அப்பாண்டர்வர்களடையச் செய்தனர். அதாவது சகுணோபாசனகாலத்தில் பதார்த்தசோதனம் சிரவணமுதலியயாவும் சகுணப்பிரஹ்மத்தினதாகவே நிகழ்ந்தன. அங்குச் சுபசாதனங்களின் சமூகவடிவ ரிஷிக்கூட்டத்துடனும் மந்தஜிஞ்ஞாஸைவடிவ துரௌபதியுடனும் அப்பாண்டவர் பன்னிரண்டு வருஷம் வரையில் சுற்றிக்கொண்டிருந்தார்கள். கூடிய சூரி

யனாற் பெற்ற *அக்ஷயபாத்திரத்தினால் சர்வ சாதனங்களின் பாலனமுண்டாய்க்கொண்டிருந்தது. ஈசுவரரூப சிவனு டைய கிருபையினாலும் குருரூப இந்திரனது கிருபையினு லும் கூறிய அர்ஜுனனுக்கு விசாரவடிவ யுத்தத்தில் உப யோகமுள்ள அநேகப் பிரபல யுக்திவடிவ அஸ்திரங்கள் கிடைத்தன. பின்னர் அவர்கள் லோகலஜ்ஜைவடிவ விரா டநகரத்தில் இரகசிய விசாரவடிவ அஞ்ஞாதவாசம் செய்து, இந்திரிய கணவடிவ கோதனத்தினை (பசுக்களை) விஷயாபி முகஞ்செய்தல்வடிவ கவர்தலைச் செய்பவர்களான கூறிய கௌரவர்களைச் செயித்து வெளிப்பட்டார்கள்.

பின்னர்ச் சகலசாதனவடிவ போர்வீரர்களினது பிராப்தியின் நிமித்தத்தினுலும், போதவடிவ அர்ஜுனனுக்குக் கணந்தோறும் சகாயவடிவினரான சாரதிவடிவினராகிய கூறிய விவேகஞானவடிவ ஸ்ரீ கிருஷ்ணரது கிருபையினுலும் அந்தப் பஞ்சசாதனவடிவ பாண்டவர்களுக்குச் சகாயஞ்செய்யும் சாஸ்திர சம்ஸ்காரத்தினுல் அந்தர்முகப் பிரவாகமுடைய ஐந்து ஞானேந்திரியம், புறம்போந்த இதுவெனும் விருத்திவடிவ மனம், வாக்கிந்திரியம் என்னும் ஏழு வாயில்களால் கிரமமாகச் (க) சுத்த கல்யாணத்தைச் செய்வனவாகிய கதை முதலியவற்றைக் கேட்டல், (உ) ஹரிகுரு

முதலியோர் சரணங்களைப் பரிசித்தல், (௩) ஹரி குரு சாஸ்திர முதலியவற்றைக் காண்டல், (௪) ஹரிக்கு நிவேதிக்கப்பட்டனவும் முனிவர்களுண்ட சேடமுமான அந்நாதிகளின் இரஸத்தைக் கிரகித்தல், (௫) ஹரி குரு நிர்மால்ய புஷ்பாதிகளின் கந்தத்தினைக் கிரகித்தல், (௬) சகுண நிர்க்குணப் பிரஹ்மசிந்தனத்தில் உபயோகமுள்ளனவாகிய சிரவணாதி சாமக்கிரிகளைக் கிரகித்தல், சுபமான ஓதல் ஓதுவித்தல் பிரணவ பஞ்சாக்ஷராதி ஜபமுதலிய அர்த்தம் வெளிப்படுதல் என்னும் எழு சுபசாத்துவிக அந்தக்கரணத்தினது பரிணாமங்களின் சமூகவடிவ எழு அக்குரோணிக் களைக்

குள்ள தைவீசம்பத்திவடிவ சேனை சம்பாதிக்கப்பட்டது. அப்பாண்டவ சேனையின் திருஷ்டதுயும்னனாகிய சேனாபதி பீமார்ஜுனர்களோடுகூடிய இருபது நாயகர்களைக் கூறுவாம்:—

[க] வைராக்கியரூப துருபதனது புத்திரனை வாசனைக்ஷயவடிவ திருஷ்டதுயும்னன். [உ] கூறிய கடோற்கசன் பர்பரிகன் என்பவர்களின் பிதாவும், விபரியயாதி துரியோதனாதியரை நாசஞ்செய்யும் நிதித்தியாசனவடிவ பீமன். [ங] மந்தபோதவடிவ அர்ஜுனன். [ச] விஷமத்தன்மை வடிவ பூரிசிரவாவை நாசஞ்செய்யும் எங்கும் சமத்தன்மை

வடிவ சாத்தியகி. [ரு] சுபசாதனவடிவபாண்டவர்களைக் காப்பவனும் விசாரவடிவபோரின் சர்வசாமக்கிரிகளையும்சம்பாதிப்பவனுமான தீவிரமுமுக்ஷுத்தன்மைவடிவவிராடராஜன். [சு] போதமுதலிய சர்வசாதனங்களுக்கும் வெகுசகாயஞ் செய்யும் தோஷதிருஷ்டி ஜந்நிய தீவிரதாஅபரவைராக்கிய வடிவ துருபதராஜன். [எ] அபயவடிவ நிர்பயத்துவஜமுடைய திருஷ்டகேது. [அ] விசுத்தஸ்வபாவவடிவ சேகிதானன். [கூ] ஞானயோகரூப காசிபுரத்தில் உள்ள ஸ்திரத்தன்மை வடிவ காசிராஜன். [கo] திருணமின்றியபூமியிலுள்ள அக்கினிக்குச்சமானமாக வெகுசத்துருக்களை ஜயிப்பவனான

க்ஷமாஸ்வபாவவடிவ புருஜித்து. [கச] சரளஸ்வபாவமயஆர்ஜவ(நேர்மை)வடிவ குந்திபோஜன். [கரு] உதாரஸ்வபாவவடிவ சிபியின்வம்சத்திற்றோன்றிய சற்பாத்திரங்களில் கொடுத்தல்வடிவ சைப்பியன். [கசு] காமக்குரோதங்களின் வேகத்தைத்தடுத்தலாகிய யுத்தத்தினுல் தனது விருத்தி (பெருக்க)வடிவ குரோதமுடையவனனதைரியவடிவ யுதாமன்யு. [கஎ] தனதுசத்தையினுல் சிங்கம் மான் முதலிய விரோதிகளான பிராணிகளின் வைரத்தைக்கெடுப்பதும், அஹிம்ஸைவடிவ தாயினிடத்தில்இரக்கவடிவ பிதாவினுல் பிறந்ததும் உத்தமதேஜசுடையதுமான அரோகமின்மைவடிவ உத்

தமேளஜஸா. [கரு] மிகுந்தவிவேகவடிவ ஸ்ரீகிருஷ்ணனு டையதங்கையும் ஞானவடிவ அர்ஜுனனது பத்தினியுமான சத்ஸங்கதிவடிவ சுபத்திரையின் புத்திரனும், கிருகமடாதி பரிக்கிரகவடிவ சக்கிரவியூகத்தின் யுத்தத்தில் ஸ்திரீயினி டத்தில் கிடைத்த பஞ்சவிஷயவடிவ பிரபலன் ஜயத்திரதன் முதலிய யுத்தவீரர்களது சகாயத்தோடுகூடிய வாசனைக்ஷய வடிவ திருஷ்டதுயும்னனால் நாசமாகும் ஸ்திரீசங்கமவடிவ துற்சாசனனுடைய புத்திரனாகிய நிர்பல யுத்தவீரனால் நாச மாகத்தக்கவனுமான வைராக்கியத்தினால் வார்த்தியந்தத் தினைப்போல விட்ட விஷயபோகங்களில் மறுபடியும் தீனமா

தலின்மைமய வைராக்கியத்தின் பயனாகிய உபராமவடிவ அபிமன்யு. [கசு-உ0] சமதமதபசிரத்தாசமாதானவடிவ பிரதிவிந்தியன் முதலிய துரௌபதியின் புத்திரர் ஐவர். இவர்கள் இருபதின்மரும் பாண்டவசேனையின் நாயகர்கள். பிரத்தியகபின்னபிரஹ்மரூப தேசத்தில் உள்ள அதிகாரி மனுஷ்ய தேகமய ஹஸ்தினாபுரவடிவ இராஜதானியில் கூறிய பாண்டு ராஜாவினால் அதிஷ்டிக்கப்பட்டதாயிருத்தலின் பாண்டவர்களுக்குக் கிடைக்கத்தக்க இராஜ்யத்தினை எப்போது அவிவேகவடிவ திருதராஷ்டிரனும் விபரியயாதி அவன் புத்திரர்களும் அழுத்திக்கொண்டனரோ, அப்போது பாண்டவர்

கள் அவர்களோடு யுத்தஞ்செய்தற்காகக் கூறியசேனையைச் சம்பாதித்தனர். அவ்விருசேனைகளும் தத்தம் விஷயங்களின்சமூகவடிவ வெளி உள் கற்பிதப்பிரதேசத்தில் பிராண வடிவ வாகனங்களின் பலத்தால் யுத்தத்தின் பொருட்டுச் சென்று, ஒன்று சேர்ந்தார்கள். அங்கு யுத்தத்தின் ஆரம்ப காலத்தில் சம்சய விபரியயாதி தனது சம்பந்திகளின் தரிசனத்தால் தளர்ச்சியடைந்த தத்துவஞானவடிவ அர்ஜுனனை யிருந்த விவேகவடிவ ஸ்ரீகிருஷ்ணர் ஜடசேதனங்களினது விவேசனத்தின் உச்சாரணவடிவ கீதையின் உபதேசத்தால் திடப்படுத்தி, முன்னரே பாதிக்கப்பட்டதான

அஞ்ஞானகற்காரியரூப சகலப் பிரபஞ்சவடிவ ஆசுரீ சேனையின் பாதத்தினைச்செய்வித்தார். அப்போது தத்துவஞானவடிவ அர்ஜுனன், வியவகார பரமார்த்தங்களினது விசாரத்தின் தசைவடிவ சர்வகாலத்திலும் தோற்றுகின்றவரும், கூறிய அர்ஜுனன் அவனுக்குத் துணைவரான பீமாதியர் என்பவர்களுக்கு முன்னரே உண்டாயிருத்தலால் ஜேஷ்டருமாயிருத்தலின், யதார்த்த சோதனமய யுதிஷ்டிரவடிவ மூத்த தமையனை இராஜாவாக்கிச் சிரவணாதி பிராதாக்களோடுகூடப் பிரஹ்மாபின்னஆத்மமயஸ்வவிஷயவடிவ ஸ்வதேசத்தில் நிற்பவன் (ஆரூடன்) ஆனான்.

முற்றிற்று.

॥ ॐ ॥

॥ श्री कृष्णायपरब्रह्मणे नमः ॥

ஸ்ரீ கிருஷ்ணாயபரப்பிரஹ்மணே நம:

॥ अथ गीतामाहात्म्य प्रारंभः ॥

கீதாமாகாத்மியம்.

॥ धरोवाच ॥

भगवन्परमेशान भक्तिरव्यभिचारिणी ।
प्रारब्धं भुज्यमानस्य कथं भवति हे प्रभो ॥ १ ॥

பூமிதேவி கேட்கலாயினாள் :— பகவானே! (நடத்து பவருள்) மேலான நடத்துபவரே! ஏ! பிரபுவே! பிராரப் தத்தினைப் புசிப்பவனுக்கு வியபிசாரமின்றிய பக்தி எப்படி உண்டாகும்? (க)

॥ विष्णुरुवाच ॥

प्रारब्धं भुज्यमानो हि गीताभ्यासरतः सदा ।
स मुक्तः स सुखी लोके कर्मणा नोपलिप्यते ॥ २ ॥

விஷ்ணுவானவர் சொல்லலாயினார் :—

பிராரப்தத்தினைப் புசிப்பவனாய் எதனால் எப்போதும் கீதாப்பியாசத்தில் இரமிப்பவனாகின்றானோ, அவன் உலகத் தில் முக்தன்; அவன் சுகி; கர்மத்தினால் பற்றப்படான். (உ)

महापापादिपापानि गीताध्यानं करोति चेत् ।
क्वचित्स्पर्शं न कुर्वंति नलिनीदलमंबुवत् ॥ ३ ॥

கீதையைப் படிப்பானாயின் அவனை மகாபாப முதலிய பாபங்கள் தாமரையிலையினை நீர்போல் ஒருபோதுந்தீண்டா.

गीतायाः पुस्तकं यत्र यत्र पाठः प्रवर्तते ।
तत्र सर्वाणि तीर्थानि प्रयागादीनि तत्र वै ॥ ४ ॥

கீதையின் புஸ்தகம் எங்குளதோ, எங்குப்பாடம் பிரவர்த்திக்கின்றதோ, அங்குப் பிரயாக முதலிய சர்வதீர்த்தங்களுமுள. அங்கு (ச)

सर्वे देवाश्च ऋषयो योगिनः पन्नगाश्च ये ।
गोपाला गोपिका वापि नारदोद्धवपार्षदैः ॥ ५ ॥

சர்வதேவர்களும், இருஷிகளும், யோகிகளும், பந்நகர் எவர்களோ அவர்களும், கோபாலர்களும், கோபிகைகளும், நாரதர் உத்தவர்முதலிய பக்கத்திருப்பவர்களோடு இருப்பர். (ரு)

सहायो जायते शीघ्रं यत्र गीता प्रवर्तते ।
यत्र गीताविचारश्च पठनं पाठनं श्रुतम् ।
तत्राहं निश्चितं पृथ्वि निवसामि सदैव हि ॥ ६ ॥

எங்குக்கீதை பிரவர்த்திக்கின்றதோ, அங்குவிரைவில் சகாயமுண்டாகிறது. எங்குக் கீதையின் விசாரமும், படித்தலும், படிப்பித்தலும், கேள்வியும் உளதோ, அங்குப்பிருதிவியே! நிச்சயமாக யான் எப்போதுமே வசிக்கின்றேன். (௬)

गीताश्रयेऽहं तिष्ठामि गीता मे चोत्तमं गृहम् ।
गीताज्ञानमुपाश्रित्य त्रींल्लोकान्पालयाम्यहम् ॥ ७ ॥

கீதாசிரயத்தில் யான்நிற்கின்றேன். கீதை எனது உத்தமமானவீடு. கீதாஞானத்தினைத்தழுவி மூன்றுலகங்களையும் யான்பரிபாலிக்கின்றேன். (௭)

गीता मे परमा विद्या ब्रह्मरूपा न संशयः ।
अर्धमात्राक्षरा नित्या स्वानिर्वाच्यपदात्मिका ॥ ८ ॥

கீதை என்னுடைய பிரஹ்மவடிவமாகிய மேலானவித்தையாம்; சம்சயமில்லை. அது *அர்த்தமாத்திரையாகிய அக்ஷரமும், நித்தியமும், தனது அநிர்வாச்சிய (சொல்லவொண்ணாப்) பத வடிவினதுமாம். (அ)

चिदानंदेन कृष्णेन प्रोक्ता स्वमुखतोऽर्जुनम् ।
वेदत्रयी परानंदा तत्त्वार्थज्ञानसंयुता ॥ ९ ॥

* பிரணவத்தின் பிரிவுகளான அ உ ம் அர்த்தமாத்திரை என்பவற்றுள் துரியம் அர்த்தமாத்திரை யெனப்படும்.

வேதமூன்றுவடிவினதும், பரமாநந்தமும், தத்துவார்த்தஞானத்தோடு கூடியதுமாய்ச் சிதாநந்தனுகிய கிருஷ்ணனல்தனது திருமுகத்தால் அர்ஜுனனுக்குச் சொல்லியருளியதாம். (கூ)

योऽष्टादशजपो नित्यं नरो निश्चलमानसः ।
ज्ञानसिद्धिं स लभते ततो याति परं पदम् ॥ १० ॥

எந்நரன் நித்தியமும் நிச்சலமான மனதோடு பதினெட்டத்தியாயமும் ஜபிக்கின்றனே, அவன் ஞானசித்தியை யடைகின்றான். அதன்பின் பரம(மேலான) பதத்தினை யடைகின்றான். (௧0)

पाठेऽसमर्थः संपूर्णे ततोऽर्धं पाठमाचरेत् ।
तदा गोदानजं पुण्यं लभते नात्र संशयः ॥ ११ ॥

இதனை முழுவதுமாகப் படிக்கச் சமர்த்தனாகாவிடின், இதிற்பாதியைப் படிக்கக்கடவன். அப்போது கோதானத்தாலாம் புண்ணியத்தினைப் பெறுவான்; இதிற்சம்சயமில்லை. (௧௧)

त्रिभागं पठमानस्तु गंगास्नानफलं लभेत् ।
षडंशं जपमानस्तु सोमयागफलं लभेत् ॥ १२ ॥

மூன்றிலொருபாகம் படிக்கிறவனோ, கங்காஸ்நானபலத்தையடைவான். ஆறிலொருபாகம் ஜபிப்பவனோ, சோமயாகபலத்தையடைவான். (௧௨)

एकाध्यायं तु यो नित्यं पठते भक्तिसंयुतः ।
रुद्रलोकमवाप्नोति गणो भूत्वा वसेच्चिरम् ॥ १३ ॥

ஒருஅத்தியாயத்தினை எவன்நித்தியம் பக்தியோடுகூடி யவனாய்ப் படிக்கின்றானோ, அவன் உருத்திரலோகத்தினை யடைகின்றான். (அங்கு) கணங்களுள் ஒருவனாய் நெடுங்காலம் வசிப்பன். (கங)

अध्यायं श्लोकपादं वा नित्यं यः पठते नरः ।
स याति नरतां यावन्मन्वंतरं वसुंधरे ॥ १४ ॥

ஒருஅத்தியாயமாவது அல்லது அதன் சுலோகங்களில் கால்பாகமாவது தினமும் எந்த நரன் படிக்கின்றானோ, அவன் பூமியே! ஒருமநுவந்தரம் (ஒருமநுவின் ஆயுட்காலம் வரையில்) மனிதத்தன்மையினை அடைகின்றான். (கச)

गीतायाः श्लोकदशकं सप्त पंच चतुष्टयम् ।
द्वौ त्रीनेकं तदर्धं वा श्लोकानां यः पठेन्नरः ॥ १५ ॥

கீதையின் சுலோகங்களுள் பத்து, அல்லது ஏழு, அல்லது ஐந்து, அல்லது நான்கு, அல்லது மூன்று, அல்லது

இரண்டு, அல்லது ஒன்று அல்லது அதன்பாதியாகிய சுலோ
கங்களை எந்த நரன் படிக்கின்றானோ, (கரு)

चंद्रलोकमवाप्नोति वर्षाणामयुतं ध्रुवम् ।
गीतापाठसमायुक्तो मृतो मानुषतां व्रजेत् ॥ १६ ॥

அவன் நிச்சயமாகப் பதினாயிரம் வருஷங்கள் சந்திர
லோகத்தினையடைகின்றான். கீதாபாடத்தோடு கூடியவனாய்
மரித்தவன் மானுடத்தன்மையினை யடைவான். (கசு)

गीताभ्यासं पुनः कृत्वा लभते मुक्तिमुत्तमाम् ।
गीतेत्युच्चारसंयुक्तो म्रियमाणो गतिं लभेत् ॥ १७ ॥

மறுபடியும் கீதாப்பியாசத்தினைச்செய்து உத்தமமான முத்தியினைப் பெறுவான். கீதையென்னும் உச்சரிப்போடு கூடியவனாய் இறப்பவன் நற்கதியை யடைவான். (கஎ)

गीतार्थश्रवणासक्तो महापापयुतोऽपि वा ।
वैकुंठं समवाप्नोति विष्णुना सह मोदते ॥ ॥१८ ॥

கீதார்த்தத்தினைக் கேட்பதில் ஆசையுள்ளவன் மகா பாபமுடையவனாயினும் வைகுண்டத்தினைச் செவ்வையா யடைந்து விஷ்ணுவோடு கூடக்களிக்கின்றான். (கஅ)

गीतार्थं ध्यायते नित्यं कृत्वा कर्माणि भूरिशः ।
जीवन्मुक्तः स विज्ञेयो देहांते परमं पदम् ॥ १९ ॥

மிகுதியாக (நிஷ்காம) கர்மங்களைச் செய்து நித்தியமும் கீதார்த்தத்தினை எவன் தியானிக்கின்றானோ, அவன் ஜீவன் முக்தன் என்று அறியத்தக்கவன்; தேகமுடிவில் பரமபதத்தினை யடைவான். (௧௯)

गीतामाश्रित्य बहवो भूभुजो जनकादयः ।
निर्धूतकल्मषा लोके गीता याताः परं पदम् ॥ २० ॥

உலகத்தில் கீதையினை ஆசிரயித்து ஜநகர் முதலிய வெகு அரசர்கள் பாபமொழிந்தவர்களாய்ப் பரமபதத்தினை அடைந்தார்களென்று சொல்லப்பட்டுளது. (உ௦)

गीतायाः पठनं कृत्वा माहात्म्यं नैव यः पठेत् ।
वृथा पाठो भवेत्तस्य श्रम एव ह्युदाहृतः ॥ २१ ॥

கீதையினைப் படித்து மாகாத்மியத்தினை எவன் படியானோ, அவனது படிப்பு வீணாகும்; சிரமமேயாம் என்று சொல்லப்பட்டுளது. (உக)

एतन्माहात्म्यसंयुक्तं गीताभ्यासं करोति यः ।
स तत्फलमवाप्नोति दुर्लभां गतिमाप्नुयात् ॥ २२ ॥

இந்தமாகாத்மியத்தோடு கீதாப்பியாசத்தினை எவன் செய்கின்றானோ, அவன் அதன்பயனை யடைகின்றான். பெறுதற்கரிய கதியினையும் அடைவான். (உஉ)

॥ सूत उवाच ॥

माहात्म्यमेतद्गीताया मया प्रोक्तं सनातनम् ।
गीतान्ते च पठेद्यस्तु यदुक्तं तत्फलं लभेत् ॥ २३ ॥

ஸூதர்சொல்லலாயினார் :—

என்றுற் சொல்லப்பட்ட பழைமையான இக்கீதாமாகாத்மியத்தினைக் கீதையின் முடிவில் எவன் படிப்பானே, அவன் கூறியது எதுவோ, அப்பயனையடைவான். (உ௩)

॥ इति श्रीवाराहपुराणे श्रीगीतामाहात्म्यं संपूर्णम् ॥

இவ்வாறு வராகபுராணத்திற் கூறப்பட்டுள்ள
கீதாமாகாத்மியம்
முடிந்தது.

॥ ॐ ॥

॥ तत्सद्ब्रह्मणे नमः ॥

॥ श्रीगणेशाय नमः ॥

॥ श्रीगोपालकृष्णाय नमः ॥

ॐ अस्य श्रीभगवद्गीतामालामंत्रस्य भगवान्वेदव्यास ऋषिः ॥ अनुष्टुप् छंदः ॥ श्रीकृष्णः परमात्मा देवता ॥ अशोच्यानन्वशोचस्त्वं प्रज्ञावादांश्च भाषस इति बीजम् ॥ सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रजेति शक्तिः ॥ अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुच इति कीलकम् ॥ नैनं छिंदंति शस्त्राणि नैनं दहति पावक इत्यंगुष्ठाभ्यां

नमः ॥ न चैनं क्लेदयंत्यापो न शोषयति मारुत इति तर्जनीभ्यां नमः ॥ अच्छेद्योऽयमदाह्योऽयमक्लेद्योऽशोष्य एव चेति मध्यमाभ्यां नमः ॥ नित्यः सर्वगतः स्थाणुरचलोऽयं सनातन इत्यनामिकाभ्यां नमः ॥ पश्य मे पार्थ रूपाणि शतशोऽथ सहस्रश इति कनिष्ठिकाभ्यां नमः ॥ नानाविधानि दिव्यानि नानावर्णाकृतीनि चेति करतलकरपृष्ठाभ्यां नमः ॥ इति करन्यासः ॥ अथ हृदयादिन्यासः ॥ नैनं छिंदंति शस्त्राणि नैनं दहति पावक इति हृदयाय नमः ॥ न चैनं क्लेदयंत्यापो न शोषयति मारुत इति शिरसे स्वाहा ॥ अच्छेद्योऽय-

अदाह्योऽयमक्लेद्योऽशोष्य एव चेति शिखायै वषट् ॥ नित्यः सर्वगतः स्थानुरचलोऽयं सनातन इति कवचाय हुम् ॥ पश्य मे पार्थ रूपाणि शतशोऽथ सहस्रश इति नेत्रत्रयाय वौषट् ॥ नानाविधानि दिव्यानि नानावर्णाकृतीनि चेति अस्त्राय फट् ॥ श्रीकृष्णप्रीत्यर्थे पाठे विनियोगः ॥

|| ॐ ||

|| अथ ध्यानम् ||

தியானம்.

ओं पार्थाय प्रतिबोधितां भगवता नारायणेन स्वयं व्यासेन ग्रथितां पुराणमुनिना मध्येमहाभारतम् । अद्वैतामृतवर्षिणीं भगवतीमष्टादशाध्यायिनीमंब त्वामनुसंदधामि भगवद्गीते भवद्वेषिणीम् ॥ १ ॥

பகவானாகிய நாராயணனால் சுவயம் பார்த்தனுக்கு உபதேசிக்கப்பட்டவளும், புராணமுனிவராகிய வியாசரால்

மகா பாரதத்தினடுவில் சேர்க்கப்பட்டவளும், அத்வைதாமி ருதத்தினைப் பெய்பவளும், பகவதியும், பதினெட்டு அத்தியாயவடிவினளும், பவத்தினை (பிறப்பை) த்துவேஷிப்பவளுமான பகவத்கீதையாகிய அம்மையே உன்னை அநுசந்திக்கின்றேன். (க)

नमोऽस्तु ते व्यास विशालबुद्धे फुल्लारविंदायतपत्रनेत्र ।
येन त्वया भारततैलपूर्णः प्रज्वालितो ज्ञानमयः प्रदीपः ॥ २ ॥

எந்த உன்னால் பாரததைல நிரம்பிய ஞானமயமான தீபம் செவ்வையாய்க் கொழுத்தப்பட்டுளதோ, அத்தன்மையவியா

சரது விசாலபுத்தியும் மலர்ந்த தாமரையின் விசாலமான இதழ்போன்ற கண்ணுடையவருமான உனக்கு நமஸ்காரம் உளதாகுக. (௨)

प्रपन्नपारिजाताय तोत्रवेत्रैकपाणये ।
ज्ञानमुद्राय कृष्णाय गीतामृतदुहे नमः ॥ ३ ॥

பாரிஜாதத்தினைப் பெற்றவரும், சவுக்கோடுகூடிய கோலினை ஒருகையிலுடையவரும், ஞானமுத்திரையை யுடையவரும், கீதாமிருதத்தினைக் கறப்பவருமான கிருஷ்ணபகவானுக்கு நமஸ்காரம். (௩)

सर्वोपनिषदो गावो दोग्धा गोपालनंदनः ।
पार्थो वत्सः सुधीर्भोक्ता दुग्धं गीतामृतं महत् ॥ ४ ॥

சர்வ உபநிடதங்களும் கோக்கள். கோபாலநந்தனனுகிய பகவான் கறப்பவன். பார்த்தன் கன்று. நல்லறிஞன் அநுபவிப்பன். மகத்தான கீதாமிருதம் பால். (௪)

वसुदेवसुतं देवं कंसचाणूरमर्दनम् ।
देवकीपरमानंदं कृष्णं वंदे जगद्गुरुम् ॥ ५ ॥

வசுதேவன் புத்திரரும், தேவனும், கம்ஸ சாணூரர்களைக் கொன்றவரும், தேவகியின் பரமாநந்தரும், ஜகத்குருவுமான கிருஷ்ணபகவானை வணங்குகிறேன். (௫)

भीष्मद्रोणतटा जयद्रथजला गांधारनीलोपला शल्यग्राहवती
कृपेण वहनी कर्णेन वेलाकुला । अश्वत्थामविकर्णघोरमकरा दुर्यो-
धनावर्तिनी सोत्तीर्णा खलु पांडवै रणनदी कैवर्तकः केशवः ॥ ६ ॥

பீஷ்ம துரோணர்களாகிய கரைகளுள்ளதும், ஜயத்திரதனாகிய ஜலமுடையதும், காந்தாரனாகிய நீலோற்பலமுடையதும், சல்லியனாகிய முதலையுடையதும், கிருபாசாரியரால் ஓடுவதும், கர்ணனால் அலைக்கப்பட்டதும், அசுவத்தாமா விகர்ணனென்னும் கோரமான மகரங்களை யுடையதும், துரியோதனனாகிய சுழியையுடையதுமான இரண (போர்) நதியாகிய அது நிச்சயமாகப் பாண்டவர்களாற்கடக்கப்பட்டது. கடத்துவிப்பவன் கேசவன்.

(கா)

पाराशर्यवचःसरोजममलं गीतार्थगंधोत्कटं नानाख्यानककेसरं हरिकथासंबोधनाबोधितम् । लोके सज्जनषट्पदैरहरहः पेपीयमानं मुदा भूयाद्भारतपङ्कजं कलिमलप्रध्वंसि नः श्रेयसे ॥ ७ ॥

பாராசரியரான வியாசராதுவாக்காகிய சரஸிலுண்டான தும், சுத்தமானதும், கீதார்த்தமாகிய வாசனை மிகுந்ததும், பல ஆக்கியானங் (வார்த்தை) களான கேசரங்களுள்ளதும், ஹரிகதையாகிய சம்போதனையால் போதிக்கப்பட்டதும், உலகத்தில் சற்சனர்களான வண்டுகளால் தினந்தோறும்

அடிக்கடி பருகப்படுவதும், கலியின் மலத்தை அத்தியந்தம் கெடுப்பதுமான பாரதமாகிய தாமரை நமக்குச் சிரேயசின் பொருட்டதாகுக. (எ)

मूकं करोति वाचालं पंगुं लंघयते गिरिम् ।

यत्कृपा तमहं वंदे परमानंदमाधवम् ॥ ८ ॥

எவனுடைய கிருபையானது ஊமையை வாக்குச் சமர்த்தனாக்குமோ, முடவனை மலையைத்தாண்டச்செய்யுமோ, அப்படிப்பட்ட பரமாநந்த மாதவரை யான் வணங்குகிறேன். (அ)

यं ब्रह्मावरुणेंद्ररुद्रमरुतः स्तुन्वंति दिव्यैः स्तवैर्वेदैः सांगपदक्रमोपनिषदैर्गायंति यं सामगाः । ध्यानावस्थिततद्गतेन मनसा पश्यंति यं योगिनो यस्यांतं न विदुः सुरासुरगणा देवाय तस्मै नमः ॥ ९ ॥

எவரைப் பிரஹ்மா வருணன் இந்திரன் உருத்திரன் மருத்துக்கள் என்பவர் திவ்வியங்களான ஸ்துதிகளால் ஸ்துதிக்கின்றனரோ, எவரைச் சாமகானஞ்செய்வோர் அங்கம் பதம் கிரமம் என்பவற்றோடுகூடிய உபநிஷதங்களாகிய வேதங்களால் பாடுகின்றனரோ, எவரைத் தியானத்தில்

நிலைத்து அவனிடத்துப் பொருந்தியதான மனதினால் காண்கின்றனரோ, எவருடைய முடிவினைச் சுராசுரகணங்கள் அறியாரோ, அந்தத்தேவனுக்கு நமஸ்காரம். (கூ)

॥ इति ध्यानम् ॥

தியானம் முடிந்தது.

பாயிரம்.

மங்கலம்.

ஸ்ரீ கணேசர் ஸ்துதி.

பாசத்தோ டங்குசமும் பாணியினிற் ருங்கிமிக
நேசத்தோ டுள்ளத்தே நின்றெனது—பாசமதைக்
கட்டி யிருக்கிக் கனங்குசத்தான் மாய்த்திடுக
குட்டிக் கரிமுகத்தெங் கோன்.

ஸ்ரீ சாரதா ஸ்துதி.

அக்கர பதங்க ளாகி யனைத்தினும் வேற தாகி
அக்கர யுரையாய் நின்றே யகிலமுந் தாங்கி நிற்கும்
அக்கர வபய மேந்தி யருளொடு வரம தீயும்
அக்கர வாணி பாத மநுதினஞ் சிந்தை செய்வாம்.

ஸ்ரீ சங்கராசார்யர் ஸ்துதி.

இவ்வுல கறியு மான்மா வேகமே யென்னும் ஞானம்
பவ்வ நோய் தீர்ப்பதென்னப் பலருமே யறியும் வண்ணம்
செவ்விதிற் பாடி யாதிசெய் தவெம் பகவற் பாதன்
திவ்விய பதத்திற் றூழ்ந்தார் சேருவர் மேலாம் வீடே.

ஸ்ரீ சற்குருவிஷ்ணுஸ்வாமி துதி.

சுந்தர ஞானத் தோடு தொன்மையாஞ் சுகமு மீந்து
தந்தையின் மிக்க தான தயையினை யுடைய கோவா
மிந்திரை மணாள னும மெய்த்து மெய்க்கு ரவனோடு
முந்திய மேலோர் தம்மை முன்னியே வணக்கஞ் செய்வாம்.

ஸ்ரீ பகவான் ஸ்துதி.

சத்திமோ டாகந் தந்தான் றன்பெயர்ப் பொருள தாக
மித்தையாந் துன்ப மெல்லா மிரிந்திடப் பிளப்போ னென்னும்
இத்தகை கிருஷ்ணப் பேரை யெழில்பெறப் பெற்ற வந்த
வத்துவோ டபேத மாகும் வணக்கம தியற்று வாமே.

(இ-ள்) கிருஷ் (कृष्) என்னும் சொல்லின் பரியாய மான பூ (भू) என்னும் சொற்பொருளான ஸத்; நிர்விருதி (சுக) வாசகமான ண என்னும் சொற்பொருளான ஆநந்தம்; இவ்விரண்டும் கூடிய சதாநந்தன் என்பது தனது கிருஷ்ணன் என்னும் பெயருக்குப் பொருளாக: மித்தையாகிய துன்பங்களெல்லாம் நாசமாகுமாறு தன்னருட்சக்தியால் பிளப்பவன் (கர்ஷணஞ் செய்பவன்) என்னும் இத்தன்மையவிற்பத்தியமைந்த கிருஷ்ணன் என்னும் யோகப்பெயரை அழகு பொருந்தப்பெற்றுள்ள அந்த (கோபாலோத்தரதாபநீயவுபநிடதத்தில் துர்வாச கோபிகையரின் சம்வாதத்தாற் பிரதி

பாதிக்கப்பட்டுள்ள பரப்பிரஹ்மமாகிய) வத்துவோடு (உள்பொருளாகிய சத்தோடு) அபேதமாதலாகிய வணக்கத்தினைச் செய்வாம். (எ-று)

நூல் வரலாறு.

போர்முனை தன்னி லையம் பொருந்திய பார்த்த னுக்கா
ஏர்மிகு கண்ண னன்பா லியம்பிய கீதை தன்னை
சீர்மிகு வியாத னாலே திவ்விய திருட்டி பெற்றங்
கார்வமார் திருத ராட்டிரற் கறைந்தனன் சஞ்ச யன்றான்.

அத்தகு கீதை தன்னை யவனியோ ரறியு மாறு
வித்தக வியாத னூலால் விளம்பின னதனை யானும்
கத்திய ரூப மாகக் கழறுவ னன்பி னோடே
இத்தமி ழகத்தா ரியாரு மெளிதினி லுணரு மாறே.

நூலியல்பு.

முன்னுரை பலவு மாய்ந்து முனிமொழி தனக்கு நேராச்
சொன்னதா மிதனை மூல சுலோகத்தோ டொத்து நோக்கும்
நன்னய புத்தி யுள்ளார் நலமுள தெனவே கொள்வர்
பின்னுறு புத்தி மந்தர் பிதற்றுவர் பல்லாற் றனே.

॥ श्री कृष्णायपरब्रह्मणे नमः ॥

॥ अथ श्रीभगवद्गीता ॥

ஸ்ரீ பகவத்கீதை.

ஸ்ரீ பகவத்கீதை.

நூல்.

॥ प्रथमोऽध्यायः ॥

முதல் அத்தியாயம்.

॥ अर्जुनविषादयोगः ॥

அர்ஜுனவிஷாதயோகம்.

॥ धृतराष्ट्र उवाच ॥

धर्मक्षेत्रे कुरुक्षेत्रे समवेता युयुत्सवः ।
मामकाः पांडवाश्चैव किमकुर्वत संजय ॥ १ ॥

[௧] திருதராஷ்டிரன் சொல்லலாயினான் :—சஞ்சய ! தர்மக்ஷேத்திரமா(புண்ணியபூமியா)கிய குருக்ஷேத்திரத்தில் யுத்தஞ்செய்ய விரும்பியவர்களாய்க் கூடியவர்களாகிய என்னுடையவர்களும் (என் குமாரர்முதலியோரும்) பாண்டவர்களும் என்ன செய்தார்கள் ? (௧)

॥ संजय उवाच ॥

दृष्ट्वा तु पांडवानीकं व्यूढं दुर्योधनस्तदा ।
आचार्यमुपसंगम्य राजा वचनमब्रवीत् ॥ २ ॥

[௨] சஞ்சயன் சொல்லலாயினான் :—அப்போது துரியோதனனாகிய இராஜா அணிவகுக்கப்பட்டுள்ள பாண்டவர்களகு

ஸைனியத்தைப்பார்த்து, தன் ஆசாரியராகிய துரோணரு கிற்சென்று (பின்வரும்) வார்த்தையைச் சொல்லலாயினான்:—

पश्यैतां पाण्डुपुत्राणामाचार्य महतीं चमूम् ।
व्यूढां द्रुपदपुत्रेण तव शिष्येण धीमता ॥ ३ ॥

[௩] ஆசாரியரே! தமது சிஷ்யனும் புத்திமானுமாகிய த்ருபதராஜ புத்திர (திருஷ்டத்துயும்ந)னால் அணிவகுக்கப் பட்ட பாண்டுபுத்திரர்களது இந்தப் பெரிய சேனையைப் பாரும். (௩)

अत्र शूरा महेष्वासा भीमार्जुनसमा युधि ।
युयुधानो विराटश्च द्रुपदश्च महारथः ॥ ४ ॥

धृष्टकेतुश्चेकितानः काशिराजश्च वीर्यवान् ।
पुरुजित् कुंतिभोजश्च शैब्यश्च नरपुंगवः ॥ ५॥
युधामन्युश्च विक्रांत उत्तमौजाश्च वीर्यवान् ।
सौभद्रो द्रौपदेयाश्च सर्व एव महारथाः ॥ ६ ॥

[ச-ரு-சு] இங்கு சூரர்களும் மகாவில்லிகளும் யுத்தத்தில் பீமார்ச்சுனர்களுக்குச் சமானமானவர்களுமான யுயுதானன் (சாத்தியகி), விராடன், மகாரதனான துருபதன், திருஷ்டகேது, சேகிதானன், வீரியமுள்ள காசிராஜன், புருஜித், குந்திபோஜன், நரசிரேஷ்டனான சைப்பியன், வெற்றி

யுள்ள யுதாமன்னியு, பராக்கிரமமுடைய உத்தமௌஜா, சுபத்திரை புதல்வன் (அபிமன்னியு), துரௌபதை புத்திரர்கள் என்பவரிருக்கின்றனர். இவர்களெல்லோருமே மகாரதர்கள். (சு-டு-கூ)

अस्माकं तु विशिष्टा ये तान्निबोध द्विजोत्तम ।
नायका मम सैन्यस्य संज्ञार्थं तान्ब्रवीमि ते ॥ ७ ॥

[எ] பிராஹ்மணோத்தமரே! நம்மவர்களில் சிறந்தவர்கள் எவர்களோ அவர்களைத் தெரிந்துகொள்ளுவீராக. என் சைனியத்தின் நாயகர்கள் எவர்களோ, அவர்களை நினைப்பூட்டுதற்பொருட்டுத் தமக்குச் சொல்லுகிறேன். (எ)

भवान्भीष्मश्च कर्णश्च कृपश्च समितिंजयः ।
अश्वत्थामा विकर्णश्च सौमदत्तिस्तथैव च ॥ ८ ॥

अन्ये च बहवः शूरा मदर्थे त्यक्तजीविताः ।
नानाशस्त्रप्रहरणाः सर्वे युद्धविशारदाः ॥ ९ ॥

[அ-ரை] தாமும், பீஷ்மரும், கர்ணனும், கிருபாசாரியரும், யுத்தத்தில் வெற்றியுடைய அசுவத்தாமரும், விகர்ணனும், சௌமதத்தியும் (சோமதத்தன்குமாரனாகிய பூரிசிரவஸனும்), அப்படியே மற்றும் அநேக சூரர்களும் என்பொருட்டு வாழ

சிறப்புக்கவி.

விஞ்சு ரூபகா லங்காரத் தான்முத்தி
    வீட்ட கத்தை யலங்கரித் திட்டனன்
தஞ்சை வாழ்பிர மாநந்த யோகியாந்
    தத்து வப்பொரு டோர்ந்தசுஞ் ஞானியே.

ஓம்.

தத்ஸத்ப்ரஹ்மணே நம:

ஸ்ரீபகவத்கீதாசம்பந்தியான

அத்யாத்மபிரசங்கத்தினை விளக்கும்

ரூபகாலங்காரம்.

மங்கலம்.

பத்திதரு முத்திதரும் பலகாலு மேத்தினார்க்குஞ்
சித்திதரு ஞானத் திருவளிக்கு—மத்திமுகன்
றுங்க முனிவோர்க டூய வுளக்கமலந்
தங்குந் திருவடிகளாம்.

தை யுண்டுபண்ண உரத்த சிங்கநாதத்தைச் செய்து சங்கத்தைப் பூரித்தார். (கஉ)

ततः शंखाश्च भेर्यश्च पणवानकगोमुखाः ।
सहसैवाभ्यहन्यंत स शब्दस्तुमुलोऽभवत् ॥ १३ ॥

[கங] அதன்பின் (கௌரவர்களது) சங்கங்களும், பேரி(நகரா)களும், பணவம் (மத்தளம்), ஆநகம், முரசு (பறை), கோமுகம் (கொம்பு) என்பனவைகளும் உடனே முழங்கின. அச்சத்தம் பெரிதாயிற்று. (கங)

ततः श्वेतैर्हयैर्युक्ते महति स्यंदने स्थितौ ।
माधवः पाण्डवश्चैव दिव्यौ शंखौ प्रदध्मतुः ॥ १४ ॥

[௧௪] அதன்பின் வெள்ளைக்குதிரைகளால் பூட்டப்பட்ட பெருந்தேரிலிருப்பவர்களாகிய மாதவரும் அர்ஜுனனும் தமது திவ்வியமான சங்கங்களைச் செவ்வையாய்ப் பூரித்தனர். (௧௪)

पांचजन्यं हृषीकेशो देवदत्तं धनंजयः ।
पौंड्रं दध्मौ महाशंखं भीमकर्मा वृकोदरः ॥ १५ ॥

அங்குச் சுழுத்தியவஸ்தையாகிய வீட்டில் வசிப்பவளான தாமஸீதிரவ்யசக்திவடிவமுடையகண்களுடைய இராணியினிடத்தில் சத்ஸங்கமும் விவேகமுமான இரண்டு நேத்திரங்களுமில்லாத அவிவேகத்தின் பரியாயமான மோகமய சாக்ஷியாகிய ஆத்மாவோடு பிரமஜதாதாத்மியமுடைய அகங்காரமாகிய அந்தக்கரணத்தின் பரிணாமஸ்வரூபவடிவ ஜேஷ்டபுத்திரனான திருதராஷ்டிரன் உண்டானான்.

உ. ஜாக்கிரதவஸ்தையாகிய வீட்டில் வசிப்பவளான இரண்டாவது கிரியாசக்தியாகிய இராஜஸக்கிரியாரூப வெண்மை நிறத்தோடுகூடிய இராணியினிடத்தில் இரஜோகுணப்பிர

தானமாகிய வியவகாரிபுணமேருடைய அந்தக்கரணத்தின் பரிணமவடிவ மத்தியமபுத்திரனை பாண்டு உண்டானன். விக்ஷேபத்தினைச் செய்யும் இரஜோகுணத்தினல் தமோகுணம் அமிழ்த்தப்படுதலின் அந்தப் பாண்டு முதலில் ஜாக்கிராவஸ்தாதிகாலத்தில் இராஜ்யத்திற்கு அதிகாரியானன். பின்னர்ச் சுழுத்தியாதிகாலத்தில் இரஜோகுணம் விலயமாகத் தமோகுணத்தின் வலியால் சமப்பிரதானருபபோக்தாவாகிய அகங்காரவடிவ திருதராஷ்டிரன் ராஜாவானன். அவன் சாத்துவிகபுத்திவிருத்தியின் காரியமான உபசாரமாகச் சொல்லப்படும் பாண்டுவின் புத்திரரான பதார்த்த

स घोषो धार्तराष्ट्राणां हृदयानि व्यदारयत् ।
नभश्च पृथिवीं चैव तुमुलो व्यनुनादयन् ॥ १९ ॥

[கக] அந்த முழக்கமானது மண்ணிலும் விண்ணிலும் (எதிரொலிக்கிறதால்?) (எத்திக்கினும்) விசேஷமாய்த் தொடர்ந்து சப்தித்து, தார்த்தராஷ்டிர (திருதராஷ்டிரனைச் சேர்ந்தவ)ர்களது இதயங்களைப் பேதித்தது. (கக)

अथ व्यवस्थितान्दृष्ट्वा धार्तराष्ट्रान्कपिध्वजः ।
प्रवृत्ते शस्त्रसंपाते धनुरुद्यम्य पांडवः ॥ २० ॥

हृषीकेशं तदा वाक्यमिदमाह महीपते ।

॥ अर्जुन उवाच ॥

सेनयोरुभयोर्मध्ये रथं स्थापय मेऽच्युत ॥ २१ ॥

[உ0-உக] அரசனே! பின்போர்செய்ய முயன்று நிற்கின்றவர்களாகிய தார்த்தராஷ்டிரர் (தம்மவர்)களைக் கண்டு அப்போது ஆயுதங்கள்விழப் பிரவிருத்தித்தபோது (படை வழங்கத்தொடங்கியபோது) ஹநுமக்கொடியோனாகிய பாண்டவன் (அர்ஜுனன்) வில்லை எற்றி ஹிருஷிகேசரைப் பார்த்து

இவ்வாக்கியத்தைச் சொல்லலாயினான்:—அர்ஜுனன் சொல்லலாயினான்:—அச்சுதனே! இரண்டு சேனைகளுக்குமிடையில் என்னுடைய இரதத்தை நிறுத்தியருள்வீராக. (உ0-உக)

यावदेतान्निरीक्षेऽहं योद्धुकामानवस्थितान् ।
कैर्मया सह योद्धव्यमस्मिन्रणसमुद्यमे ॥ २२ ॥

[உஉ] இந்த ரணபூமியில் எவர்களோடு யான் யுத்தஞ்செய்யவேண்டுமோ அத்தன்மைய யுத்தஞ்செய்யும் விருப்போடு நிற்பவர்களாகிய இவர்களை எவ்வெல்லையில் யான் காணலாமோ (அங்கு நிறுத்துக). (உஉ)

योत्स्यमानानवेक्षेऽहं य एतेऽत्र समागताः ।
धार्तराष्ट्रस्य दुर्बुद्धेर्युद्धे प्रियचिकीर्षवः ॥ २३ ॥

[உங] துர்ப்புத்தியாகிய துரியோதனனுக்கு யுத்தத்தில் பிரியத்தைச் செய்யவிரும்பியவர்களாய் எந்த இவர்கள் வந்திருக்கின்றார்களோ அத்தன்மைய யுத்தஞ்செய்கின்ற வீரர்களை யான் பார்ப்பேனாக. (உங)

॥ संजय उवाच ॥

एवमुक्तो हृषीकेशो गुडाकेशेन भारत ।
सेनयोरुभयोर्मध्ये स्थापयित्वा रथोत्तमम् ॥ २४ ॥

भीष्मद्रोणप्रमुखतः सर्वेषां च महीक्षिताम् ।
उवाच पार्थ पश्यैतान्समवेतान्कुरूनिति ॥ २५ ॥

[உச-உரு] சஞ்சயன் சொல்லலாயினன் :—இவ்வாறு அர்ச்சுன! குடாகேச (நித்திரையை ஜயிப்பவ)ஞகிய அர்ச்சுனஞல் சொல்லப்பட்ட பகவானவர் இரண்டு சேனைகளுக்கும் மத்தியில் உத்தமமான இரதத்தை பீஷ்மர் துரோணர்முதலியோருக்கு முன்னும் எல்லா அரசர்களுக்கு முன்னும் நிறுத்தி பார்த்த! (யுத்தத்தின் பொருட்டுக்) கூடியுள்ள இக்கௌரவர்களைப் பார் என்று கூறினர். (உச-உரு)

तत्रापश्यत्स्थितान्पार्थः पितॄनथ पितामहान् ।
आचार्यान्मातुलान्भ्रातॄन्पुत्रान्पौत्रान्सखींस्तथा ।
श्वशुरान्सुहृदश्चैव सेनयोरुभयोरपि ॥ २६॥ ॥

[உசு] பார்த்தன் (பிருதாவின் புத்திரன்) அங்கு இரண்டு சேனைகளிலுமிருக்கின்ற பிதாக்களையும், பின் பிதாமகர்களையும், ஆசாரியர்களையும், அம்மான்மாரையும், பிராதாக்களையும், புத்திரர்களையும், பௌத்திரர்களையும், தோழர்களையும், அவ்வாறே மாமன்மாரையும், சுகிருத்து (ஒன்றையெதிர்பாராது உபகரிப்பவர்) களையுமே பார்த்தான். (உசு)

तान्समीक्ष्य स कौंतेयः सर्वान्बंधूनवस्थितान् ।
कृपया परयाविष्टो विषीदन्निदमब्रवीत् ॥ २७॥ ॥

[௨௭] அக்குந்திபுத்திர(அர்ச்சுன)ன் அங்கு நிற்கும் அப்பந்துக்களெல்லோரையும் செவ்வையாய்ப்பார்த்து இரக்கமேலிட்டவனாய்ச் சோகித்து இது (பின்வருமாறு) கூறலாயினான். (௨௭)

॥ अर्जुन उवाच ॥

दृष्ट्वेमं स्वजनं कृष्ण युयुत्सुं समुपस्थितम् ।
सीदंति मम गात्राणि मुखं च परिशुष्यति ॥ २८॥ ॥

[உஅ] அர்ச்சுனன் சொல்லலாயினன் :— கிருஷ்ணபக வானே! யுத்தஞ்செய்ய விரும்பிநிற்கின்ற இந்த சுவஜனங்க ளைப்பார்த்து என் அங்கங்கள் சோர்கின்றன; வாய் உலருகி றது. (உஅ)

वेपथुश्च शरीरे मे रोमहर्षश्च जायते ।
गांडीवं स्रंसते हस्तात्त्वक्चैव परिदह्यते ॥ २९॥ ॥

[உகூ] என் சரீரத்தில் நடுக்கமும் மயிர்க்கூச்சமுமுண்டா கின்றன. காண்டீவம் (என்னும் வில்) கையினின்றும் நழுவு கிறது. உடல் காந்துகிறது. (உகூ)

न च शक्नोम्यवस्थातुं भ्रमतीव च मे मनः ।
निमित्तानि च पश्यामि विपरीतानि केशव ॥ ३०॥ ॥

[௩௰ஆ] நிற்கக்கூடவில்லை; என்மனம் சுழலுவது போலிருக்கிறது (௩௰). கேசவ! விபரீதங்களான நிமித்த (சகுன)ங்களைக் காண்கின்றேன். (௩௰ஆ)

न च श्रेयोऽनुपश्यामि हत्वा स्वजनमाहवे ॥
न कांक्षे विजयं कृष्ण न च राज्यं सुखानि च ॥ ३१॥ ॥

[௩௧ஆ] யுத்தத்தில் பந்துக்களைக் கொன்று பின் நன்மையொன்றையும் காணேன் (௩௧). பகவானே! வெற்றியையும், இராஜ்யத்தையும், சுகங்களையும் நான் விரும்பவில்லை. (௩௧ஆ)

किं नो राज्येन गोविंद किं भोगैर्जीवितेन वा ॥ ३२ ॥
येषामर्थे कांक्षितं नो राज्यं भोगाः सुखानि च ।
त इमेऽवस्थिता युद्धे प्राणांस्त्यक्त्वा धनानि च ॥ ३३ ॥

[௩௨-௩௩] கோவிந்த! இராஜ்யத்தினாலாவது, போகங்களினாலாவது, ஜீவித்திருப்பதினாலாவது எங்களுக்கென்ன பிரயோஜனம்? (௩௨). எவர்கள் (எவ்வுறவினர்) பொருட்டாக எமது இராஜ்யமும், போகங்களும், சுகங்களும் விரும்பப்பட்டனவோ அப்படிப்பட்ட இவர்கள் தங்கள் பிராணனையும் செல்வத்தையும் விட்டு யுத்தத்தில் நிற்கின்றார்கள். (௩௩)

आचार्याः पितरः पुत्रास्तथैव च पितामहाः ।
मातुलाः श्वशुराः पौत्राः श्यालाः संबन्धिनस्तथा ॥ ३४ ॥
एतान्न हंतुमिच्छामि घ्नतोऽपि मधुसूदन ।
अपि त्रैलोक्यराज्यस्य हेतोः किं नु महीकृते ॥ ३५ ॥

[௩௪-௩௫] ஆசாரியர்களும், தந்தைமாரும், புத்திரர்களும், அப்படியே பாட்டன்மாரும், அம்மான்மாரும், மாமன்மாரும், பேரன்மாரும், மைத்துனர்மாரும், அப்படியே சம்பந்திகளுமாகிய இவர்களை மதுஸூதன! (மதுவைத்தியனைக் கொன்

றவரே!) (யான்) கொல்லப்படுபவனாயினும் மூவுலகராஜ்யத்தின்பொருட்டும் கொல்ல இச்சியேனெனின், இப்பூமியைப் பெறுதற் பொருட்டுச் சொல்லுவதென்னே? (௩௪-௩௫)

निहत्य धार्तराष्ट्रान्नः का प्रीतिः स्याज्जनार्दन ।

पापमेवाश्रयेदस्मान्हत्वैतानाततायिनः ॥ ३६ ॥

[௩௬] ஜநார்த்தன! (ஜனனென்பவனைக் கொன்றவரே!) தார்த்தராஷ்டிரர்களைக் கொன்று எங்களுக்கு என்ன சந்தோஷமுண்டாகும்? ஆததாயி (நெருப்புவைத்தல் முதலிய கொ

டிய பாபஞ்செய்வோர்)களாகிய இவர்களைக் கொல்லுவதனால் பாபமே எம்மை ஆசிரயிக்கும். (௩௬)

तस्मान्नार्हा वयं हंतुं धार्तराष्ट्रान्स्वबांधवान् ।
स्वजनं हि कथं हत्वा सुखिनः स्याम माधव ॥ ३७ ॥

[௩௭] ஆதலால் நாங்கள் பந்துக்களாகிய தார்த்தராஷ்டிரர்களைக் கொல்லுதற்குரியோமல்லோம். மாதவ! பந்துக்களைக் கொன்று எப்படிச் சுகிகளாவோம். (௩௭)

यद्यप्येते न पश्यंति लोभोपहतचेतसः ।
कुलक्षयकृतं दोषं मित्रद्रोहे च पातकम् ॥ ३८ ॥

कथं न ज्ञेयमस्माभिः पापादस्मान्निवर्तितुम् ।
कुलक्षयकृतं दोषं प्रपश्यद्भिर्जनार्दन ॥ ३९ ॥

[ரு-அ-ருக] உலோபத்தினுல் அபகரிக்கப்பட்ட சித்தமுள்ள இவர்கள் குலக்ஷயத்தினுலாம் தோஷத்தையும், மித்திரத்துரோகத்தினுலாம்பாதகத்தையும்பார்க்கமாட்டார்களெனினும், ஜநார்த்தன! குலக்ஷயத்தினுலாம் தோஷத்தையறியும் எம்மால் இப்பாபத்தினின்றும் விலகுதற்குத் தெரியத் தகாதது எப்படி? (ரு-அ-ருக)

कुलक्षये प्रणश्यन्ति कुलधर्माः सनातनाः ।
धर्मे नष्टे कुलं कृत्स्नमधर्मोऽभिभवत्युत ॥ ४० ॥

[சo] குலம் க்ஷயமானால் பழைமையான (தொன்றுதொட்டுவரும்) குலதர்மங்கள் கெடுகின்றன. தர்மம் கெடவே குலங்களெல்லாவற்றையும் அதர்மமானது வந்து மூடுகிறது. ()

अधर्माभिभवात्कृष्ण प्रदुष्यंति कुलस्त्रियः ।
स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसंकरः ॥ ४१ ॥

[சக] கிருஷ்ண! அதர்மம் அமிழ்த்தலால் குலஸ்திரீகள்

மிகத் தூஷிக்கப்படுகின்றார்கள். வார்ஷ்ணேய! (விருஷ்ணிகுலத்தில் வந்தவரே!) ஸ்திரீகள் தூஷிக்கப்பட்டபோது (தோஷமுடையவராகவே) வர்ணசங்கரம் (ஜாதிக்கலப்பு) உண்டாகின்றது. (சக)

संकरो नरकायैव कुलघ्नानां कुलस्य च ।
पतंति पितरो ह्येषां लुप्तपिंडोदकक्रियाः ॥ ४२ ॥

[சஉ] வர்ணசங்கரமானது குலத்திற்கும் குலத்தினைக் கெடுத்தவர்களுக்கும் நரகத்தின்பொருட்டே யாகின்றது. அவ்

றியும் இவர்களது பிதிர்க்கள் பிண்டோதகக்கிரியைகள் குறைந்தவர்களாய் (நரகத்தில்) விழுகின்றார்கள். (௪௨)

दोषैरेतैः कुलघ्नानां वर्णसंकरकारकैः ।

उत्साद्यंते जातिधर्माः कुलधर्माश्च शाश्वताः ॥ ४३ ॥

[௪௩] குலத்தைக் கெடுத்தவர்களது வர்ணசங்கரத்தையுண்டுபண்ணும் இத்தோஷங்களால் சாசுவதமான சாதி (வர்ண) தர்மங்களும் குலதர்மங்களும் கெடுக்கப்படுகின்றன.

उत्सन्नकुलधर्माणां मनुष्याणां जनार्दन ।

नरके नियतं वासो भवतीत्यनुशुश्रुम ॥ ४४ ॥

[௪௪] ஜநார்த்தன ! கெடுக்கப்பட்ட குலதர்மமுடைய மனிதர்களுக்கு நரகத்தில் நியதமான (நீங்காத) வாசமுண்டாகின்றதென்று கேட்கின்றோம். (௪௪)

अहो बत महत्पापं कर्तुं व्यवसिता वयम् ।
यद्राज्यसुखलोभेन हंतुं स्वजनमुद्यताः ॥ ४५ ॥

[௪௫] எக்காரணத்தால் நாங்கள் இராஜ்ய சுகங்களின் இச்சையால் பந்துஜனங்களைக் கொல்ல எத்தனித்தோமோ, அக்காரணத்தால் அதிக பாபத்தைச்செய்ய முயன்றவர்களானோம். ஐயோ ! கஷ்டம் ! (௪௫)

यदि मामप्रतीकारमशस्त्रं शस्त्रपाणयः ।
धार्तराष्ट्रा रणे हन्युस्तन्मे क्षेमतरं भवेत् ॥ ४६ ॥

[௪௬] ஆயுதபாணிகளான துரியோதனாதியர் ஆயுதமில்லாமலும் பிரதிக்கிரியை செய்யாமலுமிருக்கும் என்னை யுத்தத்தில் கொல்லுவாராயின் அது (கொலை) எனக்கு மிக்க க்ஷேமத்தைத் தருவதாம். (௪௬)

॥ संजय उवाच ॥

एवमुक्त्वाऽर्जुनः संख्ये रथोपस्थ उपाविशत् ।
विसृज्य सशरं चापं शोकसंविग्नमानसः ॥ ४७ ॥

[௪௭] சஞ்சயன் சொல்லலுற்றான் :—சோகத்தாற் கலங்கிய மனத்தினனாகிய அர்ச்சுனன் யுத்தகளத்தில் இவ்வாறுகூறி பாணத்தோடுகூடிய வில்லைவிட்டுத் தேர்த்தட்டில் உட்கார்ந்தான். (௪௭)

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु
श्रीकृष्णार्जुन संवादे
प्रथमोऽध्यायः

இவ்வாறு ஸ்ரீ பகவத்கீதையாகிய உபநிஷத்தில்
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனசம்வாதத்தில்
முதல் அத்தியாயம் முடிந்தது.

॥ द्वितीयोऽध्यायः ॥
இரண்டாம் அத்தியாயம்.
॥ सांख्ययोगः ॥
சாங்கியயோகம்.

॥ संजय उवाच ॥

तं तथा कृपयाविष्टमश्रुपूर्णाकुलेक्षणम् ।
विषीदंतमिदं वाक्यमुवाच मधुसूदनः ॥ १ ॥

[சூ-அ] சஞ்சயன் சொல்லலாயினன் :—அவ்வாறு இரக்கத்தினால் வியாபிக்கப்பட்டவனும் கண்ணீர் நிரம்பிய வியாகுல

முள்ள பார்வையுடையவனுமாய்த் துக்கிக்கின்ற அவ்வர்ச்சு
னனைநோக்கி மதுசூதனர் இவ்வாக்கியத்தைச் சொல்லலாயி
னார் :— (௧)

॥ श्रीभगवानुवाच ॥

कुतस्त्वा कश्मलमिदं विषमे समुपस्थितम् ।
अनार्यजुष्टमस्वर्ग्यमकीर्तिकरमर्जुन ॥ २ ॥

[சஃ] ஸ்ரீ பகவான் சொல்லலாயினார் :—அர்ச்சுன! யுத்த
சங்கடத்தில் ஆரியரல்லாதவராற் சேவிக்கப்படுவதும், சுவர்
க்க விரோதியும், கீர்த்தியின்மையைத் தருவதுமான இந்த
அழுக்கு (மோகம்) உன்னை எப்படியடைந்தது? (௨)

क्लैब्यं मा स्म गमः पार्थ नैतत्त्वय्युपपद्यते ।
क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परंतप ॥ ३ ॥

[௫0] பார்த்த! அலித்தன்மையை யடையாதே. உன்னிடத்து இது பொருந்தாது. பரந்தப! (சத்துருக்களைத் தபிக்கச்செய்பவனே!) அச்சமான மனதின் துர்ப்பலத்தன்மையினை விட்டு எழுந்திரு. (௩)

॥ अर्जुन उवाच ॥

कथं भीष्ममहं संख्ये द्रोणं च मधुसूदन ।
इषुभिः प्रतियोत्स्यामि पूजार्हावरिसूदन ॥ ४ ॥

[௫௧] அர்ச்சுனன் சொல்லலாயினன்:—சத்துருசங்கார! மதுசூதனா! (புஷ்பங்களால்) பூஜிக்கத்தக்க பீஷ்மாசாரியரையும் துரோணாசாரியரையும் யுத்தத்தில் யான் எப்படி பாணங்களால் அடிப்பேன். (௪)

गुरूनहत्वा हि महानुभावान् श्रेयो भोक्तुं भैक्ष्यमपीह लोके ।
हत्वार्थकामांस्तु गुरूनिहैव भुंजीय भोगान्रुधिरप्रदिग्धान् ॥ ५ ॥

[௫௨] பிரசித்தமகாநுபாவர்களான குருமாரைக் கொல்லாமல் பிச்சையெடுத்துண்பது மேன்மையானதாம். பொருள் விருப்புடைய குருமாரைக்கொன்று இகலோகத்திலேயே இரத்தத்தினற் பூசப்பட்ட போகங்களைப் புசிப்பேன். (௫)

न चैतद्विद्मः कतरन्नो गरीयो यद्वा जयेम यदि वा नो जयेयुः ।
यानेव हत्वा न जिजीविषामस्तेऽवस्थिताः प्रमुखे धार्तराष्ट्राः ॥६॥

[௫௱] எமக்கு (போர்செய்தல் பிச்சையெடுத்தலிரண்டனுள்)யாது சிலாக்கியமானதென அறியோம். அல்லது (யாம்) ஜயிப்போமோ? துரியோதனாதியர் எம்மை ஜயிப்பார்களோ? (அறியேம்) எவர்களைக்கொன்று(பின்)ஜீவித்திருக்க விரும்பமாட்டோமோ அந்தத் தார்த்தராஷ்டிரர்களே எதிரில் நிற்கிறார்கள். (௬)

कार्पण्यदोषोपहतस्वभावः पृच्छामि त्वां धर्मसंमूढचेताः ।
यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम् ॥

[௫௪] கிருபணத்தன்மையாகிய தோஷத்தினால் திரஸ்கரிக்கப்பட்ட சுபாவமுடைய யான் தர்மஞானமில்லாத(தர்மத்தில் சம்சயமுள்ள)சித்தமுடையவனாய்த் தம்மைக் கேட்கின்றேன். மேலானதாக நிச்சயிக்கப்பட்டது எதுவோ அதனை எனக்குச் சொல்லியருளல்வேண்டும். தமக்கு யான் சிஷ்யன். தம்மைச் சரணடைந்த எனக்கு உபதேசித்தருளல்வேண்டும்.

न हि प्रपश्यामि ममापनुद्याद् यच्छोकमुच्छोषणमिन्द्रियाणाम् ।
अवाप्य भूमावसपत्नमृद्धं राज्यं सुराणामपि चाधिपत्यम् ॥ ८ ॥

[௫௫] எது எனது இந்திரியங்களின் மிக வாட்டுவனவாகிய சோகத்தினைக் கெடுக்குமோ அதனை, யான் பூமியில் நிஷ்கண்

டகமும்(எதிரியில்லாததும்)வளமுள்ளதுமான இராஜ்ஜியத்தையும் தேவர்களின் அதிபத்தியமான இந்திரத்தன்மையையும் அடைந்தும் காணேனன்று. (அ)

॥ संजय उवाच ॥

एवमुक्त्वा हृषीकेशं गुडाकेशः परंतप ।

न योत्स्य इति गोविंदमुक्त्वा तूष्णीं बभूव ह ॥ ९ ॥

[௯] சஞ்சயன் சொல்லாயினன்:—பரந்தபனை(சத்துருசங்காரனை)குடாகேசன்(நித்திரையைஜயித்தவனை அர்ச்சுனன்)இருஷீகேசரை(இந்திரியங்கட்கதிபானபகவானை)ப்

பார்த்து இவ்வாறு கூறி(மறுபடியும்)கோவிந்தனைப் பார்த்து யுத்தஞ்செய்யே னென்று கூறி சும்மாவிருந்தான். (௯)

तमुवाच हृषीकेशः प्रहसन्निव भारत ।
सेनयोरुभयोर्मध्ये विषीदंतमिदं वचः ॥ १० ॥

[ஸ] திருதராஷ்டிரரே! இரண்டு சேனைகளினிடையில் துக்கப்படுகின்ற அவ்வர்ச்சுனனை நோக்கி இருஷீகேசர் பரிகாசஞ்செய்பவர்போல இவ்வாக்கியத்தினைக் கூறினார். (௧௦)

॥ श्रीभगवानुवाच ॥

अशोच्यानन्वशोचस्त्वं प्रज्ञावादांश्च भाषसे ।
गतासूनगतासूंश्च नानुशोचंति पंडिताः ॥ ११ ॥

ஹ்மசரியத்தினைக்கொண்டு, பன்னிரண்டு வருஷம் வரையில் சகுணஉபாசனைவடிவ வனத்தில் சஞ்சரிப்பவனாய், பிராண ரூப நாகனுடைய ஹடசமாதிவடிவ உலூபி யென்னும் கன்னிகையோடு பிரஹ்மரந்திரமாகிய நாகலோகத்திற்சென்று, பிராணநிரோதமய ஹடயோகவடிவ இராவந்தன் என்னும் புத்திரனைப் பெற்றான். நாசிவடிவ மணிபுரத்தில் கமனாக மனம் செய்வதான பிராணவிருத்திவடிவ அஜபாமந்திரமய மணிபுரபதியினுடைய சித்திராங்கதை யென்னும் புத்திரியின் அப்பியாசவடிவ சங்கத்தினால் மனோவிருத்தி நிரோதமய இராஜயோகவடிவ பப்புருவாகனன் என்னும் புத்திரனைப்

[ஊக] கௌந்தேய(குந்திபுத்திர)! பாரத(பரதவம்சத்தோய்)! மாத்திரை(இந்திரியங்)களுக்கு விஷயங்களோடுண்டாம் பரிச(சம்பந்த)ங்கள் சீதோஷ்ணங்கள்போல சுகதுக்கங்களைத் தருவனவும், போக்குவரவுள்ளனவும் அநித்தியமுமாம். ஆதலால் அவற்றைச் சகிப்பாயாக. (௧௪)

यं हि न व्यथयंत्येते पुरुषं पुरुषर्षभ ।
समदुःखसुखं धीरं सोऽमृतत्वाय कल्पते ॥ १५ ॥

[ஊஉ] புருஷசிரேஷ்டனே! சமமான சுகதுக்கங்களையுடைய எந்தத்தீரபுருஷனை இவை(இந்திரியவிஷயசம்பந்தங்கள்)ன

தனால் துன்பப்படுத்தாவோ அதனால் அவன் மோக்ஷத்தின் பொருட்டு தகுதியுள்ளவனாகின்றான். (௧௫)

नासतो विद्यते भावो नाभावो विद्यते सतः ।
उभयोरपि दृष्टोऽन्तस्त्वनयोस्तत्त्वदर्शिभिः ॥ १६ ॥

[சூ.] அசத்துக்கு(அநித்தியமாகிய தேகாதிகளுக்கு)பாவம்(இருப்பு)இல்லை. சத்திற்கு(நித்தியமாகிய ஆத்மாவிற்கு)அபாவ(நாச)மில்லை. இவ்விரண்டின் நிர்ணயம் தத்துவமுணர்ந்தோரால் காணப்பட்டுளது. (௧௬)

अविनाशि तु तद्विद्धि येन सर्वमिदं ततम् ।
विनाशमव्ययस्यास्य न कश्चित्कर्तुमर्हति ॥ १७ ॥

[சுச] எது(எச்சத்தி)னால் இவையாவும் வியாபிக்கப்பட்டிருக்கின்றனவோ அதனை அவிநாசியென்றறி. அவ்வியயமான (குறைவுநிறைவில்லாத) இவ்வாத்மாவை எவனும்நாசஞ்செய்தற்குரியவனுகான். (கஎ)

अंतवंत इमे देहा नित्यस्योक्ताः शरीरिणः ।
अनाशिनोऽप्रमेयस्य तस्माद्युध्यस्व भारत ॥ १८ ॥

[சுரு] நித்தியமும் நாசமில்லாததும் பிரமாணங்கட்கெட்டாததுமான சரீரி(ஆத்மாவு)க்கு இச்சரீரங்கள் நாசமுடையவாக(அறிஞர்களால்)சொல்லப்பட்டுள. ஆதலால் பாரத! யுத்தஞ்செய். (கஅ)

य एनं वेत्ति हंतारं यश्चैनं मन्यते हतम् ।
उभौ तौ न विजानीतो नायं हंति न हन्यते ॥ १९ ॥

[கூகூ] எவன் இதனை (ஆத்மாவை)க் கொல்லுகிறதாய் அறிகின்றானோ, எவன் இதனை இறந்ததாக மதிக்கின்றானோ, அவ்விருவரும் விசேஷமாய் அறிந்தவராகார். இவ்வாத்மா கொல்லாது, கொல்லப்படாது. (ககூ)

न जायते म्रियते वा कदाचिन्नायं भूत्वा भविता वा न भूयः ।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने शरीरे ॥ २० ॥

[கூஉ] இவ்வாத்மா பிறப்பில்லாதது, நித்தியம், சாசுவதம் (என்றுமிருப்பது), புராணம்(பழைமையானது). இவ்வாத்மா

ஒருபோதும் பிறவாது, இறவாது, இவ்வாத்மா (முன்) இல்லா திருந்து மறுபடியும் ஆகத்தக்கவதன்று. ஆதலால் சரீரம் கொல்லப்படுங்காலத்துக் கொல்லப்படுகிறதில்லை. (௨௦)

वेदाविनाशिनं नित्यं य एनमजमव्ययम् ।
कथं स पुरुषः पार्थ कं घातयति हंति कम् ॥ २१ ॥

[சு-அ] அர்ச்சுனா! எவன் இவ்வாத்மாவை அவிநாசியும், நித்தியமும், பிறப்பில்லாததும், அவ்வியயமு(குறைவுநிறைவில்லாதது)மாக அறிகின்றானோ, அப்புருஷன் எவனை எப்படிக் கொல்லுவிக்கிறான், எவனை எப்படிக் கொல்லுகிறான்? (௨௧)

वासांसि जीर्णानि यथा विहाय नवानि गृह्णाति नरोऽपराणि ।
तथा शरीराणि विहाय जीर्णान्यन्यानि संयाति नवानि देही ॥ २२ ॥

[௯௯] நரன் எப்படிக் கிழிந்த வஸ்திரங்களைக் களைந்துவேறு புதியவஸ்திரங்களைத் தரிக்கின்றானோ, அப்படித் தேகியானவன் ஜீர்ணமான தேகங்களை விட்டு வேறு புதியசரீரங்களைக் கொள்ளுகின்றான். (௨௨.)

नैनं छिंदंति शस्त्राणि नैनं दहति पावकः ।
न चैनं क्लेदयंत्यापो न शोषयति मारुतः ॥ २३ ॥

[எ0] இவ்வாத்மாவை சஸ்திரங்கள் சேதிக்கிறதில்லை. நெருப்பு எரிக்கிறதில்லை. நீர் நனைக்கிறதில்லை. வாயு உலர்த்துகிறதில்லை. (உங)

अच्छेद्योऽयमदाह्योऽयमक्लेद्योऽशोष्य एव च ।
नित्यः सर्वगतः स्थाणुरचलोऽयं सनातनः ॥ २४ ॥

[எக] இவ்வாத்மா சேதிக்கத்தகாதது, இது தகிக்கப்படாதது, நனைக்கப்படாதது, உலர்த்தப்படாதது. இது நித்தியம்; எங்குமுள்ளது, ஸ்தாணு (ஸ்திரசுபாவமுடையது), அசலம் (கிரியையில்லாதது), பழமையானது (அநாதி). (உச)

अव्यक्तोऽयमचिन्त्योऽयमविकार्योऽयमुच्यते ।
तस्मादेवं विदित्वैनं नानुशोचितुमर्हसि ॥ २५ ॥

[௭௨] இஃது அவ்வியக்தம் (வெளிப்படாதது), இது சிந்திக்கமுடியாதது. இது விகாரப்படாதது என்று சொல்லப்படுகின்றது. ஆதலால் இவ்வாறு இதனை அறிந்தால் சோகித்தற்குரியவனல்லாய். (௨௫)

अथ चैनं नित्यजातं नित्यं वा मन्यसे मृतम् ।
तथापि त्वं महाबाहो नैनं शोचितुमर्हसि ॥ २६ ॥

[௭௩] பெரும்புயத்தோய்! மற்றும், நீ இதனை (ஆத்மாவை) நித்தியமும் பிறப்பதும், நித்தியமும் இறப்பதுமாக (உடலாக)

மதிக்கின்றாயா? அப்படியானாலும் இவ்வாறு சோகித்தற்கு ரியவனாகாய். (௨௬)

जातस्य हि ध्रुवो मृत्युर्ध्रुवं जन्म मृतस्य च ।
तस्मादपरिहार्येऽर्थे न त्वं शोचितुमर्हसि ॥ २७ ॥

[ஜா] எதனால் பிறந்ததற்கு மரணம் நிச்சயமோ, இறந்ததற்கும் பிறப்பு நிச்சயமோ, அதனால் விலக்கக்கூடாத காரியத்தில் நீ சோகிக்கத்தக்கவனல்லை. (௨௭)

अव्यक्तादीनि भूतानि व्यक्तमध्यानि भारत ।
अव्यक्तनिधनान्येव तत्र का परिदेवना ॥ २८ ॥

[௭௫] அர்ச்சுன! சரீரங்கள் அவ்வியக்தத்தை(வெளிப்படாமையை) ஆதியாகவுடையன. வெளிப்படுதலை மத்தியாகவுடையன. அவ்வியக்தத்தினையே மரணமாகவுடையன. அவ்விஷயத்தில் புலப்பம் என்ன? (௨அ)

आश्चर्यवत्पश्यति कश्चिदेनमाश्चर्यवद्वदति तथैव चान्यः ।
आश्चर्यवच्चैनमन्यः शृणोति श्रुत्वाप्येनं वेद न चैव कश्चित् ॥२९॥

[௭௬] ஒருவன் இதனை(ஆத்மாவை) ஆச்சரியம்போல் பார்க்கிறான். அவ்வாறே மற்றொருவன் இதனை ஆச்சரியம் போலவே சொல்லுகிறான். மற்றொருவன் இதனை ஆச்சரியம்போல்

கேட்கின்றான். ஒருவன் (யாதானுமோர் பிரதிபந்தமுடைய வன்) இதனைக்கேட்டும் (கண்டும், சொல்லியும்) அறியான். ()

देही नित्यमवध्योऽयं देहे सर्वस्य भारत ।
तस्मात्सर्वाणि भूतानि न त्वं शोचितुमर्हसि ॥ ३० ॥

[என] பாரத! எல்லோருடைய சரீரங்களிலும் (உள்ள) இந்தத்தேஹி எப்போதும் கொல்லப்படாதவன், ஆதலால் நீ எல்லா ஜீவர்களையும் குறித்துச் சோகிக்கத்தக்கவனல்லாய். (௩0)

स्वधर्ममपि चावेक्ष्य न विकम्पितुमर्हसि ।
धर्म्याद्धि युद्धाच्छ्रेयोऽन्यत्क्षत्रियस्य न विद्यते ॥ ३१ ॥

[எஅ] மற்றும் சுவ(க்ஷத்திரிய)தர்மத்தை நோக்கியும் பின்வாங்குதற்குரியவனாகாய். எதனாலெனின், க்ஷத்திரியனுக்குத் தர்மமுள்ள யுத்தத்தைவிடசிரேயசு(மேலானசாதனம்) வேறில்லை. (ருக)

यदृच्छया चोपपन्नं स्वर्गद्वारमपावृतम् ।
सुखिनः क्षत्रियाः पार्थ लभंते युद्धमीदृशम् ॥ ३२ ॥

[எக] பார்த்த! திறக்கப்பட்ட சுவர்க்கவாயிலும் தற்செயலாகவே கிடைத்ததுமான இத்தன்மைய யுத்தத்தை எந்த க்ஷத்திரியர் அடைகின்றார்களோ அவர்கள்தான் சுமுடையோர். (ருஉ)

अथ चेत्त्वमिमं धर्म्यं संग्रामं न करिष्यसि ।
ततः स्वधर्मं कीर्तिं च हित्वा पापमवाप्स्यसि ॥ ३३ ॥

[அ௦] இனி நீ சுவதர்மமான இந்த யுத்தத்தைச் செய்யாயாயின், அதனால் சுவதர்மத்தினையும் கீர்த்தியையும் இழந்து பாபத்தையடைவாய். (௩௩)

अकीर्तिं चापि भूतानि कथयिष्यंति तेऽव्ययाम् ।
संभावितस्य चाकीर्तिर्मरणादतिरिच्यते ॥ ३४ ॥

[அக] அன்றியும் பிராணிகள் சாசுவதமான உனது அபகீர்த்தியையும் சொல்லுவார்கள், மதிப்புள்ளவனுக்கு அபகீர்த்தியானது மரணத்தினும் அதிகம் (துக்கந்தருவது) ஆம். ()

भयाद्रणादुपरतं मंस्यंते त्वां महारथाः ।
येषां च त्वं बहुमतो भूत्वा यास्यसि लाघवम् ॥ ३५ ॥

[அஉ] மகாரதிகர்களாகிய அவர்கள் உன்னை பயத்தினால் யுத்தத்தினின்றும் நீங்கியவனாக மதிப்பார்கள். நீ இவர்களுக்கு வெகு மதிப்புடையவனாயிருந்து இப்போது சிறுமையையடைவாய். (-ரு)

अवाच्यवादांश्च बहून्वदिष्यन्ति तवाहिताः ।
निंदंतस्तव सामर्थ्यं ततो दुःखतरं नु किम् ॥ ३६ ॥

[அந] உன்பகைவர் உன்னுடைய சாமர்த்தியத்தை நிந்தி

ப்பவர்களாய் அநேக சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லுவார்கள். அதைவிட அதிக துக்கமுள்ளது யாது? (௩௬)

हतो वा प्राप्स्यसि स्वर्गं जित्वा वा भोक्ष्यसे महीम् ।
तस्मादुत्तिष्ठ कौन्तेय युद्धाय कृतनिश्चयः ॥ ३७ ॥

[அ-ம்] குந்திபுத்திரா! கொல்லப்பட்டாலும் ஸ்வர்க்கத்தை யடைவாய் ஜயித்தாலும் பூமியைப் போகிப்பாய். ஆதலால் உறுதிசெய்துகொண்டவனாய் யுத்தத்திற்கு எழுந்திரு. (௩௭)

सुखदुःखे समे कृत्वा लाभालाभौ जयाजयौ ।
ततो युद्धाय युज्यस्व नैवं पापमवाप्स्यसि ॥ ३८ ॥

[அரு] சுகதுக்கங்களையும், லாபாலாபங்களையும் ஜயாஜயங்களையும் சமமாக்கி, அதன் பின் யுத்தத்தின்பொருட்டு முயல்வாயாக. இவ்வாறு செய்வதனால் பாபத்தை அடையாய். ()

एषा तेऽभिहिता सांख्ये बुद्धिर्योगे त्विमां शृणु ।
बुद्ध्या युक्तो यया पार्थ कर्मबंधं प्रहास्यसि ॥ ३९ ॥

[அகூ] பார்த்த! உனக்கு இந்தப்புத்தி (ஞானநிஷ்டை) சாங்கிய(ஆத்மதத்துவ)த்தில் சொல்லப்பட்டது. இப்பொழுதோ எந்தப்புத்தி (கர்மநிஷ்டை)யோடுகூடியவனாய்க் கர்மபந்தத்தை அத்தியந்தம் நீக்கிக்கொள்வாயோ அவ்விதனை (நிஷ்கர்மமாகிய) யோகத்தில் சொல்லுகிறேன்; கேள். (ங-சு)

नेहाभिक्रमनाशोऽस्ति प्रत्यवायो न विद्यते ।
स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात् ॥ ४० ॥

[அ-ள] இங்கு (இக்கர்மயோகத்தில்) தொடங்கியதற்கு நாசமில்லை; (ஏற்றத்தாழ்வால்) பிரத்தியவாய (பாப)முமில்லை. இந்தத் தர்மத்தின் சொற்பமும் அதிக பயத்தினின்றும் இரக்ஷிக்கின்றது. (௪௦)

व्यवसायात्मिका बुद्धिरेकेह कुरुनंदन ।
बहुशाखा ह्यनंताश्च बुद्धयोऽव्यवसायिनाम् ॥ ४१ ॥

[அ-அ] குருநந்தன (குருகுலத்தையானந்திப்பவனே)! இங்கு நிச்சயவடிவபுத்தி ஒன்றே (பிறழ்ச்சியில்லாததாம்). நிச்ச

யமில்லாதவர்களது புத்திகள் அநேகம் கிளைகளுள்ளனவுமாம். பிரசித்தமாய் அநந்தமு(பிறழ்ச்சியுள்ளனவு)மாம். (௪௧)

यामिमां पुष्पितां वाचं प्रवदंत्यविपश्चितः ।
वेदवादरताः पार्थ नान्यदस्तीति वादिनः ॥ ४२ ॥
कामात्मानः स्वर्गपरा जन्मकर्मफलप्रदाम् ।
क्रियाविशेष बहुलां भोगैश्वर्यगतिं प्रति ॥ ४३ ॥

[௪௨-௪௩] பார்த்த! வேதத்தின் அர்த்தவாதத்தில் பற்றுடையவர்களும்(கர்மபலத்தைவிட) வேறானதில்லை என்று சொல்லுகிறவர்களும் பற்றுள்ள மனமுடையவர்களும் சுவர்க்க

இனையே மேலாகக் கருதுகிறவர்களுமாகிய அபண்டிதர்கள் (மீமாம்ஸகர் முதலியோர்) எந்த இப்புஷ்பித்தமும் ஜன்ம கர்மபயன்களையடைவிப்பதும் போகைசுவரியங்களினடைவைக் குறித்த கிரியாவிசேஷங்களை விஸ்தாரமாகவுடையதுமான வாக்கியங்களைக் கூறுகின்றனரோ, (௪௨-௪௩)

भोगैश्वर्यप्रसक्तानां तयापहृतचेतसाम् ।

व्यवसायात्मिका बुद्धिः समाधौ न विधीयते ॥ ४४ ॥

[௬௧] *போகைசுவரியப்பற்றுடையவர்களும் (முற்கூறிய) அவ்வாக்கியங்களால் அபகரிக்கப்பட்ட சித்தமுடையவர்களு*

மாகிய அவர்களுக்குச் சமாதியில் (உள்ளத்தில்) திடநிச்சயவ
டிவபுத்தி விதிக்கப்படவில்லை. (சச)

त्रैगुण्यविषया वेदा निस्त्रैगुण्यो भवार्जुन ।
निर्द्वंद्वो नित्यसत्वस्थो निर्योगक्षेम आत्मवान् ॥ ४५ ॥

[கூஉ] அர்ச்சுனா! (கர்மகாண்டவடிவ) வேதங்கள் முக்கு
ணத்த (சம்சாரத்)தினை விளக்குவனவாம். நீ சீதோஷ்ணாதி
இருமையில்லாதவனும் நித்தியசத்துவத்(சலியாத சத்வகுண
காரியத்)திருப்பவனும் யோக(பெறாததையீட்டலும்)க்ஷேம
(பெற்றதைக்காத்தலு)மில்லாதவனும் ஆத்மா (அந்தர்முகம்)
உடையவனும் முக்குணவசமின்றியவனுமாவாய். (சரு)

यावानर्थ उदपाने सर्वतः संप्लुतोदके ।
तावान्सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः॥ ४६ ॥
कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।
मा कर्मफलहेतुर्भूर्मा ते संगोऽस्त्वकर्मणि ॥ ४७ ॥

[சுரு-சுச] (கிணறு முதலிய பல) ஜலாசயத்திலெவ்வள— பிரயோஜனமுண்டாகின்றதோ அவ்வளவு பிரயோஜனம் முழுவதும் நிறைந்துள்ள ஏரியிலுமாகின்றது. அதுபோல சகல வேதங்களிலும் எவ்வளவு பிரயோஜனமுண்டாகின்றதோ அவ்வளவு பிரயோஜனம் விசேஷமாயறியும் பிராஹ்மணனு(ஞா

ணி)க்குண்டு. (சகூ) உனக்கு (நித்தியநைமித்திக) கர்மங்களில் மாத்திரம் அதிகாரம் (இருக்குக). பலத்தில் அதிகாரம் ஒரு [illegible]மிருக்கலாகாது. நீ கர்மபலகாரணனாகவேண்டாம். உனக்கு அகர்மத்தில் (கர்மம் செய்யாமையில்) ஆசைவேண்டாம். (சஎ)

योगस्थः कुरु कर्माणि संगं त्यक्त्वा धनंजय ।
सिद्ध्यसिद्ध्योः समो भूत्वा समत्वं योग उच्यते ॥ ४८ ॥

[கூரு] சித்தி அசித்திகளில் சமத்துவம் யோகமென்று சொல்லப்படும். யோகத்திலிருப்பவனாய் தனஞ்சய! (நீ) சித்தி

யஸித்திகளில் (ஜயாபஜயங்களில்) சமமுடையவனாய் ஆசையை விட்டு (யுத்தாதி) கருமங்களைச்செய். (௪௮)

दूरेण ह्यवरं कर्म बुद्धियोगाद्धनंजय ।
बुद्धौ शरणमन्विच्छ कृपणाः फलहेतवः ॥ ४९ ॥

[௪௯] தனஞ்சய! (நிஷ்காமகர்மமாகிய) புத்தியோகத்தை விட (காமிய) கர்மம் மிகத் தாழ்ந்ததாம். அதனால் ஞானத்தில் சரணத்தை (புகலை) விரும்புக. பயனுக்குக்காரணமானவர் (பயனையுண்டுபண்ணுவோர்) கிருபணர் (தீனர்)ராவர். (௪௯)

बुद्धियुक्तो जहातीह उभे सुकृतदुष्कृते ।
तस्माद्योगाय युज्यस्व योगः कर्मसु कौशलम् ॥ ५० ॥

[கூஎ] இங்கு ஞானநிஷ்டையுடையவன் புண்ணியபாபங்களிரண்டையும் விடுகின்றான். ஆதலால்(சமத்துவபுத்தியாகிய)யோகத்தின்பொருட்டு முயல்வாயாக. (சமத்துவபுத்தியாகிய)யோகம் கர்மங்களில் தேர்ந்த தன்மையாம். (௫௰)

कर्मजं बुद्धियुक्ता हि फलं त्यक्त्वा मनीषिणः ।
जन्मबंधविनिर्मुक्ताः पदं गच्छंत्यनामयम् ॥ ५१ ॥

[கூஅ] (சமத்துவ) புத்தியோடுகூடியவர்களாய்க் கர்மத்தினாலாம் பயனைவிட்டு அறிஞர் பிறப்பென்னும் பந்தத்தினின்றும் விசேஷமாய் விடுபட்டவர்களாய் நிச்சயமாக நோயின்றிய பதத்தை யடைகின்றார்கள். (௫௧)

यदा ते मोहकलिलं बुद्धिर्व्यतितरिष्यति ।
तदा गंतासि निर्वेदं श्रोतव्यस्य श्रुतस्य च ॥ ५२ ॥

[௯௯] எப்போது உன் புத்தி மோகமாகிய மலத்தைக்கடக்குமோ, அப்போது கேட்கத்தக்கனவும் கேட்டனவுமாகிய அர்த்தங்களின் வைராக்கியத்தை அடைவாய். (௫௨)

श्रुतिविप्रतिपन्ना ते यदा स्थास्यति निश्चला ।
समाधावचला बुद्धिस्तदा योगमवाप्स्यसि ॥ ५३ ॥

[௧௦௦] நாநாசாஸ்திரசிரவணத்தால் விக்ஷேபமடைந்த உன்புத்தி நிச்சலமா(விக்ஷேபமின்றியதா)ய்ச் சமாதியில் (பிர

த்தியகூபின்னபரமாத்மாவில்) ஸ்திரமாய் எப்போதிருக்குமோ அப்போது (ஞான) யோகத்தையடைவாய். (ருங)

॥ अर्जुन उवाच ॥

स्थितप्रज्ञस्य का भाषा समाधिस्थस्य केशव ।

स्थितधीः किं प्रभाषेत किमासीत व्रजेत किम् ॥ ५४ ॥

[கoச] அர்ச்சுனன் சொல்லலாயினன் :—கேசவரே ! சமாதியிலிருக்கும் நிலைபெற்ற பிரஞ்ஞையுடையவனது வார்த்தை (லக்ஷணம்) யாது ? (சமாதியினின்று விழித்த) நிலைத்தபுத்தியுடையவன் என்ன பேசுவான் ? எப்படி இருப்பான் ? எப்படி நடப்பான் ? (ருச)

॥ श्रीभगवानुवाच ॥

प्रजहाति यदा कामान्सर्वान्पार्थ मनोगतान् ।
आत्मन्येवात्मना तुष्टः स्थितप्रज्ञस्तदोच्यते ॥ ५५ ॥

[௧0௨] ஸ்ரீ பகவான் சொல்லலாயினார்:—பார்த்த! எப்போது ஆத்மாவி(பரமானந்தவடிவதன்)னிடத்தில் (தன்) ஆத்மாவினாலேயே சந்தோஷமடைந்தவனாய் மனதின்கணுள்ள சகல காமங்களையும் விடுகின்றானோ அப்போது நிலைபெற்ற பிரஞ்ஞையுடையவனெனப்படுகின்றான். (௫௫)

दुःखेष्वनुद्विग्नमनाः सुखेषु विगतस्पृहः ।
वीतरागभयक्रोधः स्थितधीर्मुनिरुच्यते ॥ ५६ ॥

[௧௦௫] துக்கங்களில் கலங்காத மனதுடையவனும், சுகங்களில் விசேஷமாக இச்சையொழிந்தவனும், இராகபயக்குரோதங்கள் விசேஷமாயொழிந்தவனுமாகிய முனி நிச்சலபுத்தியுடையவ (ஸ்திதப்பிரஞ்ஞ)னெனப்படுகின்றான். (௫௬)

यः सर्वत्रानभिस्नेहस्तत्तत्प्राप्य शुभाशुभम् ।
नाभिनंदति न द्वेष्टि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५७ ॥

[௧௦௬] எவன் எல்லாவற்றிலும்(ஸ்திரீபுத்திராதியருக்கு வரும் லாபநஷ்டத்தினைத் தனதாய்க்கொள்ளற்கேதுவான) அபிசிநேகமில்லாதவனாயிருக்கின்றானோ, அந்தந்தச் சுபாசுப

ங்களையடைந்து சந்தோஷியானோ, த்வேஷியானோ அவனு டைய புத்தி மிக்க நிலைபெற்றதாம். (௫௭)

यदा संहरते चायं कूर्मोऽगानीव सर्वशः ।
इंद्रियाणींद्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥५८ ॥

[௧௦௫] எப்போது இவன் இந்திரியார்த்தங்களினின்றும் இந்திரியங்களை ஆமையானது முற்றும் அவயவங்களைச் சுருக்கிக்கொள்ளுவதுபோலச் சுருக்கிக்கொள்ளுகின்றானோ, அப்போது அவனது பிரஞ்ஞை மிக நிலைபெற்றதாம். (௫௮)

विषया विनिवर्तंते निराहारस्य देहिनः ।
रसवर्जं रसोऽप्यस्य परं दृष्ट्वा निवर्तते ॥ ५९ ॥

[௧௦௬] * (அந்நவடிவ அல்லது இந்திரியங்களால் விஷயங்களைக்கிரகியாமைவடிவ) ஆகாரமின்றிய தேகிக்கு விஷயங்கள் (உருசிவடிவ அல்லது சூக்ஷ்மராகவடிவ) இரஸமில்லாதனவாக நீங்குகின்றன. பரமாத்மாவைப் பார்த்து இந்நிலைத்த புத்தியுடையவனுக்கு (முற்கூறிய) இரஸமும் ஒழிகின்றது. (௫௯)

यततो ह्यपि कौंतेय पुरुषस्य विपश्चितः ।
इंद्रियाणि प्रमाथीनि हरंति प्रसभं मनः ॥ ६० ॥

[௧௦௭] குந்திபுத்திர! (அடக்க)எத்தனஞ்செய்கின்ற விவேகியான புருஷனதுமனதையும் மிகக்கடைவனவாகிய இந்திரியங்கள் எதனால்பலாத்காரமாய் இழுக்கின்றனவோ, அதனால்,

तानि सर्वाणि संयम्य युक्त आसीत मत्परः ।
वशे हि यस्येंद्रियाणि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६१ ॥

[௧௦௮] என்னிடத்துப் பற்றுள்ளவன் அவ்வெல்லா இந்திரியங்களையும் செவ்வையாய் அடக்கி யோகமுடையவனாயிருக்கக்கடவன். எவனுடைய இந்திரியங்கள் வசத்திலேயேயிருக்கின்றனவோ அவனுடைய பிரஞ்ஞை நிலைபெற்றதாம். (௬௧)

ध्यायतो विषयान्पुंसः संगस्तेषूपजायते ।
संगात्संजायते कामः कामात्क्रोधोऽभिजायते ॥ ६२ ॥

[௧௦௯] விஷயங்களைச் சிந்தித்துக்கொண்டிருக்கும் புருஷ

னுக்கு அவற்றில் சங்கம் (பற்று) உண்டாகின்றது. சங்கத்தால் காமமுண்டாகின்றது. காமத்தால் குரோதமுண்டாகின்றது.

क्रोधाद्भवति संमोहः संमोहात्स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद्बुद्धिनाशो बुद्धिनाशात्प्रणश्यति ॥ ६३ ॥

[௧௧0] குரோதத்தினால் மோகம் (அவிவேகமின்மை) உண்டாகின்றது. மோகத்தினால் (கேட்ட அர்த்தத்தின்) நினைவு தடுமாறுதலுண்டாகின்றது. நினைவு கெடுதலால் புத்தி நாசமுண்டாகின்றது. புத்தி நாசத்தால் மிகக்கெடுகின்றான். (௬௩)

रागद्वेषवियुक्तैस्तु विषयानिन्द्रियैश्चरन् ।
आत्मवश्यैर्विधेयात्मा प्रसादमधिगच्छति ॥ ६४ ॥

[கககக] இராகத்துவேஷங்களினின்றும் விடுபட்ட சித்தசுவாதீனமுள்ள இந்திரியங்களால் விஷயங்களை அநுபவித்துக் கொண்டிருப்பவனாயினும் சுவாதீன சித்தமுடையவன், பிரசாதத்தை (மனதின் நிர்மலத்தன்மையை) அடைகின்றான்.()

प्रसादे सर्वदुःखानां हानिरस्योपजायते ।
प्रसन्नचेतसो ह्याशु बुद्धिः पर्यवतिष्ठते ॥ ६५ ॥

[ககஉ] இவனுக்கு(யோகிக்கு)ப் பிரசாதமு(மனத்தெளிவு)ண்டானபோது, சர்வதுக்கங்களின் நாசமுண்டாகின்றது. எதனாலெனின், தெளிந்தசித்தமுடையவனுக்கு விரைவில் (நிச்சயவடிவ)புத்தி நிலைபெறுகின்றது. (சுரு)

नास्तिबुद्धिरयुक्तस्य न चायुक्तस्य भावना ।
न चाभावयतः शांतिरशांतस्य कुतः सुखम् ॥ ६६ ॥

[ககங] யோகமி(மனவொருமையி)ல்லாதவனுக்கு ஆத்ம புத்தி இல்லை. யோகமில்லாதவனுக்குப் பாவனையும் இல்லை. (பிரஹ்ம) பாவனை செய்யாதவனுக்குச் சாந்தி(சித்தவொடுக்கம்) இல்லை. சாந்தி இல்லாதவனுக்குச் சுகமேது? (சுசு)

इंद्रियाणां हि चरतां यन्मनोऽनुविधीयते ।
तदस्य हरति प्रज्ञां वायुर्नावमिवांभसि ॥ ६७ ॥

[ககச] ஏனெனின், விஷயங்களில் சரிக்கின்ற இந்திரியங்களை எந்தமனதானது அநுசரித்து நடத்தப்படுகின்றதோ அ

அந்த மனது இவனது பிரஞ்ஞையை நீரில் ஓடத்தை வாயு வானது இழுப்பதுபோல இழுக்கின்றது. (காஎ)

तस्माद्यस्य महाबाहो निगृहीतानि सर्वशः ।
इंद्रियाणींद्रियार्थेभ्यस्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६८ ॥

[ககரு] மகாபாகுவே (பெருந்தோளா)! ஆதலால் எவனது இந்திரியங்கள் எல்லாவகையிலும் இந்திரியார்த்தங்களினின்றும் தடுக்கப்பட்டனவாகின்றனவோ அவனது பிரஞ்ஞை மிக நிலைத்ததாம். (காஅ)

या निशा सर्वभूतानां तस्यां जागर्ति संयमी ।
यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः ॥ ६९ ॥

[௧௧௬] எந்தப் புத்தியானது (புத்தி இல்லாத) எல்லா ஜீவர்களுக்கும் இரவாகின்றதோ அவ்வாத்மவிஷய புத்தியில் சம்யமமுடையவன் (ஞானி) விழித்திருப்பான். எதில் சகல ஜீவர்களும் விழித்திருக்கின்றார்களோ அந்த (சத்தாதிவிஷய) புத்தி ஆத்மாவையறியவனுகிய முநிக்கு இரவாம். (௬௯)

आपूर्यमाणमचलप्रतिष्ठं समुद्रमापः प्रविशंति यद्वत् ।
तद्वत्कामा यं प्रविशंति सर्वे स शांतिमाप्नोति न कामकामी ॥ ७० ॥

[௧௧௭] எப்படி ஜலங்கள், நாற்புறமும் நிறைந்துள்ளதாய் மரியாதையைக் கடவாமலிருக்கின்ற சமுத்திரத்தில் பிரவேசிக்கின்றனவோ அதுபோலச் சகல காமங்களும் எவனிடத்

துப் பிரவேசிக்கின்றனவோ அவன் சாந்தியை அடைகின்றான்; போகவிருப்புள்ளவன் அடையான். (எ௦)

विहाय कामान्यः सर्वान्पुमांश्चरति निःस्पृहः ।
निर्ममो निरहंकारः स शांतिमधिगच्छति ॥ ७१ ॥

[கக அ] எந்தப் புருஷன் சர்வகாமங்களையும் விட்டு ஆசையில்லாதவனாய், எனதென்பதில்லாதவனாய், அகங்காரமில்லாதவனாய் நடக்கின்றானோ அப்புருஷன் சாந்தியை அடைகின்றான். (எக)

एषा ब्राह्मी स्थितिः पार्थ नैनां प्राप्य विमुह्यति ।
स्थित्वास्यामंतकालेऽपि ब्रह्मनिर्वाणमृच्छति ॥ ७२ ॥

[கககூ] பார்த்த! இது பிரஹ்மவிஷயமான நிஷ்டை. இதனையடைந்து(எவனும்)மோகப்படான். கடைசிக்காலத்திலும் இதில் நின்று பிரஹ்மநிர்வாண(மோக்ஷ)த்தை அடைகின்றான். (எஉ)

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु
श्रीकृष्णार्जुनसंवादे
द्वितीयोऽध्यायः

இவ்வாறு ஸ்ரீ பகவத்கீதையாகிய உபநிஷத்தில்
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனசம்வாதத்தில்
இரண்டாம் அத்தியாயம் முடிந்தது.

॥ तृतीयोऽध्यायः ॥

மூன்றும் அத்தியாயம்.

॥ कर्मयोगः ॥

கர்மயோகம்.

॥ अर्जुन उवाच ॥

ज्यायसी चेत्कर्मणस्ते मता बुद्धिर्जनार्दन ।
तत्किं कर्मणि घोरे मां नियोजयसि केशव ॥ १ ॥

[௧௨0] அர்ச்சுனன் சொல்லலாயினன் :—ஜநார்த்தனரே! ஞானம் கர்மத்தைவிட சிரேஷ்டமானதென்று தமக்கபிப்பிராயமிருக்குமாயின் அஃதேதன் என்னைக் கோரமான கர்மத்தில் பிரவிருத்திக்கச் செய்கிறீர். (௧)

व्यामिश्रेणेव वाक्येन बुद्धिं मोहयसीव मे ।
तदेकं वद निश्चित्य येन श्रेयोऽहमाप्नुयाम् ॥ २ ॥

[௧௨௧] கலப்புள்ளதுபோன்ற வாக்கியத்தினால் தாம் என் புத்தியை மோகிக்கச் செய்கிறீர்போலிருக்கிறது. யான் எதனால் மோக்ஷமடைவேனோ அஃதொன்றனையே நிச்சயித்துக் கூறுவீராக. (௨)

॥ श्रीभगवानुवाच ॥

लोकेऽस्मिन्द्विविधा निष्ठा पुरा प्रोक्ता मयानघ ।
ज्ञानयोगेन सांख्यानां कर्मयोगेन योगिनाम् ॥ ३ ॥

[கஉஉ] *ஸ்ரீ பகவான் கூறலாயினர்:—பாபமற்றவனே! முன் (முந்திய அத்தியாயத்தில்) இவ்வுலகத்தில் சாங்கியர்களுக்கு ஞானயோகத்தாலும் யோகிகளுக்குக் கர்மயோகத்தாலும் இருவகையான நிஷ்டை (நிலை) என்னல் சொல்லப்பட்டது.* (ரு.)

न कर्मणामनारंभान्नैष्कर्म्यं पुरुषोऽश्नुते ।
न च संन्यसनादेव सिद्धिं समधिगच्छति ॥ ४ ॥

[கஉரு] (மலினசித்தமுடைய) புருஷன் கர்மங்களைச் செய்யாவிடின், கிரியையொழிந்த நிச்சய(ஞான)த்தினை யடைகிறதில்லை. (ஞானமின்றிய) சந்நியாசமாத்திரத்தினால் (கர்மமொழிந்த தன்மையாகிய) சித்தி(முத்தி)யைச் செவ்வையாயடையான். (ச)

न हि कश्चित्क्षणमपि जातु तिष्ठत्यकर्मकृत् ।
कार्यते ह्यवशः कर्म सर्वः प्रकृतिजैर्गुणैः ॥ ५ ॥

[கஉசு] பிரசித்தமாக எவனும் எப்போதாயினும் கர்மஞ்செய்யாதவனாய் ஒருகணமாயினுமிரான். ஏதனாலெனின், பிர

க்ருதியினின்றுண்டாகிய குணங்களால் சுவதந்திரமில்லாத சகலப் பிராணியும் கர்மம் செய்விக்கப்படுகின்றன. (௫)

कर्मेंद्रियाणि संयम्य य आस्ते मनसा स्मरन् ।
इंद्रियार्थान्विमूढात्मा मिथ्याचारः स उच्यते ॥ ६ ॥

[௬-ம்] எந்த விசேஷமூடசித்தமுள்ளவன் கர்மேந்திரியங்களை அடக்கி இந்திரிய விஷயங்களை மனதினால் ஸ்மரித்துக் கொண்டிருக்கின்றானோ அவன் பொய்யொழுக்கமுடையனென னப்படுகின்றான். (௬)

यस्त्विंद्रियाणि मनसा नियम्यारभतेऽर्जुन ।
कर्मेंद्रियैः कर्मयोगमसक्तः स विशिष्यते ॥ ७ ॥

[கஉசு] அர்ச்சுனா! எவன் இந்திரியங்களை மனதினால் அடக்கிக்கொண்டு கர்மேந்திரியங்களால் கர்மயோகத்தைப் பலாபேக்ஷையின்றியவனாய் ஆரம்பிக்கின்றானோ அவன் மேன்மையடைகின்றான். (எ)

नियतं कुरु कर्म त्वं कर्म ज्यायो ह्यकर्मणः ।
शरीरयात्रापि च ते न प्रसिध्येदकर्मणः ॥ ८ ॥

[கஉஎ] (அர்ச்சுனா!) நீ நியதமான (நித்திய) கர்மத்தைச் செய்வாயாக. ஏதனாலெனின், கர்மஞ்செய்யாததைவிடக் கர்மமானது மேலானதாம். அன்றியும் ஒரு கர்மமுமில்லாதவனான உனக்குச் சரீரநிர்வாகமும் மிகச் சித்தியாகாது. (அ)

यज्ञार्थात्कर्मणोऽन्यत्र लोकोऽयं कर्मबंधनः ।
तदर्थं कर्म कौंतेय मुक्तसंगः समाचर ॥ ९ ॥

[கஉஅ] குந்திபுத்திரா! இவ்வுலகம் (பகவதாராதனமாகி ய) யஞ்ஞத்தின் பொருட்டதான கர்மத்தைவிட வேறு கர்மத்தில் (பிரவர்த்திக்கின்) கர்மபந்தமுடையதாம். ஆதலால் பலேச்சையை விட்டவனாய் அதன் (யஞ்ஞத்தின்) பொருட்டுக் கர்மத்தினைச் செவ்வையாய் ஆசரிப்பாயாக. (௯)

सहयज्ञाः प्रजाः सृष्ट्वा पुरोवाच प्रजापतिः ।
अनेन प्रसविष्यध्वमेष वोऽस्त्विष्टकामधुक् ॥ १० ॥

[கஉகூ] பிரஹ்மா முன் (ஸிருஷ்டிகாலத்தில்) யாகத்தோடு கூடிய பிரஜைகளைச் ஸிருஷ்டித்துச் சொன்னார்:—இந்த யஞ்ஞத்தினால் விருத்தியடையுங்கள். இது உங்களுக்கு விரும்பிய காமத்தைக் கறப்ப(தருவ)தாகுக. (கο)

देवान्भावयतानेन ते देवा भावयंतु वः ।
परस्परं भावयंतः श्रेयः परमवाप्स्यथ ॥ ११ ॥

[கஙο] (பிரஜைகளே!) இதனால்(இந்திராதி)தேவர்களை திருப்திசெய்வியுங்கள். அத்தேவர்கள் உங்களை (மழை முதலியவற்றால்) பாவிக்கட்டும் (திருப்திசெய்விக்குக). ஒருவரை

யொருவர் திருப்தி செய்விப்பவர்களாய் மேலான சிரேயஸை (முத்தியினைக் கிரமமாக) அடைவீர்கள். (கக)

इष्टान्भोगान्हि वो देवा दास्यंते यज्ञभाविताः ।
तैर्दत्तानप्रदायैभ्यो यो भुंक्ते स्तेन एव सः ॥ १२ ॥

[கஉக] எதனாலெனின், யாகத்தினால் பாவிக்க (திருப்தி செய்ய)ப்பட்ட தேவர்கள் உங்களுக்கு இஷ்டமான போகங்களைக் கொடுக்கின்றார்கள். அவர்களால் கொடுக்கப்பட்டவைகளை இத்தேவர்களுக்குக் கொடுக்காமல் எவன் புசிக்கின்றானோ அவன் (தேவர்கள் சொத்தைக்கவரும்) திருடனே. (கஉ)

यज्ञशिष्टाशिनः संतो मुच्यंते सर्वकिल्बिषैः ।
भुंजते ते त्वघं पापा ये पचंत्यात्मकारणात् ॥ १३ ॥

[கங-உ] யாகத்தில் மிஞ்சியதைப்புசிக்கும் சற்புருஷர் (பஞ்சசூனதி) சகல பாபங்களினின்றும் விடுபடுகின்றார்கள். எந்தப்பாபிகள் தம்பொருட்டுப் பாகஞ்செய்கின்றார்களோ அவர்கள்பாபத்தை (பாபவடிவ அந்நத்தை)ப் புசிக்கின்றார்கள்.

अन्नाद्भवंति भूतानि पर्जन्यादन्नसंभवः ।
यज्ञाद्भवति पर्जन्यो यज्ञः कर्मसमुद्भवः ॥ १४ ॥

[கரு௫] அந்நத்தினின்றும் பிராணிகள் உண்டாகின்றார்கள். மழையினால் அந்நத்தின் உற்பத்தியுண்டாகின்றது. யாகத்தினால் மழையுண்டாகின்றது. யாகம் கர்ம(ருத்துவிக்கு யஜமானர்களது வியாபார)த்தினின்றுண்டானதாகின்றது.()

कर्म ब्रह्मोद्भवं विद्धि ब्रह्माक्षरसमुद्भवम् ।
तस्मात्सर्वगतं ब्रह्म नित्यं यज्ञे प्रतिष्ठितम् ॥ १५ ॥

[கரு௬] கர்மம் வேதத்தினின்றுண்டானதாக அறி. அந்த வேதம் அக்ஷரமாகிய பரமாத்மாவினின்றுண்டானதாக அறி. ஆதலால் வேதம் (எல்லாவற்றையும் விளக்குந்தன்மையால்)

எல்லாவற்றிலுமிருப்பதாய் நித்தியம் (எப்போதும்) யஞ்ஞத்தில் நிலைபெற்றிருக்கின்றது. (கரு)

एवं प्रवर्तितं चक्रं नानुवर्तयतीह यः ।
अघायुरिन्द्रियारामो मोघं पार्थ स जीवति ॥ १६ ॥

[கூசு] பார்த்த! எவன் இவ்வுலகத்தில் இவ்வாறு பிரவிருத்திக்கப்பட்ட (ஜக)சக்கரத்தை அநுசரித்து நடவானோ, அவன் பாபமயமான ஆயுளுடையவனாய் இந்திரியங்களால் விஷயங்களிலிரமிப்பவனாய் வியர்த்தமாக ஜீவிக்கிறான். (கசு)

यस्त्वात्मरतिरेव स्यादात्मतृप्तश्च मानवः ।
आत्मन्येव च संतुष्टस्तस्य कार्यं न विद्यते ॥ १७ ॥

[கஙகூ] எந்தமானவன் (மானமாகிய ஞானத்தை வகிப்பவன்) ஆத்மாவிலேயே பிரீதியுடையவனும், ஆத்மாவினாலேயே திருப்தியடைந்தவனும், ஆத்மாவினிடத்திலேயே சந்தோஷப்படுகின்றவனுமாகின்றானோ அவனுக்குச் செய்யத்தக்கதில்லை. (கஎ)

नैव तस्य कृतेनार्थो नाकृतेनेह कश्चन ।
न चास्य सर्वभूतेषु कश्चिदर्थव्यपाश्रयः ॥ १८ ॥

[௯௭] அந்தப் பிரஹ்மநிஷ்டனுக்கு இவ்வுலகத்தில் கர்மஞ்செய்ததினால் பயனுமில்லை. கர்மஞ்செய்யாததினால் ஒன்றும் இல்லை. அன்றியும் இவனுக்கு எல்லா ஜீவர்களிடத்தும் ஒன்றனைக்குறித்து ஆசிரயமுமில்லை. (௧அ)

तस्मादसक्तः सततं कार्यं कर्म समाचर ।
असक्तो ह्याचरन्कर्म परमाप्नोति पूरुषः ॥ १९ ॥

[௯௮] ஆதலால் நீ சங்கமில்லாதவனாய் நித்தியமும் செய்யத்தக்க கர்மத்தை செவ்வையாய்ச் செய். எதனாலெனின், பலாபேக்ஷையில்லாதவனாய்க் கர்மத்தைச்செய்யும் புருஷன் பர(மோக்ஷ)த்தை யடைகின்றான். (௧௯)

कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः ।

लोकसंग्रहमेवापि संपश्यन्कर्तुमर्हसि ॥ २० ॥

[கங.கூ] ஏனெனின், ஜனகாதிராஜரிஷிகள் கர்மத்தினுலேயே சித்தியையடைந்தார்கள். நீயும் உலகம் வழிப்படுதலை (உலகம் தீவழியிற் செல்லாது தடுத்தலை)யே காண்பவனுய்க் கர்மஞ்செய்தற்குரியவனுவாய். (௨௦)

यद्यदाचरति श्रेष्ठस्तत्तदेवेतरो जनः ।

स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते ॥ २१ ॥

[கசo] சிரேஷ்டன் (மேலானவன்) எதனை எதனையாசரிக்கின்றானோ, அதனை அதனையே மற்ற ஜனங்களும் ஆசரிக்கின்றார்கள். அவன் எதனைப் பிரமாணமாக்குகின்றானோ அதனை உலகம் அநுசரிக்கின்றது. (உக)

न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किंचन ।
नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि ॥ २२ ॥

[கசக] பார்த்த! எனக்கு மூன்றுலோகத்திலும் செய்யவேண்டியது எதுவுமில்லை. அடையப்படாததாய் அடையவேண்டியதில்லை. (அப்படியிருந்தும்) கர்மத்திலேயே இருக்கின்றேன் (கர்மத்தினையே செய்கின்றேன்). (உஉ)

यदि ह्यहं न वर्तेयं जातु कर्मण्यतंद्रितः ।
मम वर्त्मानुवर्तंते मनुष्याः पार्थ सर्वशः ॥ २३ ॥

[கசஉ] ஏதனாலெனின், அர்ச்சுனா! நான் எப்போதேனும் சோம்பலில்லாதவனாய்க் கர்மத்தில் இரேனாயின், மனிதர்கள் எல்லாவிதத்தாலும் என்னுடைய வழியை அநுசரிப்பார்கள்.

उत्सीदेयुरिमे लोका न कुर्यां कर्म चेदहम् ।
संकरस्य च कर्ता स्यामुपहन्यामिमाः प्रजाः ॥ २४ ॥

[கசங.] யான் கர்மத்தைச் செய்யாவிடின், இந்த ஜனங்கள்

கெட்டுப்போவார்கள், வர்ணக்கலப்பிற்கும் கர்த்தாவாவேன். (அதனால்) இப்பிரஜைகளைக் கெடுப்பவனுமாவேன். (உச)

सक्ताः कर्मण्यविद्वांसो यथा कुर्वन्ति भारत ।
कुर्याद्विद्वांस्तथासक्तश्चिकीर्षुर्लोकसंग्रहम् ॥ २५ ॥

[கசஎ] பாரத! அஞ்ஞானிகள் கர்மத்தில் இச்சையுடையவர்களாய் எப்படிச் செய்கின்றார்களோ, அப்படி உலகம் வழிப்படுதலை செய்ய விரும்பியவனாய் ஞானி இச்சையில்லாதவனாய் (கர்மத்தை)ச் செய்யக்கடவன். (உரு)

न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसंगिनाम् ।
जोषयेत्सर्वकर्माणि विद्वान्युक्तः समाचरन् ॥ २६ ॥

[கசு] வித்வான் யோகமுடையவனாய்க் கர்மப்பற்றுள்ள அவிவேகிகளின் புத்திபேதத்தை யுண்டுபண்ணலாகாது. யோகமுடையவனாய் (தான்) சர்வகர்மங்களையும் செவ்வையாய் ஆசரித்து (அவர்களையும்) ஆசரிக்கச் செய்யவேண்டும். (உசு)

प्रकृतेः क्रियमाणानि गुणैः कर्माणि सर्वशः ।
अहंकारविमूढात्मा कर्ताहमिति मन्यते ॥ २७ ॥

[கசஅ] அகங்காரத்தினால் மூடமான மனதுடையவன் பிரகிருதியின் குணங்களால் எல்லாவிதத்தாலும் செய்யப்படுகின்ற கர்மங்களை "யான் செய்கின்றவன்" என்று மதிக்கின்றான். (உஎ)

सत्त्ववित्तु महाबाहो गुणकर्मविभागयोः ।
गुणा गुणेषु वर्तत इति मत्वा न सज्जते ॥ २८ ॥

[கசஎ] மகாபாகுவே! குணகர்மங்களின் விபாகங்களின் தத்துவஞானியோ குணங்கள் (இந்திரியங்கள்) குணங்களில் (சப்தாதிவிஷயங்களில்) பிரவிருத்திக்கின்றனவென்று மதித்துச் சங்கமுடையவனாகிறதில்லை. (உஅ)

प्रकृतेर्गुणसंमूढाः सज्जंते गुणकर्मसु ।
तानकृत्स्नविदो मंदान्कृत्स्नविन्न विचालयेत् ॥ २९ ॥

[௧௪௮] எவர்கள் பிரகிருதியின் (தேகாதிகாரியவடிவ) குணங்களில் முற்றும் அறிவின்றியவர்களாய்க் குணகர்ம (தேகேந்திரியாதி வியாபார)ங்களில் பற்றுடையவராகின்றனரோ, அந்தன்மைய முற்றுணர்வின்றிய மந்தமதியினரை முற்றுணர்வுடையவன் (ஆத்மஞானி) சலிக்க(கலங்க)ச்செய்யலாகாது. (௨௯)

मयि सर्वाणि कर्माणि सन्यस्याध्यात्मचेतसा ।
निराशीर्निर्ममो भूत्वा युध्यस्व विगतज्वरः ॥ ३० ॥

[கசகூ] அத்தியாத்மபுத்தியால் சகல கர்மங்களையும் என்னிடத்துச் செவ்வையாகவைத்து, நிஷ்காமியும் எனதெனுந் தன்மையில்லாதவனுமாய்த் தாபமொழிந்தவனாய்ப் போர்புரிவாயாக. (ரு௦)

ये मे मतमिदं नित्यमनुतिष्ठंति मानवाः ।
श्रद्धावंतोऽनसूयंतो मुच्यंते तेऽपि कर्मभिः ॥ ३१ ॥

[கரு௦] எந்த மனிதர்கள் சிரத்தையுடையவர்களாய் அசூயையில்லாதவர்களாய் என்னுடைய (கர்மம் செய்யவேண்டியதாமென்னும்) இவ்வபிப்பிராயத்தை நித்தியமும் அநுசரி

த்து நடக்கின்றார்களோ அவர்களும் கர்மங்களினின்றும் விடுபடுகின்றார்கள். (ங௧)

ये त्वेतदभ्यसूयंतो नानुतिष्ठंति मे मतम् ।
सर्वज्ञानविमूढांस्तान्विद्धि नष्टानचेतसः ॥ ३२ ॥

[கஙுக] மற்றும் எவர்கள் இந்த என்னுடைய அபிப்பிராயத்தை அசூயையுள்ளவர்களாய் அநுசரித்து நடவாரோ, அவிவேகிகளும் எல்லா ஞானங்களிலும் மிக்க மூடமுள்ளவர்களுமான அவர்களை நாசமடைந்தவர்களென்றறி. (ங௨)

सदृशं चेष्टते स्वस्याः प्रकृतेर्ज्ञानवानपि ।
प्रकृतिं यांति भूतानि निग्रहः किं करिष्यति ॥ ३३॥

[கருஉ] ஞானமுடையவனும் தன்னுடைய பிரகிருதி(ஜன்மாந்தரவாசனை)க்குச் சமானமாக(ஒப்ப)ப் பிரவர்த்திக்கின்ருன். எல்லாப் பிராணிகளும் பிரகிருதியை அடைகின்ருர்கள்(சுபாவத்தை யநுசரித்தே செய்கிருர்கள்). அதனுல்(தானுவது பிறராவது செய்யும்)நிக்கிரகம்(விலக்கு) என்ன செய்யும்?(ஏதுவும் செய்யாதென்பது பொருள்.) (ங௩)

इंद्रियस्येंद्रियस्यार्थे रागद्वेषौ व्यवस्थितौ ।
तयोर्न वशमागच्छेत्तौ ह्यस्य परिपंथिनौ ॥ ३४ ॥

[கருங] இராகத்துவேஷங்கள் ஒவ்வோரிந்திரியத்தின் விஷயத்திலும் இருக்கின்றன. அவற்றின்(இராகத்துவேஷங்க

ளின்) வசமாகலாகாது. எதனாலெனின், அவ்விரண்டும் இவ
னுக்கு(மோக்ஷமார்க்க)விரோதிகளாம். (௩௪)

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥ ३५ ॥

[கருசு] செவ்வையாய் அநுஷ்டிக்கப்பட்ட பிறதர்மங்களி
னும், குணமில்லதாயினும் சுவ(தன்)தர்மம் மேலானதாம். த
ன் தர்மத்தில் மரித்தலும் சிரேஷ்டமாம். பிறர் தர்மம்(நரகத்
தில் வீழ்தலாதி)பயத்தை யுண்டுபண்ணுவதாம். (௩௫)

॥ अर्जुन उवाच ॥

अथ केन प्रयुक्तोऽयं पापं चरति पूरुषः ।
अनिच्छन्नपि वार्ष्णेय बलादिव नियोजितः ॥ ३६ ॥

[கருகு] அர்ச்சுனன் சொல்லலாயினான் :—இப்போது விருஷ்ணிகுலோத்பன்னரே! இப்புருஷன் விரும்பாதிருந்தும் பலாத்காரமாய் ஏவப்படுபவனைப்போல எவனாலாவது (வலியுடைய யாராலாவது) பிரேரிக்கப்பட்டவனாய்ப் பாவத்தை ஆசரிக்கின்றான். (ஙகூ)

॥ श्रीभगवानुवाच ॥

काम एष क्रोध एष रजोगुणसमुद्भवः ।
महाशनो महापाप्मा विद्ध्येनमिह वैरिणम् ॥ ३७ ॥

[கருசு] ஸ்ரீ பகவான் சொல்லலாயினார்:—இது காமம், இது குரோதம்; இரஜோகுணத்தினாலுண்டாகியது. மிகுந்தவுணவுடையதும் மகாபாபவடிவினதுமாம். ஆதலால் இக்காமத்தை இங்கு(சம்சாரத்தில் அல்லது மோக்ஷமார்க்கத்தில்) வைரியாக அறி. (௩௭)

धूमेनाव्रियते वह्निर्यथाऽऽदर्शो मलेन च ।
यथोल्बेनावृतो गर्भस्तथा तेनेदमावृतम् ॥ ३८ ॥

[கருள] எப்படி(உடன்றோன்றிய)புகையினால் அக்கினியும் அழுக்கினால் கண்ணாடியும் மறைக்கப்படுகின்றனவோ, எப்படி மாவியினால்(கருவைமறைக்கும் தோலினால்)கர்ப்பமானது மறைக்கப்படுகின்றதோ, அதுபோல அதனால்(காமத்தால்)இது(ஞானம்)மறைக்கப்பட்டதாகின்றது. (௩அ)

आवृतं ज्ञानमेतेन ज्ञानिनो नित्यवैरिणा ।
कामरूपेण कौन्तेय दुष्पूरेणानलेन च ॥ ३९ ॥

[கருஅ] குந்திபுத்திரா! ஞானியின் நித்தியவைரியும் நிறைக்கக்கூடாத அக்கினியுமாகிய இக்காமவடிவத்தால் ஞானம் மறைக்கப்பட்டதாகின்றது. (ஙக)

इंद्रियाणि मनो बुद्धिरस्याधिष्ठानमुच्यते ।
एतैर्विमोहयत्येष ज्ञानमावृत्य देहिनम् ॥ ४० ॥

[கருக] இந்திரியங்களும் மனதும் புத்தியும் இக்காமத்திற்கு அதிஷ்டானமென(ஆசிரயங்களென)ப்படுகின்றன. இக்காமம் இவற்றால்(இந்திரியாதிகளால்)ஞானத்தை(அறிவை)மறைத்துத் தேகிகளைப் பலவகையாய் மோகிக்கச் செய்கின்றது. ()

तस्मात्त्वमिंद्रियाण्यादौ नियम्य भरतर्षभ ।
पाप्मानं प्रजहि ह्येनं ज्ञानविज्ञाननाशनम् ॥ ४१ ॥

[கசுO] பாதசிரேஷ்டனே! ஆதலால் நீ முதலில் இந்திரியங்களையடக்கி சாஸ்திரஞானத்தையும் அநுபவஞானத்தையும் கெடுப்பதும் பாபவடிவினதுமான இக்காமத்தை நிச்சயமாய்க் கொல்லு. (சுக)

इंद्रियाणि पराण्याहुरिंद्रियेभ्यः परं मनः ।
मनसस्तु परा बुद्धिर्यो बुद्धेः परतस्तु सः ॥ ४२ ॥

[ககூக] (ஞானிகள்)இந்திரியங்களை மேலானவைகளாகக் கூறுவர். மனது இந்திரியங்களைவிட மேலானது. புத்தி மனதைவிட மேலானது. எது புத்தியைவிட மேலானதாயிருக்கின்றதோ(அதுவே)அது(ஆத்மா). (௪௨)

एवं बुद्धेः परं बुद्ध्वा संस्तभ्यात्मानमात्मना ।
जहि शत्रुं महाबाहो कामरूपं दुरासदम् ॥ ४३ ॥

[ககூ௨] மகாபாஹுவே! இவ்வாறு புத்திக்கு மேலானதை (ஆத்மாவை)அறிந்து, புத்தியினால் மனதைச் செவ்வையாய் நி

றுத்தி அரிதில் வெல்லத்தக்க காமசொரூபமான சத்துருவைக் கொல்லுவாயாக. (சரு)

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु
श्रीकृष्णार्जुनसंवादे
तृतीयोऽध्यायः

இவ்வாறு ஸ்ரீ பகவத்கீதையாகிய உபநிஷத்தில்
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனசம்வாதத்தில்
மூன்றும் அத்தியாயம் முடிந்தது.

॥ कर्मब्रह्मार्पण(ज्ञान)योगः ॥

கர்மபிரஹ்மார்பண(ஞான)யோகம்.

॥ चतुर्थोऽध्यायः ॥

நான்காம் அத்தியாயம்.

—o—

॥ श्रीभगवानुवाच ॥

इमं विवस्वते योगं प्रोक्तवानहमव्ययम् ।
विवस्वान्मनवे प्राह मनुरिक्ष्वाकवेऽब्रवीत् ॥ १ ॥

[கசுந] ஸ்ரீ பகவான் சொல்லலாயினார் :—யான் அவ்வியய மான இந்த யோகத்தைச் சூரியனுக்குச் சொன்னேன். சூரிய ன் மநுவுக்குச் சொன்னார். மநு இக்ஷ்வாகுவுக்குச் சொன் னார். (க)

एवं परंपराप्राप्तमिमं राजर्षयो विदुः ।
स कालेनेह महता योगो नष्टः परंतप ॥ २ ॥

[கசுச] அர்ச்சுனா! இவ்வாறு பரம்பரையாக அடையப்பட் ட இந்த யோகத்தினை இராஜரிஷிகள் அறிவர். அந்த யோகம் நெடுங்காலத்தினால் இங்கு நஷ்டமாயிற்று. (உ)

स एवायं मया तेऽद्य योगः प्रोक्तः पुरातनः ।
भक्तोऽसि मे सखा चेति रहस्यं ह्येतदुत्तमम् ॥ ३ ॥

[ககரு] அதே இப்பழமையான (பரம்பரையாகவந்த) யோகம் என்னால் இப்போது உனக்கு, நீ எனக்குப் பக்தனும் தோழனுமாயிருக்கின்றாயென்று சொல்லப்பட்டது. எதனாலெனின், இது மிக உத்தமமான இரகசியமாம். (௩)

॥ अर्जुन उवाच ॥

अपरं भवतो जन्म परं जन्म विवस्वतः ।
कथमेतद्विजानीयां त्वमादौ प्रोक्तवानिति ॥ ४ ॥

[கசுசு] அர்ச்சுனன் சொல்லலாயினன்:—தம்முடைய ஜன்மம் பிந்தியது. சூரியனுடைய ஜன்மம் முந்தியது. சிருஷ்டியினாரம்பத்தில் தாம் உபதேசித்தவர் என்பதனை யான் அறிவதெப்படி? (௪)

॥ श्रीभगवानुवाच ॥

बहूनि मे व्यतीतानि जन्मानि तव चार्जुन ।
तान्यहं वेद सर्वाणि न त्वं वेत्थ परंतप ॥ ५ ॥

[கசு௭] ஸ்ரீ பகவான் சொல்லலாயினார்:—அர்ச்சுனா! எனக்கும் உனக்கும் அநேக ஜன்மங்கள் கழிந்தன. அவற்றையெல்லாம் யான் அறிவேன். பரந்தப! நீ அறியாய். (௫)

अजोऽपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपि सन् ।
प्रकृतिं स्वामधिष्ठाय संभवाम्यात्ममायया ॥ ६ ॥

[கசு௮] யான் பிறப்பில்லாதவனையும் அவ்வியயனையும் பூதங்களுக்கெல்லாம் ஈசுவரனையுமிருந்தும் எனது பிரகிருதியை யதிஷ்டித்து(வசமாகக்கொண்டு)எனது மாயையினால் பிறக்கின்றேன். (சு)

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदाऽऽत्मानं सृजाम्यहम् ॥ ७ ॥

[கசுகூ] பாரத! எப்பொழுதெப்பொழுது தர்மத்திற்கு நாச முண்டாகின்றதோ, அதர்மத்திற்கு வளர்ச்சி யுண்டாகின்ற தோ, அப்பொழுது நான் என்னைச் சிருஷ்டிக்கிறேன்(வெளிப் படுகிறேன்). (எ)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥ ८ ॥

[கஎ0] சாதுக்களை இரக்ஷிக்கும்பொருட்டும் துஷ்டர்களை அழிக்கும்பொருட்டும் தர்மத்தினை நிறுத்துதற்பொருட்டும் யுகந்தோறும் பிறக்கின்றேன். (அ)

जन्म कर्म च मे दिव्यमेवं यो वेत्ति तत्त्वतः ।
त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन ॥ ९ ॥

[கஎக] அர்ஜுனா! எவன் என்னுடைய திவ்வியமான ஜன்மத்தினையும் கர்மத்தினையும் இப்படி உண்மையாக அறிகிறானோ, அவன் தேகத்தினைவிட்டு மறுபடியும் ஜன்மத்தையடையான்; என்னை யடைகின்றான். (௯)

वीतरागभयक्रोधा मन्मया मामुपाश्रिताः ।
बहवो ज्ञानतपसा पूता मद्भावमागताः ॥ १० ॥

[களஉ] இராகபயக்குரோதங்கள் விசேஷமா யொழிந்தவர்களான என்மயமானவர்கள் என்னையடுத்தவர்களாய் ஞானமாகிய தவசினால் பவித்திரமானவர்களாய் அநேகர் எனது தன்மை(முக்தி)யை யடைந்திருக்கின்றனர். (க0)

ये यथा मां प्रपद्यंते तांस्तथैव भजाम्यहम् ।
मम वर्त्मानुवर्तंते मनुष्याः पार्थ सर्वशः ॥ ११ ॥

[களஙு] பார்த்தா! எவர்கள் எப்படி என்னை உபாசிக்கின்றார்களோ, அவர்களை யான் அப்படியே(அவரவர் விரும்பியதைக் கொடுத்தலாலேயே)பஜி(அநுக்கிரகி)க்கின்றேன். மனி

கர் எல்லாவகையாலும் என்வழியை யநுசரித்து நடக்கின்றார்கள். (கக)

काङ्क्षंतः कर्मणां सिद्धिं यजंत इह देवताः ।
क्षिप्रं हि मानुषे लोके सिद्धिर्भवति कर्मजा ॥ १२ ॥

[களச] கர்மங்களின்சித்தியை விரும்புகிறவர்கள் இங்குத் தேவதைகளை யஜிக்கின்றார்கள். எதனாலெனின் மானுடலோகத்தில் கர்மத்தாலாகும் சித்தி விரைவில் உண்டாகிறது. (கஉ)

चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः ।
तस्य कर्तारमपि मां विद्ध्यकर्तारमव्ययम् ॥ १३ ॥

[கஎடு] (சத்துவாதி)குண(சமதமாதி)கர்மங்களின் விபாகத்தால்(பிரிவால்)நான்கு வர்ணமும் என்னால் படைக்கப்பட்டன. (யான்)அதன் கர்த்தாவாயினும், என்னை அகர்த்தாவென்றும் அவ்வியயனென்றும் அறிக. (கந)

न मां कर्माणि लिंपंति न मे कर्मफले स्पृहा ।
इति मां योऽभिजानाति कर्मभिर्न स बध्यते ॥ १४ ॥

[கஎசு] என்னைக் கர்மங்கள் பற்ற, எனக்குக் கர்மபலத்தில் இச்சையில்லை என்று எவன் என்னை அறிகின்றானே, அவன் கர்மங்களால் கட்டப்படான். (கச)

एवं ज्ञात्वा कृतं कर्म पूर्वैरपि मुमुक्षुभिः ।
कुरु कर्मैव तस्मात्त्वं पूर्वैः पूर्वतरं कृतम् ॥ १५ ॥

[கஎ] இப்படி அறிந்து பூர்வீர்களான முமுக்ஷுக்களாலும் கர்மம் செய்யப்பட்டது. அதனால் முன்னோர்களால் செய்யப்பட்ட மிகமுந்திய(தொன்றுதொட்டுவருவ)தான கருமத்தினையே நீ செய். (கரு)

किं कर्म किमकर्मेति कवयोऽप्यत्र मोहिताः ।
तत्ते कर्म प्रवक्ष्यामि यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ॥ १६ ॥

[களஅ] கர்மம் யாது? அகர்மம் யாது? என்று இவ்வாறு இங்கு(இவ்விஷயத்தில்)கவிகளும்(அறிஞரும்) மோகிக்கப்பட்டவர்களாயிருக்கின்றனர். ஆதலால் எதனையறிந்து அசுபத்தினின்றும் விடுபடுவாயோ அத்தன்மைய கர்மத்தை உனக்குச் சொல்லுவேன். (கசு)

कर्मणो ह्यपि बोद्धव्यं बोद्धव्यं च विकर्मणः।
अकर्मणश्च बोद्धव्यं गहना कर्मणो गतिः ॥ १७ ॥

[களகூ] கர்மத்தினையும் அறியவேண்டும். விகர்மத்தினையும் அறியவேண்டும். அகர்மத்தினையும் அறியவேண்டும். எதனாலெனின், கர்மத்தின் கதி ஆழமானதாம்(அரிதிலறியத்தக்கதாம்).

कर्मण्यकर्म यः पश्येदकर्मणि च कर्म यः ।
स बुद्धिमान्मनुष्येषु स युक्तः कृत्स्नकर्मकृत् ॥ १८ ॥

[க௮௦] எவன் கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தினையும் பார்க்கிறானோ, அவன் மனிதர்களில் புத்திமான். அவன் யோகமுடையவ(ஞானநிஷ்ட)னும் சகல கர்மங்களையுஞ் செய்பவனுமாவன். (க௮)

यस्य सर्वे समारंभाः कामसंकल्पवर्जिताः ।
ज्ञानाग्निदग्धकर्माणं तमाहुः पंडितं बुधाः ॥ १९ ॥

[க௮க] எவனுடைய எல்லாச் செய்கைகளும் காமசங்கற்ப

(ஆசையுமபிமானமு)மில்லாதனவோ, ஞானக்கினியினல் தகிக்கப்பட்ட கர்மமுடைய அவனை அறிஞர் பண்டிதன் என்பர்.

त्यक्त्वा कर्मफलासंगं नित्यतृप्तो निराश्रयः ।
कर्मण्यभिप्रवृत्तोऽपि नैव किंचित्करोति सः ॥ २० ॥

[கஅஉ] நிராசிர(சார்பின்றி)யனுய் நித்தியத்திருப்தனுய் கர்மபலாபிமானம்விட்டுக் கர்மத்தில் நாற்புறமும் பிரவிருத்தித்தவனுயினும் அவன் எதுவும் செய்கிறதேயில்லை. (உ௦)

निराशीर्यतचित्तात्मा त्यक्तसर्वपरिग्रहः ।
शारीरं केवलं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ॥ २१ ॥

[கஅரு] ஆசையில்லாதவனாய் அடக்கப்பட்ட சித்த (மன) ஆத்மாக் (இந்திரியங்களோடுகூடியசரீரங்) களையுமுடையவனா ய் எல்லா (சரீரநிர்வாகத்திற்கதிகமான தனாதிகளைக் கொள்ளுத லான) பரிக்கிரகத்தினையும் விட்டவனாய், கேவலம் சாரீர (சரீர நிர்வாகத்துக்குபயோகமுள்ள) கர்மத்தைச்செய்து (அதனால்) பாபத்தை அடையான். (உக)

यदृच्छालाभसंतुष्टो द्वंद्वातीतो विमत्सरः ।
समः सिद्धावसिद्धौ च कृत्वापि न निबध्यते ॥ २२ ॥

[கஅச] தைவீகமாகக் (வினைவசத்தாற்) கிடைத்தலாபத்தால் சந்தோஷமுடையவனாய், துவந்துவம் (சுகதுக்காதி இருமை)

இல்லாதவனாய், மற்சரமில்லாதவனாய் சித்தியசித்தி(பேறுபேறின்மை)களில் சமமான(ஹர்ஷசோகமில்லாத)வனாயுள்ளவன் (கர்மத்தைச்)செய்தும் பந்தப்படுகிறதில்லை. (உஉ)

गतसंगस्य मुक्तस्य ज्ञानावस्थितचेतसः ।
यज्ञायाचरतः कर्म समग्रं प्रविलीयते ॥ २३ ॥

[கஅரு] சங்கமொழிந்தவனும் முக்தனும் ஞானத்தில் நிலைத்த சித்தமுடையவனும் யஞ்ஞத்தின்(ஈசுவரன்)பொருட்டுச் செய்கின்றவனுமாகிய புருஷனது கர்மமுழுவதும் மிக விசேஷமாய் ஒடுங்குகின்றது. (உ௩)

ब्रह्मार्पणं ब्रह्म हविर्ब्रह्माग्नौ ब्रह्मणा हुतम् ।
ब्रह्मैव तेन गंतव्यं ब्रह्मकर्मसमाधिना ॥ २४ ॥

[கஅகூ] அர்ப்பணம்(ஓமசாதனங்கள்)பிரஹ்மமே. ஹவிஸ் (ஓமத்தில் போடும் திரவியம்)பிரஹ்மம். பிரஹ்மாக்கினியில் (யஜமானாகிய)பிரஹ்மத்தினால் ஓமிக்கப்பட்டது பிரஹ்மமே. பிரஹ்மமாகிய கர்மத்தில் சமாதியுடையவனான அவனால் அடையத்தக்கது(பிரஹ்மமே). (உச)

दैवमेवापरे यज्ञं योगिनः पर्युपासते ।
ब्रह्माग्नावपरे यज्ञं यज्ञेनैवोपजुह्वति ॥ २५ ॥

[கஅஎ] பிற யோகிகள் (கர்மயோகிகள்) தைவ (தேவதைகளின் பொருட்டான) யஞ்ஞத்தையே எப்போதும் செய்கிறார்கள். மற்றையர் (ஞானயோகிகள்) பிரஹ்மமாகிய அக்கினியில் யஞ்ஞத்தினை (சோபாதிகஜீவரூப ஆத்மாவினை) யஞ்ஞத்தி (நிருபாதிகஆத்மாவி)னாலேயே ஓமிக்கின்றார்கள். (உரு)

श्रोत्रादीनींद्रियाण्यन्ये संयमाग्निषु जुह्वति ।
शब्दादीन्विषयानन्य इंद्रियाग्निषु जुह्वति ॥ २६ ॥

[கஅஅ] வேறு சிலர் (இயமாதி நான்கங்கசித்தியுடையோர்) சுரோத்திராதி இந்திரியங்களை சம்யம (தாரணை தியானசமாதி

வடிவ)அக்கினியில் ஓமிக்கின்றார்கள். வேறு சிலர்(சாஸ்திரநிஷித்தமல்லாத)சப்தாதி விஷயங்களை (சரீரநிர்வாகத்தின்பொருட்டு)இந்திரியாக்கினிகளில் ஓமிக்கின்றார்கள். (௨௬)

सर्वाणींद्रियकर्माणि प्राणकर्माणि चापरे ।
आत्मसंयमयोगाग्नौ जुह्वति ज्ञानदीपिते ॥ २७ ॥

[௧௮௬] வேறு சிலர்(நிர்விகற்பசமாதிநிஷ்டர்)சகல இந்திரியகர்மங்களையும் பிராணகர்மங்களையும்(ஆத்ம)ஞானத்தினால் கொழுத்தப்பட்ட ஆத்மசம்யம(சித்தநிரோத)வடிவ யோகாக்கினியில் ஓமிக்கின்றார்கள். (௨௭)

द्रव्ययज्ञास्तपोयज्ञा योगयज्ञास्तथापरे ।
स्वाध्यायज्ञानयज्ञाश्च यतयः संशितव्रताः ॥ २८ ॥

[கக௦] வேறு சிலர் திரவிய(பொருளாற் சாதிக்கத்தக்கவாபிகூபாதி)யஞ்ஞமுடையவர்களும் (கிருச்சிராதி) தபயஞ்ஞமுடையவர்களும், அப்படியே (பிராணாயாமாதி) யோகயஞ்ஞமுடையவர்களும், சுவாத்தியாய (வேதாத்தியயன)வடிவமும்(சாஸ்திரார்த்த) ஞானவடிவமுமாகிய யஞ்ஞமுடையவர்களுமாய் முயற்சியுடையவர்களாயிருக்கின்றனர். அவர்கள் தீக்ஷ்ணமான விரதமுடையவர்களாயிருக்கின்றனர். (உஅ)

अपाने जुह्वति प्राणं प्राणेऽपानं तथापरे ।
प्राणापानगती रुद्ध्वा प्राणायामपरायणाः ॥ २९ ॥

[கஉக] வேறு சிலர் (அடயோகிகள்) (உள்ளேபோகும் வாயுவாகிய) அபானனில் (வெளிப்படும் வாயுவாகிய) பிராணனையும் அப்படியே பிராணனில் அபானனையும் ஓமிக்கின்றார்கள் (பூரகரேசகங்களைச் செய்கிறார்கள்). பிராணாபானகதிகளைத் தடுத்து, (கும்பகஞ்செய்து) பிராணாயாமபராயணராகின்றனர். (உகூ)

अपरे नियताहाराः प्राणान्प्राणेषु जुह्वति ।
सर्वेऽप्येते यज्ञविदो यज्ञक्षपितकल्मषाः ॥ ३० ॥

[ககூஉ] வேறு சிலர் நியமிக்கப்பட்ட (மிதமும் இதமுமான) உணவுடையவர்களாய் (அதனால்நிரோதிக்கப்பட்ட) பிராணன்களில் (ஞானகர்மேந்திரியவடிவ) பிராணன்களை ஓமிக்கின்றார்கள். இவர்களெல்லோரும் யஞ்ஞமுணர்ந்தவர்களாய் (கூறப்பட்ட-கஉ) யஞ்ஞங்களால் பாவநீங்கியவராகின்றனர். (௩௦)

यज्ञशिष्टामृतभुजो यांति ब्रह्म सनातनम् ।
नायं लोकोऽस्त्ययज्ञस्य कुतोऽन्यः कुरुसत्तम ॥ ३१ ॥

[ககூ௩] குருசிரேஷ்டனே! யஞ்ஞத்தில்மிஞ்சிய அமுதத்தினைப்புசிப்பவர் பழைமையான பிரஹ்மத்தை அடைகின்றனர்.

யஞ்ஞமில்லாதவனுக்கு இவ்வுலகமில்லை. அப்போது மற்றைய
து(பரலோகம்)எது? (ஙக)

एवं बहुविधा यज्ञा वितता ब्रह्मणो मुखे ।
कर्मजान्विद्धि तान्सर्वानेवं ज्ञात्वा विमोक्ष्यसे ॥ ३२ ॥

[கககூச] இப்படி வெகுவிதமான யஞ்ஞங்கள் பிரஹ்மாவின் (வேதத்தின்)முகத்தில் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. அவை யெல்லாவற்றையும் கர்மத்தாலானவைகளாக அறி. இவ்வாறு அறிந்து விசேஷமாக முக்தனுவாய். (ஙஉ)

श्रेयान्द्रव्यमयाद्यज्ञाज्ज्ञानयज्ञः परंतप ।
सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते ॥ ३३ ॥

[கசுரு] பரந்தப! திரவியமயமான யஞ்ஞத்தினும் ஞானயஞ்ஞம் மிகச்சிரேஷ்டமாம். பார்த்த! எஞ்சுதலின்றிய எல்லாக் கர்மங்களும் ஞானத்தில் முடிவுபெறுகின்றன. (௩௩)

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।
उपदेक्ष्यंति ते ज्ञानं ज्ञानिनस्तत्त्वदर्शिनः ॥ ३४ ॥

[கசுசு] அதனை (ஞானத்தினை) சாஷ்டாங்கநமஸ்காரத்தினாலும், செவ்வையாய் வினவுதலாலும், சேவையினாலும் அறிக.

ஞானிகளும் தத்துவமுணர்ந்தவர்களுமாகிய அவர்கள் ஞானத்தை உபதேசிப்பார்கள். (ங௪)

यज्ज्ञात्वा न पुनर्मोहमेवं यास्यसि पांडव ।
येन भूतान्यशेषेण द्रक्ष्यस्यात्मन्यथो मयि ॥ ३५ ॥

[ககஎ] பாண்டவ! எதனையறிந்துமறுபடியும் இப்படிமோகத்தினை அடையாயோ, மற்றும் எதனால் முழுவதுமாகப்பூதங்களை ஆத்மாவாகிய என்னிடத்துப் பார்ப்பாயோ (அந்த ஞானத்தினை உபதேசிப்பார்கள்), (ஙரு)

अपि चेदसि पापेभ्यः सर्वेभ्यः पापकृत्तमः ।
सर्वं ज्ञानप्लवेनैव वृजिनं संतरिष्यसि ॥३६ ॥

[கக௲அ] சகல பாபிகளினும் அதிக பாபஞ்செய்தவனுயினும், சகல பாபங்களையும் ஞானமாகிய தெப்பத்தினுலேயே செவ்வையாய்க் கடப்பாய். (௩௬)

यथैधांसि समिद्धोऽग्निर्भस्मसात्कुरुतेऽर्जुन ।
ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा ॥ ३७ ॥

[கக௲க] அர்ஜுனு! எப்படிக் கொளுத்தப்பட்ட அக்கினி விறகினைப் பஸ்மமாக்குகின்றதோ, அப்படி ஞானக்கினி சகல கர்மங்களையும் பஸ்மமாக்குகின்றது. (௩௭)

नहि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते ।
तत्स्वयं योगसंसिद्धः कालेनात्मनि विंदति ॥ ३८ ॥

[உ௦௦] ஏதனாலெனின், இங்கு ஞானத்திற்குச் சமமான பவித்திரமானது(சுத்திசெய்வது) இல்லை. அதனை (நீண்ட) காலத்தினால் யோகஸம்சித்தியுடையவன் தானே தன்னில்(புத்தியில்) அடைகிறான். (௩அ)

श्रद्धावाँल्लभते ज्ञानं तत्परः संयतेंद्रियः ।
ज्ञानं लब्ध्वा परां शांतिमचिरेणाधिगच्छति ॥ ३९ ॥

[உ௦க] சிரத்தையுடையவனும் தற்பர(ஞானத்தினை மேலா

னதாகக் கொண்டவ)னுமான இந்திரியவடக்கமுள்ளவன் ஞானத்தையடைகின்றான். ஞானத்தைப்பெற்றுத் தாமதமின்றி மேலான சாந்தியை யடைகின்றான். (ந௩௯)

अज्ञश्चाश्रद्दधानश्च संशयात्मा विनश्यति ।
नायं लोकोऽस्ति न परो न सुखं संशयात्मनः ॥ ४० ॥

[௨0௨] அஞ்ஞானியும் சிரத்தையில்லாதவனும் சம்சயசித்தமுடையவனும் மிகக் கெடுகின்றனர். (அவர்களுள்)சம்சயசித்தமுள்ளவனுக்கு இந்த லோகமில்லை; பரலோகமில்லை; சுகமில்லை.

योगसंन्यस्तकर्माणं ज्ञानसंछिन्नसंशयम् ।
आत्मवंतं न कर्माणि निबध्नंति धनंजय ॥ ४१ ॥

[உ௦ரு] தனஞ்சய! ஞானத்தினற் சேதிக்கப்பட்ட சம்சயமுடையவனும் யோகத்தினலொழிந்த கர்மமுடையவனுமான பிரமாதமின்றியவனைக் கர்மங்கள் கட்டுகிறதில்லை. (சக)

तस्मादज्ञानसंभूतं हृत्स्थं ज्ञानासिनात्मनः ।
छित्त्वैनं संशयं योगमातिष्ठोत्तिष्ठ भारत ॥ ४२ ॥

[உ௦௪] பாரத! ஆதலால் அஞ்ஞானத்தினலாகியதும் இருதயத்திலுள்ளதுமான உனது இச்சம்சயத்தினை ஞானவாளால்

॥ ओ३म् ॥

॥ सप्तश्लोकीगीता ॥

ஸப்தசுலோகிகீதை.

॥ ओ३म् ॥

॥ श्रीगणेशाय नमः ॥

கணபதி துணை.

॥ सप्तश्लोकी गीता ॥

ஸப்தசுலோகி கீதை.

ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन्मामनुस्मरन् ।
यः प्रयाति त्यजन्देहं स याति परमां गतिम् ॥ १ ॥

ஓம் என்னும் ஏகாக்ஷரரூபமான ப்ராஹ்மத்தை உச்சரித்துக் கொண்டும் என்னை விடாது ஸ்மரித்துக்கொண்டும் தேஹத்தை

விடுத்து எவன் செல்கின்றானோ அவன் உயர்ந்த (முக்தி) நிலை யைப் பெறுவான். (க)

स्थाने हृषीकेश तव प्रकीर्त्या जगत्प्रहृष्यत्यनुरज्यते च ।
रक्षांसि भीतानि दिशो द्रवन्ति सर्वे,नमस्यन्ति च सिद्धसंघाः ॥ २ ॥

ஹே ஹிருஷீகேச! உம்மைப் புகழ்வதனால் உலகம் அகம கிழ்கின்றது அன்புமுறுகின்றது; அரக்கர்கள் பயந்து திசை களைநோக்கி ஓட்டம் பிடிக்கின்றனர்; எல்லாச் சித்தர்கூட்ட ங்களும் (உம்மை) நமஸ்கரிக்கின்றன. (உ)

सर्वतःपाणिपादं तत्सर्वतोऽक्षिशिरोमुखम् ।
सर्वतःश्रुतिमल्लोके सर्वमावृत्य तिष्ठति ॥ ३ ॥

(ந)

सांख्ययोगौ पृथग्बालाः प्रवदंति न पंडिताः ।
एकमप्यास्थितः सम्यगुभयोर्विंदते फलम् ॥ ४ ॥

[உ०அ] பாலர் (அவிவேகி)கள் சாங்கியம் (கர்மசந்நியாசம்) யோகம் (கர்மயோகம்) இரண்டனையும் வேருகச்சொல்லுகின்றனர்; பண்டிதர்சொல்லுகிறதில்லை. (இரண்டில்) ஒன்றையேனும் செவ்வையாய்ப்பற்றியுள்ளவன் இரண்டன்பயனையும் அடைகிருன். (௪)

यत्सांख्यैः प्राप्यते स्थानं तद्योगैरपि गम्यते ।
एकं सांख्यं च योगं च यः पश्यति स पश्यति ॥ ५ ॥

[உ0கூ] சாங்கியர்களால் எந்தஸ்தானம் அடையப்படுகின்றதோ அது யோகிகளாலும் அடையப்படுகின்றது. எவன் சாங்கியமும் யோகமும் ஒன்றெனக் காண்கின்றானோ அவன்(பரத்தைக்)காண்கின்றான். (ரு)

संन्यासस्तु महाबाहो दुःखमाप्तुमयोगतः ।
योगयुक्तो मुनिर्ब्रह्म नचिरेणाधिगच्छति ॥ ६ ॥

[உகO] மகாபாகுவே! சந்நியாசமோ யோகமின்மையால் துக்கமடையதற்குரியதாம். யோகத்தோடுகூடிய முநி(கௌணசந்நியாசியானமனனசீலகிருகஸ்தன்)பிரஹ்மத்தைத் தாமதமின்றியடைகிறான். (கா)

योगयुक्तो विशुद्धात्मा विजितात्मा जितेंद्रियः ।
सर्वभूतात्मभूतात्मा कुर्वन्नपि न लिप्यते ॥ ७ ॥

[உகக] யோகத்தோடு கூடியவனும் விசுத்தசித்தமுடையவனும், தேகமனதுகளை வென்றவனும், இந்திரியஜயமுள்ளவனும், சர்வபூதங்களின் ஆத்மவடிவினனுமாகிய ஞானி(கர்மத்தைச்)செய்தும் பற்றப்படுகிறதில்லை. (எ)

नैव किंचित्करोमीति युक्तो मन्येत तत्त्ववित् ।
पश्यञ्शृण्वन्स्पृशञ्जिघ्रन्नश्नन्गच्छन्स्वपन्श्वसन् ॥ ८ ॥

प्रलपन्विसृजन्गृह्णन्नुन्मिषन्निमिषन्नपि ।
इंद्रियाणींद्रियार्थेषु वर्तंत इति धारयन् ॥ ९ ॥

[உகஉ-உகங] (சமாதி)யோகமுடைய தத்துவஞானி பார்த்தும், கேட்டும், பரிசித்தும், முகர்ந்தும், உண்டும், நடந்தும், உறங்கியும், உசுவசித்தும், பேசியும், (மலத்தை)விட்டும், (ஒன்றை)கிரகித்தும், கண்திறந்தும், கண்மூடியும், இந்திரியங்கள் இந்திரியார்த்தங்களிலிருக்கின்றன என்று தரித்த(மனத்துட்கொண்ட)வனாய் எதுவுமே யான் செய்திலேன் என்று மதிப்பான். (அ-சு)

ब्रह्मण्याधाय कर्माणि संगं त्यक्त्वा करोति यः।
लिप्यते न स पापेन पद्मपत्रमिवाम्भसा ॥ १० ॥

[உகச] எவன் கர்மங்களைப் பிரஹ்மத்தில்வைத்துச் சங்கத்தை(பலேச்சைகர்த்திருத்வாபிமானங்களை)விட்டுச் செய்கிருனே, அவன் ஜலத்தாற்ருமரையிலையினைப்போல பாபத்தாற்பற்றப்படுகிறதில்லை. (கo)

कायेन मनसा बुद्ध्या केवलैरिंद्रियैरपि।
योगिनः कर्म कुर्वंति संगं त्यक्त्वाऽऽत्मशुद्धये ॥ ११ ॥

[உகரு] (கர்ம)யோகிகள் சங்கத்தைவிட்டு, சித்தசுத்தியின் பொருட்டுக் காயத்தினுல், மனதினுல், புத்தியினுல், கேவல இந்திரியங்களால் கர்மத்தையும்(உபாசனையையும்)செய்கிருர்கள்.

युक्तः कर्मफलं त्यक्त्वा शांतिमाप्नोति नैष्ठिकीम् ।
अयुक्तः कामकारेण फले सक्तो निबध्यते ॥ १२ ॥

[உகசு] சம்புத்தியாகிய யோகமுடையவன் கர்மபலத்தை விட்டு நைஷ்டிக(நிஷ்டையினுலாம்)சாந்தியைஅடைகின்ருன். யோகமில்லாதவன் காமித்தலை(இச்சையை)ச்செய்தலால் பலத்தில் பற்றுள்ளவனுய்க் கட்டுப்படுகிருன். (கஉ)

सर्वकर्माणि मनसा संन्यस्यास्ते सुखं वशी ।
नवद्वारे पुरे देही नैव कुर्वन्न कारयन् ॥ १३ ॥

[உகஎ] சர்வகர்மங்களையும் மனதினால் விட்டுத் தேகியானவன் (தேகேந்திரியசமூகங்களின்) சுவாதீனமுள்ளவனாய் ஒன்பது துவாரமுடைய (சரீரமாகிய) புரத்தில் செய்யாதவனாகியும் செய்வியாதவனாகியும் சுகமாயிருக்கின்றான். (கங)

न कर्तृत्वं न कर्माणि लोकस्य सृजति प्रभुः ।
न कर्मफलसंयोगं स्वभावस्तु प्रवर्तते ॥ १४ ॥

[உகஅ] பிரபுவானவன் உலகத்தின் கர்த்திருத்தன்மையினைப் படைக்கிறதில்லை; கர்மங்களையும் படைக்கிறதில்லை. கர்மபலசையோகத்தையும் படைக்கிறதில்லை. ஆனால் ஸ்வபாவம் (அவித்தியாலக்ஷணமுள்ள மாயையாகிய தைவீபிரகிருதி) பிரவர்த்திக்கின்றது. (கச)

नादत्ते कस्यचित्पापं न चैव सुकृतं विभुः ।
अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यंति जंतवः ॥ १५ ॥

[உகக] விபுவானவன் ஒருவனுடைய பாபத்தையும் கிரகிக்கிறதில்லை; புண்ணியத்தையும் கிரகிக்கிறதில்லை. அஞ்ஞானத்

தினுல் ஞானம் மறைக்கப்பட்டுளது. அதனுல் ஜந்துக்கள் மோகமடைகின்றனர். (கரு)

ज्ञानेन तु तदज्ञानं येषां नाशितमात्मनः ।
तेषामादित्यवज्ज्ञानं प्रकाशयति तत्परम् ॥ १६ ॥

[உஉ0] மற்றே, எவர்களுக்கு அவ்வஞ்ஞானம் ஆத்மாவின் ஞானத்தினுல் கெடுக்கப்பட்டுளதோ, அவர்களது ஞானம் அப்பரத்தினை சூரியனைப்போல பிரகாசிக்கின்றது (விளக்குகின்றது). (கசு)

तद्बुद्धयस्तदात्मानस्तन्निष्ठास्तत्परायणाः ।
गच्छंत्यपुनरावृत्तिं ज्ञाननिर्धूतकल्मषाः ॥ १७ ॥

[உஉக] அப்புத்தி(அப்பரத்தில் நிச்சயபுத்தி)யுடையோரும், அவ்வாத்மவடிவின(அப்பரமே ஆத்மாவாகவுடையவ)ரும், அதில் நிலைத்துள்ளவர்களும், அப்பராயண(அப்பரத்தினையே மேலானகதியாகவுடையவ)ரும், ஞானத்தினால் அழுக்கு நீங்கியவர்களுமாகிய அவர்கள் மீண்டும்(பிறப்பில்)வாராமையை அடைகின்றனர். (கஎ)

विद्याविनयसंपन्ने ब्राह्मणे गवि हस्तिनि ।
शुनि चैव श्वपाके च पंडिताः समदर्शिनः ॥ १८ ॥

[உஉஉ] வித்தையும் அடக்கமுமுடைய பிராஹ்மணனிடத்திலும், கோவினிடத்தும், யானையினிடத்தும், நாயினிடத்தும்,

நாயுண்புலேயனிடத்தும், பண்டிதர்(ஞானி)கள் சமதர்சி(எல்லாவற்றிலும் ஆத்மாவொன்றனேயே காண்பவர்)களாவர். ()

इहैव तैर्जितः सर्गो येषां साम्ये स्थितं मनः।
निर्दोषं हि समं ब्रह्म तस्माद्ब्रह्मणि ते स्थिताः॥ १९॥

[உஉ௲] எவர்களுடைய மனது சமத்தன்மையில் நிலேத்திருக்கின்றதோ அவர்களால் இவ்விடத்திலேயே ஜன்மம் ஜயிக்கப்பட்டதாம். எதனுல் பிரஹ்மம் தோஷமில்லாததும் சமமானதுமாயிருக்கிறதோ, அதனுல் அவர்கள் பிரஹ்மத்தில் நிலேத்தவர்களாகின்றனர். (கக)

न प्रहृष्येत्प्रियं प्राप्य नोद्विजेत्प्राप्य चाप्रियम् ।
स्थिरबुद्धिरसंमूढो ब्रह्मविद्ब्रह्मणि स्थितः ॥ २० ॥

[உஉச] பிரியத்தினையடைந்து மிகக்களிப்பை யடையான். பிரியமில்லாததைதயடைந்து துவேஷத்தையு மடையான். ஸ்திரபுத்தியுள்ளவனுய்ச் சம்சயவிபரீதங்களொழிந்த பிரஹ்மவித்தானவன் பிரஹ்மத்தில் நிலைக்கின்றான். (உ0)

बाह्यस्पर्शेष्वसक्तात्मा विंदत्यात्मनि यत्सुखम् ।
स ब्रह्मयोगयुक्तात्मा सुखमक्षय्यमश्नुते ॥ २१ ॥

[உஉரு] வெளிவிஷயங்களில் பற்றின்றிய சித்தமுள்ளவன்

ஆத்மாவினிடத்து எந்தச் சுகத்தை யடைகின்றானோ, அவன் பிரஹ்மயோகத்தோடுகூடிய சித்தமுடையவனாய் அழிவின்றிய சுகத்தை யநுபவிக்கின்றான். (உக)

ये हि संस्पर्शजा भोगा दुःखयोनय एव ते ।
आद्यंतवंतः कौंतेय न तेषु रमते बुधः ॥ २२ ॥

[உஉகூ] கௌந்தேய! ஏதனாலெனின், விஷயசம்பந்தத்தாலுண்டாகும் போகங்கள் எவையோ அவை ஆதியந்தமுள்ளனவாய்த் துக்ககாரணங்களாகவே யிருக்கின்றன. அவற்றில் அறிஞன் இரமிக்கிறதில்லை. (உஉ)

शक्नोतीहैव यः सोढुं प्राक् शरीरविमोक्षणात् ।
कामक्रोधोद्भवं वेगं स युक्तः स सुखी नरः ॥ २३ ॥

[உஉஎ] எவன் சரீரம் நீங்குவதன்முன் (தேகம் விழும்வரையில்) காமக்குரோதங்களாலுண்டாகும் வேகத்தை இங்குதானே சகிக்கக்கூடியவனாகின்றானோ, அவன் யோகி. அம்மனிதனே சுகி. (உந)

योऽन्तःसुखोऽन्तरारामस्तथान्तर्ज्योतिरेव यः ।
स योगी ब्रह्मनिर्वाणं ब्रह्मभूतोऽधिगच्छति ॥ २४ ॥

[உஉஅ] எவன் உள்ளே (ஆத்மாவில்) சுகமுடையவனோ, அ

ப்படியே உள்ளே இரமித்தலையுடையவனும், உள்ளே ஜோதியுடையவனுமிருக்கின்றானோ, அந்த யோகி பிரஹ்மவடிவமாய்ப் பிரஹ்மநிர்வாணத்தை(பிரஹ்மாநந்தமாகிய முத்தியினை)யடைகின்றான். (உச)

लभंते ब्रह्मनिर्वाणमृषयः क्षीणकल्मषाः ।
छिन्नद्वैधा यतात्मानः सर्वभूतहिते रताः ॥ २५ ॥

[உஉக] பாபமொழிந்தவரும், சம்சயநீங்கியவரும், ஒருமித்தமனதுடையவரும், சகலபூதங்களின் இதத்தில் இரமித்தவருமான ரிஷிகள் பிரஹ்மநிர்வாணத்தை(முத்தியை)யடைகின்றார்கள். (உரு)

कामक्रोधवियुक्तानां यतीनां यतचेतसाम् ।
अभितो ब्रह्मनिर्वाणं वर्तते विदितात्मनाम् ॥ २६ ॥

[உ௫௦] காமக்குரோதங்கள் நீங்கியவர்களும், அடங்கிய சித்தமுடையவர்களும், ஆத்மாவினை யறிந்தவர்களுமாகிய யதி (யத்தனசீலர்)கட்கு எப்புறத்துமாக(ஜீவித்துளபோதும் மரித்தபோதும்)நிர்வாணமாகிய பிரஹ்மமி(முத்தியி)ருக்கின்றது.

स्पर्शान्कृत्वा बहिर्बाह्यांश्चक्षुश्चैवांतरे भ्रुवोः ।
प्राणापानौ समौ कृत्वा नासाभ्यंतरचारिणौ ॥ २७ ॥

[உ௫க] (சப்தாதி)வெளிவிஷயங்களை வெளியில் நிறுத்தி,

நேத்திரத்தை புருவநடுவில் வைத்து, நாசியினுட்சரிக்கும் பிராணபானன்களை சமமுள்ளனவாகச் செய்து, (உஎ)

यतेंद्रियमनोबुद्धिर्मुनिर्मोक्षपरायणः ।
विगतेच्छाभयक्रोधो यः सदा मुक्त एव सः ॥ २८ ॥

[உஅ] அடக்கப்பட்ட இந்திரியமனோபுத்திகளையுடையவனும், இச்சாபயக்குரோதங்கள் நீங்கியவனும், மோக்ஷபாராயண (முத்தியை மேலானகதியாகவுடையவ)னுமாய் எந்தமுனி (சந்நியாசி)யிருக்கின்றானோ, அவன் எப்பொழுதும் முக்தனே.

भोक्तारं यज्ञतपसां सर्वलोकमहेश्वरम् ।
सुहृदं सर्वभूतानां ज्ञात्वा मां शांतिमृच्छति ॥ २९ ॥

[உ௯௯] யஞ்ஞதபசுகளை(கர்த்தாவடிவாகவும் தேவதாரூப மாகவும்)புசிப்பவனும், சர்வலோகமஹேசுவரனும், சர்வஜீவர் களின் சுகிருத்து(நலத்தைக்கருதுபவனு)மாகிய என்னை யறிந்து சாந்தியை யடைகிறான். (உக)

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु
श्रीकृष्णार्जुनसंवादे
पंचमोऽध्यायः

இவ்வாறு ஸ்ரீ பகவத்கீதையாகிய உபநிஷத்தில்
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனசம்வாதத்தில்
ஐந்தாம் அத்தியாயம் முடிந்தது.

॥ षष्ठोऽध्यायः ॥

ஆறும் அத்தியாயம்.

॥ अध्यात्म(आत्मसंयम)योगः ॥

அப்பியாச(ஆத்மசம்யம)யோகம்.

॥ श्रीभगवानुवाच ॥

अनाश्रितः कर्मफलं कार्यं कर्म करोति यः ।
स संन्यासी च योगी च न निरग्निर्न चाक्रियः ॥ १ ॥

[உஅ௯] ஸ்ரீ பகவான் சொல்லலாயினர் :—எவன் கர்மபலத்

தை ஆசிரயிக்காதவனாய் செய்யத்தக்க கர்மத்தைச் செய்கின்றானோ, அவன் அக்கினியில்லாதவனல்லன்; கிரியையில்லாதவனல்லன். (என்றாலும்)சந்நியாசியும்யோகியு(சித்தசமாதானமுள்ளவனு)மாவன். (க)

यं संन्यासमिति प्राहुर्योगं तं विद्धि पांडव ।
न ह्यसंन्यस्तसंकल्पो योगी भवति कश्चन ॥ २ ॥

[உ௱ரு] பாண்டவ! எதனைச் சந்நியாசமென்று கூறுகின்றார்களோ, அதனை யோக(கர்மாநுஷ்டான)மென்றறி. எதனாலெனின், சங்கற்பம் விடாதவன் எவனும்(கர்ம)யோகி(சமாதானமுடையவன்)ஆகான். (உ)

आरुरुक्षोर्मुनेर्योगं कर्म कारणमुच्यते ।
योगारूढस्य तस्यैव शमः कारणमुच्यते ॥ ३ ॥

[உரை] (தியான)யோகத்தினை ஏறவிரும்பும் முனி(கர்மபலம்விட்டவனு)க்குக் கர்மம் காரண(சாதன)மென்று சொல்லப்படுகின்றது. யோகத்திலேறியவனான அவனுக்குச்சமமே(சர்வகர்மநிவிருத்தியே)காரண(சாதன)மென்று சொல்லப்படுகின்றது. (௩)

यदा हि नेन्द्रियार्थेषु न कर्मस्वनुषज्जते ।
सर्वसंकल्पसंन्यासी योगारूढस्तदोच्यते ॥ ४ ॥

[உ௩எ] எப்பொழுது இந்திரிய விஷயங்களில் பற்றுகிறதில்லையோ, கர்மங்களிலு மில்லையோ, சர்வசங்கற்ப சந்நியாசியாயிருக்கின்றானோ, அப்பொழுது யோகாரூடன் எனப்படுகின்றான். (ச)

उद्धरेदात्मनाऽऽत्मानं नात्मानमवसादयेत् ।
आत्मैव ह्यात्मनो बंधुरात्मैव रिपुरात्मनः ॥ ५ ॥

[உ௩அ] ஆத்மாவை (அந்தவிசிஷ்ட) ஆத்மாவி (சுத்தபுத்தியி)னால் உத்தாரஞ்செய்ய (உயர்த்த) வேண்டும். ஆத்மாவைக் கீழ்ப்படுத்தலாகாது. எதனாலெனின், ஆத்மாவே (தானே) ஆத்

மாவிற் (தனக்)கு பந்து (உறவு). ஆத்மாவே ஆத்மாவிற்குச் சத்துரு (பகை). (ரு)

वंधुरात्माऽऽत्मनस्तस्य येनात्मैवात्मना जितः ।
अनात्मनस्तु शत्रुत्वे वर्तेतात्मैव शत्रुवत् ॥ ६ ॥

[உஙகூ] எவனால் ஆத்மா (காரணகாரியசங்காதம்) ஆத்மாவி (சுத்தபுத்தியி)னாலேயே ஜயிக்கப்பட்டதாமோ, அவனுடைய ஆத்மா (மனது) ஆத்மாவுக்கு (புத்திவிசிஸ்டசேதனத்திற்கு)ப் பந்துவாம். (அவனின்வேறான) அநாத்மாவிற் (சங்காதஜயமில்லாதவனுக்)குச் சத்துருத்தன்மையில் சத்துருவினைப்போல ஆத்மாவே (தானே) யிருக்கின்றது. (சு)

जितात्मनः प्रशांतस्य परमात्मा समाहितः ।
शीतोष्णसुखदुःखेषु तथा मानापमानयोः ॥ ७ ॥

[உசo] சீதோஷ்ண ஸுகதுக்கங்களிலும் அப்படியே மானாவமானங்களிலும் ஜயிக்கப்பட்ட சித்தமுடைய மிக்க சாந்தனுக்குப் பரமாத்மா செவ்வையாய் கொள்ள(வெளி)ப்படுவதாகின்றது. (எ)

ज्ञानविज्ञानतृप्तात्मा कूटस्थो विजितेंद्रियः ।
युक्त इत्युच्यते योगी समलोष्टाश्मकांचनः ॥ ८ ॥

[உசக] (சாஸ்திர) ஞானவிஞ்ஞான (அநுபவ ஞான)ங்களால் திருப்தியடைந்த சித்தமுடையவனும், கூடஸ்த(சலிப்பின்

றியவ)னும், இந்திரியஜயமுள்ளவனும், மண்ணுங்கட்டி கல் பொன் என்பவற்றிற் சமத்துவமுள்ளவனுமாகிய யோகியோகாரூடனென்று சொல்லப்படுகின்றான். (அ)

सुहृन्मित्रार्युदासीनमध्यस्थद्वेष्यबंधुषु ।
साधुष्वपि च पापेषु समबुद्धिर्विशिष्यते ॥ ९ ॥

[உசஉ] அன்பன் (தன்று நலங்கருதுவோன்) நண்பன் பகைவன் உதாசீனன் மத்தியஸ்தன் த்வேஷிக்கப்படுபவன் உறவினனென்னு மிவர்களிடத்திலும், சாதுக்களிடத்திலும், பாபிகளிடத்திலும் சமபுத்தியுடையவன் விசேஷிக்கப்படுகின்றான்.

योगी युंजीत सततमात्मानं रहसि स्थितः ।
एकाकी यतचित्तात्मा निराशीरपरिग्रहः ॥ १० ॥

[உசுங] யோகி (தியானாப்பியாசி) இரகசிய (ஏகாந்த)த்திலிருப்பவனும், தனித்தவனும், அடக்கப்பட்ட மனவாத்மாக்(தேகேந்திரியங்)களையுடையவனும், ஆசையற்றவனும், எதனையும் கிரகியாதவனுமாய் ஆத்மாவை(மனதை)எப்போதும்(ஆத்மாவில்) பொருத்துக. (கo)

शुचौ देशे प्रतिष्ठाप्य स्थिरमासनमात्मनः ।
नात्युच्छ्रितं नातिनीचं चैलाजिनकुशोत्तरम् ॥ ११ ॥

[உசச] சுசியான இடத்தில் மிகவுயரமில்லாததும் மிகத்தாழ்வில்லாததும் வஸ்திரம் மான்தோல் தர்ப்பை என்பவற்றை (முறையே) ஒன்றன்கீழொன்ருகவுடைய தனது ஸ்திரமான ஆசனத்தை அமைத்து, (கக)

तत्रैकाग्रं मनः कृत्वा यतचित्तेंद्रियक्रियः ।
उपविश्यासने युंज्याद्योगमात्मविशुद्धये ॥ १२ ॥

[உசரு] அங்கு ஆசனத்தில் உட்கார்ந்து, தடுக்கப்பட்ட சித்தஇந்திரியக்கிரியைகளை யுடையவனாய் மனதை ஏகாக்கிரம் செய்து, ஆத்மாவினது (சித்தத்தின்) விசுத்தியின் பொருட்டு யோகத்தைச் சாதிக்கக்கடவன். (கஉ)

समं कायशिरोग्रीवं धारयन्नचलं स्थिरः ।
संप्रेक्ष्य नासिकाग्रं स्वं दिशश्चानवलोकयन् ॥ १३ ॥

[௨௪௯] அசையாதவனாய், உடல் சிரம் கழுத்து என்பவற்றை சமமாக அசையாது வைத்துத் தனது நாசி நுனியைச் செவ்வையாய்ப் பார்த்துக்கொண்டு திசைகளைப்பாராதவனாய்,

प्रशांतात्मा विगतभीर्ब्रह्मचारिव्रते स्थितः ।
मनः संयम्य मच्चित्तो युक्त आसीत मत्परः ॥ १४ ॥

[௨௪௭] மிகச்சாந்தசித்த முடையவனாய், பயமொழிந்தவனாய், பிரஹ்மசாரிவிரதத்தில் நிலைத்தவனாய், மனதையடக்கி, என்

னிடத்துச் சித்தமுடையவனாய், என்னையே (மேலாகக்) குறித்தவனாய் யோகமுடையவனா யிருப்பன். (கச)

युंजन्नेवं सदाऽऽत्मानं योगी नियतमानसः ।
शांतिं निर्वाणपरमां मत्संस्थामधिगच्छति ॥ १५ ॥

[உ-ச-அ] இப்படி எப்போதும் மனதைப் பொருத்தியோகி அடக்கப்பட்ட மனதையுடையவனாய் என் நிலையும் நிர்வாண (முத்தி) எல்லையினதுமாகிய சாந்தியை யடைகின்றான். (க௫)

नात्यश्नतस्तु योगोऽस्ति न चैकांतमनश्नतः ।
न चातिस्वप्नशीलस्य जाग्रतो नैव चार्जुन ॥ १६ ॥

[உசக] அர்ஜுனா! மிகுதியாய்ச் சாப்பிடுகிறவனுக்கோ யோகமில்லை. அத்தியந்தம் புசியாதவனுக்குமில்லை; அதிகமாய்த் தூங்குமியல்புடையவனுக்குமில்லை; (அத்தியந்தம்) விழித்திருப்பவனுக்குமேயில்லை. (கசு)

युक्ताहारविहारस्य युक्तचेष्टस्य कर्मसु ।
युक्तस्वप्नावबोधस्य योगो भवति दुःखहा ॥ १७ ॥

[உருo] பொருத்தமான ஆகாரவிகாரங்களையுடை (உணவும் நடையுமுடை) யவனும், கர்மங்களில் பொருத்தமான சேஷ்டையையுடையவனும், பொருத்தமான உறக்கமும் விழிப்பு

முடையவனுமாயுள்ளவனது யோகம் துக்கத்தைக் கெடுப்பதாகின்றது. (கஎ)

यदा विनियतं चित्तमात्मन्येवावतिष्ठते ।
निःस्पृहः सर्वकामेभ्यो युक्त इत्युच्यते तदा ॥ १८ ॥

[உரை] எப்போது விசேஷமாயடக்கப்பட்ட சித்தம் ஆத்மாவிலேயே நிற்கின்றதோ, சர்வ காமங்களினின்றும் பற்று ஒழிந்ததாகின்றதோ அப்போது யுக்தன்(யோகமுடையவன்) என்று சொல்லப்படுகின்றான். (கஅ)

यथा दीपो निवातस्थो नेंगते सोपमा स्मृता ।
योगिनो यतचित्तस्य युंजतो योगमात्मनः ॥ १९ ॥

[உ௫உ] எப்படிக் காற்றில்லாத விடத்துள்ள தீபம் அசைகிறதில்லையோ, அது ஆத்மாவினது யோகத்தினைப் பொருந்தும் யோகியின் அடங்கிய சித்தத்திற்கு உவமையாகக் கருதப்படுகின்றது. (கக)

यत्रोपरमते चित्तं निरुद्धं योगसेवया ।
यत्र चैवात्मनाऽऽत्मानं पश्यन्नात्मनि तुष्यती ॥ २० ॥

[உ௫௩] யோகசேவையினால் தடுக்கப்பட்ட சித்தம் எப்போது ஒடுங்குகின்றதோ, எங்கு ஆத்மாவி(சமாதிபரிசுத்த அந்தக்கரணத்தி)னால் ஆத்மாவை(பரத்தை)க்கண்டு ஆத்மாவிலேயே சந்தோஷிக்கின்றானோ, (உ0)

सुखमात्यंतिकं यत्तद्बुद्धिग्राह्यमतींद्रियम् ।
वेत्ति यत्र न चैवायं स्थितश्चलति तत्त्वतः ॥ २१ ॥

[௨௫௪] எந்தச்சுகம் ஆந்தியந்திக (பூர்ண) மும், அதீந்திரியமும், புத்தியினால் கிரகிக்கத்தக்கதுமாயிருக்கின்றதோ அதனை எப்போது நிலைத்தவனாய் இவன் (யோகி) அறிகின்றானோ, உண்மையினின்றும் சலிக்கிறதேயில்லையோ, (௨௧)

यं लब्ध्वा चापरं लाभं मन्यते नाधिकं ततः ।
यस्मिन्स्थितो न दुःखेन गुरुणापि विचाल्यते ॥ २२ ॥

[௨௫௫] எதனை (எப்பாக்ஷத) அடைந்து, அதனினும் அதி

கமான வேறு லாபத்தை மதிக்கிறதில்லையோ, எதில் (எவ்வாத்மாவில்) நிலைத்தவன்பெருந்துன்பத்தினாலும் அசைக்கப்படானோ, (உஉ)

तं विद्याद्दुःखसंयोगवियोगं योगसंज्ञितम् ।
स निश्चयेन योक्तव्यो योगो निर्विण्णचेतसा ॥ २३ ॥

[உருசு] அதனைத் துக்கசையோகத்தின் வியோக(துன்பச் சேர்க்கையின்பிரிவு)வடிவயோக மென்னும் பெயருடையதாக அறிக. அந்தயோகம் வேதனையி (கைப்பி) ன்றிய சித்தத்தால் (சாஸ்திராசாரியவுபதேசத்தாலாகிய) நிச்சயத்தினால் அப்பிய சிக்கத்தக்கதாம். (உங)

संकल्पप्रभवान्कामांस्त्यक्त्वा सर्वानशेषतः ।
मनसैवेंद्रियग्रामं विनियम्य समंततः ॥ २४ ॥

[௨௫௭] (சோபானத்தியாசமாகிய) சங்கற்பத்தினாற் றோன்றுவனவாகிய சர்வகாமங்களையும் முழுவதும்விட்டு, மனதினாலேயே இந்திரியக்கூட்டங்களை எப்புறத்துமாக அடக்கி, ()

शनैःशनैरुपरमेद्बुद्ध्या धृतिगृहीतया ।
आत्मसंस्थं मनः कृत्वा न किंचिदपि चिंदयेत् ॥ २५ ॥

[௨௫௮] தைரியத்தினால் கொள்ளப்பட்ட புத்தியினால் மெல்லமெல்ல உபரதிசெய்க(ஒடுக்குக). மனதை ஆத்மாவில் செவ்வையாக நிலைத்ததாகச்செய்து எதனையும் சிந்திக்கலாகாது.

यतो यतो निश्चरति मनश्चंचलमस्थिरम् ।
ततस्ततो नियम्यैतदात्मन्येव वशं नयेत् ॥ २६ ॥

[௨௫௯] சஞ்சலமும் அஸ்திரமுமாய் மனது எதெதனால் வெளிப்படுகின்றதோ, அததனினின்றும் இதனை அடக்கி, ஆத்மாவிலேயே வசமாக்குக (நிறுத்துக). (௨௬)

प्रशांतमनसं ह्येनं योगिनं सुखमुत्तमम् ।
उपैति शांतरजसं ब्रह्मभूतमकल्मषम् ॥ २७ ॥

[௨௬௦] மிகச்சாந்தியடைந்தவனும் அழுக்கு நீங்கியவனும் பிரஹ்மவடிவினனும் வினையொழிந்தவனுமாகிய இந்த யோகியை நிச்சயமாக உத்தமமான சுகம் நெருங்குகின்றது. (௨௭)

युंजन्नेवं सदाऽऽत्मानं योगी विगतकल्मषः ।
सुखेन ब्रह्मसंस्पर्शमत्यंतं सुखमश्नुते ॥ २८ ॥

[உகூக] இவ்வாறு எப்போதும் ஆத்மாவினை அநுசந்தித்துக்கொண்டு கல்மஷ (அவித்தையாதிக்கிலேச)ம் நீங்கியவனை யோகி சுகமாகப் பிரஹ்மத்தோடு பொருந்தியுள்ளதும் முடிவில்லாததுமான சுகத்தை வியாபி(அநுபவி)க்கின்றான். (உஅ)

सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि ।
ईक्षते योगयुक्तात्मा सर्वत्र समदर्शनः ॥ २९ ॥

[உகூஉ] யோகத்தோடுகூடிய சித்தமுடையவனும் எங்கும் சமதிருஷ்டியுடையவனுமாய்ச் சர்வபூதங்களிலு முள்ளதாக

ஆத்மாவையும் ஆத்மாவில் சர்வபூதங்களையும் காண்கிறான். ()

योमां पश्यति सर्वत्र सर्वं च मयि पश्यति ।
तस्याहं न प्रणश्यामि स च मे न प्रणश्यति ॥ ३० ॥

[உகூ] எவன் எவ்விடத்தும் என்னைப் பார்க்கின்றானோ, எல்லாவற்றையும் என்னிடத்தில் பார்க்கின்றானோ, அவனுக்கு யான்நாசமாகேன் (காணப்படாதிரேன்). அவன் எனக்கு நாசமாகான் (காணப்படாதிரான்). (௩௦)

सर्वभूतस्थितं यो मां भजत्येकत्वमास्थितः ।
सर्वथा वर्तमानोऽपि स योगी मयि वर्तते ॥ ३१ ॥

[உகூச] எவன் சர்வபூதங்களிலுமுள்ள என்னை (ஆத்ம) ஒருமையில் நிலைத்தவனாய் பஜிக்கின்றானோ, அந்தயோகி எவ்விதமாக இருப்பவனாயினும் என்னிடத்திலிருப்பன். (ரு௧)

आत्मौपम्येन सर्वत्र समं पश्यति योऽर्जुन ।
सुखं वा यदि वा दुःखं स योगी परमो मतः ॥ ३२ ॥

[உகூரு] அர்ஜுனா! எவன் தன்னைப்பாக எங்கும் (சர்வஜீவர்களிடத்தும்) சுகத்தையாவது துக்கத்தையாவது சமமாகக்காண்கின்றானோ அந்தயோகி (நான்காம்பூமியிலுள்ளவனினும்) மேலானவனென்று மதிக்கப்படுகின்றான். (ருஉ)

॥ अर्जुन उवाच ॥

योऽयं योगस्त्वया प्रोक्तः साम्येन मधुसूदन ।
एतस्याहं न पश्यामि चंचलत्वात्स्थितिं स्थिराम् ॥ ३३ ॥

[உகக] அர்ஜுனன் சொல்லலாயினன்:—மதுசூதனரே! தம்மால் யாதொரு இந்தயோகம் சமதன்மையாகச் சொல்லப்பட்டதோ, இதன் ஸ்திரமானஸ்திதியை யான் காணேன்; சஞ்சலமுடைமையால். (௩௩)

चंचलं हि मनः कृष्ण प्रमाथि बलवद्दृढम् ।
तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम् ॥ ३४ ॥

[உகஎ] கிருஷ்ணமூர்த்தியே! எதனால் மனம் சஞ்சலமா

னதும், கடைதற்சுபாவமுடைய(கலக்குவ)தும், வலியுடைய தும், திடமானதுமாயு மிருக்கின்றதோ, அதனால் அதன் நிக் கிரகத்தினை யான் வாயுவின் நிரோதம்போல் மிகவரிதிற் செ ய்யக்கூடியதெ (மிகஅசாத்தியமெ)ன்று கருதுகின்றேன். ()

॥ श्रीभगवानुवाच ॥
असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम् ।
अभ्यासेन तु कौंतेय वैराग्येण च गृह्यते ॥ ३५ ॥

[உசு அ] ஸ்ரீபகவான்சொல்லலாயினர்:-மகாபாகுவே! மன து அடக்குதற்கரியதும் சஞ்சலசுபாவமுடையதுமா மென்பதி ற் சம்சயமில்லை. ஆனால் குந்திபுத்திரா! அப்பியாசத்தினலும்

வைராக்கியத்தினாலும் கிரகிக்க (நிரோதிக்க)ப்படுகின்றது. ()

असंयतात्मना योगो दुष्प्राप इति मे मतिः ।
वश्यात्मना तु यतता शक्योऽवाप्तुमुपायतः ॥ ३६ ॥

[உகாக] அடக்கப்படாத மனதுடையவனால் யோகம் அடை தற்கரியதென்பது என் அபிப்பிராயம். ஆனால் முயற்சியுடைய வசப்பட்ட மனதுடையவனால் (அப்பியாசவைராக்யவடிவ) உபாயத்தினால் அடையக்கூடியதாம். (ங௬)

॥ अर्जुन उवाच ॥

अयतिः श्रद्धयोपेतो योगाच्चलितमानसः ।
अप्राप्य योगसंसिद्धिं कां गतिं कृष्ण गच्छति ॥ ३७ ॥

[௨௭௦] அர்ஜுனன் சொல்லலாயினன்:—கிருஷ்ணபகவானே ! முயற்சியில்லாதவனும் சிரத்தையோடு கூடியவனுமாய் (யாதேனுமோர் பிரதிபந்தத்தால்) யோகத்தினின்றும் நழுவிய மனதுடையவன் யோகத்தின் செவ்வையான சித்தியை அடையாதபோது என்னகதியை யடைகிறன் ? (௩௭)

कच्चिन्नोभयविभ्रष्टश्छिन्नाभ्रमिव नश्यति ।
अप्रतिष्ठो महाबाहो विमूढो ब्रह्मणः पथि ॥ ३८ ॥

[௨௭௧] மகாபாகுவே ! பிரஹ்மத்தினது மார்க்க (பிரஹ்மமடைவிக்கும் ஞான) த்தில் விமூடன் (விசேஷ அறிவில்லாத

வன்) நிலையில்லாதவனாய், (ஞானம் யோகம்) இரண்டினின்றும் நழுவினவனாய்ச் சிதைபட்ட மேகம்போல் நாசத்தை யடைய மாட்டானா ? என்னை ? (௩அ)

एतन्मे संशयं कृष्ण छेत्तुमर्हस्यशेषतः ।
त्वदन्यः संशयस्यास्य छेत्ता नह्युपपद्यते ॥ ३९ ॥

[உஎஉ] கிருஷ்ணபகவானே! (தாம்) எனக்கு இச்சம்சயத்தினை அடியோடு சேதித்தற்குரியவராகின்றீர். எதனாலெனின், தம்மின்வேறானவர் (ஒருவர்) இச்சம்சயத்தை யொழிப்பவராகச் சம்பவிப்பதில்லை. (௩௯)

॥ श्रीभगवानुवाच ॥

पार्थ नैवेह नामुत्र विनाशस्तस्य विद्यते ।
नहि कल्याणकृत्कश्चिद्दुर्गतिं तात गच्छति ॥ ४० ॥

[உஎ௲] ஸ்ரீபகவான் சொல்லலாயினார்:–பார்த்த! அவனுக்கு விநாசம் இவ்விடத்திலேயேயில்லை. பரத்திலு(மறுமையிலு)மில்லை. எதனாலெனின், அப்பா! கல்லியாண (சுப)த்தைச் செய்கின்ற எவனும் துர்க்கதியை அடைகிறதில்லை. (௪௦)

प्राप्य पुण्यकृतांल्लोकानुषित्वा शाश्वतीः समाः ।
शुचीनां श्रीमतां गेहे योगभ्रष्टोऽभिजायते ॥ ४१ ॥

[உஎ௪] யோகப்பிரஷ்டன் (அசுவமேதாதி) புண்ணியஞ் செய்தவர்களது லோகங்களை அடைந்து, வெகு வருஷங்கள் வசித்துப்பின் சுசியுள்ள ஸ்ரீமான்கள் குலத்தில் பிறக்கின்றான்.

अथवा योगिनामेव कुले भवति धीमताम् ।
एतद्धि दुर्लभतरं लोके जन्म यदीदृशम् ॥ ४२ ॥

[உஎ௫] அல்லது அறிவுள்ள யோகிகளின் குலத்திலேயே உண்டாகின்றான். எதனாலெனின், இப்படிப்பட்ட ஜன்மம் எதுவோ இது உலகத்தில் அடைதற்கரியதினும் அடைதற்கரியதாம். (௪௨)

तत्र तं बुद्धिसंयोगं लभते पौर्वदेहिकम् ।
यतते च ततो भूयः संसिद्धौ कुरुनंदन ॥ ४३ ॥

[உஎசு] குருநந்தனா! அங்கு முன்(யோகப்ரஷ்ட)சரீரத்தினதாகிய அந்த ஞானத்தின் சையோகத்தை யடைகிறான். அதன் பின் நற்சித்தியில் (மோக்ஷவிஷயத்தில்) மிகுதியாக முயலுகிறான். (சுரு)

पूर्वाभ्यासेन तेनैव ह्रियते ह्यवशोऽपि सः ।
जिज्ञासुरपि योगस्य शब्दब्रह्मातिवर्तते ॥ ४४ ॥

[உஎஎ] அவன் வசமில்லாத (விரும்பாத) வனாயினும், அந்த முந்திய அப்பியாசத்தினாலேயே இழுக்கப்படுகின்றான்.

எதனாலெனின், யோக (ஞானசாதன) த்தினை அறிய விரும்புவோனும் சப்தப்பிரஹ்ம(கர்மப்பிரதிபாதகவேத)த்தினை அதிக்கிரமித்து நடக்கின்றான். (சச)

प्रयत्नाद्यतमानस्तु योगी संशुद्धकिल्बिषः।
अनेकजन्मसंसिद्धस्ततो याति परां गतिम् ॥ ४५ ॥

[உஎஅ] முயற்சியினால் அப்பியசிக்கின்ற யோகியோ செவ்வையாய்ப் பாபங்களினின்றும் சோதிக்கப்பட்டவனாய் அநேக ஜன்மங்களால் நல்ல சித்தியை (ஞானத்தை)ப் பெற்றவனாய் அதன் பின் பரகதியை அடைகின்றான். (சரு)

तपस्विभ्योऽधिको योगी ज्ञानिभ्योऽपि मतोऽधिकः ।
कर्मिभ्यश्चाधिको योगी तस्माद्योगी भवार्जुन ॥ ४६ ॥

[உசகூ] யோகி (ஞானசம்பன்னன்) தபசிகளினும் அதிகனுக மதிக்கப்படுகின்றான்; (பரோக்ஷ) ஞானிகளினும் அதிகன். யோகி கர்மயோகிகளினும் அதிகன். ஆதலால் அர்ஜுனா! யோகியாகக்கடவாய். (சகூ)

योगिनामपि सर्वेषां मद्गतेनांतरात्मना ।
श्रद्धावान्भजते यो मां स मे युक्ततमो मतः ॥ ४७ ॥

[உசஎ] எந்தச்சிரத்தையுடையவன் என்னிடத்து நிலைத்துள்ள மனதினால் என்னைப் பஜிக்கின்றானோ, அவன் (மற்றதே

வதா தியானிகளான) எல்லா யோகிகளுள்ளும் மிகச்சிரேஷ்ட னென்பது என் அபிப்பிராயம். (சஎ)

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु
श्रीकृष्णार्जुनसंवादे
षष्ठोऽध्यायः

இவ்வாறு ஸ்ரீபகவத்கீதையாகிய உபநிஷத்தில்
ஸ்ரீகிருஷ்ணார்ஜுனசம்வாதத்தில்
ஆறும் அத்தியாயம் முடிந்தது.

इति प्रथमं कर्मषट्कं समाप्तम् ॥
இவ்வாறு முதல் கர்மஷட்கம் முடிந்தது.

|| सप्तमोऽध्यायः ||

ஏழாம் அத்தியாயம்.

|| ज्ञानविज्ञानयोगः ||

ஞானவிஞ்ஞானயோகம்.

|| श्रीभगवानुवाच ||

मय्यासक्तमनाः पार्थ योगं युंजन्मदाश्रयः ।
असंशयं समग्रं मां यथा ज्ञास्यसि तच्छृणु ॥ १ ॥

[உ-அக] ஸ்ரீபகவான் சொல்லலாயினார்:-பார்த்த! என்னிடத்தில்பற்றிய மனதுடையவன் என்னாசிரயமுள்ளவனாய் யோ

கத்திற் (மனசமாதானத்தைப்) பொருந்தி என்னை முழுவதும் சம்சயமின்றியதாக எவ்வாறு அறிவாயோ அதனைக்கேள். (க)

ज्ञानं तेऽहं सविज्ञानमिदं वक्ष्याम्यशेषतः ।
यज्ज्ञात्वा नेह भूयोऽन्यज्ज्ञातव्यमवशिष्यते ॥ २॥

[உ-அ-உ] எதனை அறிந்து இவ்வுலகத்தில் மறுபடியும் அறியத்தக்கது வேறு மிஞ்சுகிறதில்லையோ, அவ்விந்த விஞ்ஞானத்தோடுகூடிய ஞானத்தினை யான் உனக்கு முழுவதுமாகச் சொல்லுகிறேன். (உ)

मनुष्याणां सहस्रेषु कश्चिद्यतति सिद्धये ।
यततामपि सिद्धानां कश्चिन्मां वेत्ति तत्त्वतः ॥ ३ ॥

[உ-அரு] மனிதர்களின் (எத்தனையோ) ஆயிரங்களுள் ஒருவன் சித்தியின்பொருட்டு முயலுகிறான். முயன்ற சித்தர்களுள்ளும் (எவனோ) ஒருவன் என்னை உண்மையாக அறிகின்றான்.

भूमिरापोऽनलो वायुः खं मनो बुद्धिरेव च ।
अहंकार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा ॥ ४ ॥

[உ-அச] பிருதிவி, அப்பு, அக்கினி, வாயு, ஆகாசம், மனது, புத்தி, அகங்காரம் என்று என்னுடைய இந்தப் பிரகிருதி எண்வகையாக வேறுபட்டுளது. (ச)

अपरेयमितस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम् ।
जीवभूतां महाबाहो ययेदं धार्यते जगत् ॥ ५ ॥

[உ௮௫] மகாபாகுவே! இது அபரா (தாழ்ந்த) பிரகிருதி. எதனால் இந்த ஜகத்து தரிக்கப்படுகின்றதோ, அதனை இதனின் வேறானதான ஜீவஸ்வரூபமாகிய எனது பரா (மேலான) பிரகிருதியென்று அறிக. (௫)

एतद्योनीनि भूतानि सर्वाणीत्युपधारय ।
अहं कृत्स्नस्य जगतः प्रभवः प्रलयस्तथा ॥ ६ ॥

[உ௮௬] எல்லாப்பூதங்களும் (அபரா பராவெனும்) இவ்விரண்டனையும் காரணமாகவுடையன என்று நிச்சயஞ்செய்க. யான் எல்லர்ஜகத்திற்கும் (பிரகிருதிகள் இரண்டன்வாயிலாக) உற்பத்தியும் அப்படியே பிரளயமுமாயிருக்கிறேன். (௬)

मत्तः परतरं नान्यत्किंचिदस्ति धनंजय ।
मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव ॥ ७ ॥

[உ-அஎ] தனஞ்சயா! எனக்கு வேறாக எதுவும் மிக மேலானதா (சுவதந்திரகாரணமா) யில்லை. சூத்திரத்தில் மணிகணங்களைப்போல என்னிடத்தில் இவ்வெல்லாம் கோக்கப்பட்டிருக்கின்றது. (எ)

रसोऽहमप्सु कौंतेय प्रभाऽस्मि शशिसूर्ययोः ।
प्रणवः सर्ववेदेषु शब्दः खे पौरुषं नृषु ॥ ८ ॥

[உ-அஅ] கௌந்தேயா! ஜலங்களில் இரஸம் யான். சந்திர சூரியர்களிடத்துள்ள பிரபை யான். ஸர்வவேதங்களிலும் பிர

ணவம் யான். ஆகாசத்தில் சப்தம் யான். நரர்களில் புருஷத்
தன்மை யான். (அ)

पुण्यो गंधः पृथिव्यां च तेजश्चास्मि विभावसौ ।
जीवनं सर्वभूतेषु तपश्चास्मि तपस्विषु ॥ ९ ॥

[உஅகூ] பிருதிவியில் புண்ணியமான (நல்ல) கந்தமாயிருக்
கிறேன். அக்கினியில் தேஜசு (ஒளி) யான். சர்வபூதங்களிலும்
ஜீவனம் யான். தவசிகளில் தவம் யான். (கூ)

बीजं मां सर्वभूतानां विद्धि पार्थ सनातनम् ।
बुद्धिर्बुद्धिमतामस्मि तेजस्तेजस्विनामहम् ॥ १० ॥

[உ௯0] பார்த்த! பழைமையான என்னை எல்லாப்பூதங்களுக்கும் வித்தென்றறி. புத்திமான்களிடத்துப் புத்தி யான். தேஜசுள்ளவர்களில் தேஜசு (பராக்கிரமம்) யான். (௧0)

बलं बलवतामस्मि कामरागविवर्जितम्।
धर्माविरुद्धो भूतेषु कामोऽस्मि भरतर्षभ ॥ ११ ॥

[உ௯௧] பரதசிரேஷ்டனே! பலமுள்ளவர்களிடத்துள்ள காமராகங்களின்றிய பலம் (வலி) யான். பூதங்களிடத்துள்ள தர்மவிரோதமின்றிய காமம் யான். (௧௧)

ये चैव सात्विका भावा राजसास्तामसाश्च ये।
मत्त एवेति तान्विद्धि न त्वहं तेषु ते मयि ॥ १२ ॥

[உகூஉ] எவைகள் சாத்துவிகமும், எவை இராஜஸமும் தாமஸமுமான பதார்த்தங்களாயிருக்கின்றனவோ, அவற்றை என்னிடத்திருந்தே உண்டாயினவென்று அறி. ஆனால் யான் அவற்றில் இல்லை. அவை என்னிடத்திருக்கின்றன. (கஉ)

त्रिभिर्गुणमयैर्भावैरेभिः सर्वमिदं जगत् ।
मोहितं नाभिजानाति मामेभ्यः परमव्ययम् ॥ १३ ॥

[உகூ௩] இந்த முக்குணமயமான பதார்த்தங்களால் இவ்வெல்லா ஜகத்தும் மோகிக்கப்பட்டனவாய், இவற்றிற்கு (குணங்கட்கு) மேலான அவ்வியயமாக என்னை அறிகிறதில்லை. (க௩)

दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया ।
मामेव ये प्रपद्यंते मायामेतां तरंति ते ॥ १४ ॥

[உகச] என்னுடைய இந்தக்குணமயமானபிரசித்த தைவீ மாயை கடத்தற்கரியதாம். எவர்கள் என்னையே அடைகின்றார்களோ அவர்கள் இந்த மாயையைக் கடக்கின்றார்கள். (கச)

न मां दुष्कृतिनो मूढाः प्रपद्यंते नराधमाः ।
माययापहृतज्ञाना आसुरं भावमाश्रिताः ॥ १५ ॥

[உகரு] மாயையினால் அபகரிக்கப்பட்ட ஞானமுடையோரும், அசுரத்தன்மையை யாசிரயித்தவர்களும், துஷ்டகர்மஞ்

செய்வோரும், மூடருமான நராதமர்கள் என்னை அறிகிறதில்லை. (கரு)

चतुर्विधा भजंते मां जनाः सुकृतिनोऽर्जुन।
आर्तो जिज्ञासुरर्थार्थी ज्ञानी च भरतर्षभ ॥ १६ ॥

[உகககூ] பரதசிரேஷ்டனே! அர்ஜுனா! ஆர்த்தன் (துக்கபீடிதன்), ஜிஞ்ஞாசு (பகவத்தத்வஞானவிருப்புடையவன்), அர்த்தார்த்தி (பொருளை விரும்பினோன்), ஞானி (தத்துவமுணர்ந்தவன்) என்னும் நால்வகையான புண்ணியவான்களாகிய ஜனங்கள் என்னைப் பஜிக்கின்றார்கள். (ககூ)

तेषां ज्ञानी नित्ययुक्त एकभक्तिर्विशिष्यते ।
प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहं स च मम प्रियः ॥ १७ ॥

[உகஎ] அவர்களுள் நித்தியமும் யோகஞ்செய்பவனும் ஒன்றிலேயேபக்தியுடையவனுமான ஞானிவிசேஷிக்கின்ருன். எதனுலெனின், யான் ஞானிக்கு மிகவும் பிரியமுள்ளவன். அவன் எனக்குப் பிரியமுள்ளவன். (கஎ)

उदाराः सर्व एवैते ज्ञानी त्वात्मैव मे मतम् ।
आस्थितः स हि युक्तात्मा मामेवानुत्तमां गतिम् ॥ १८ ॥

[உகஅ] இவர்கள் யாவரும்மேலானவர்களே. ஆனுல் ஞானி ஆத்மாவே(என்சொரூபமே)என்பது என் அபிப்பிராயம்.

எதனுலெனின், அவன் (என்னிடத்து) ஒருமனமுடையவனுய் சர்வோத்தமகதியான என்னையே எப்புறத்துமாக ஆசிரயித்திருக்கின்ருன். (கஅ)

बहूनां जन्मनामंते ज्ञानवान्मां प्रपद्यते ।
वासुदेवः सर्वमिति स महात्मा सुदुर्लभः ॥ १९ ॥

[உகக] வெகுஜன்மங்களின் முடிவில் எல்லாம் வாசுதேவன் என்னும் ஞானமுடையவன் என்னை அடைகிருன். அந்த மகாத்மா மிகத்துர்லபன் (கிடைத்தற்கரியன்). (கக)

कामैस्तैस्तैर्हृतज्ञानाः प्रपद्यंतेऽन्यदेवताः ।
तं तं नियममास्थाय प्रकृत्या नियताः स्वया ॥ २० ॥

[௩00] அந்தந்தக் காமங்களால் கவரப்பட்ட ஞானமுடையோர் தமது பிரகிருதியினால் பிரேரிக்கப்பட்டவர்களாய் அந்தந்த நியமத்தில் நிலைபெற்றவர்களாய் அந்நிய தேவதைகளையடைகின்றார்கள். (உ0)

यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।
तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहम् ॥ २१ ॥

[௩0க] எந்த எந்தப் பக்தன் எந்த எந்தச் சரீரத்தை (மூர்த்தியை)ச் சிரத்தையோடு அர்ச்சிக்க விரும்புகிறானோ, அவனவனது அந்தச் சிரத்தையினையே அசையாததாக்குகின்றேன்.

स तया श्रद्धया युक्तस्तस्याराधनमीहते ।
लभते च ततः कामान्मयैव विहितान्हि तान् ॥ २२ ॥

[௩௦௨] அவன் அந்தச் சிரத்தையோடுகூடியவனாய் அத்தே வதையின் ஆராதனத்தைவிரும்புகின்றான். அதனிடத்தினின் றும் என்னாலேயே விதிக்கப்பட்ட அக்காமங்களை நிச்சயமாக அடைகின்றான். (உஉ)

अंतवत्तु फलं तेषां तद्भवत्यल्पमेधसाम् ।
देवान्देवयजो यांति मद्भक्ता यांति मामपि ॥ २३ ॥

[௩௦௩] அந்த அற்பஅறிவுடையவர்களுக்கு அந்தப்பலம்

நாசமுடையதாகவே யாகின்றது. தேவாராதனை செய்வோர் தேவர்களை அடைகின்றனர். என் பக்தர்கள் என்னையும் அடைகின்றார்கள். (உ௩)

अव्यक्तं व्यक्तिमापन्नं मन्यंते मामबुद्धयः।
परं भावमजानंतो ममाव्ययमनुत्तमम् ॥ २४ ॥

[௩௦௪] புத்தியீனர் என்னுடைய மேலான அவ்வியயமான இருப்பைச் சர்வோத்தமமென்று அறியாதவர்களாய் அவ்வியக்தமாகிய(வெளிப்படாத)என்னை வியக்தியடைந்தவனாக(மனிதவடிவாக)மதிக்கின்றார்கள். (உ௪)

नाहं प्रकाशः सर्वस्य योगमायासमावृतः ।
मूढोऽयं नाभिजानाति लोको मामजमव्ययम् ॥ २५ ॥

[௩௰௫] யோக(வசமாயிருக்கும் என்று சங்கற்பமாகிய)மாயையினால் மறைத்திருக்கும் யான் எல்லோருக்கும் பிரகாச(தெரிகிறவ)னல்லன். (யோகமாயையினால் மறைக்கப்பட்டுள்ளதாகிய) மூடமான இவ்வுலகு பிறப்பில்லாதவனும் அழிவில்லாதவனுமாகிய என்னைச் செவ்வையாய் அறியாது. (உ௫)

वेदाहं समतीतानि वर्तमानानि चार्जुन ।
भविष्याणि च भूतानि मां तु वेद न कश्चन ॥ २६ ॥

[ருய௬] அர்ஜுநா! யான் கழிந்தனவும் நிகழ்வனவும் வருவனவுமாகிய பூதங்களை அறிவேன். என்னையோ ஒருவனும் அறியான். (உ௬)

इच्छाद्वेषसमुत्थेन द्वंद्वमोहेन भारत ।
सर्वभूतानि संमोहं सर्गे यांति परंतप ॥ २७ ॥

[ருஎ] பாரதா! பரந்தபா! சர்வபூதங்களும் உற்பத்திகாலத்தில் இச்சாத்துவேஷங்களால் செவ்வையாய் எழும்பிய துவந்துவமோகத்தினால் நல்ல மோகத்தை யடைகின்றன. (உஎ)

येषां त्वंतगतं पापं जनानां पुण्यकर्मणाम् ।
ते द्वंद्वमोहनिर्मुक्ता भजंते मां दृढव्रताः ॥ २८ ॥

[௲௦அ] ஆனால் எந்தப் புண்ணியகர்மமுடைய ஜனங்களு டைய பாவம் நாசத்தை யடைந்திருக்கிறதோ, அவர்கள் துவந்துவமோகத்தினின்றும் விடுபட்டவர்களாய்த் திடவிரதமுடையவர்களாய் என்னை உபாசிக்கின்றார்கள். (உஅ)

जरामरणमोक्षाय मामाश्रित्य यतंति ये ।
ते ब्रह्म तद्विदुः कृत्स्नमध्यात्मं कर्म चाखिलम् ॥ २९ ॥

[௩௦௯] எவர்கள் ஜராமரண நீங்குதற்பொருட்டு என்னை ஆசிரயித்து முயலுகின்றார்களோ, அவர்கள் அந்த எல்லாமானபிரஹ்மத்தையும் (சங்காதவடிவ) அத்தியாத்மத்தையும், சகலகர்மங்களையும் அறிவர். (உ௯)

साधिभूताधिदैवं मां साधियज्ञं च ये विदुः।
प्रयाणकालेऽपि च मां ते विदुर्युक्तचेतसः॥ ३०॥

[௩௧௦] எவர்கள் அதிபூத அதிதெய்வங்களோடுகூடியவனும், அதியஞ்ஞத்தோடுகூடியவனுமாகிய என்னை அறிகின்றார்

உ௦

களோ, அந்த என்னிற்பொருந்திய சித்தமுடையோர் பிரயாண(மரண)காலத்திலும் என்னை அறிகின்றார்கள். (௩௰)

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु
श्रीकृष्णार्जुनसंवादे
सप्तमोऽध्यायः

இவ்வாறு ஸ்ரீபகவத்கீதையாகிய உபநிஷத்தில்
ஸ்ரீகிருஷ்ணார்ஜுனசம்வாதத்தில்
ஏழாம் அத்தியாயம் முடிந்தது.

॥ अष्टमोऽध्यायः ॥

எட்டாம் அத்தியாயம்.

॥ अक्षर(पर)ब्रह्मयोगः ॥

அக்ஷரப்(பர)பிரஹ்மயோகம்.

॥ अर्जुन उवाच ॥

किं तद्ब्रह्म किमध्यात्मं किं कर्म पुरुषोत्तम ।
अधिभूतं च किं प्रोक्तमधिदैवं किमुच्यते ॥ १ ॥

[நகக] அர்ஜுனன் சொல்லலுற்றான்:--புருஷோத்தமரே! அந்தப்பிரஹ்மம் என்பது யாது? அத்தியாத்மம் என்பது யாது? கர்மம் என்பது யாது? அதிபூதம் என்பது யாது? அதிதெய்வம் என்ன என்று சொல்லப்படுகின்றது. (க)

अधियज्ञः कथं कोऽत्र देहेऽस्मिन्मधुसूदन ।
प्रयाणकाले च कथं ज्ञेयोऽसि नियतात्मभिः ॥ २ ॥

[நகஉ] மதுசூதனா! இங்கு(இத்தேகத்தில்) அதியஞ்ஞமென்பது யாது? இத்தேகத்தில் எப்படி இருக்கிறது? பிரயாண (மரண)காலத்தில் அடக்கப்பட்ட மனதுடையவர்களால் எப்படி அறியத்தக்கவராயிருக்கின்றீர்? (உ)

॥ श्रीभगवानुवाच ॥

अक्षरं ब्रह्म परमं स्वभावोऽध्यात्ममुच्यते ।
भूतभावोद्भवकरो विसर्गः कर्मसंज्ञितः ॥ ३ ॥

[ருகரு] ஸ்ரீ பகவான் சொல்லலாயினார்:-(ஓங்காரம் அவ்யக்தமெனும் இரண்டின்) மேலான அக்ஷரம் பிரஹ்மம் எனப்படுகின்றது. சுவபாவம் (பிரஹ்மமாகிய் தனது இருப்பு) அத்தியாத்மமாம். பூதவஸ்துவை (ஜீவர்களின் இருப்பை) உண்டுபண்ணுவதான விசர்க்கம் (அக்கினியில் ஹோமத்திரவியம் போடுதலாகிய யஞ்ஞம்) கர்மமென்னும் பெயருடையதாம்.

[அத்தியாத்மம் = ஆத்மாவாகிய தேகமிரண்டனையும் போக்திருபோகாயதனத்தன்மையானது அதிகரித்து இருப்பது.] ()

अधिभूतं क्षरो भावः पुरुषश्चाधिदैवतम् ।
अधियज्ञोऽहमेवात्र देहे देहभृतां वर ॥ ४ ॥

[ங்கச] தேகந்தாங்கியவருட்சிரேஷ்டனே! க்ஷரமாகியபாவம் (அழிபொருள் = காரியமாகிய விராட்டு) அதிபூதமாம். புருஷன் (பூர்ணனை இரணியகர்பன்) அதிதெய்வமாம். இங்குத்தேகசமூகத்தில் (விஷ்ணுவாகிய) யானே அதியஞ்ஞுமாம். [அதிபூதம் = பிருதிவியாதிகளும் பிராணிமாத்திரங்களுமான பூத

த்தினை அதிகரித்திருப்பது. அதிதெய்வம்=சூரியன் முதலிய தேவதைகளை அதிகரித்து கண்முதலிய இந்திரியங்களை அநுக்கிரகிப்பது. அதியஞ்ஞும்=யஞ்ஞத்தின் அதிஷ்டாதாவும் பலதாதாவும் அபிமானியும்.] (௪)

अंतकाले च मामेव स्मरन्मुक्त्वा कलेवरम् ।
यः प्रयाति स मद्भावं याति नास्त्यत्र संशयः ॥ ५ ॥

[ரு.கரு] எவன் கடைசிக்காலத்திலும் என்னையே நினைத்துக்கொண்டு சரீரத்தைவிட்டுச் செல்லுகின்றானோ, அவன் எனது தன்மையை(என் ஸ்வரூபத்தை) அடைகிறான். இதிற்சம்சயமில்லை. (ரு)

यं यं वापि स्मरन्भावं त्यजत्यंते कलेवरम् ।
तं तमेवैति कौंतेय सदा तद्भावभावितः ॥ ६ ॥

[ந-கசு] கௌந்தேய! எப்பொழுதும் அப்பாவம் பாவிக்கப்பட்டவன் (அவ்விஷ்டதேவதையின் சொரூபத்தில் அல்லது வேறொன்றில் திடபாவனையினுலாகிய வாசனையோடுகூடியவன்) கடைசியில் (முந்திய பழக்கமுதிர்ச்சியால்) எந்த எந்த பாவத்தை (வஸ்துவை) ஸ்மரித்துக்கொண்டு சரீரத்தை விடுகிருனோ, அந்தந்த பாவத்தையே அடைகின்றுன். (சு)

तस्मात्सर्वेषु कालेषु मामनुस्मर युद्ध्य च ।
मय्यर्पितमनोबुद्धिर्मामेवैष्यस्यसंशयम् ॥ ७ ॥

[௫கள] அதனால் எல்லாக்காலங்களிலும் என்னை நினை. யுத்தஞ்செய். என்னிடத்தில் அர்ப்பணஞ்செய்யப்பட்ட மனோபுத்திகளை யுடையவனாய் என்னையே அடைவாய். (இது) சம்சயமின்றியதாம். (எ)

अभ्यासयोगयुक्तेन चेतसा नान्यगामिना ।
परमं पुरुषं दिव्यं याति पार्थानुचिंतयन् ॥ ८ ॥

[௫கஅ] பார்த்த! அப்பியாச (இடையின்றிப் பழகுதலாகிய) யோகத்தினால் அடங்கியதும் வேறொன்றிற்செல்லாததுமான சித்தத்தினால் தொடர்ந்து சிந்திக்கின்றவனாய் மேலான திவ்யபுருஷனை அடைகின்றான். (அ)

कविं पुराणमनुशासितारमणोरणीयांसमनुस्मरेद्यः ।
सर्वस्य धातारमचिंत्यरूपमादित्यवर्णं तमसः परस्तात् ॥ ९ ॥

[ரு-கக] எவன் கவியும் (சர்வஞ்ஞனும்), பழைமையானவனும், ஆஞேவோனும், (பெரிதிற்கெல்லாம் பெரிதாயிருந்தும்) அணுவிற்கணுவாயுள்ளவனும், எல்லாவற்றையுந்தரித்துள்ளவனும், சிந்திக்கக்கூடாதவடிவினனும், ஆதித்திய நிறத்தின (சூரியனைப்போல் தன்னையும் பிரஹ்மாண்டத்தினையும் விளக்கும் சொப்பிரகாச)னும், அஞ்ஞானவிருளிற்கப்பாற்பட்டவனுமாயுள்ள அவனைத் தொடர்ந்து சிந்திக்கின்றானோ, (கூ)

प्रयाणकाले मनसाऽचलेन भक्त्या युतो योगबलेन चैव ।
भ्रुवोर्मध्ये प्राणमावेश्य सम्यक् स तं परं पुरुषमुपैति दिव्यम् ॥ १० ॥

[௯.௨.௦] அவன் பக்தியோடும் (கரணங்களை யடக்குதலாகிய) யோகபலத்தோடும் கூடியவனாகவே பிரயாண (கடைசிக்) காலத்தில் புருவநடுவில் பிராணனைச் செவ்வையாய் பிரவேசிக்கச்செய்து அசைவின்றிய மனதினால் அந்தத்திவ்ய(சொப்பிரகாச)பரமபுருஷனை அடைகின்றான். (௧௦)

यदक्षरं वेदविदो वदंति विशंति यद्यतयो वीतरागाः ।
यदिच्छंतो ब्रह्मचर्यं चरंति तत्ते पदं संग्रहेण प्रवक्ष्ये ॥ ११ ॥

[ரூ௨௧] வேதமுணர்ந்தவர் எந்த அக்ஷரத்தினை உபதேசிக்கின்றனரோ, இராகமொழிந்த யதிகள் எதிற்பிரவேசிக்கின்றார்களோ, எதனை (அறிய) விரும்பியவர்களாய்ப் பிரஹ்மசரியத்தினை ஆசரிக்கின்றார்களோ, அந்தப்பதத்தினை உனக்குச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். (௧௧)

सर्वद्वाराणि संयम्य मनो हृदि निरुध्य च ।
मूर्ध्न्याधायात्मनः प्राणमास्थितो योगधारणाम् ॥ १२ ॥

[ரூ௨௨] எவன் எல்லாத் துவாரங்களையும் தடுத்து மனதை இருதயத்தில் நிரோதித்துப் பிராணனை உச்சியில்வைத்து ஆத்மாவின் யோகதாரணையில் நிலைத்தவனாய், (௧௨)

ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन्मामनुस्मरन् ।
यः प्रयाति त्यजन्देहं स याति परमां गतिम् ॥ १३ ॥

[௩௨௩] எவன் ஓம் என்று ஏகாக்ஷரமான மந்திரத்தினை உச்சரித்துக்கொண்டு என்னையிடைவிடாது சிந்திக்கின்றவனாய்த் தேகத்தைவிட்டுச் செல்லுகின்றானோ, அவன் பரமமான கதியை அடைகின்றான். (௧௩)

अनन्यचेताः सततं यो मां स्मरति नित्यशः ।
तस्याहं सुलभः पार्थ नित्ययुक्तस्य योगिनः ॥ १४ ॥

[௩௨௪] பார்த்தா! எவன்வேறுசித்தமில்லாதவனாய் இடைவிடாது எப்போதும் என்னை நினைக்கின்றானோ, அந்த எப்போ

தும் சிந்திக்கும் யோகிக்கு யான் சுலபன் (எளிதிற்பெறற்குரியவன்). (கச)

मामुपेत्य पुनर्जन्म दुःखालयमशाश्वतम् ।
नाप्नुवंति महात्मानः संसिद्धिं परमां गताः ॥ १५ ॥

[கூஉ௫] என்னை அடைந்து மேலான நற்சித்தி(முத்தி)யை அடைந்த மகாத்துமாக்கள் மறுபடியும் துக்காலயமும் சாசுவதமல்லாததுமான பிறப்பினை அடையார்கள். (க௫)

आब्रह्मभुवनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन ।
मामुपेत्य तु कौंतेय पुनर्जन्म न विद्यते ॥ १६ ॥

[௩-உ-கா] அர்ஜுனா! பிரஹ்மலோகத்தொடக்கமான லோகங்கள் மறுபடியும் திரும்பிவரும் இயல்பினவாம். குந்திபுத்திரா! என்னை அடைந்தோ (அடைவதனால் அவர்கட்கு) மறுபடியும் பிறப்பது இருப்பதில்லை. (கசா)

सहस्रयुगपर्यंतमहर्यद्ब्रह्मणो विदुः ।
रात्रिं युगसहस्रां तां तेऽहोरात्रविदो जनाः ॥ १७ ॥

[௩-உ-எ] எவர்கள் ஆயிரயுகபரியந்தமான பிரஹ்மாவின் பகலையும், ஆயிரயுகபரியந்தமான இராத்திரியையும் அறிகின்றார்களோ, அந்த ஜனங்கள் இராப்பகலுணர்ந்தவராவர். (கஎ)

अव्यक्ताद्व्यक्तयः सर्वाः प्रभवंत्यहरागमे ।
रात्र्यागमे प्रलीयंते तत्रैवाव्यक्तसंज्ञके ॥ १८ ॥

[௲உஅ] பகல் வரும்போது அவ்வியக்தத்தினின்றும் சகல வியக்தி(வடிவங்)களும் உண்டாகின்றன. இரவு வரும்போது அங்கு அவ்வியக்தமென்னும் பெயருடைய அதன் கண்ணே யே ஒடுங்குகின்றன. (கஅ)

भूतग्रामः स एवायं भूत्वा भूत्वा प्रलीयते ।
रात्र्यागमेऽवशः पार्थ प्रभवत्यहरागमे ॥ १९ ॥

[௲உக] பார்த்த! அதே இந்தப்பூதக்கிராமம்(ஜீவசமூகம்)வசமில்லா (அவித்தியாகாமகர்மங்களின்வசத்)ததாய்(பிரஹ்மா

வின்)பகல்வரும்போது உண்டாகி உண்டாகி, இரவுவருங்கால் ஒடுங்குகின்றது. (மறுபடியும் பகல்வரும்பொழுது) வெளிப்படுகின்றது. (௧௯)

परस्तस्मात्तु भावोऽन्यो व्यक्तोऽव्यक्तात्सनातनः ।
यः स सर्वेषु भूतेषु नश्यत्सु न विनश्यति ॥ २० ॥

[௲௨௦] எது பாவமோ (பாமார்த்த இருப்போ), அந்த (மாயாரூப) அவ்வியக்தத்தினினும் மேலான வேறு அவ்வியக்தமாகிய சநாதனமோ (அநாதியோ), அது எல்லாப்பூதங்களும் நசிக்குங்காலத்தும் நசிக்கிறதில்லை. (௨௦)

अव्यक्तोऽक्षर इत्युक्तस्तमाहुः परमां गतिम् ।
यं प्राप्य न निवर्तंते तद्धाम परमं मम ॥ २१ ॥

[௬௬௧] அவ்வியக்தம் (இந்திரியாதிகட்கு விஷயமாகாத பரமாத்மா) அக்ஷரமென்று சொல்லப்பட்டுளது. அதனைப் பரமகதியென்று கூறுவர். எதனை அடைந்து நிவிருத்தியாகா(திரும்பா)ர்களோ அது என்னுடைய மேலான தாம(நிஜசொரூப)மாம். (உ௧)

पुरुषः स परः पार्थ भक्त्या लभ्यस्त्वनन्यया ।
यस्यांतःस्थानि भूतानि येन सर्वमिदं ततम् ॥ २२ ॥

[௩௩உ] பார்த்த! எவனுக்குப் பூதங்கள் உள்ளிருப்பனவாகின்றனவோ, எவனால் இவ்வெல்லாம்வியாபிக்கப்பட்டுளவோ, அந்தப் பரமபுருஷன் வேற்றுமையில்லாத பக்தியினாலேயே அடையத்தக்கவனாவன். (உஉ)

यत्र काले त्वनावृत्तिमावृत्तिं चैव योगिनः।
प्रयाता यांति तं कालं वक्ष्यामि भरतर्षभ ॥ २३ ॥

[௩௩௩] பாரதசிரேஷ்டனே! எந்தக்காலத்தில் (எக்காலாபிமானி தேவதையோடுகூடிய மார்க்கத்தில்) தேகத்தைவிட்டுச் சென்ற யோகிகள் திரும்பிவராமையையும் திரும்பிவருதலையும் அடையவே செய்கின்றார்களோ அந்தக்காலத்தைச் சொல்லுகிறேன். (உ௩)

अग्निर्ज्योतिरहः शुक्लः षण्मासा उत्तरायणम् ।
तत्र प्रयाता गच्छंति ब्रह्म ब्रह्मविदो जनाः ॥ २४ ॥

[௩௩௪] ஜோதி(மயமான)அக்கினி(யபிமானிதேவதை), பகல்(அபிமானிதேவதை), சுக்கிலம் (சுக்கிலபக்ஷாபிமானிதேவதை), ஆறுமாதவளவுள்ள உத்தராயணம்(அபிமானிதேவதை) என்னும் அதில் தேகத்தைவிட்டுசென்ற பிரஹ்மவித்துக்களாகிய ஜனங்கள் பிரஹ்மத்தை அடைகின்றார்கள். (உச)

धूमो रात्रिस्तथा कृष्णः षण्मासा दक्षिणायनम् ।
तत्र चांद्रमसं ज्योतिर्योगी प्राप्य निवर्तते ॥ २५ ॥

[௲௲௫] தூமம் (புகையபிமானிதேவதை) இராத்திரி (இரவின் அபிமானிதேவதை) அப்படியே கிருஷ்ணம் (கிருஷ்ணபக்ஷாபிமானிதேவதை) ஆறுமாதஅளவுள்ள தக்ஷிணாயனம் (தக்ஷிணாயனாபிமானதேவதை) என்னும் அதில் (சென்ற) யோகி சந்திரலோகசம்பந்தியான ஜோதியை அடைந்து நீங்குகின்றான். (உ௫)

शुक्लकृष्णे गती ह्येते जगतः शाश्वते मते ।
एकया यात्यनावृत्तिमन्ययाऽऽवर्तते पुनः ॥ २६ ॥

[௲௲௬] பிரசித்த சுக்கிலகிருஷ்ணங்களான இவ்விரண்டுகதிகளும் ஜகத்திற்குச் சாசுவதமானவையென்று மதிக்கப்பட்

டிருக்கின்றன. ஒன்றினால் திரும்பிவராமையை அடைகின்றா ன். மற்றதனால் மறுபடியும் திரும்புகிறான். (உ௬)

नैते सृती पार्थ जानन् योगी मुह्यति कश्चन ।
तस्मात्सर्वेषु कालेषु योगयुक्तो भवार्जुन ॥ २७ ॥

[௨௭] பார்த்த! இவ்விரண்டுமார்க்கங்களையும் அறிகின்ற எந்த யோகியும் மோகியான். ஆதலால் அர்ஜுனா! எல்லாக்கா லங்களிலும் யோகத்தோடு கூடியவனாவாய், (உ௭)

वेदेषु यज्ञेषु तपःसु चैव दानेषु यत्पुण्यफलं प्रदिष्टम् ।
अत्येति तत्सर्वमिदं विदित्वा योगी परं स्थानमुपैति चाद्यम् ॥२८॥

[௨௮] வேதங்களிலும், யஞ்ஞங்களிலும், தவசுகளிலும்,

தானங்களிலுமே எந்தப்புண்ணியபலன் சொல்லப்பட்டிருக்கின்றதோ, அந்த இவ்வெல்லாவற்றையும் அறிந்து யோகிகடக்கின்றான்; மேலான முதன்மையதாகிய ஸ்தானத்தையும் அடைகிறான். (உ௮)

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु
श्रीकृष्णार्जुनसंवादे
अष्टमोऽध्यायः

இவ்வாறு ஸ்ரீபகவத்கீதையாகிய உபநிஷத்தில்
ஸ்ரீகிருஷ்ணார்ஜுனசம்வாதத்தில்
எட்டாம் அத்தியாயம் முடிந்தது.

॥ नवमोऽध्यायः ॥

ஒன்பதாம் அத்தியாயம்.

॥ राजविद्याराजगुह्ययोगः ॥

இராஜவித்யாராஜகுஹ்யயோகம்.

॥ श्रीभगवानुवाच ॥

इदं तु ते गुह्यतमं प्रवक्ष्याम्यनसूयवे ।
ज्ञानं विज्ञानसहितं यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ॥ १ ॥

[௬௬௯] ஸ்ரீபகவான் சொல்லலாயினார்:—எதனையறிந்து அசுபத்தினின்று விடுபடுவாயோ(அப்படிப்பட்ட)இந்தமிகாகசியமும், விஞ்ஞானத்தோடுகூடியதுமான ஞானத்தினை அசூயையின்றிய உனக்குச் சொல்லுவேன். (க)

राजविद्या राजगुह्यं पवित्रमिदमुत्तमम् ।
प्रत्यक्षावगमं धर्म्यं सुसुखं कर्तुमव्ययम् ॥ २ ॥

[௬௭௦] இது இராஜவித்தையும் (வித்தைகளுட்சிறந்ததும்) இராஜரகசியமு (இரகசியங்களுட்சிறந்தது)மான உத்தமமாம்; பவித்திரமாம்(புனிதமாக்குவதாம்). பிரத்தியக்ஷமாயறிவதும்,

தர்மத்தோடுகூடியதும், செய்தற்கெளியதும், அவ்வியயமு (அழிவின்றியது)மாம். (உ)

अश्रद्दधानाः पुरुषा धर्मस्यास्य परंतप ।
अप्राप्य मां निवर्तन्ते मृत्युसंसारवर्त्मनि ॥ ३ ॥

[௩-சக] பரந்தப! இந்தத் தர்மத்தின் சிரத்தையில்லாத புருஷர்கள் என்னையடையாது மரணமயமான சம்ஸாரமார்க்கத்தில் செல்லுகின்றார்கள். (௩)

मया ततमिदं सर्वं जगदव्यक्तमूर्तिना ।
मत्स्थानि सर्वभूतानि न चाहं तेष्ववस्थितः ॥ ४ ॥

[௩௬௨] அவ்வியக்தமூர்த்தியாகிய (வெளிப்படாதவடிவமுள்ள) என்னால் இவ்வெல்லா ஜகத்தும் வியாபிக்கப்பட்டிருக்கின்றது. எல்லாப்பூதங்களும் என்னிடத்திருப்பனவாம். யான் அவற்றின்கண் இருப்பவனல்லன். (௪)

न च मत्स्थानि भूतानि पश्य मे योगमैश्वरम् ।
भूतभृन्न च भूतस्थो ममात्मा भूतभावनः ॥ ५ ॥

[௩௬௩] பூதங்கள் என்னிடத்திருப்பனவன்று. எனதுஈசுவரசம்பந்தியோகத்தினைப்பார். என் ஆத்மா (சொரூபம்) பூதங்களைத் தாங்குவதும், பூதங்களை யுண்டுபண்ணுவதுமாம்; பூதங்களிலிருப்பதன்று. (௫)

यथाऽऽकाशस्थितो नित्यं वायुः सर्वत्रगो महान्।
तथा सर्वाणि भूतानि मत्स्थानीत्युपधारय ॥ ६ ॥

[ஙசச] எங்குஞ்செல்லுவதான பெருத்தவாயு எப்படி எப்பொழுதும் ஆகாயத்தில் (அசங்கமாய்) இருப்பதாகின்றதோ, அப்படியே சகலபூதங்களும் என்னிடத்திருப்பனவாகின்றன என்று நிச்சயஞ்செய். (சு)

सर्वभूतानि कौंतेय प्रकृतिं यांति मामिकाम्।
कल्पक्षये पुनस्तानि कल्पादौ विसृजाम्यहम् ॥ ७ ॥

[ஙசரு] கௌந்தேயா! கற்பக்ஷய (மகாப்பிரளய) த்தில் சர்வ

பூதங்களும்எனது (அபரா) பிரகிருதியை அடைகிருர்கள். மறுபடியும் கற்பத்தின் ஆதியில் யான் அவற்றைவிசேஷமாய் சிருஷ்டிக்கிறேன். (எ)

प्रकृतिं स्वामवष्टभ्य विसृजामि पुनः पुनः।
भूतग्राममिमं कृत्स्नमवशं प्रकृतेर्वशात् ॥ ८ ॥

[ரு-சரு] (யான்) எனது (மாயாரூப அபரா) பிரகிருதியை ஆசிரயித்து (பூர்வ அதிருஷ்டமும் வாசனுமயமுமான) பிரகிருதியின் வசத்தால் வசமில்லாத இவ்வெல்லாப்பூதசமூகங்களையும் மறுபடியும் மறுபடியும் நாநாவாகப் படைக்கின்றேன். (அ)

न च मां तानि कर्माणि निबध्नंति धनंजय ।
उदासीनवदासीनमसक्तं तेषु कर्मसु ॥ ९ ॥

[௩-௩எ] தனஞ்சய! விருப்புவெருப்பில்லாதவனைப்போலிருப்பவனும், அக்கர்மங்களில்பற்றில்லாதவனுமாகிய என்னை அக்கர்மங்கள் கட்டுவதில்லை. (௯)

मयाऽध्यक्षेण प्रकृतिः सूयते सचराचरम् ।
हेतुनाऽनेन कौंतेय जगद्विपरिवर्तते ॥ १० ॥

[௩-௩அ] கௌந்தேய! நடத்தும்தலைவனான என்னால் பிரகிருதியானது, சரத்தையும் அசரத்தையும் உண்டாக்குகின்றது.

நிமித்தவடிவ இந்தக்காரணத்தால் ஜகத்து நாநாவிதமாக மாறி மாறி வருகின்றது. (க0)

अवजानंति मां मूढा मानुषीं तनुमाश्रितम् ।
परं भावमजानंतो मम भूतमहेश्वरम् ॥ ११ ॥

[நீ-சூக] மூடர்கள் பூதங்களுக்கு மகேசுவர (அதிஷ்டான) மான எனதுமேலான சொரூபத்தை அறியாதவர்களாய் மனுஷிய சம்பந்தமானசரீரத்தை ஆசிரயித்துள்ள என்னை அநாதரஞ் செய்கின்றார்கள். (கக)

मोघाशा मोघकर्माणो मोघज्ञाना विचेतसः ।
राक्षसीमासुरीं चैव प्रकृतिं मोहिनीं श्रिताः ॥ १२ ॥

[௫௰] (அவர்கள்) வியர்த்தமான ஆசையுடையவர்களும் வீணாகர்மமுடையவர்களும் வியர்த்தமானஞானமுடையவர் களும் விவேகமில்லாதவர்களுமாய் இராக்ஷஸர்களதும் (தமோ குணப் பிரதானமும்) அசுரர்களதும் (இரஜோகுணப்பிரதான மும்) மோகிக்கச்செய்வதுமாகிய பிரகிருதியி(பூர்வவாசனைமய சுபாவத்தி)னையே ஆசிரயித்தவர்களாயிருக்கின்றனர். (கஉ)

महात्मानस्तु मां पार्थ दैवीं प्रकृतिमाश्रिताः।
भजंत्यनन्यमनसो ज्ञात्वा भूतादिमव्ययम् ॥ १३ ॥

[௫௰க] பார்த்த! தெய்வப்பிரகிருதியை (சத்வகுணப்பிர தானதேவர்களதையொத்த சுபாவத்தை) ஆசிரயித்தவர்களும்

அந்நியமனதில்லாதவர்களுமாகிய மகாத்துமாக்களோ என்னைப் பூதகாரணனும் அவ்வியயனுமாக அறிந்து பஜிக்கின்றார்கள்.

सततं कीर्तयंतो मां यतंतश्च दृढव्रताः ।
नमस्यंतश्च मां भक्त्या नित्ययुक्ता उपासते ॥ १४ ॥

[ருடுஉ] (சிலர்) நிரந்தரம் என்னைக் கீர்த்திப்பவர்களாயும் (சாக்ஷாத்காரத்தின்பொருட்டு) யத்தனஞ் செய்பவர்களாயும், (பிரஹ்மசர்யாதி) திடவிரதமுடையவர்களாயும், பக்தியோடு என்னை வணங்குகிறவர்களாயும், நித்தியசமாதியுடையவர்களாயும் உபாசிக்கின்றார்கள். (கச)

ज्ञानयज्ञेन चाप्यन्ये यजंतो मामुपासते ।
एकत्वेन पृथक्त्वेन बहुधा विश्वतोमुखम् ॥ १५ ॥

[கூடுகூ] பிறர் (ஞானநிஷ்டர்) ஞானயஞ்ஞத்தினால் யஜிக்கின்றவர்கள் (சிலர்) ஒருமையாகவும் (சிலர்) வேற்றுமையாகவும் (சிலர்) வெகுவிதமாக எப்புறத்தும் முகமுடையவனாகவும் என்னை உபாசிக்கின்றார்கள். (கரு)

अहं क्रतुरहं यज्ञः स्वधाहमहमौषधम् ।
मंत्रोऽहमेवाज्यमहमग्निरहं हुतम् ॥ १६ ॥

[கூடுசா] யான் (வேதத்திற் சொல்லப்பட்ட) யாகம். யானே (ஸ்மிருதியிற் சொல்லப்பட்ட) யஞ்ஞம். யான் ஸ்வதா (பிதிருக்

களின் அந்நம்). யான் ஔஷதம்(மனிதர்களின் அந்நம்), யான் மந்திரம், யான் ஆச்சியம்(நெய்முதலிய அவி), யான் அக்கினி, யான் ஓமஞ்செய்யப்பட்ட திரவியம். (௧௬)

पिताहमस्य जगतो माता धाता पितामहः ।
वेद्यं पवित्रमोंकार ऋक् साम यजुरेव च ॥ १७ ॥

[௩௫௫] இச்சகத்தின் பிதாவும் மாதாவும் தாதாவும்(தாங்குவோனும்), பிதாமகனும், அறியப்படுபொருளும், பவித்திரமும்(புனிதமாக்கும்பொருளும்), ஓங்காரமும், ருக்கும், சாமமும், யஜுஸும் (யானே). (௧௭)

गतिर्भर्ता प्रभुः साक्षी निवासः शरणं सुहृत् ।
प्रभवः प्रलयः स्थानं निधानं बीजमव्ययम् ॥ १८ ॥

[௲கூ] கதியும் (கர்மபலனும்), பர்த்தாவு(போஷகனு)ம், பிரபுவும் (ஸ்வாமியும்), சாக்ஷியும், இருப்பிடமும், புகலும், உபகாரியும், படைப்பவனும், அழிப்பவனும், நிலையும், ஒடுங்குமிடமும், அவ்வியயனும், வித்தும் (யானே). (கஅ)

तपाम्यहमहं वर्षं निगृह्णाम्युत्सृजामि च ।
अमृतं चैव मृत्युश्च सदसच्चाहमर्जुन ॥ १९ ॥

[௲௯] அர்ஜுனா! யானே காய்கின்றேன். யான் மழையை

த் தடுக்கின்றேன், விடுகிறேன். அமிருதமும் மரணமும் சத்தும் (காரியமும்) அசத்தும் (காரணமும்) யான். (கக)

त्रैविद्या मां सोमपाः पूतपापा यज्ञैरिष्ट्वा स्वर्गतिं प्रार्थयन्ते ।
ते पुण्यमासाद्य सुरेन्द्रलोकमश्नन्ति दिव्यान्दिवि देवभोगान् ॥२०॥

[ப-ரு-அ] மூவேதமுணர்ந்தவர் யஞ்ஞங்களினாலே என்னைப்பூஜித்துசோமரஸம் பருகுவோராய்ப் பாபத்தினின்றும் பரிசுத்தராய் ஸ்வர்க்ககதியை மிகவிரும்புகின்றனர் அவர்கள் புண்ணியமான தேவேந்திரலோகத்தை அடைந்து சுவர்க்கத்தில் திவ்யமான தேவபோகங்களைப் புசிக்கின்றனர். (உ0)

ते तं भुक्त्वा स्वर्गलोकं विशालं क्षीणे पुण्ये मर्त्यलोकं विशंति ।
एवं त्रयीधर्ममनुप्रपन्ना गतागतं कामकामा लभंते ॥ २१ ॥

[௯௫௧] அவர்கள் அந்த விசாலமான ஸ்வர்க்கலோகத்தைப்புசித்து புண்ணியம் குறைந்தபோது மனுஷ்யலோகத்தை யடைகின்றனர். இவ்வாறு மூன்று வேதங்களின் தர்மத்தினை அநுசரித்தவர்கள் விஷயவிருப்பமுடையோராய்ப் போக்குவரத்தினை அடைகின்றனர். (உக)

अनन्याश्चिंतयंतो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥ २२ ॥

[ருசுO] எந்தஜனங்கள் அந்நியமில்லாதவர்களாக என்னைச் சிந்திக்கின்றவர்களாய்ச் செவ்வையாய் உபதேசிக்கின்றார்களோ, நித்தியமும் நிரந்தரமும் யோகத்தோடுகூடியவர்களான அவர்களது யோகக்ஷேமத்தை யான் வகிக்கிறேன். [பெறுததைப்பெறுவித்தல் யோகம் அதனைக்காத்தல் க்ஷேமம்.] (உஉ)

येऽप्यन्यदेवताभक्ता यजंते श्रद्धयान्विताः ।
तेऽपि मामेव कौंतेय यजंत्यविधिपूर्वकम् ॥ २३ ॥

[ருசுக] கௌந்தேய! எவர்கள் அந்நியதேவதாபக்தர்களாயி

னும், சிரத்தையோடுகூடியவர்களாய் யஜிக்கின்றார்களோ அவர்களும் விதியின்மையோடு (அஞ்ஞானத்தோடு) என்னையேயஜிக்கின்றனர். (உ௩)

अहं हि सर्वयज्ञानां भोक्ता च प्रभुरेव च ।
न तु मामभिजानंति तत्त्वेनातश्च्यवंति ते ॥ २४ ॥

[௩சூஉ] சர்வயஞ்ஞங்களுக்கும் போக்தாவும் பிரபுவும் யானே. எதனால் என்னை உண்மையாக அறியார்களோ அதனால் அவர்கள் நழுவுகின்றார்கள். (உச)

यांति देवव्रता देवान् पितॄन्यांति पितृव्रताः ।
भूतानि यांति भूतज्यो यांति मद्याजिनोऽपि माम् ॥ २५ ॥

[ரு-௯-ரு] தேவவிரதமுடையோர் தேவர்களை அடைகின்றனர். பிதிருவிரதமுடையோர் பிதிருக்களையடைகின்றனர். பூதங்களை பூஜிப்பவர் பூதங்களை யடைகின்றனர். என்னை யஜிப்பவர் என்னையே அடைகின்றனர். (உரு)

पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति ।
तदहं भक्त्युपहृतमश्नामि प्रयतात्मनः ॥ २६ ॥

[ஶ-௬ச] எவன் எனக்குப் பக்தியோடு பத்திரம் புஷ்பம் பழம் ஜலம் என்பவற்றைக் கொடுக்கின்றானோ அந்த அடங்கிய மனதுடையவனது பக்தியோடு கொடுக்கப்பட்ட அதனை யான் புசிக்கின்றேன். (உ௬)

यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत् ।
यत्तपस्यासि कौंतेय तत्कुरुष्व मदर्पणम् ॥ २७ ॥

[ஶ-௬ரு] குந்திபுத்திரா! எதனைச் செய்கின்றாயோ, எதனைப்புசிக்கின்றாயோ, எதனை ஓமிக்கின்றாயோ, எதனைக் கொடுக்கின்றாயோ, எத்தபத்தைச் செய்கின்றாயோ, அதனை எனக்கு அர்ப்பணம்செய். (உ௭)

शुभाशुभफलैरेवं मोक्ष्यसे कर्मबंधनैः ।
संन्यासयोगयुक्तात्मा विमुक्तो मामुपैष्यसि ॥ २८ ॥

[ஸ்ரீ கா] சுபாசுபபலமுடைய கர்மபந்தங்களினின்றும் இவ்வாறு விடுபடுவாய். சந்நியாசயோகத்தோடுகூடிய சித்தமுடையவனாய்(கர்மபந்தத்தினின்று)விசேஷமாய் விடுபட்டவனாய் என்னைவந்தடைவாய். (உ௮)

समोऽहं सर्वभूतेषु न मे द्वेष्योऽस्ति न प्रियः ।
ये भजंति तु मां भक्त्या मयि ते तेषु चाप्यहम् ॥ २९॥

[௯-௲எ] யான் எல்லாப் பூதங்களிடத்தும் சமன். எனக்குத் த்வேஷிக்கத்தக்கவனுமில்லை; பிரியமுள்ளவனுமில்லை. ஆனால் எவர்கள் என்னைப் பக்தியோடு பஜிக்கின்றார்களோ, அவர்கள் என்னிடத்திலிருக்கிறார்கள். யானும் அவர்களிடத்திலிருக்கிறேன். (உ௯)

अपि चेत्सुदुराचारो भजते मामनन्यभाक् ।
साधुरेव स मंतव्यः सम्यग्व्यवसितो हि सः ॥ ३० ॥

[௯-௲அ] மிகத்தீயவொழுக்கத்தினனாயினும், அநந்யபக்த

ளாய் என்னைப் பஜிப்பாளாயின், அவன் சாது (சதாசாரமுடையவன்) என்றே மதிக்கத்தக்கவன். எதனாலெனின், அவன் செவ்வையான நிச்சயத்தை யடைந்தவன். (௩௰)

क्षिप्रं भवति धर्मात्मा शश्वच्छान्तिं निगच्छति ।
कौंतेय प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति ॥ ३१ ॥

[௩௰௧] (அவன்) விரைவில் தர்மாத்மாவாகின்றான். நிலையான சாந்தியை அடைகிறான். கௌந்தேய! என்னுடைய பக்தன் நாசமாகான். என்று பிரதிஞ்ஞை செய் (உறுதிமொழி கூறு). (௩௧)

मां हि पार्थ व्यपाश्रित्य येऽपि स्युः पापयोनयः ।
स्त्रियो वैश्यास्तथा शूद्रास्तेऽपि यांति परां गतिम् ॥ ३२ ॥

[கூஎ௦] பார்த்த! ஸ்திரீகளும், வைசியர்களும், அவ்வாறே சூத்திரர்களும் பாபயோனியிற் பிறந்தவர்கள் எவர்களாயிருக்கினும், அவர்களும் என்னை ஆசிரயித்து மேலானகதியை அடைகின்றனர். (கூ௨)

किं पुनर्ब्राह्मणाः पुण्या भक्ता राजर्षयस्तथा ।
अनित्यमसुखं लोकमिमं प्राप्य भजस्व माम् ॥ ३३ ॥

[௬எக] என்றால் புண்ணியவான்களும் பக்தர்களுமாகிய பிராஹ்மணர்களும் அப்படியே இராஜரிஷிகளும் முக்தியடைவாரென்பதில் என்னசொல்லவேண்டும்? இந்த அநித்தியமும் அசுபமுமான(பெறுதற்கரிய) இவ்வுலகத்தை அடைந்து என்னைப்பஜிப்பாயாக. (௩௩)

मन्मना भव मद्भक्तो मद्याजि मां नमस्कुरु ।
मामेवैष्यसि युक्त्वैवमात्मानं मत्परायणः ॥ ३४ ॥

[௬எஉ] என்னிடத்து மனமுடையவனும் என் பக்தனும் என்னையஜிப்பவனுமாவாய். என்னை நமஸ்கரி. இவ்வாறு என்

னையே பரகதியா யுடையவனாய் ஆத்மாவை(மனதை என்னிடம்)சேர்த்து என்னையே அடைவாய். (கூச)

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु
श्रीकृष्णार्जुनसंवादे
नवमोऽध्यायः

இவ்வாறு ஸ்ரீபகவத்கீதையாகிய உபநிஷத்தில்
ஸ்ரீகிருஷ்ணார்ஜுனசம்வாதத்தில்
ஒன்பதாம் அத்தியாயம் முடிந்தது.

ॐ

॥ दशमोऽध्यायः ॥

பத்தாம் அத்தியாயம்.

॥ विभूतियोगः ॥

விபூதியோகம்.

॥ श्रीभगवानुवाच ॥

भूय एव महाबाहो शृणु मे परमं वचः ।
यत्तेऽहं प्रीयमाणाय वक्ष्यामि हितकाम्यया ॥ १ ॥

[௯௭௩] ஸ்ரீ பகவான் சொல்லலாயினார்:—மகாபாகுவே! மறுபடியும் யான் பிரியப்படும் உனக்கு இத(நல)த்தை விரும்பி எதனைச் சொல்லுவேனோ (அந்த) என்னுடைய மேலான வசனத்தைக்கேள்.

न मे विदुः सुरगणाः प्रभवं न महर्षयः ।
अहमादिर्हि देवानां महर्षीणां च सर्वशः ॥ २ ॥

[௯௭௪] என்னுடைய பிரபாவத்தைத் தேவகணங்களும் அறியார்; மகரிஷிகளும் அறியார். எதனாலெனின், யான் தேவர்களுக்கும் மகரிஷிகளுக்கும் எவ்விதத்தாலும் முதன்மையானவன்.

(௨)

यो मामजमनादिं च वेत्ति लोकमहेश्वरम् ।
असंमूढः स मर्त्येषु सर्वपापैः प्रमुच्यते ॥ ३ ॥

[ஈஎரு] எவன் என்னை பிறப்பில்லாதவனும் காரண மில்லாதவனும் உலகங்கட்கெல்லாம் மகேசுவரனுமாக அறிகின்றானோ, அவன் மனிதர்களுள் மூடர்களினும்வேறானவன்(ஞானி); சகல பாபங்களினின்றும் விடுபடுகின்றான்.

बुद्धिर्ज्ञानमसंमोहः क्षमा सत्यं दमः शमः ।
सुखं दुःखं भवो भावो भयं चाभयमेव च ॥ ४ ॥

अहिंसा समता तुष्टिस्तपो दानं यशोऽयशः ।
भवंति भावा भूतानां मत्त एव पृथग्विधाः ॥ ५ ॥

[கூஎகூ—கூஎஎ] விவேகம், ஞானம், மோகமின்மை, க்ஷமை, சத்தியம், தமம், சமம், சுகம், துக்கம், பிறப்பு, இறப்பு, பயம், அபயம் (பயமின்மை), அஹிம்ஸை, சமத்துவம், சந்தோஷம், தபம், தானம், கீர்த்தி, அபகீர்த்தியென்னும் வெவ்வேறுவிதமான தன்மைகள் பிராணிகளுக்கு என்னிடத்திலிருந்தே உண்டாகின்றன. (ச-ரு)

महर्षयः सप्त पूर्वे चत्वारो मनवस्तथा ।
मद्भावा मानसा जाता येषां लोक इमाः प्रजा ॥ ६ ॥

[நூஎஅ] உலகத்தில் இப்பிரஜைகள் எவர்களுடைய சிருஷ்டியாயிருக்கிறார்களோ அந்த முன்னவர்களாகிய சப்தமகரிஷிகளும் அப்படியே நான்கு மனுக்களும் மனதினின்றுமுண்டானவர்கள். அதனால் என் சொரூபமாயிருக்கின்றனர். (கூ)

एतां विभूतिं योगं च मम यो वेत्ति तत्त्वतः ।
सोऽविकंपेन योगेन युज्यते नात्र संशयः ॥ ७ ॥

[நூஎகூ] எவன் என்னுடைய இந்த விபூதியை(சர்வாத்மரூபவிஸ்தாரத்தை)யும் யோக(சர்வஞ்ஞத்வாதிசாமர்த்திய)த்தையும் உண்மையாக அறிகின்றானோ, அவன் அசைவின்றியயோ

க(ஞான)த்தினால் கூடுகின்றான். இதில் சம்சயமில்லை. (எ)

अहं सर्वस्य प्रभवो मत्तः सर्वं प्रवर्तते ।
इति मत्वा भजंते मां बुधा भावसमन्विताः ॥ ८ ॥

[கூஅ௦] யான் எல்லாவற்றிற்கும் உபாதானகாரணன். என்னிடத்திலிருந்து யாவும் பிரவர்த்திக்கின்றன என்று கருதி அறிஞர் பாவத்தோடு(பாவனையோடு)செவ்வேகூடியவர்களாய் என்னைப் பஜிக்கின்றனர். (அ)

मच्चित्ता मद्गतप्राणा बोधयंतः परस्परम् ।
कथयंतश्च मां नित्यं तुष्यंति च रमंति च ॥ ९ ॥

[ந-அக] என்னிடத்துச் சித்தமுடையவர்களாய், என்னில்த ற்பரமான (சக்ஷுமுதலிய) பிராணனு(கரணவொடுக்கமு)டை யவர்களாய், நித்தியம் என்னை ஒருவருக்கொருவர் போதிப்ப வராய், பேசுகின்றவராய்ச் சந்தோஷிக்கின்றார்கள்; இரமிக்கி ன்றார்கள். (௯)

तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम् ।
ददामि बुद्धियोगं तं येन मामुपयांति ते ॥ १० ॥

[ந-அ௨] எப்போதும் யோகமுடையவர்களும் பிரீதியோடு பஜிக்கின்றவர்களுமாகிய அவர்களுக்கு எதனால் அவர்கள் எ

ன்னை அடைவார்களோ அந்தப் புத்தியோகத்தினைக் கொடுக்கிறேன். (க௦)

तेषामेवानुकंपार्थमहमज्ञानजं तमः ।
नाशयाम्यात्मभावस्थो ज्ञानदीपेन भास्वता ॥ ११ ॥

[ரு-அரு] அவர்களுடைய இரக்கத்தின்பொருட்டே (அவர்களது) ஆத்மபாவத்திலிருப்பவனாகிய யான் பிரகாசமுடைய ஞானதீபத்தினால் அஞ்ஞானத்தினாற் றோன்றிய இருளினைக் கெடுக்கின்றேன். (கக)

॥ अर्जुन उवाच ॥

परं ब्रह्म परं धाम पवित्रं परमं भवान् ।
पुरुषं शाश्वतं दिव्यमादिदेवमजं विभुम् ॥ १२ ॥

आहुस्त्वामृषयः सर्वे देवर्षिर्नारदस्तथा ।
असितो देवलो व्यासः स्वयं चैव ब्रवीषि मे ॥ १३ ॥

[௧௨-௧௩] அர்ஜுனன் சொல்லலாயினன்:-தாம் மேலான பிரஹ்மம், பரந்தாமர், பரமபவித்திரர், சாசுவதர், திவ்வியர், ஆதிதேவர், அஜர், விபு, புருஷன் (பூர்ணன்) என்று தம்மை எல்லா ரிஷிகளும் அப்படியே தேவரிஷியாகிய நாரத

ரும், அஸிதரும், தேவலரும், வியாஸரும் சொல்லுகிறார்கள். (அவ்வாறே) தாமும் எனக்குச் சொல்லுகிறீர். (கஉ-கங)

सर्वमेतदृतं मन्ये यन्मां वदसि केशव ।
नहि ते भगवन्व्यक्तिं विदुर्देवा न दानवाः ॥ १४ ॥

[ரு-அகூ] கேசவரே! எனக்கு எதைச் சொல்லுகிறீரோ, இதுமுழுவதும் சத்தியமென்று எண்ணுகிறேன். எதனாலெனின், பகவானே! தம்முடைய வியக்தியைத் தேவர்கள் அறியார்கள்; தானவர்கள் அறியார்கள். (கச)

स्वयमेवात्मनाऽऽत्मानं वेत्थ त्वं पुरुषोत्तम ।
भूतभावन भूतेश देवदेव जगत्पते ॥ १५ ॥

[௫௮௭] புருஷோத்தமரே! பூதங்களையுண்டு பண்ணினவரே! பூதேசரே! தேவதேவரே! ஜகத்பதியே! தாமாகவே நீர் ஆத்மாவினால்(தன்னால்)ஆத்மாவை(தன்னை)அறிகின்றீர்.

वक्तुमर्हस्यशेषेण दिव्या ह्यात्मविभूतयः
याभिर्विभूतिभिर्लोकानिमांस्त्वं व्याप्य तिष्ठसि ॥ १६ ॥

[௫௮௮] எந்த விபூதிகளினால் தாம் இவ்வுலகங்களை வியாபித்து நிற்கின்றீரோ, அந்தத் திவ்விய(அலௌகிக)மான தம்

முடைய விபூதிகள் முழுவதையும் அருளிச்செய்வீராக. (௧௬)

कथं विद्यामहं योगिंस्त्वां सदा परिचिंतयन् ।
केषु केषु च भावेषु चिंत्योऽसि भगवन्मया ॥ १७ ॥

[ரூ-அகூ] யோகமுடையவரே! யான் எப்போதும் விடாது சிந்திக்கின்றவனாய்த் தம்மை எவ்வாறு அறிவேன்? பகவானே! எந்தெந்தப் பதார்த்தங்களில் என்னால் சிந்திக்கத்தக்கவராயிருக்கின்றீர். (௧௭)

विस्तरेणात्मनो योगं विभूतिं च जनार्दन ।
भूयः कथय तृप्तिर्हि शृण्वतो नास्ति मेऽमृतम् ॥ १८ ॥

[ருகூ0] ஜனார்த்தனரே! தம்முடைய யோகத்தினையும் விபூதியினையும் மறுபடியும் விஸ்தாரமாகத் திருவாய்மலர்ந்தருள்வீராக. ஏதனாலெனின், அமிர்தத்தைக்கேட்கும் எனக்குத் திருப்தியில்லை. (கஅ)

॥ श्रीभगवानुवाच ॥

हंत ते कथयिष्यामि दिव्या ह्यात्मविभूतयः ।
प्राधान्यतः कुरुश्रेष्ठ नास्त्यंतो विस्तरस्य मे ॥ १९ ॥

[ருகூக] ஸ்ரீ பகவான் சொல்லலாயினார்:—குருசிரேஷ்ட! திவ்யமாகிய எனது விபூதிகளை இப்போது உனக்குப் பிரதா

ணத்தன்மையாகக் கூறுவேன். என்னுடைய விபூதிகளின் வி
ஸ்தாரத்திற்கு எல்லையில்லை. (கக)

अहमात्मा गुडाकेश सर्वभूताशयस्थितः ।
अहमादिश्च मध्यं च भूतानामंत एव च ॥ २० ॥

[ரு-கூஉ] குடாகேச! சகல பூதங்களின் இருதயத்திருக்கும்
ஆத்மா யான். யானேபூதங்களுக்கு ஆதி(உற்பத்திகாரணன்),
மத்தி(ஸ்திதிகாரணன்), அந்தம்(லயகாரணன்). (உ0)

आदित्यानामहं विष्णुर्ज्योतिषां रविरंशुमान् ।
मरीचिर्मरुतामस्मि नक्षत्राणामहं शशी ॥ २१ ॥

[ருகக] ஸூரியர்களுள் விஷ்ணு யான். ஜோதிகளுள் கிரணங்களையுடைய ஸூரியன் யான். வாயுக்களுள் (ஆவன் பிரவன்முதலிய மருத்துக்கள் எழுவருள்) மரீசி யான். நக்ஷத்திரங்களுள் சந்திரன் யான். (உக)

वेदानां सामवेदोऽस्मि देवानामस्मि वासवः ।
इंद्रियाणां मनश्चास्मि भूतानामस्मि चेतना ॥ २२ ॥

[ருகஉ] (யான்) வேதங்களுள் சாமவேதமாயிருக்கிறேன். தேவர்களுள் இந்திரனாயிருக்கிறேன். இந்திரியங்களுள் மனமாயிருக்கிறேன். பூதங்(ஜீவர்)களுள் சேதனையா (அறிவா)யி

ருக்கிறேன். (உஉ)

रुद्राणां शंकरश्चास्मि वित्तेशो यक्षरक्षसाम् ।

वसूनां पावकश्चास्मि मेरुः शिखरिणामहम् ॥ २३ ॥

[௩௯௫] ருத்திரர்களுள் சங்கரனாயிருக்கிறேன். இயக்கரி ராக்கதருள் குபேரன். வசுக்களுள் பாவகனு(அக்னியா)யிருக்கிறேன். பர்வதங்களுள் மேரு யான். (உ௩)

पुरोधसां च मुख्यं मां विद्धि पार्थ बृहस्पतिम् ।

सेनानीनामहं स्कंदः सरसामस्मि सागरः ॥ २४ ॥

[௩௯௬] பார்த்தா! புரோகிதர்களுள் முக்கியமான பிருகஸ்

பதியாக என்னை அறி. சேனாதிபதிகளுள் ஸ்கந்தர் யான். ஏரி களுள் சாகரமாயிருக்கின்றேன். (உச)

महर्षीणां भृगुरहं गिरामस्म्येकमक्षरम् ।
यज्ञानां जपयज्ञोऽस्मि स्थावराणां हिमालयः ॥ २५ ॥

[ரூகை] மகரிஷிகளுள் பிருகு யான். வாக்குகளுள் ஏகாக்ஷ ர(பிரணவ)மாயிருக்கிறேன். யஞ்ஞங்களுள் ஜபயஞ்ஞமாயி ருக்கிறேன். ஸ்தாவரங்களுள் (நிலையானவற்றுள்) இமாலயம் யான். (உரு)

अश्वत्थः सर्ववृक्षाणां देवर्षीणां च नारदः ।
गंधर्वाणां चित्ररथः सिद्धानां कपिलो मुनिः ॥ २६ ॥

[ஙகூஅ] விருக்ஷங்களுள் அரசும், தேவரிஷிகளுள் நாரதரும், கந்தர்வர்களுள் சித்திராதனும், சித்தர்களுள் கபிலமுனிவரும் யான். (உகா)

उच्चैःश्रवसमश्वानां विद्धि माममृतोद्भवम् ।
ऐरावतं गजेन्द्राणां नराणां च नराधिपम् ॥ २७ ॥

[ஙகூகூ] குதிரைகளுள் அமிர்தத்தோடுண்டாகிய உச்சைசிரவஸமென்னும் குதிரையாக என்னை அறி. கஜேந்திரங்களுள்

ஐராவதமும், நரர்களுள் நராதிபனும் யான். (உ௭)

आयुधानामहं वज्रं धेनूनामस्मि कामधुक् ।
प्रजनश्चास्मि कंदर्पः सर्पाणामस्मि वासुकिः ॥ २८ ॥

[௩௦௦] ஆயுதங்களுள் வஜ்ஜிராயுதம் யான். தேனுக்களுள் காமதேனுவா யிருக்கிறேன். பிரஜோற்பத்திமாத்திரத்திற்கு ஏதுவான கந்தர்ப்ப(மன்மத)னையிருக்கிறேன். சர்ப்பங்களுள் வாசுகியாயிருக்கிறேன். (உ௮)

अनंतश्चास्मि नागानां वरुणो यादसामहम् ।
पितॄणामर्यमा चास्मि यमः संयमतामहम् ॥ २९ ॥

[௩௦க] நாகங்களுள் அநந்தன் (சேஷன்) யான். ஜலசரங்களுள் வருணனும் (அக்னிஷ்வாத்தா முதலிய) பிதிர்க்களுள் அர்யமாவுமா யிருக்கிறேன். தண்டஞ்செய்பவருள் இயமன் யான்.

प्रह्लादश्चास्मि दैत्यानां कालः कलयतामहम् ।
मृगाणां च मृगेंद्रोऽहं वैनतेयश्च पक्षिणाम् ॥ ३० ॥

[௩௦உ] தைத்தியர்களுள் பிரகலாதன் யான். கணக்கர்களுள் காலன் யான். மிருகங்களுள் மிருகேந்திரன் (சிங்கம்) யான். பக்ஷிகளுள் கருடன் யான். (௩௦)

पवनः पवतामस्मि रामः शस्त्रभृतामहम् ।
झषाणां मकरश्चास्मि स्रोतसामस्मि जाह्नवी ॥ ३१ ॥

[௩௰௧] பரிசுத்தஞ்செய்பவர்களுள் பவனம்(வாயு)யான். ஆயுதந்தரித்தவர்களுள் இராமனும், மீன்களுள் மகரமுமாயிருக்கிறேன். ஆறுகளுள் கங்கை யான். (௩௧)

सर्गाणामादिरन्तश्च मध्यं चैवाहमर्जुन ।
अध्यात्मविद्या विद्यानां वादः प्रवदतामहम् ॥ ३२ ॥

[௩௰௨] அர்ஜுனா! சிருஷ்டிகளின் ஆதியும், நடுவும், அந்த

மும் யானே. வித்தைகளுள் அத்தியாத்மவித்தையும், வாதஞ் செய்பவர்களுள் வாதமும் யான். (௩௨)

अक्षराणामकारोऽस्मि द्वंद्वः सामासिकस्य च ।
अहमेवाक्षयः कालो धाताऽहं विश्वतोमुखः ॥ ३३ ॥

[௩௦௫] அக்ஷரங்களுள் அகாரம் யான். சமாஸங்க(தொகைச்சொற்க)ளுள் துவந்துவசமாஸம்(உம்மைத்தொகை) யானே. (காலங்களுள்) அக்ஷயகாலன் யான். தாதாக்(கர்மபலவிதானஞ் செய்பவர்)களுள் எங்குமுகமுள்ளவன் யான். (௩௩)

मृत्युः सर्वहरश्चाहमुद्भवश्च भविष्यताम् ।
कीर्तिः श्रीर्वाक्च नारीणां स्मृतिर्मेधा धृतिः क्षमा ॥ ३४ ॥

[சஂகு] (சங்கரிப்பவர்களுள்) எல்லாவற்றையும் கெடுக்கும் மிருத்தியு (சங்காரகர்த்தா) யான். ஆனவற்றுள் ஆக்கம் யான். ஸ்திரீகளுள் கீர்த்தி, ஸ்ரீ, வாக்கு, ஸ்மிருதி, மேதை (தாரணாசக்தி), திருதி (தைரியம்), க்ஷமை யான். (௩௪)

बृहत्साम तथा साम्नां गायत्री छंदसामहम् ।
मासानां मार्गशीर्षोऽहमृतूनां कुसुमाकरः ॥ ३५ ॥

[சஂஎ] ஸாமங்களில் பிருகத்ஸாமமும் அப்படியே சந்தசு

களில் காயத்திரியும் யான். மாஸங்களில் மார்கழி யான். இரு துக்களில் வசந்தருது யான். (௩௫)

द्यूतं छलयतामस्मि तेजस्तेजस्विनामहम्।
जयोऽस्मि व्यवसायोऽस्मि सत्त्वं सत्त्ववतामहम्॥ ३६॥

[ச॰அ] வஞ்சர்களில் சூது யான். தேஜஸுள்ளவர்களில் தேஜஸும், (ஜயமுள்ளவர்களில்)ஜயமும் யான். (முயற்சியுடையவரிடத்தில்)முயற்சி யான். சத்துவ(குணம் பல)முள்ளவர்களில் சத்துவம் யான். (௩௬)

वृष्णीनां वासुदेवोऽस्मि पांडवानां धनंजयः ।
मुनीनामप्यहं व्यासः कवीनामुशना कविः ॥ ३७ ॥

[௪௦௬] யாதவர்களில் வாசுதேவன் யான். பாண்டவர்களில் தனஞ்செயனும் யான். முனிகளில் வியாஸர் யான். கவிகளில் சுக்கிராசாரியரென்னும் கவி யான். (௩௭)

दंडो दमयतामस्मि नीतिरस्मि जिगीषताम् ।
मौनं चैवास्मि गुह्यानां ज्ञानं ज्ञानवतामहम् ॥ ३८ ॥

[௪௧௦] தண்டஞ்செய்பவர்களில் தண்டம் யான். வெற்றிவிருப்பமுள்ளவர்களில் நீதியான். இரகசியவஸ்துக்களில் மௌ

னமே யான். ஞானமுடையவர்களில் ஞானம் யான். (௩அ)

यच्चापि सर्वभूतानां बीजं तदहमर्जुन ।
न तदस्ति विना यत्स्यान्मया भूतं चराचरम् ॥ ३९ ॥

[சகக] அர்ஜுனா! எது சர்வபூதங்களுக்கும் பீஜமோ அதுவும் யான். என்னையின்றி எந்தச்சராசரபூதமிருக்கிறதோ அது என்னையின்றி இல்லை. (௩௯)

नान्तोऽस्ति मम दिव्यानां विभूतीनां परंतप ।
एष तूद्देशतः प्रोक्तो विभूतेर्विस्तरो मया ॥ ४० ॥

[சகஉ] பரந்தபா! எனது திவ்யமான விபூதிகளுக்கு அளவி

ல்லே. ஆனால் இந்த விபூதியின் விஸ்தாரம் என்னால் உத்தேச(ஏ கதேச)மாகச் சொல்லப்பட்டது. (சo)

यद्यद्विभूतिमत्सत्त्वं श्रीमदूर्जितमेव वा ।
तत्तदेवावगच्छ त्वं मम तेजोंऽशसंभवम् ॥ ४१ ॥

[சகங] எந்த எந்த சத்துவம்(வஸ்து)ஐசுவரியமுடையதாயும் திருவுடையதாயும் உயர்ந்ததாயுமே யிருக்கின்றதோ அதனை நீ என்னுடைய தேஜோ அம்சத்தினின்றுண்டாகியதாகவே அறி. (சக)

अथवा बहुनैतेन किं ज्ञातेन तवार्जुन ।
विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगत् ॥ ४२ ॥

[௪௧௪] அல்லது அர்ஜுனா! வெகுவிதமான அறியப்பட்ட இதனால் உனக்கு என்ன பிரயோஜனம்? இச்சகத்துமுழுவதையும் யான் ஒரு அம்சத்தினால் தாங்கி நிற்கின்றேன். (௪உ)

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु

श्रीकृष्णार्जुनसंवादे

॥ दशमोऽध्यायः ॥

இவ்வாறு ஸ்ரீபகவத்கீதையாகிய உபநிஷத்தில்

ஸ்ரீகிருஷ்ணார்ஜுனசம்வாதத்தில்

பத்தாம் அத்தியாயம் முடிந்தது.

ॐ

॥ एकादशोऽध्यायः ॥

பதினோராம் அத்தியாயம்.

॥ विश्वरूपदर्शनयोगः ॥

விசுவரூபதரிசனயோகம்.

॥ अर्जुन उवाच ॥

मदनुग्रहाय परमं गुह्यमध्यात्मसंज्ञितम् ।
यत्त्वयोक्तं वचस्तेन मोहोऽयं विगतो मम ॥ १ ॥

[சகரு] அர்ஜுனன் சொல்லலாயினன் :—எனது அநுக்கிரகத்தின் பொருட்டுத்தம்மால் யாதொரு மேலான இரகசியமாகிய அத்தியாத்மமென்னும்பெயரையடைந்த வாக்கியம்(கூ-வது வரையில்) சொல்லப்பட்டதோ அதனால் என்னுடைய இந்த மோகம் நீங்கிற்று. (க)

भवाप्ययौ हि भूतानां श्रुतौ विस्तरशो मया ।
त्वत्तः कमलपत्राक्ष माहात्म्यमपि चाव्ययम् ॥ २ ॥

[சககூ] தாமரையிதழ்போன்ற நேத்திரங்களையுடையவரே! எதனால் தம்மிடத்தினின்றும் என்னால் உற்பத்திப்பிரலயங்கள்

விஸ்தாரமாகக்கேட்கப்பட்டனவோ, அவ்வயமானமாகாத்மிய மும் கேட்கப்பட்டதோ, (உ)

एवमेतद्यथात्थ त्वमात्मानं परमेश्वर ।
द्रष्टुमिच्छामि ते रूपमैश्वरं पुरुषोत्तम ॥ ३ ॥

[சாகள] பரமேசுவரனே! எவ்வாறு (பரமேசுவரனை) தம்மைத்தாம் உபதேசித்தீரோ, இவ்வாறே யாம் இஃது (வேறுவிதமாயில்லை). புருஷோத்தமரே! தம்முடைய ஈசுவரவியல்பினதாகிய (ஞானைசுவரிய சக்திபலவீரியதேஜசுகளோடு கூடியதான) உருவத்தினைத் தரிசிக்க விரும்புகிறேன். (௩)

मन्यसे यदि तच्छक्यं मया द्रष्टुमिति प्रभो ।
योगेश्वर ततो मे त्वं दर्शयात्मानमव्ययम् ॥ ४ ॥

[சகஅ] பிரபுவே! அது என்னால் தரிசிக்கக் கூடியதென்று கருதுவீராயின், அப்போது யோகேசுவரரே! எனக்கு நீர் அவ்வியயமான தம்மை (அக்ஷரமதுவடிவத்தினை)க்காட்டுவீராக. (ச)

॥ श्रीभगवानुवाच ॥

पश्य मे पार्थ रूपाणि शतशोऽथ सहस्रशः ।
नानाविधानि दिव्यानि नानावर्णाकृतीनि च ॥ ५ ॥

[சகக] ஸ்ரீபகவான் சொல்லலாயினார்:—பார்த்த! பலவான

ங்களும் வடிவங்களுமுள்ள நாநாவித திவ்வியங்களான நூற்றுக் கணக்கும் ஆயிரக்கணக்குமான என் உருவங்களைப்பார். (ரு)

पश्यादित्यान्वसून् रुद्रानश्विनौ मरुतस्तथा ।
बहून्यदृष्टपूर्वाणि पश्याश्चर्याणि भारत ॥ ६ ॥

[சஉ0] பாரத! (கஉ)ஆதித்தர்களையும், (அ) வசுக்களையும், (கக)உருத்திரர்களையும், (உ) அசுவினிகுமாரர்களையும், (சகூ)மருத்துக்களையும் பார். அப்படியே முன்காணப்படாத வெகு ஆச்சரியங்களைப்பார். (சா)

इहैकस्थं जगत्कृत्स्नं पश्याद्य सचराचरम् ।
मम देहे गुडाकेश यच्चान्यद्द्रष्टुमिच्छसि ॥ ७ ॥

[௬௨௧] குடாகேச! என்னுடைய இந்தத் தேகத்தில் ஓரிடத்திருப்பதாக சராசரத்தோடு கூடிய எல்லா ஜகத்தையும் இப்போது பார். எந்தப் பிறவற்றையும் பார்க்க விரும்புவாயாயின் (பார்). (எ)

न तु मां शक्यसे द्रष्टुमनेनैव स्वचक्षुषा ।
दिव्यं ददामि ते चक्षुः पश्य मे योगमैश्वरम् ॥ ८ ॥

[௬௨௨] ஆனால் உன்னுடைய இந்த நேத்திரத்தினாலேயே என்னையே காணக்கூடியவனாகாய். உனக்குத் திவ்விய நேத்திரத்தைத் தருகின்றேன். என்னுடைய ஈச்வரசம்பந்தியான யோக

த்தை(சாமர்த்தியத்தை)ப் பார். (அ)

॥ संजय उवाच ॥

एवमुक्त्वा ततो राजन् महायोगेश्वरो हरिः ।
दर्शयामास पार्थाय परमं रूपमैश्वरम् ॥ ९ ॥

[சஉ௫] சஞ்சயன்சொல்லலாயினன்:—அரசனே! மகாயோகேசுவராகிய ஹரியானவர் இவ்வாறுகூறி, அதன்பின் பார்த்தனுக்கு மேலான ஈசுவர சம்பந்தியான உருவத்தினைத் தரிசிப்பித்தார். (௯)

अनेकवक्त्रनयनमनेकाद्भुतदर्शनम् ।
अनेकदिव्याभरणं दिव्यानेकोद्यतायुधम् ॥ १० ॥

[சஉச] அநேக முகநேத்திரங்களையுடையதும், அநேக அற்புதக்காட்சிகளையுடையதும், அநேகதிவ்யாபரணமுடையதும், உத்தியோகமுடைய (ஏந்திய) அநேக திவ்ய ஆயுதமுடையதும், (கம)

दिव्यमाल्यांबरधरं दिव्यगंधानुलेपनम् ।
सर्वाश्चर्यमयं देवमनंतं विश्वतोमुखम् ॥ ११ ॥

[சஉரு] திவ்யமாலையும் வஸ்திரமுமணிந்ததும், திவ்வியமான சந்தனாதி வாசனை பூசியதும், சர்வ ஆச்சரியமயமானதும், பிரகாசவடிவினதும், அந்தமில்லாததும், எப்புறத்துமுகமுள்ளதுமாகக் கண்டான். (கக)

दिवि सूर्यसहस्रस्य भवेद्युगपदुत्थिता ।
यदि भाः सदृशी सा स्याद्भासस्तस्य महात्मनः ॥ १२ ॥

[சஉகா] ஆகாசத்தில் ஒரேகாலத்தில் ஆயிரம் சூரியர்களின் பிரபை (பிரகாசம்) உதிக்குமாயின்; அது அம்மகாத்மாவின் பிர[illegible])க்குச் சமானமாம். (கஉ)

ணை பி[illegible]स्थं जगत्कृत्स्नं प्रविभक्तमनेकधा ।
ம(வாசுகிமு[illegible]वदेवस्य शरीरे पांडवस्तदा ॥१३॥

அப்போது பாண்டவன் அங்குத்தேவதேவனுடை டசரீரத்தில் ஒரு அவயவத்திலிருப்பதாய் அநேகவிதமாய்ப்பிரிவுபட்டுள்ள சகலஜகத்தையும் கண்டான். (௧௩)

ततः स विस्मयाविष्टो हृष्टरोमा धनंजयः ।
प्रणम्य शिरसा देवं कृतांजलिरभाषत ॥ १४ ॥

[சஉஅ] அதன்பின் புதுமைபுகப்பெற்ற (ஆச்சரியமடைந்த) வனாய் மயிர்க்குச்செறியப்பெற்றவனாய் அத்தனஞ்சயன் தேவனைக் கலையால் நன்றாய்வணங்கி அஞ்சலிசெய்தவனாய்ச்சொல் ...

॥ अर्जुन उवाच ॥

पश्यामि देवांस्तव देव देहे सर्वांस्तथा भूतविशेषसंघान् ।
ब्रह्माणमीशं कमलासनस्थमृषींश्च सर्वानुरगांश्च दिव्यान् ॥ १५ ॥

[சஉக] அர்ஜுனன் சொல்லலாயினன் :-தேவனே! தமது தேகத்தில் சகலதேவர்களையும், அப்படியே(ஸ்தாவர ஜங்கம) பூதபேதங்களின் கூட்டங்களையும், கமலாசனத்திருக்கும் ஈசுனை பிரஹ்மாவையும், (வசிஷ்டாதியரான)எல்லா ரிஷிகளையும்(வாசுகிமுதலிய) திவ்வியமான பாம்புகளையும் காண்கிறேன்.

अनेकबाहूदरवक्त्रनेत्रं पश्यामि त्वां सर्वतोऽनंतरूपम् ।
नांतं न मध्यं न पुनस्तवादिं पश्यामि विश्वेश्वर विश्वरूपम् ॥ १६ ॥

[சஙூ௦] விசுவேசுவரனே! விசுவரூபனே! தம்மை அநேக கைகள் வயிறுகள் முகங்கள் நேத்திரங்களுடையவராகவும், எப்புறத்தும் அளவற்றவடிவுடையவராகவும் காண்கின்றேன். மறுபடியும் தமது முடிவினைக்காணேன்; நடுவையும்(காணேன்); ஆதியையும்(காணேன்). (கசு)

किरीटिनं गदिनं चक्रिणं च तेजोराशिं सर्वतो दीप्तिमन्तम् ।
पश्यामि त्वां दुर्निरीक्ष्यं समंताद् दीप्तानलार्कद्युतिमप्रमेयम् ॥ १७ ॥

[௪௩௧] கிரீடமுடையவரும், கதையுடையவரும், சக்கரமுடையவரும், தேஜோராசியினரும், எல்லாப்புறத்தானும் பிரபையுடையவரும், துக்கத்தோடு பார்க்கத்தக்கவரும், எப்புறத்தும் ஜ்வலிக்கின்ற அக்கினி சூரியர்களின் காந்தியுடையவரும், பிரமாணவிஷயமாகாதவருமாகத் தம்மைகாண்கின்றேன். (௧௭)

त्वमक्षरं परमं वेदितव्यं त्वमस्य विश्वस्य परं निधानम् ।
त्वमव्ययः शाश्वतधर्मगोप्ता सनातनस्त्वं पुरुषो मतो मे ॥ १८ ॥

[௪௩௨] தாம் மேலான அக்ஷரமாக (அழிவில்லாதவராக) அறியத்தக்கவர். தாம் இந்த ஜகத்திற்கு அதிஷ்டானம்; மேலான

வர். தாம் அவ்வியயர். சாசுவதமான தர்மத்தைரக்ஷிப்பவர். தாம் சநாதனர்; புருஷர் என்பது என் அபிப்பிராயம். (௧௮)

अनादिमध्यांतमनंतवीर्यमनंतबाहुं शशिसूर्यनेत्रम् ।
पश्यामि त्वां दीप्तहुताशवक्त्रं स्वतेजसा विश्वमिदं तपंतम् ॥ १९ ॥

[௩௫௫] ஆதிநடுவந்தமின்றிய அநந்தவீரியமுடையவராயும், அநந்தகரங்களுடையவராயும், சந்திரசூரியர்களான நேத்திரமுடையவராயும், ஜ்வலிக்கின்ற அக்னிமுகமுடையவராயும், தமது தேஜசால் இந்தவுலகைத்தபிக்கச் செய்பவராயும் தம்மைக்

காண்கின்றேன். (௧௧)

द्यावापृथिव्योरिदमंतरं हि व्याप्तं त्वयैकेन दिशश्च सर्वाः ।
दृष्ट्वाऽद्भुतं रूपमुग्रं तवेदं लोकत्रयं प्रव्यथितं महात्मन् ॥ २० ॥

[சங்கர] மகாத்மாவே! தம்மொருவராலேயே விண்ணிற்கும் மண்ணிற்குமிடையும் (அந்தரிக்ஷமும்) சகல திக்குகளும் வியாபிக்கப்பட்டிருக்கின்றன. தம்முடைய இந்த அற்புதமும் உக்கிரமுமான உருவத்தைக்கண்டு மூன்றுலகமும் மிகப்பீடிக்கப்பட்டிருக்கின்றன. (௨௦)

अमी हि त्वां सुरसंघा विशंति केचिद्भीताः प्रांजलयो गृणंति ।
स्वस्तीत्युक्त्वा महर्षिसिध्दसंघाः स्तुवंति त्वां स्तुतिभिः पुष्कलाभिः ॥

[௨௧] இந்தத்தேவக்கூட்டங்கள் தம்மையே அடைகிறார்கள். சிலர் பயத்தோடுகூடிக்கைகூப்பியவராய்த் துதிக்கின்றனர். மகரிஷிசித்தர்களது கூட்டம்சுவஸ்தி (சுபமுண்டாகுக) என்று கூறித் தம்மை வெகுஸ்துதிகளால் ஸ்துதிக்கின்றார்கள். (௨௧)

रुद्रादित्या वसवो ये च साध्या विश्वेऽश्विनौ मरुतश्चोष्मपाश्च ।
गंधर्वयक्षासुरसिध्दसंघा वीक्षंते त्वां विस्मिताश्चैव सर्वे ॥ २२ ॥

[௪௩௯] (௧௧)ருத்திரர், (௧௨)ஆதித்தியர், (௮)வசுக்கள், (௧௨) சாத்தியர், (௧௦)விசுவேதேவர்கள், (௨)அசுவினிகுமாரர், (௪௯)மருத்துக்கள் உஷ்ணபானஞ்செய்யும் பிதிரர், கந்தர்வ யக்ஷாசுர சித்தக்கூட்டங்கள் எவர்களோ அவர்களெல்லோருமே ஆச்சரியமடைந்தவராய்த் தம்மைக் காண்கின்றார்கள். (௨௨)

रूपं महत्ते बहुवक्त्रनेत्रं महाबाहो बहुबाहूरुपादम् ।
बहूदरं बहुदंष्ट्राकरालं दृष्ट्वा लोकाः प्रव्यथितास्तथाऽहम् ॥ २३ ॥

[௪௩௭] மகாபாகுவே! வெகுமுகங்களும் நேத்திரங்களுமுடையதும், வெகுபுஜங்கள் தொடைகள் பாதங்களையுடையதும்,

வெகுவயிறுகளுடையதும், வெகுபற்களினால் கோரமுடைய துமான தமது பெருத்த வடிவத்தைப் பார்த்து உலகத்தினரும் அப்படியே யானும் மிகத்துன்புற்றவராகின்றோம். (உ௩)

नभःस्पृशं दीप्तमनेकवर्णं व्यात्ताननं दीप्तविशालनेत्रम् ।

दृष्ट्वा हि त्वां प्रव्यथितांतरात्मा धृतिं न विंदामि शमं च विष्णो ॥

[௨௩-அ] விஷ்ணுவே! ஆகாயத்தைதொடுவதும், மிகப்பிர காசிப்பதும், அநேக நிறமுடையதும், திறந்த வாயுடையதும், மிகப்பிரகாசிக்கும் விசால நேத்திரமுள்ளதுமான தமதுவடிவ

த்தைக்கண்டு; எதனல் மிகவருந்திய மனதுடையவனுயிருக்கின்றேனே, அதனல் தைரியத்தையும் சமத்தினை(மனவமைதியினை)யுமடையேன். (௨௪)

दंष्ट्राकरालानि च ते मुखानि दृष्ट्वैव कालानलसंनिभानि ।
दिशो न जाने न लभे च शर्म प्रसीद देवेश जगन्निवास ॥ २५ ॥

[சங்க] பயங்கரமானபற்களுடையதும் காலாக்கினிக்கொப்பானதுமான தமது முகங்களைப்பார்த்தவுடன் திக்குகள் தெரியவில்லை. சுகத்தையுமடையேன். தேவேசனே! ஜகந்நிவாசா! பிரசன்ன(சாந்தவடிவின)ராகுக. (௨௫)

अमी च त्वां धृतराष्ट्रस्य पुत्राः सर्वे सहैवावनिपालसंघैः ।
भीष्मो द्रोणः सूतपुत्रस्तथासौ सहास्मदीयैरपि योधमुख्यैः ॥ २६ ॥
वक्त्राणि ते त्वरमाणा विशंति दंष्ट्राकरालानि भयानकानि ।
केचिद्विलग्ना दशनांतरेषु संदृश्यंते चूर्णितैरुत्तमांगैः ॥ २७ ॥

[௪௪௦-௪௧] இந்தத்திருதராஷ்டிரரின் புத்திரர்கள் உலகாள்பவரின் கூட்டங்களுடனேயே எல்லோரும் விரைவுடையவர்களாய்த் தம்மிடத்துப்பிரவேசிக்கின்றார்கள். இப்பீஷ்மரும், துரோணரும், அப்படியே சூதபுத்திர(கர்ண)னும், எங்களவர்களாகிய முக்கியவீரர்களோடு தம்மையடைந்து கோரைப்

பற்களையுடைய பயங்கரமான தமது முகத்தில் பிரவேசிக்கின்றனர். சிலர்பொடிபட்ட சிரசுகளோடு தமது பற்களினிடைகளில் விசேஷமாக ஒட்டியிருப்பவர்களாகக் காணப்படுகின்றனர். ()

यथा नदीनां बहवोऽम्बुवेगाः समुद्रमेवाभिमुखा द्रवंति ।
तथा तवामी नरलोकवीरा विशंति वक्त्राण्यभिविज्वलंति ॥ २८ ॥

[சசஉ] எப்படி நதிகளின் வேகமுள்ள வெகுஜலங்கள் சமுத்திரத்தை எதிர்நோக்கியே ஓடுகின்றனவோ, அப்படி இந்நரலோக வீரர்கள் தமது எங்குமாய் ஜ்வலிக்கும் முகங்களில் பிரவேசிக்கின்றனர். (உஅ)

यथा प्रदीप्तं ज्वलनं पतंगा विशंति नाशाय समृद्धवेगाः ।
तथैव नाशाय विशंति लोकास्तवापि वक्त्राणि समृद्धवेगाः ॥ २९ ॥

[ச-ரு] எப்படி விட்டில்கள் மிகவேகமுள்ளனவாய் நாசத்தின்பொருட்டு மிகஜ்வலிக்கும் அக்கினியில் பிரவேசிக்கின்றனவோ, அப்படியே ஜனங்களும் மிக வேகமுடையவர்களாய் நாசத்தின்பொருட்டுத் தம்முடைய வாய்களில் பிரவேசிக்கின்றனர். (உக)

लेलिह्यसे ग्रसमानः समंताल्लोकान्समग्रान्वदनैर्ज्वलद्भिः ।
तेजोभिरापूर्य जगत्समग्रं भासस्तवोग्राः प्रतपंति विष्णो ॥ ३० ॥

[௪௪௪] விஷ்ணுவே! எல்லாலோகங்களையும் விழுங்குகின்றவராய் ஜ்வலிக்கும் முகங்களால் எப்புறத்தாலும் சுவைக்கின்றீர். சகல ஜகத்தையும் தேஜசுகளினால் நிரப்பித் தமது உக்கிரமான காந்திகள் மிகத் தபிக்கச்செய்கின்றன. (௩௦)

आख्याहि मे को भवानुग्ररूपो नमोऽस्तु ते देववर प्रसीद ।
विज्ञातुमिच्छामि भवंतमाद्यं न हि प्रजानामि तव प्रवृत्तिम् ॥

[௪௪௫] உக்கிர வடிவுடைய தாம் யார்? எனக்குச்சொல்லியருளல்வேண்டும். தேவசிரேஷ்டரே! தம்பொருட்டு நமஸ்காரம் உளதாகுக. பிரசன்னராகுக. தமது ஆதியான வடிவத்தை

அறியவிரும்புகிறேன். எதனாலெனின், தமது பிரவிருத்தி(செ
ய்கை)யை அறியேன். (௩௧)

॥ श्रीभगवानुवाच ॥

कालोऽस्मि लोकक्षयकृत्प्रवृद्धो लोकान्समाहर्तुमिह प्रवृत्तः ।
ऋतेऽपि त्वां नभविष्यंति सर्वे येऽवस्थिताः प्रत्यनीकेषु योधाः ॥

[௪௪௬] ஸ்ரீ பகவான் சொல்லாயினார்:—(அர்ஜுனா!) உலகத்தையழிக்கும் பிரசண்டகாலன் யான். இங்கு உலகத்தைச்சங்கரிக்கப் பிரவிருத்தித்திருக்கின்றேன். ஒவ்வொரு சேனையிலும் எவர்கள் யுத்தவீரர்களாய் நிலைத்திருக்கின்றனரோ, உன்

னையொழிந்த அவர்கள் யாவரும் இருக்கமாட்டார்கள். (௩௨)

तस्मात्त्वमुत्तिष्ठ यशो लभस्व जित्वा शत्रून्भुङ्क्ष्व राज्यं समृद्धम् ।
मयैवैते निहताः पूर्वमेव निमित्तमात्रं भव सव्यसाचिन् ॥ ३३ ॥

[சசஎ] ஆதலால் நீ எழுந்திரு. கீர்த்தியினையடை. சத்துருக்களை ஜயித்து நல்ல வளமுடைய இராஜ்யத்தினைப் புசிப்பாயாக. சவ்யசாசியே (இடதுகையினாலும் பாணப் பிரயோகஞ் செய்யு மியல்புடையோய்)! இவர்கள் முன்னரே என்னாலேயே கொல்லப்பட்டிருக்கின்றனர். நீ நிமித்தமாத்திரமாகக்கடவாய். (௩௩)

द्रोणं च भीष्मं च जयद्रथं च कर्णं तथाऽन्यानपि योधवीरान् ।
मया हतांस्त्वं जहि मा व्यथिष्ठा युध्यस्व जेताऽसि रणे सपत्नान् ॥

[சச-அ] என்னால் கொல்லப்பட்டவர்களாகிய துரோணரையும், பீஷ்மரையும், ஜயத்திரதனையும், கர்ணனையும், அப்படியே மற்றயுத்தவீரர்களையும் நீ கொல்லுவாயாக. கலங்காதே ; யுத்தஞ்செய்; போரில் சத்துருக்களை வெல்பவனுவாய். (ருச)

॥ संजय उवाच ॥

एतच्छ्रुत्वा वचनं केशवस्य कृतांजलिर्वेपमानः किरीटी ।
नमस्कृत्वा भूय एवाह कृष्णं सगद्गदं भीतभीतः प्रणम्य ॥ ३५ ॥

[சசகூ] சஞ்சயன் சொல்லலாயினன்:—கேசவருடைய இவ்வசனத்தைக்கேட்டு நடுக்கமுடையவனாய் அர்ஜுனன் கிருஷ்ணனை நமஸ்கரித்து மிகப்பயத்தை யடைந்தவனாய் மறுபடியுமே நன்றாய் வணங்கி கைகூப்பியவனாய்த் தழுதழுப்புடன் சொல்லுகின்றான். (கூரு)

॥ अर्जुन उवाच ॥

स्थाने हृषीकेश तव प्रकीर्त्या जगत्प्रहृष्यत्यनुरज्यते च ।
रक्षांसि भीतानि दिशो द्रवंति सर्वे नमस्यंति च सिद्धसंघाः ॥

[சடுo] அர்ஜுனன் சொல்லலாயினன்:—ஹிருஷீகேசரே!

தமது மிக்ககீர்த்தியினுல் (தம்மைமிகப்புகழ்தலால்) உலகு மிக்கக்களிக்கின்றது ; அநுராகத்தை (தம்மிடத்துத் தொடர்ந்தபிரீதியை)யடைகின்றது. இராக்ஷஸர்கள் பயமடைந்தவர்களாய்த் திக்குகளில் ஓடுகின்றனர். சித்தர்க் கூட்டங்களெல்லோரும் நமஸ்கரிக்கின்றனர். இது பொருத்தமுள்ளதாம். (௩௬)

कस्माच्च ते न नमेरन्महात्मन् गरीयसे ब्रह्मणोऽप्यादिकर्त्रे ।
अनन्त देवेश जगन्निवास त्वमक्षरं सदसत्तत्परं यत् ॥ ३७ ॥

[௩௭] மகாத்மாவே! அநந்தரே! தேவேசரே! ஜகந்நிவாசரே! மிகமேலானவராகிய பிரஹ்மாவுக்கும் ஆதிகர்த்தாவா

றிய தமக்கு எதனால் நமஸ்காரஞ்செய்யமாட்டார்கள்? (செய்ய வே செய்வார்கள்.) தாம் அக்கரமும் சத்தும் அசத்தும் அவற் றின்மேலானதும் எதுவோ அதுவும் ஆவீர். (௩௭)

त्वमादिदेवः पुरुषः पुराणस्त्वमस्य विश्वस्य परं निधानम् ।
वेत्ताऽसि वेद्यं च परं च धाम त्वया ततं विश्वमनन्तरूप ॥ ३८ ॥

[சுடுஉ] அநந்தவடிவரே! தாம் ஆதிதேவர்; புராண (பழை மையான) புருஷர்; தாம் இந்த ஜகத்திற்கு லயஸ்தானமாயும் அறிபவராயு மிருக்கின்றீர். அறியத்தக்கவரும், பரமந்தாம(மே லானநிலையின)ருமாயிருக்கின்றீர். தம்மால் உலகம் வியாபிக்க

ப்பட்டிருக்கின்றது. (௩௮)

वायुर्यमोऽग्निर्वरुणः शशांकः प्रजापतिस्त्वं प्रपितामहश्च ।
नमो नमस्तेऽस्तु सहस्रकृत्वः पुनश्च भूयोऽपि नमो नमस्ते ॥

[௪௫௩] வாயுவும், இயமனும், அக்கினியும், வருணனும், சந்திரனும், பிரஜாபதியும், பிரபிதாமகரும் (பிதாமகரான பிரஹ்மாவுக்குப் பிதாவும்) தாம். தமக்கு அநேகமுறை நமஸ்காரமுளதாகுக. நமஸ்காரமுளதாகுக. தமக்கு மறுபடியும் அடிக்கடி நமஸ்காரமுளதாகுக. நமஸ்காரமுளதாகுக. (௩௯)

नमः पुरस्तादथ पृष्ठतस्ते नमोऽस्तु ते सर्वत एव सर्व ।
अनंतवीर्यामितविक्रमस्त्वं सर्वं समाप्नोषि ततोऽसि सर्वः ॥ ४० ॥

[சரு௪] எல்லாமா யிருப்பவரே! தமக்கு முன்பாக நமஸ்காரமுளதாகுக. இனிப் பின்புறமாகவும் நமஸ்காரம். தம்பொருட்டு எப்புறத்தாலுமே நமஸ்காரம் உளதாகுக. தாம் அநந்த (அழியாத)வீரிய(சாமர்த்திய)மும் அளவற்ற பராக்கிரமமுமுடையவராய் எல்லாவற்றையும் செவ்வையாய் வியாபிக்கின்றீர். அதனால் எல்லாமாயிருக்கின்றீர். (௪௦)

सखेति मत्वा प्रसभं यदुक्तं हे कृष्ण हे यादव हे सखेति ।
अजानता महिमानं तवेदं मया प्रमादात्प्रणयेन वापि ॥ ४१ ॥

[சருரு] தம்முடைய இந்த மகிமையை அறியாத என்னால் தோழனென்று மதித்து, பிரமாதத்தி(சோர்வி)னாலும் பிரேமையினாலும் ஏ! கிருஷ்ணா! ஏ! யாதவா! ஏ! தோழா! என்று அநுசிதமான வார்த்தை எது சொல்லப்பட்டதோ. (சுக)

यच्चावहासार्थमसत्कृतोऽसि विहारशय्यासनभोजनेषु ।
एकोऽथवाप्यच्युत तत्समक्षं तत्क्षामये त्वामहमप्रमेयम् ॥

[சருசு] அச்சுதரே! அன்றியும், பரிகாசத்தின் பொருட்டு

விளையாட்டு படுக்கை ஆசனம் போஜன மென்பவற்றில் ஒருவ னாயிரு (தனித்திரு)க்கும் போதாவது அல்லது அப்பலர் முன் பாவது எந்த அவமதிப்பு செய்யப்பட்டதோ அதனை மன்னிக் கும்படி யான் அப்பிரமேயராகிய தம்மைகேட்கின்றேன். (௪௨)

पितासि लोकस्य चराचरस्य त्वमस्य पूज्यश्च गुरुर्गरीयान् ।
न त्वत्समोऽस्त्यभ्यधिकः कुतोऽन्यो लोकत्रयेऽप्यप्रतिमप्रभावः ॥

[சுநுள] உவமிக்கப்படாத சாமர்த்தியமுடையவரே! இச்ச ராசரமாகிய உலகத்திற்குத் தாம் பிதாவாயிருக்கின்றீர்; பூஜ் யராயிருக்கின்றீர்; மேலான குருவாயிருக்கின்றீர்; மூன் றுலக

த்தினும் தமக்குச் சரியானவன் வேறெவனுமில்லை; எனின், அதிகமானவன் எங்கிருந்திருப்பான்? (௪௩)

तस्मात्प्रणम्य प्रणिधाय कायं प्रसादये त्वामहमीशमीड्यम् ।
पितेव पुत्रस्य सखेव सख्युः प्रियः प्रियायार्हसि देव सोढुम् ॥

[௪௰௪] ஆதலால் சரீரத்தைத் தண்டஞ்சமர்ப்பித்துச் செவ்வையாய் வணங்கி யான் துதிக்கத்தக்கவரும் ஈசுவரனுமாகிய தம்மைச் சந்தோஷிப்பிக்கின்றேன். தேவனே! (என்பிழையைப்) புத்திரனுடையதைப் பிதாவைப்போலும், தோழனுடையதைத்தோழனைப்போலும், பிரியமுள்ளவளதைப் பிரி

யீனைப்போலும் பொறுத்தற்குரியவராயிருக்கின்றீர். (௪௪)

अदृष्टपूर्वं हृषितोऽस्मि दृष्ट्वा भयेन च प्रव्यथितं मनो मे ।
तदेव मे दर्शय देव रूपं प्रसीद देवेश जगन्निवास ॥ ४५ ॥

[௪௫] முன்காணாததைக் கண்டு சந்தோஷித்தவனாயிருக்கின்றேன். பயத்தினால் என் மனம் மிகத்துன்புறுகின்றது. எனக்கு அந்த(முந்திய)வடிவத்தினையே காட்டுவீராக. தேவனே! தேவேசனே! ஜகந்நிவாசா! அருள்புரிவீராக. (௪௫)

किरीटिनं गदिनं चक्रहस्तमिच्छामि त्वां द्रष्टुमहं तथैव ।
तेनैव रूपेण चतुर्भुजेन सहस्रबाहो भव विश्वमूर्ते ॥ ४६ ॥

[௪௯೦] யான் கிரீடியும், கதையினரும், சக்கரக்கையின ருமான தம்மை அப்படியே முன்னிருந்தவாறே தரிசிக்க விரும் புகின்றேன். ஆயிரம் புஜங்களுடையவரே! விசுவமூர்த்தியே! அந்நாற் புயமுடைய வடிவமாகவே ஆகுவீராக. (௪௬)

॥ श्रीभगवानुवाच ॥

मया प्रसन्नेन तवार्जुनेदं रूपं परं दर्शितमात्मयोगात् ।
तेजोमयं विश्वमनंतमाद्यं यन्मे त्वदन्येन न दृष्टपूर्वम् ॥ ४७ ॥

[௪௯௧] ஸ்ரீ பகவான் சொல்லலாயினார்:— அர்ஜுனா! பிர சன்னனாகிய என்னால் உனக்கு இம்மேலான வடிவம் எனது

யோகத்தினாற் காட்டப்பட்டது. தேஜோமயமும் எல்லாமும் அநந்தமும் ஆதிகாரணமுமான எனது வடிவம் எதுவோ அது உன்னையொழிந்த பிறரால் முன் பார்க்கப்பட்டதில்லை. (௪௭)

न वेदयज्ञाध्ययनैर्न दानैर्न च क्रियाभिर्न तपोभिरुग्रैः ।
एवंरूपः शक्य अहं नृलोके द्रष्टुं त्वदन्येन कुरुप्रवीर ॥ ४८ ॥

[௪௯௨] குருவீரனே! நரலோகத்தில் இத்தன்மைய வடிவுடைய யான் உனக்கந்நியமானவனால் வேதயஞ்ஞாத்தியயனங்களாலும் காணக்கூடியவனல்லன்; தானங்களாலும் அல்லன்; கிரியைகளாலுமல்லன்; உக்கிரமமான தபசுகளினாலுமல்லன்

(காணக்கூடியவனல்லன்). (௪௮)

मा ते व्यथा मा च विमूढभावो दृष्ट्वा रूपं घोरमीदृङ्ममेदम् ।
व्यपेतभीः प्रीतमनाः पुनस्त्वं तदेव मे रूपमिदं प्रपश्य ॥ ४९ ॥

[௪௯] என்னுடைய இத்தன்மையான இந்தக் கோரரூபத்தைக்கண்டு உனக்குத் துன்பம்வேண்டாம். விபரீதபாவனையுண்டாக வேண்டாம். பயமொழிந்தவனும் பிரீதியுள்ள மனனுடையவனுமாய் நீ மறுபடியும் அந்த(முன்னிருந்தான) இந்த(இப்போது காட்டும்) உருவத்தினையே பார். (௪௯)

॥ संजय उवाच ॥

इत्यर्जुनं वासुदेवस्तथोक्त्वा स्वकं रूपं दर्शयामास भूयः ।
आश्वासयामास च भीतमेनं भूत्वा पुनः सौम्यवपुर्महात्मा ॥ ५० ॥

[ஸஞ்ஜ] சஞ்சயன் சொல்லலாயினன்:— வாசுதேவன் அர்ஜுனனை நோக்கி இவ்வாறு கூறி, அப்படியே தமது வடிவத்தை மறுபடியும் காட்டினார். மகாத்மாவானவர் மறுபடியும் சாந்த சரீரமுடையவராகிப் பயமடைந்திருந்த இவனை அழைத்தார். (௫௦)

॥ अर्जुन उवाच ॥

दृष्ट्वेदं मानुषं रूपं तव सौम्यं जनार्दन ।
इदानीमस्मि संवृत्तः सचेताः प्रकृतिं गतः ॥ ५१ ॥

[௪௯௫] அர்ஜுனன் சொல்லலாயினன்:— ஜனார்த்தனரே! தம்முடைய இந்த சாந்தமான மானுடவடிவத்தைப்பார்த்து, இப்போது பிரசன்ன சித்தமுண்டான(வியாகுலமில்லாத)வனும் எனதியல்பையடைந்தவனுமாகி யிருக்கின்றேன். (௫௧)

॥ श्रीभगवानुवाच ॥

सुदुर्दर्शमिदं रूपं दृष्टवानसि यन्मम ।
देवा अप्यस्य रूपस्य नित्यं दर्शनकांक्षिणः ॥ ५२ ॥

[௪௯௬] ஸ்ரீபகவான் சொல்லலாயினார்:— எனது எந்த ரூபத்தைப் பார்த்தாயோ (அந்த) இது மிகவும் காணுதற்கரிய

தாம். தேவர்களும் நித்தியம் இந்த ரூபத்தைத் தரிசிக்கும் இச்சையுள்ளவர்களா யிருக்கின்றனர். (ருஉ)

नाहं वेदैर्न तपसा न दानेन न चेज्यया ।
शक्य एवंविधो द्रष्टुं दृष्टवानसि मां यथा ॥ ५३ ॥

[சகூஎ] எப்படி என்னை நீ பார்த்திருக்கின்றாயோ, இவ்விதமாக யான் வேதங்களாலும் காணக்கூடியவனல்லன். தபசினாலும் (காணக்கூடியவன்) அல்லன். தானத்தினாலும் (காணக்கூடியவன்) அல்லன். யாகத்தினாலும் (காணக்கூடியவன்) அல்லன். (ருங)

भक्त्या त्वनन्यया शक्य अहमेवंविधोऽर्जुन ।
ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परंतप ॥ ५४ ॥

[சகூஅ] அர்ஜுனா! பரந்தபனே! இத்தன்மையயான் அநந்யபக்தியினாற்றான் அறியவும் உண்மையாகக் காணவும் பிரவேசிக்கவும் கூடியவனாயிருக்கின்றேன். (ருச)

मत्कर्मकृन्मत्परमो मद्भक्तः संगवर्जितः ।
निर्वैरः सर्वभूतेषु यः स मामेति पांडव ॥ ५५ ॥

[சகூக] பாண்டவ! எவன் என்னைப்பற்றிய கர்மஞ்செய்பவனும் என்னை மேலாகக் கொண்டவனும் சங்கமொழிந்தவ

னும் என்னுடைய பக்தனும், எல்லா ஜீவர்களிடத்தும் வைரமில்லாதவனுமாயிருக்கின்றானோ, அவன் என்னையடைகின்றான். (௫௫)

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु
श्रीकृष्णार्जुनसंवादे
एकादशोऽध्यायः

இவ்வாறு ஸ்ரீபகவத்கீதையாகிய உபநிஷத்தில்
ஸ்ரீகிருஷ்ணார்ஜுனசம்வாதத்தில்
பதினோராம் அத்தியாயம் முடிந்தது.

|| ॐ ||

|| द्वादशोऽध्यायः ||

பன்னிரண்டாம் அத்தியாயம்.

|| भक्तियोगः ||

பக்தியோகம்.

|| अर्जुन उवाच ||

एवं सततयुक्ता ये भक्तास्त्वां पर्युपासते ।
ये चाप्यक्षरमव्यक्तं तेषां के योगवित्तमाः || १ ||

[௪௭௦] அர்ஜுனன் சொல்லலாயினன்:—இப்படி இடை-

விடாது ஏகாக்கிரமனதுடையவர்களாய் எந்தப் பக்தர்கள் தம்மையுபாசிக்கின்றார்களோ, எவர்கள் அக்ஷரமும் அவ்வியக்த (இந்திரியாதிகட்கு விஷயமாகாத நிர்குணப்பிரஹ்ம)முமான வஸ்துவை உபாசிக்கின்றார்களோ, அவர்களுள், எவர் யோகமுணர்ந்த சிரேஷ்டராவர்? (௧)

॥ श्रीभगवानुवाच ॥

मय्यावेश्य मनो ये मां नित्ययुक्ता उपासते ।
श्रद्धया परयोपेतास्ते मे युक्ततमा मताः ॥ २ ॥

[சனக] ஸ்ரீபகவான் சொல்லலாயினார்:— எவர்கள் என்னி

டத்து மனதைச் செலுத்தி, நித்தியம் ஒருமித்தமனமுடையவர்களாய், மேலான சிரத்தையோடுகூடியவர்களாய் என்னை உபாசிக்கின்றார்களோ, அவர்கள் மிகுந்த(பக்தி)யோகமுடையவர்கள் என்பது என் கருத்து. (௨)

ये त्वक्षरमनिर्देश्यमव्यक्तं पर्युपासते ।
सर्वत्रगमचिंत्यं च कूटस्थमचलं ध्रुवम् ॥ ३ ॥
संनियम्येन्द्रियग्रामं सर्वत्र समबुद्धयः ।
ते प्राप्नुवंति मामेव सर्वभूतहिते रताः ॥ ४ ॥

[௩௭௨-௭௩] ஆனால் எவர்கள் இந்திரியசமூகத்தைச் செவ்

வையாய் அடக்கி, எங்கும் சம(பிரஹ்ம)புத்தியுடையவராய், சர்வஜீவர்களது நலத்திலும் பிரீதியுடையவர்களாய்ச் சொல்லக்கூடாததும், அவ்யக்தமும்(வெளிப்படாததும்), சிந்திக்கக் கூடாததும், எங்குமிருப்பதும், நிர்விகாரமும், அசலமும், நித்தியமுமான வஸ்துவை உபாசிக்கின்றார்களோ, அவர்கள் என்னையே அடைகின்றனர். (௩-௪)

क्लेशोऽधिकतरस्तेषामव्यक्तासक्तचेतसाम् ।
अव्यक्ता हि गतिर्दुःखं देहवद्भिरवाप्यते ॥ ५ ॥

[௪௭௪] அவ்வியக்தத்தில் பிரீதியுள்ள சித்தத்தினராகிய

அவர்களுக்கு மிகுந்த கிலேசமேயுள்ளது. ஏனெனில், தேகமுடையவர்களால் அவ்வியக்தமாகிய கதி வருத்தத்தோடு அடையப்படுகின்றது. (௫)

ये तु सर्वाणि कर्माणि मयि संन्यस्य मत्पराः ।
अनन्येनैव योगेन मां ध्यायंत उपासते ॥ ६ ॥

तेषामहं समुद्धर्ता मृत्युसंसारसागरात् ।
भवामि नचिरात्पार्थ मय्यावेशितचेतसाम् ॥ ७ ॥

[சஎடு-எசு] ஆனால் எவர்கள் எல்லாக் கர்மங்களையும் என்னிடத்து விட்டு, என்னிடத்துத் தற்பரர்களாய், அநந்நியமான

யோகத்தினால் என்னையே தியானிக்கின்றவர்களாய் உபாசிக்கின்றார்களோ, பார்த்த! அந்த என்னிடத்துப் பிரவேசித்த சித்தமுடையவர்களுக்கு யான் மிருத்யுவடிவ சம்சாரசாகரத்தினின்றும் விரைவில் கரையேற்றுபவனாகின்றேன். (௬-௭)

मय्येव मन आधत्स्व मयि बुद्धिं निवेशय ।
निवसिष्यसि मय्येव अत ऊर्ध्वं न संशयः ॥ ८ ॥

[சஎஎ] மனதை என்னிடத்திலேயே நிறுத்து. புத்தியை என்னிடத்துச்செலுத்து. இதற்குமேல்(தேகாந்தத்தில்) என்னிடத்திலேயே நிரந்தரம் வசிப்பாய்; சம்சயம் இல்லை. (அ)

अथ चित्तं समाधातुं न शक्नोषि मयि स्थिरम् ।
अभ्यासयोगेन ततो मामिच्छाप्तुं धनंजय ॥ ९ ॥

[௭௯௮] தனஞ்சயனே! எப்போது என்னிடத்துச் சித்தத்தை ஸ்திரமாக வைத்தற்கு முடியவில்லையோ, அப்போது அப்பியாசயோகத்தினல் என்னை அடைய இச்சி. (௯)

अभ्यासेऽप्यसमर्थोऽसि मत्कर्मपरमो भव ।
मदर्थमपि कर्माणि कुर्वन्सिद्धिमवाप्स्यसि ॥ १० ॥

[௭௯௯] அப்பியாசத்திலும் சாமர்த்தியமில்லாதவனயிருக்கின், என்பொருட்டான கர்மங்களை மேலாகக்கொண்டவனுக

க்கடவாய். என்பொருட்டு (சிரவணகீர்த்தனாதி) கர்மங்களைச் செய்தும் சித்தியை அடைவாய். (௧௦)

अथैतदप्यशक्तोऽसि कर्तुं मद्योगमाश्रितः ।
सर्वकर्मफलत्यागं ततः कुरु यतात्मवान् ॥ ११ ॥

[சஅ௦] இதுவும் செய்யக்கூடாதவனாயின், அப்போது என் விஷயமான யோகத்தை ஆசிரயித்தவனாய் மனதை யடக்கியவனாய்ச் சர்வ கர்மங்களின் பலத்தின் தியாகத்தைச் செய்வாயாக. (௧௧)

श्रेयो हि ज्ञानमभ्यासाज्ज्ञानाद्ध्यानं विशिष्यते ।
ध्यानात्कर्मफलत्यागस्त्यागाच्छांतिरनंतरम् ॥ १२ ॥

[௪௮௧] (ஞானார்த்தசிரவணமாகிய)அப்பியாசத்திலும் ஞான(சப்தயுக்திகளாலாம் ஆத்மநிச்சய)மே மேலானது. ஞானத்திலும்(நிச்சயபூர்வகமான)தியானம் விசேஷிக்கின்றது. தியானத்திலும் கர்மபலத்தியாகம் சிரேஷ்டம். (ஈசுவரனிடத்தில் கர்மபலத்தை சமர்ப்பித்தலாகிய)தியாகத்தினின்றும்(ஈசுவரப்பிரசாதத்தால் ஞானம் கிடைத்தலின்)சீக்கிரமாகவே சாந்தி(முக்தி)யுண்டாகின்றது. (௧௨)

अद्वेष्टा सर्वभूतानां मैत्रः करुण एव च ।
निर्ममो निरहंकारः समदुःखसुखः क्षमी ॥ १३ ॥

[௪௮௨] (எவன்) சர்வபூதங்களின் துவேஷமில்லாதவனும், மைத்திரியுடையவனும், கருணையுடையவனும், எனது என்பது இல்லாதவனும், அகங்காரமில்லாதவனும், துக்கசுகங்களில் சமமுடையவனும் க்ஷமையுடையவனும், (௧௩)

सन्तुष्टः सततं योगी यतात्मा दृढनिश्चयः ।
मय्यर्पितमनोबुद्धिर्यो मे भक्तः स मे प्रियः ॥ १४ ॥

[௪௮௩] எவன் எப்போதும் சந்தோஷமுடையவனும், யோகியும், அடங்கிய கரணமுடையவனும், திடநிச்சயமுடையவனும், என்னிடத்தர்ப்பணஞ்செய்யப்பட்ட மனோபுத்தியுடை

யவனும், என்னுடைய பக்தனுமாயிருக்கின்றானோ, அவன் எனக்குப் பிரியன். (௧௪)

यस्मान्नोद्विजते लोको लोकान्नोद्विजते च यः ।
हर्षामर्षभयोद्वेगैर्मुक्तो यः स च मे प्रियः ॥ १५ ॥

[ச அச] எவனிடத்தினின்றும் உலகம் வியாகுலத்தையடைகிறதில்லையோ, எவன் உலகத்தினின்றும் மனக்கொதிப்பை அடைகிறதில்லையோ, எவன் சந்தோஷம் குரோதம் பயம் வியாகுலமென்பவற்றினின்றும் விடுபட்டவனாகின்றானோ, அவன் எனக்குப் பிரியன். (௧௫)

अनपेक्षः शुचिर्दक्ष उदासीनो गतव्यथः ।
सर्वारंभपरित्यागी यो मद्भक्तः स मे प्रियः ॥ १६ ॥

[௪௧௬] எவன் அபேக்ஷையில்லாதவனாய், சுசியாய், சமர்த்தனாய், உதாசீனனாய், பயநீங்கியவனாய், எல்லாச்செய்கைகளையும் விட்டவனாய், என்பக்தனாயிருக்கின்றானோ, அவன் எனக்குப் பிரியன். (௧௬)

यो न हृष्यति न द्वेष्टि न शोचति न कांक्षति ।
शुभाशुभपरित्यागी भक्तिमान्यः स मे प्रियः ॥ १७ ॥

[௪௧௭] எவன் மகிழ்கிறதில்லையோ, துவேஷிக்கிறதில்லையோ,

சோகிக்கிறதில்லையோ, இச்சிக்கிறதில்லையோ, எவன் சுபா சுபங்களை விட்டவனாய்ப் பக்திமானாயிருக்கின்றானோ, அவன் எனக்குப் பிரியன். (௧௭)

समः शत्रौ च मित्रे च तथा मानापमानयोः ।
शीतोष्णसुखदुःखेषु समः संगविवर्जितः ॥ १८ ॥

[௪௮௭] அன்றியும், சத்துருவினிடத்தும், மித்திரனிடத்தும் சமனாயிருக்கின்றானோ, அப்படியே மானவமானங்களிலும், சீதோஷ்ண சுகதுக்கங்களிலும் சமனாய்ச்சங்கமில்லாதவனாயிருக்கின்றானோ, (௧௮)

तुल्यनिंदास्तुतिर्मौनी संतुष्टो येनकेनचित् ।
अनिकेतः स्थिरमतिर्भक्तिमान्मे प्रियो नरः ॥ १९ ॥

[௪அஅ] நிந்தைஸ்துதிகளில் சமமானவனும், மௌனியும், (கிடைத்த)யாதேனுமொன்றினால் சந்தோஷமு(திருப்தியு)ள்ளவனும், வீடில்லாதவனும், நிலைத்தவறிவுடையவனும், பக்திமானுமாகிய நரன் எனக்குப் பிரியன். (கக)

ये तु धर्म्यामृतमिदं यथोक्तं पर्युपासते ।
श्रद्दधाना मत्परमा भक्तास्तेऽतीव मे प्रियाः ॥ २० ॥

[௪அகூ] ஆனால் எவர்கள் சிரத்தையுடையவர்களும் என்னைப் பரமகதியாயுடையவர்களுமாய் இந்தச் சொல்லியபடி

யான தர்மமுடைய அமிர்தத்தை உபாசிக்கின்றார்களோ அந்தப் பக்தர்கள் எனக்கு மிகவும் பிரியமானவர்கள். (௨௦)

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु
श्रीकृष्णार्जुनसंवादे
द्वादशोऽध्यायः

இவ்வாறு ஸ்ரீபகவத்கீதையாகிய உபநிஷத்தில்
ஸ்ரீகிருஷ்ணார்ஜுனசம்வாதத்தில்
பன்னிரண்டாம் அத்தியாயம் முடிந்தது.

इति द्वितीयमुपासनाषट्कं समाप्तम्
இவ்வாறு இரண்டாவது உபாஸனஷட்கம் முடிந்தது.

॥ ॐ ॥

॥ त्रयोदशोऽध्यायः ॥

பதின்மூன்றும் அத்தியாயம்.

॥ क्षेत्रक्षेत्रज्ञविभागयोगः ॥

க்ஷேத்திரக்ஷேத்திரஞ்ஞவிபாகயோகம்.

॥ अत्र क्षिप्तः श्लोकः ॥

॥ अर्जुन उवाच ॥

प्रकृतिं पुरुषं चैव क्षेत्रं क्षेत्रज्ञमेव च ।
एतद्वेदितुमिच्छामि ज्ञानं ज्ञेयं च केशव ॥ १ ॥

*அர்ஜுனன் சொல்லலாயினன்:— கேசவரே (பிரஹ்மாவையும் ஈசனையும் வசமாகவுடையவரே)! பிரகிருதியினையும், புருஷனையும், க்ஷேத்திரத்தையும், க்ஷேத்திரஞ்ஞனையும், ஞானத்தினையும், இந்த ஞேயத்தினையும் அறியவிரும்புகிறேன். (௧)

॥ श्रीभगवानुवाच ॥

इदं शरीरं कौंतेय क्षेत्रमित्यभिधीयते ।
एतद्यो वेत्ति तं प्राहुः क्षेत्रज्ञ इति तद्विदः ॥ १ ॥

---

*இந்தச்சுலோகம் சில பிரதிகளில் இல்லாமையாலும் எ௦௦-க்கு மேற்படுதலாலும் அதிகமெனத் தெரிகிறது.

[சக்ஷ௦] ஸ்ரீ பகவான் சொல்லலாயினார்:-கௌந்தேயா! இந்தச் சரீரம் க்ஷேத்திரம் என்று சொல்லப்படுகின்றது. இதனை எவன் அறிகின்றானோ, அவனை க்ஷேத்திரஞ்ஞனென்று அவற்றையறிந்தவர் கூறுவர். (௧)

क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत ।
क्षेत्रक्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम ॥ २ ॥

[சக்ஷ௧] பாரத! அன்றியும் சகலக்ஷேத்திரங்களிலும்(உள்ள)க்ஷேத்திரஞ்ஞனாகவும் என்னை அறி. க்ஷேத்திர க்ஷேத்திரஞ்ஞர்களின்ஞானமெதுவோ அது (தான்) ஞானம் என்பது என் கருத்து. (௨)

तत्क्षेत्रं यच्च यादृक् च यद्विकारि यतश्च यत् ।
स च यो यत्प्रभावश्च तत्समासेन मे शृणु ॥ ३ ॥

[௪௯௨] அந்த க்ஷேத்திரம் யாதாய், எத்தன்மையதாய், எவ்விகாரமுடையதாய் (இருக்கிறதோ), எதனினின்றும் எதுவாய் (உண்டாகிறதோ), அவன் (க்ஷேத்திரஞ்ஞன்) எவனாய், எவ்வல்லமையுடையவனாயிருக்கின்றானோ, அதனைச்சுருக்கமாய் என்னிடமிருந்து கேள். (௩)

ऋषिभिर्बहुधा गीतं छंदोभिर्विविधैः पृथक् ।
ब्रह्मसूत्रपदैश्चैव हेतुमद्भिर्विनिश्चितैः ॥ ४ ॥

[௪௯௩] (இந்தக்ஷேத்திரக்ஷேத்திரஞ்ஞர்களது சொரூபம்) இருஷிகளால் வெகுவிதமாய்ப் பாடப்பட்டுள்ளது. நாநாவித சந்தசுகளாகிய வேதங்களாலும் வெவ்வேறு விதமாகத் தனித் தனி பாடப்பட்டுள்ளது. ஹேதுக்களுடையனவும் செவ்வையாய் நிச்சயிக்கப்பட்டனவுமாகிய பிரஹ்மசூத்திரபதங் (பிரஹ்மத்தைக் குறிக்கும்சொற்)களாலேயே பாடப்பட்டுள்ளது.

महाभूतान्यहंकारो बुद्धिरव्यक्तमेव च ।
इंद्रियाणि दशैकं च पंच चेंद्रियगोचराः ॥ ५ ॥

इच्छा द्वेषः सुखं दुःखं संघातश्चेतना धृतिः ।
एतत्क्षेत्रं समासेन सविकारमुदाहृतम् ॥ ६ ॥

[௪௬௪-௪௬௫] மகாபூதங்கள், அகங்காரம், புத்தி, அவ்விய க்தம்,(ச்ரோத்திராதி)பத்தும்(மனது)ஒன்று மாகிய இந்திரிய ங்கள், ஐந்து இந்திரியவிஷயங்கள், இச்சை, துவேஷம், சுகம், துக்கம், சங்காதம் (தேகேந்திரியங்களின் கூட்டம்), சேதனை (அறிவு), தைரியம் என்னும் இந்தக்ஷேத்திரம் விகாரத்தோடு சுருக்கமாகச் சொல்லப்பட்டது. (௫-௬)

अमानित्वमदंभित्वमहिंसा क्षांतिरार्जवम् ।

आचार्योपासनं शौचं स्थैर्यमात्मविनिग्रहः ॥ ७ ॥

[௪௬௬] மானமுடைமையின்மையும், தம்பமுடைமையின்

மையும், இம்ஸையில்லாமையும், பொறையும், நேர்மையும், ஆசாரியசேவையும், சௌசமும், ஸ்திரத்துவமும், ஆத்மநிக்கிரகமும் (ஆத்மாவுக்கு உபகாரகங்களான காரியகாரண சங்காதங்களை யடக்குதலும்), (௭)

इंद्रियार्थेषु वैराग्यमनहंकार एव च ।
जन्ममृत्युजराव्याधिदुःखदोषानुदर्शनम् ॥ ८ ॥

[அகூ] இந்திரியார்த்தங்களில் வைராக்கியமும், அகங்காரமின்மையும், ஜன்மமரண ஜராவியாதி துக்கதோஷங்களைத் தொடர்ந்து காணுதலும், (அ)

असक्तिरनभिष्वंगः पुत्रदारगृहादिषु ।
नित्यं च समचित्तत्वमिष्टानिष्टोपपत्तिषु ॥ ९ ॥

[௪௯௮] புத்திரதார கிருகாதிகளில் பற்றில்லாமையும், அபிமானமின்மையும், நித்தியமும் இஷ்டாநிஷ்டங்(அநுகூலப்பிரதிகூலமானவை)களினடைவில் சமசித்தமுடைமையும், (௯)

मयि चानन्ययोगेन भक्तिरव्यभिचारिणी ।
विविक्तदेशसेवित्वमरतिर्जनसंसदि ॥ १० ॥

[௪௯௯] என்னிடத்தில் அநந்நியயோகத்தினால் வியபிசாரமின்றிய பக்தியும், தனியிடத்தைச் சேவிக்குந்தன்மையும், ஜனங்களின் கூட்டத்தில் உருசியின்மையும், (௰)

अध्यात्मज्ञाननित्यत्वं तत्त्वज्ञानार्थदर्शनम् ।
एतज्ज्ञानमिति प्रोक्तमज्ञानं यदतोऽन्यथा ॥ ११ ॥

[௫௦௦] அத்தியாத்மஞானநித்தியத்தன்மை(ஆத்மாநாத்மவிவேகத்தில் நிஷ்டையுடைமை)யும், தத்துவஞானத்தின் பிரயோஜனத்தைக்காணுதலுமாகிய இதுஞான(ஞானசாதன)மாமென்று சொல்லப்பட்டது. இதனின் விபரீதமானது எதுவோ அது அஞ்ஞானமாம். (௧௧)

ज्ञेयं यत्तत्प्रवक्ष्यामि यज्ज्ञात्वाऽमृतमश्नुते ।
अनादिमत्परं ब्रह्म न सत्तन्नासदुच्यते ॥ १२ ॥

[௫௦௧] எதனை அறிந்து (நான்) அமிர்தத்தைப்புசிப்பானோ

அத்தன்மையஜ்ஞேயம் (அறியத்தக்கபொருள்) எதுவோ அதனை ச்சொல்லுகிறேன். அது அநாதியுடைய பரமாம், பிரஹ்மமாம், சத்து (ஸ்தூலமு) மன்று அசத்து (சூக்ஷ்மமு) மன்று என்று சொல்லப்படுகின்றது. (கஉ)

सर्वतःपाणिपादं तत्सर्वतोऽक्षिशिरोमुखम् ।
सर्वतः श्रुतिमल्लोके सर्वमावृत्य तिष्ठति ॥ १३ ॥

[ருoஉ] அஃது எப்புறத்தானும் கைகால்களுடையது. எப்புறத்தானும் கண்சிரமுகங்களுடையது. எல்லாப்புறத்தானும் காதுடையது. உலகத்தில் எல்லாவற்றையும் நன்றாய் வியாபித்துநிற்கின்றது. (கங)

सर्वेंद्रियगुणाभासं सर्वेंद्रियविवर्जितम् ।
असक्तं सर्वभृच्चैव निर्गुणं गुणभोक्तृ च ॥ १४ ॥

[௫௦௩] எல்லா இந்திரியங்களையும் விஷயங்களையும் வியாபித்தது போல எல்லாமாய்விளங்குவதும், எல்லா இந்திரியங்களினீங்கியதும், சம்பந்தமின்றியதும், எல்லாவற்றையும் தாங்குவதும், நிர்க்குணமும், குணபோக்தாவுமாம். (௧௪)

बहिरंतश्च भूतानामचरं चरमेव च ।
सूक्ष्मत्वात्तदविज्ञेयं दूरस्थं चांतिके च तत् ॥ १५ ॥

[௫௦௪] அதுவே பூதங்களுக்கு வெளியானதும், உள்ளானதும், அசரமும், சரமும், சூக்ஷ்மமாயிருத்தலின் ஞானத்திற்கு

விஷயமாகாததுமாம். அது தூரத்திருப்பதும், சமீபத்திருப்பதுமாம். (௧௫)

अविभक्तं च भूतेषु विभक्तमिव च स्थितम् ।
भूतभर्तृ च तज्ज्ञेयं ग्रसिष्णु प्रभविष्णु च ॥ १६ ॥

[௩௦௩] அந்த ஞேயம் பூதங்களில் பிரிபடாததும் பிரிக்கப்பட்டதுபோல் நிற்பதும், பூதங்களைத் தாங்குவதும், விழுங்குவதும், உற்பத்திசெய்வதுமாம். (௧௬)

ज्योतिषामपि तज्ज्योतिस्तमसः परमुच्यते ।
ज्ञानं ज्ञेयं ज्ञानगम्यं हृदि सर्वस्य धिष्ठितम् ॥ १७ ॥

[௫௦௬] அது ஜோதிகட்கெல்லாம் ஜோதியும், இருளைக்கடந்தது மென்று சொல்லப்படுகின்றது. ஞான(சேதனஸ்வரூப)மும், ஞேயமும்(விருத்திவியாப்தியாலறியப்படுவதும்),(அகம் பிரஹ்மாஸ்மி விருத்தியாகிய)ஞானத்தினலடையப்படுவதும், எல்லோருடைய இருதயத்திலும் நிற்பதுமாம். (௧௭)

इति क्षेत्रं तथा ज्ञानं ज्ञेयं चोक्तं समासतः ।
मद्भक्त एतद्विज्ञाय मद्भावायोपपद्यते ॥ १८ ॥

[௫௦௭] இவ்வாறு க்ஷேத்திரமும், அப்படியே ஞானமும், ஞேயமும் சுருக்கமாகச் சொல்லப்பட்டன. எனது பக்தன் இதனை அறிந்து எனதுஸ்வரூபமாதற்குத்தக்கவனாகின்றான்.()

प्रकृतिं पुरुषं चैव विद्ध्यनादी उभावपि ।
विकारांश्च गुणांश्चैव विद्धि प्रकृतिसंभवान् ॥ १९ ॥

[ரு௦அ] பிரகிருதியும் புருஷனுமாகிய இரண்டனையும் அநாதியென்றே அறி. விகாரங்களையும் குணங்களையும் பிரகிருதியினின்றுண்டானவைகளாகவே அறி. (கக)

कार्यकारणकर्तृत्वे हेतुः प्रकृतिरुच्यते ।
पुरुषः सुखदुःखानां भोक्तृत्वे हेतुरुच्यते ॥ २० ॥

[ரு௦க] (சரீரமும் அதன் ஆரம்பகமான பஞ்சபூத பஞ்சவிஷயங்களான) காரிய (அந்தக்கரணம் தசேந்திரியம் அவற்றின்

ஆசிரிதமான சுகதுக்கமோகரூப குணமயமான)காரண(அல்ல து கரண)ங்களின் கர்த்திருத்தன்மையில் பிரகிருதி ஏதுவென் று சொல்லப்படுகின்றது. சுகதுக்கங்களின் போக்திருத்த மையில் புருஷன் ஏதுவாகச்சொல்லப்படுகின்றான்.

पुरुषः प्रकृतिस्थो हि भुङ्क्ते प्रकृतिजान्गुणान् ।
कारणं गुणसंगोऽस्य सदसद्योनिजन्मसु ॥ २१ ॥

மாகிய) ஆத்

காரபுத்தியாகி

[௫௰] புருஷன் பிரகிருதியிலிருப்பவன பிறன்றான் றினகுணங்களைப்புசிக்கின்றான் சாங்கியயோகத்தின (நல்லனவும் தீயனவுமானபிறப்பு)களில் மற்றும்சிலரோ இவ் குக் குணசங்கம் காரணமாகின்றது. து கேட்டும் உபாசி

उपद्रष्टानुमंता च भर्ता भोक्ता महेश्वरः ।
परमात्मेति चाप्युक्तो देहेऽस्मिन्पुरुषः परः ॥ २२ ॥

[ருகக] இந்தத்தேகத்தில் புருஷன் பரன். அவன் உபதிருஷ்டா, அநுமந்தா (அநுமதிகொடுப்பவன்), பர்த்தா, போக்தா, மகேசுவரன், பரமாத்மா என்றும் சொல்லப்படுகின்றான். ()

य एवं वेत्ति पुरुषं प्रकृतिं च गुणैः सह ।
सर्वथा वर्तमानोऽपि न स भूयोऽभिजायते ॥ २३ ॥

[ருகஉ] எவன் இப்படிப் புருஷனையும் குணங்களோடு பிரகிருதியையும் அறிகின்றானோ, அவன் எவ்விதமாயிருப்பவனாயினும் மறுபடியும் ஜன்மத்தையடையான். (உங)

ध्यानेनात्मनि पश्यंति केचिदात्मानमात्मना ।
अन्ये सांख्येन योगेन कर्मयोगेन चापरे ॥ २४ ॥
अन्ये त्वेवमजानंतः श्रुत्वान्येभ्य उपासते ।
तेऽपि चातितरंत्येव मृत्युं श्रुतिपरायणाः ॥ २५ ॥

[௨௧௩-௨௧௪] சிலர் தியானத்தினால் (பிரஹ்மமாகிய) ஆத்மாவினிடத்து (கூடஸ்த) ஆத்மாவினை (பிரஹ்மாகாரபுத்தியாகிய) ஆத்மாவினால் பார்க்கின்றார்கள். பிறர்சாங்கியயோகத்தினாலும், வேறு சிலர் கர்மயோகத்தினாலும், மற்றும்சிலரோ இவ்வாறு அறியாதவர்களாய்ப் பிறரிடத்திருந்து கேட்டும் உபாசி

க்கின்றார்கள். கேள்வியினை மேலானசாதனமாகக் கொண்ட அவர்களும் மிருத்தியுவினையே கடக்கின்றார்கள். (உசு-உரு)

यावत्संजायते किंचित्सत्वं स्थावरजंगमम् ।
क्षेत्रक्षेत्रज्ञसंयोगात्तद्विद्धि भरतर्षभ ॥ २६ ॥

[ருகரு] பாதசிரேஷ்டனே! எவ்வளவு ஸ்தாவர சங்கமவடிவ பிராணியுண்டாகின்றதோ அது க்ஷேத்திர க்ஷேத்திரஞ்ஞர்களின் ஸம்யோகத்தாலென்றறி. (உசு)

समं सर्वेषु भूतेषु तिष्ठंतं परमेश्वरम् ।
विनश्यत्स्वविनश्यंतं यः पश्यति स पश्यति ॥ २७ ॥

[௫௧௯] நசிப்பனவாகிய எல்லாப்பூதங்களிடத்தும் சமமாய் நிற்பவரும், நாசமில்லாதவருமாகிய பரமேசுவரனை எவன் காண்கின்ருனே, அவன் காண்கின்ருன். (௨௭)

समं पश्यन् हि सर्वत्र समवस्थितमीश्वरम् ।
नहिनस्त्यात्मनाऽऽत्मानं ततो याति परां गतिम् ॥ २८ ॥

[௫௨௦] எங்கும் சமமாகச் செவ்வையாய் நிலைத்திருக்கும் ஈசுவரனைக்காண்பவனாய், எதனால் ஆச்மாவினால் ஆத்மாவினைக்கொல்லுகிறதில்லையோ, அதனால் பரகதியை அடைகின்ருன். (௨௮)

प्रकृत्यैव च कर्माणि क्रियमाणानि सर्वशः ।
यः पश्यति तथात्मानमकर्तारं स पश्यति ॥ २९ ॥

[௩௧அ] பிரகிருதியினுலேயே எல்லாவிதத்தாலும் கர்மங்கள் செய்யப்படுவனவாக எவன் காண்கின்றானே, அப்படியே ஆத்மாவை அகர்த்தாவாகக்காண்கின்றானே, அவன் காண்கின்றான். (உகூ)

यदा भूतपृथग्भावमेकस्थमनुपश्यति ।
तत एव च विस्तारं ब्रह्म संपद्यते तदा ॥ ३० ॥

[௩௧க] எப்போது பூதங்களின் வேறுபட்ட தன்மையை ஞானமன் (அதிஷ்டான பிரஹ்மத்தின்) கணிருப்பதாகக்காண்கின்றானே, அத (அவ்வதிஷ்டான பிரஹ்மத்தி) னுலேயே விஸ்

ஹார(ஜக)த்தைக்காண்கின்றானோ, அப்போது பிரஹ்மத்தைய டைகின்றான். (௨௰)

अनादित्वान्निर्गुणत्वात्परमात्मायमव्ययः ।
शरीरस्थोऽपि कौंतेय न करोति न लिप्यते ॥ २१ ॥

[௫௨௦] கௌந்தேயா! அநாதியாயிருத்தலாலும், நிர்க்குண மாயிருத்தலாலும், இந்த அவ்வியயமான பரமாத்மா சரீரத்திருப்பவராயிருந்தும்(எதனையும்)செய்கிறதில்லை;(கர்மபயனால்) பற்றப்படுகிறதில்லை. (௨௰௧)

यथा सर्वगतं सौक्ष्म्यादाकाशं नोपलिप्यते ।
सर्वत्रावस्थितो देहे तथात्मा नोपलिप्यते ॥ २२ ॥

[ருஉக] எப்படி எல்லாவற்றினுமுள்ள ஆகாயம் சூக்ஷ்மத் தன்மையால் பற்றப்படுகிறதில்லையோ, அதுபோலஎங்கும் தேகத்திலிருக்கும் ஆத்மா பற்றப்படுகிறதில்லை. (௩௨)

यथा प्रकाशयत्येकः कृत्स्नं लोकमिमं रविः ।
क्षेत्रं क्षेत्री तथा कृत्स्नं प्रकाशयति भारत ॥ ३३ ॥

[ருஉஉ] பாரதா! எப்படி ஒரேசூரியன் இவ்வெல்லாலோகத்தையும் பிரகாசிக்கின்றுனே, அப்படி க்ஷேத்திரி(க்ஷேத்திரஞ்ஞன்)எல்லாக்ஷேத்திரத்தையும் பிரகாசிக்கின்றுன். (௩௩)

क्षेत्रक्षेत्रज्ञयोरेवमंतरं ज्ञानचक्षुषा ।
भूतप्रकृतिमोक्षं च ये विदुर्यांति ते परम् ॥ ३४ ॥

[ருஉரு] எவர்கள் க்ஷேத்திர க்ஷேத்திரஞ்ஞர்களின் பேதத்தினையும் பூதப்பிரகிருதி மோக்ஷ(பூதங்களது உபாதான காரணத்தின் நீக்க)த்தினையும் ஞானசக்ஷுவினால் இவ்வாறு அறிகின்றார்களோ, அவர்கள் பரத்தினை அடைகின்றனர். (ருச)

॥ इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ॥
॥ श्रीकृष्णार्जुनसंवादे ॥
॥ त्रयोदशोऽध्यायः ॥

இவ்வாறு ஸ்ரீபகவத்கீதையாகிய உபநிஷத்தில்
ஸ்ரீகிருஷ்ணார்ஜுனசம்வாதத்தில்
பதின்மூன்றாம் அத்தியாயம் முடிந்தது.

|| ॐ ||

|| चतुर्दशोऽध्यायः ||

பதினான்காம் அத்தியாயம்.

|| गुणत्रयविभागयोगः ||

குணத்திரயவிபாகயோகம்.

|| श्रीभगवानुवाच ||

परं भूयः प्रवक्ष्यामि ज्ञानानां ज्ञानमुत्तमम् ।
यज्ज्ञात्वा मुनयः सर्वे परां सिद्धिमितो गताः || १ ||

[௫௨௪] ஸ்ரீபகவான் சொல்லலாயினார்:—எதனையறிந்து எல்லாமுனிவர்களும் இங்கிருந்தும் மேலானசித்தி(பரமுத்தி)யை அடைந்திருக்கின்றனரோ, அந்த ஞானங்களுள் உத்தமமானதும், சிரேஷ்டமானதுமான ஞானத்தை மறுபடியும் சொல்லுகின்றேன். (௧)

इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः ।
सर्गेऽपि नोपजायंते प्रलये न व्यथंति च ॥ २ ॥

[௫௨௫] இந்த ஞானத்தைப்பற்றி என் சமானதர்மமுடைமையடைந்தவர்களாய்ச்சிருஷ்டிகாலத்திலும் பிறக்கமாட்டார்கள். பிரளயத்திலும் துன்புறார்கள். (௨)

मम योनिर्महद्ब्रह्म तस्मिन् गर्भं दधाम्यहम् ।
संभवः सर्वभूतानां ततो भवति भारत ॥ ३ ॥

[நிஉகூ] பாரதா! (அபரிச்சின்னமாயிருத்தலால்) மகத்தாகிய (தன்காரியங்களின் விருத்திக்கேதுவாதலால்) பிரஹ்மம் (அவ்வியாகிருதமாகியமாயை) எனது யோனியாம். அதில் யான் (ஈக்ஷணவடிவ விருத்தியாகிய) கர்ப்பத்தைத் தரிக்கின்றேன். அதனினின்று எல்லாப் பூதங்களின் பிறப்பானது உண்டாகின்றது. (௩)

सर्वयोनिषु कौंतेय मूर्तयः संभवंति याः ।
तासां ब्रह्म महद्योनिरहं बीजप्रदः पिता ॥ ४ ॥

[௫௨௭] கௌந்தேயனே! சகலயோனிகளிலும் எந்தவடிவங்கள் உண்டாகின்றனவோ, அவற்றிற்கு மகத்தாகிய பிரஹ்மம் யோனியாம்; யான் பீஜத்தைத்தரும் பிதாவாவன். (௪)

सत्वं रजस्तम इति गुणाः प्रकृतिसंभवाः ।
निबध्नंति महाबाहो देहे देहिनमव्ययम् ॥ ५ ॥

[௫௨௮] மகாபாகுவே! சத்துவம், இராஜசு, தமசு என்று பிரகிருதியினின்றுண்டானவைகளாகிய குணங்கள் தேகத்தில் அவ்வியயமாகிய தேகியைக்கட்டுகின்றன. (௫)

तत्र सत्वं निर्मलत्वात्प्रकाशकमनामयम् ।
सुखसंगेन बध्नाति ज्ञानसंगेन चानघ ॥ ६ ॥

[௫௨௬] பாபமில்லாதவனே! அவற்றுள், நிர்மலமாயிருத்தலால் பிரகாசமுள்ளதும் நோயில்லாததுமான சத்துவம் சுகத்தின் சங்கத்தி(பற்றி)னாலும் ஞானத்தின் சங்கத்தினாலும் கட்டுகின்றது. (௬)

रजो रागात्मकं विद्धि तृष्णासंगसमुद्भवम् ।
तन्निबध्नाति कौंतेय कर्मसंगेन देहिनम् ॥ ७ ॥

[௫௨௦] கௌந்தேயா! ஆசை(பொருளில் இச்சை)பற்று (பெற்றதிலுண்டாகு மிச்சை)க்களைச் செவ்வையாயுண்டாக்குவதான இரஜஸினை இராகவடிவினதென்று அறி. அது தேகியினைக் கர்மசம்பந்தத்தினால் கட்டுகின்றது. (௭)

तमस्त्वज्ञानजं विद्धि मोहनं सर्वदेहिनाम् ।
प्रमादालस्यनिद्राभिस्तन्निबध्नाति भारत ॥ ८ ॥

[௫௩௧] பாரதா! தமசோ! அஞ்ஞானத்தினின்றுண்டாகி யதாய்ச்சர்வதேகிகளையும் மோகிக்கச்செய்வதாமென்று அறி. அது பிரமாதம் (சோர்வு), சோம்பல், நித்திரை முதலியவற்றால் கட்டுகின்றது. (அ)

सत्वं सुखे संजयति रजः कर्मणि भारत ।
ज्ञानमावृत्य तु तमः प्रमादे संजयत्युत ॥ ९ ॥

[௫௩௨] பாரதா! சத்துவம் சுகத்தைச் செவ்வையாய் ஜயிக் (சுககாரியத்தில் மேம்படு)கின்றது. இராஜசு கர்மத்தில் ஜயம்

(மேன்மை) பெறுகின்றது. தமசு ஞானத்தினை மறைத்துப் பிரமாதத்திலும் நல்ல ஜயம் பெறுகின்றது. (௯)

रजस्तमश्चाभिभूय सत्वं भवति भारत ।
रजः सत्वं तमश्चैव तमः सत्वं रजस्तथा ॥ १० ॥

[௩௩] பாரதா! இரஜசினையும் தமசினையும் அடக்கிச்சத்துவமுண்டா (தன்காரியத்தில் பிரவர்த்திக்) கின்றது. இரஜசு சத்துவத்தினையும் தமசினையும், அப்படியே தமசு சத்துவத்தினையும் இரஜசினையும் அடக்கியுண்டாகின்றது. (௧௦)

सर्वद्वारेषु देहेऽस्मिन्प्रकाश उपजायते ।
ज्ञानं यदा तदा विद्याद्विवृद्धं सत्वमित्युत ॥ ११ ॥

[௫௱௪] எப்போது இத்தேகத்தில் எல்லாத்துவாரங்களினு
மே(புத்தியினவிருத்திவடிவ) பிரகாசமாகிய ஞானமுண்டாகி
றதோ, அப்போது சத்துவம் விருத்தியடைந்ததென்று அறிக.

लोभः प्रवृत्तिरारंभः कर्मणामशमः स्पृहा ।
रजस्येतानि जायंते विवृद्धे भरतर्षभ ॥ १२ ॥

[௫௯௫] பரதசிரேஷ்டா! இரஜசுவிருத்தியானபோது லோ
பம், பிரவிருத்தி(முயற்சி), கர்மங்களின் ஆரம்பம், சாந்தியி
(ஒழிவி)ன்மை, ஆசை இவையுண்டாகின்றன. (௧௨)

अप्रकाशोऽप्रवृत्तिश्च प्रमादो मोह एव च ।
तमस्येतानि जायंते विवृद्धे कुरुनंदन ॥ १३ ॥

[நுஙசு] குருநந்தனு! தமசுவிருத்தியாகவே அப்பிரகாசம் (அறியாமை), அப்பிரவிருத்தி (முயற்சியின்மை), பிரமாதம், மோகம் (மயக்கம்) என்பவை உண்டாகின்றன. (கங)

यदा सत्त्वे प्रवृद्धे तु प्रलयं याति देहभृत् ।
तदोत्तमविदां लोकानमलान्प्रतिपद्यते ॥ १४ ॥

[நுஙஎ] ஆனுல் தேகந்தாங்கியவன் எப்போது சத்துவகுண மிகமேலிட்ட சமயத்தில் பிரலயத்தையடை(மரிக்)கின்ருனே, அப்போது உத்தமஞானிகளின் அமலமான (சத்தியாதி) லோகங்களை அடைகின்ருன். (கச)

रजसि प्रलयं गत्वा कर्मसंगिषु जायते ।
तथा प्रलीनस्तमसि मूढयोनिषु जायते ॥ १५ ॥

[௫௱௪] இரஜோகுணமதிகரித்தபோது மரணமடையின், கர்மசங்கி(சகாமபுருஷர்)களில் பிறக்கின்றான். அப்படியே தமசில் மரித்தவனாய் மூட(திரியக்கு தாவரமுதலிய)யோனிகளில் பிறக்கின்றான். (௧௫)

कर्मणः सुकृतस्याहुः सात्विकं निर्मलं फलम् ।
रजसस्तु फलं दुःखमज्ञानं तमसः फलम् ॥ १६ ॥

[௫௱௪௧] புண்ணியகர்மத்தின் நிர்மலமான பயனைச்சாத்து

விக(சத்துவகாரிய)மென்பர். இராஜசினுக்கோ துக்கம் பயனும். தமசிற்கு அஞ்ஞானம் பயனும். (கசு)

सत्वात्संजायते ज्ञानं रजसो लोभ एव च ।
प्रमादमोहौ तमसो भवतोऽज्ञानमेव च ॥ १७ ॥

[நிசா०] சத்துவத்தினின்றும் ஞானமுண்டாகின்றது. இராஜசினின்றும் லோபமே(யுண்டாகின்றது). தமசினின்று பிரமாதமும் மோகமும் உண்டாகின்றன. அஞ்ஞானமும் உண்டாகின்றது. (கஎ)

ऊर्ध्वं गच्छंति सत्वस्था मध्ये तिष्ठति राजसाः ।
जघन्यगुणवृत्तिस्था अधो गच्छंति तामसाः ॥ १८ ॥

[௫௪௧] சத்துவகுணத்துள்ளார் மேற்(உயர்பிறப்பிற்)செல்லுகின்றனர். இரஜோகுணத்துள்ளார் இடையி(மனிதவுலகத்தி)லிருப்பர். தாழ்ந்த(தமோ) குணவிருத்தியுள்ள தாமஸகுணமுடையார் கீழ்ச்(நரகத்தில் அல்லது திரியக்காதியோனியில்) செல்லுகின்றனர். (௧௮)

नान्यं गुणेभ्यः कर्तारं यदा द्रष्टानुपश्यति ।
गुणेभ्यश्च परं वेत्ति मद्भावं सोऽधिगच्छति ॥ १९ ॥

[௫௪௨] எப்போது திருஷ்டாவானவன் குணங்களுக்குவேறாகக்கர்த்தாவைக் காண்கிறதில்லையோ, குணங்களுக்கு அப்

பாற்பட்டதை (நிர்க்குணவஸ்துவை) க்காண்கிறானோ, அவன் எனது தன்மையை அடைகின்றான். (கசு)

गुणानेतानतीत्य त्रीन्देही देहसमुद्भवान् ।
जन्ममृत्युजरादुःखैर्विमुक्तोऽमृतमश्नुते ॥ २० ॥

[ருசரு] தேகத்தினின்றுண்டானவைகளாகிய இம்மூன்று குணங்களையும் கடந்து ஜன்மமரணஜராதுக்கங்களினின்று விடுபட்டவனுய்த் தேகியானவன் அமிர்தத்தையடைகின்றான். ()

॥ अर्जुन उवाच ॥

कैर्लिङ्गैस्त्रीन्गुणानेतानतीतो भवति प्रभो ।
किमाचारः कथं चैतांस्त्रीन्गुणानतिवर्तते ॥ २१ ॥

[௫௪௪] அர்ஜுனன் சொல்லலாயினான்:-பிரபுவே! இம்மூன்று குணங்களையும் கடந்தவன் எவ்வடையாளங்களோடு இருப்பன். எவ்வாசாரமுடையவன். இந்தமூன்று குணங்களையும் எப்படிக் கடப்பன்? (உக)

॥ श्रीभगवानुवाच ॥

प्रकाशं च प्रवृत्तिं च मोहमेव च पांडव ।

न द्वेष्टि संप्रवृत्तानि न निवृत्तानि कांक्षति ॥ २२ ॥

[௫௪௫] ஸ்ரீபகவான் சொல்லலாயினார்:-பாண்டவா! பிரகாசம், பிரவிருத்தி, மோகம் என்னும் அவைபிரவிருத்தித்தால்

துவேஷிக்கிறதில்லை. நீங்கினால் விரும்புகிறது மில்லை. (௨௨)

उदासीनवदासीनो गुणैर्यो न विचाल्यते ।
गुणा वर्तत इत्येव योऽवतिष्ठति नेंगते ॥ २३ ॥

[௱௰௯] எவன் உதாசீனனைப்போலிருப்பவனாய்க் குணங்களால் அசைப்பிக்கப்படானோ, குணங்களே இருக்கின்றன என்று எவன் அசையாதிருக்கின்றானோ, (அவை தாக்கினும்) சலிக்கிறதில்லையோ, (௨௫)

समदुःखसुखः स्वस्थः समलोष्टाश्मकांचनः ।
तुल्यप्रियाप्रियो धीरस्तुल्यनिंदात्मसंस्तुतिः ॥ २४ ॥

[௫௪௭] சுகதுக்கசமமுள்ளவனாய், ஸ்வஸ்த(தன்னிஷ்டப்படி சமாதியிலிருப்பவ)னாய், மண்ணாங்கட்டி, கல், பொன் என்பவற்றிற் சமமானவனாய், பிரியாப்பிரியங்களில் சமமானவனாய், தனது நிந்தை ஸ்துதிகளில் சமமானவனாய், தீரனாய், (௨௪)

मानापमानयोस्तुल्यस्तुल्यो मित्रारिपक्षयोः ।
सर्वारंभपरित्यागी गुणातीतः स उच्यते ॥ २५ ॥

[௫௪௮] மானவமானங்களில் சமமானவனாய், மித்திருசத்துருபக்ஷங்களில் சமமானவனாய், எல்லாச் செய்கைகளையும்

விடுமியல்பினவனாயிருக்கின்றானோ, அவன் குணாதீதனெனப் படுகின்றான். (௨௫)

मां च योऽव्यभिचारेण भक्तियोगेन सेवते ।
स गुणान्समतीत्यैतान् ब्रह्मभूयाय कल्पते ॥ २६ ॥

[௫௬] எவன் என்னை வியபிசாரமின்றிய பக்தியோகத்தினால் சேவிக்கின்றானோ, அவன் இந்தக் குணங்களைச் செவ்வையாய்க் கடந்து, பிரஹ்மத்தன்மைக்குச் சமர்த்தனாகின்றான்.()

ब्रह्मणो हि प्रतिष्ठाहममृतस्याव्ययस्य च ।
शाश्वतस्य च धर्मस्य सुखस्यैकान्तिकस्य च ॥ २७ ॥

[௨௭] எதனாலெனின், யான் அமிர்தமும் அவ்வியயமுமாகிய வேதங்கட்கும், சாசுவதமான தர்மத்திற்கும், வியபிசாரமின்றிய சுகத்திற்கும் பிரதிஷ்டை(பரமாவதி)யாயிருக்கின்றேன்.

॥ इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ॥
॥ श्रीकृष्णार्जुनसंवादे ॥
॥ चतुर्दशोऽध्यायः ॥

இவ்வாறு ஸ்ரீபகவத்கீதையாகிய உபநிஷத்தில்
ஸ்ரீகிருஷ்ணார்ஜுன சம்வாதத்தில்
பதினான்காம் அத்தியாயம் முடிந்தது.

|| ॐ ||

|| पञ्चदशोऽध्यायः ||

பதினைந்தாம் அத்தியாயம்.

|| पुरुषोत्तमयोगः ||

புருஷோத்தமயோகம்.

|| श्रीभगवानुवाच ||

ऊर्ध्वमूलमधःशाखमश्वत्थं प्राहुरव्ययम् ।
छंदांसि यस्य पर्णानि यस्तं वेद स वेदवित् || १ ||

[௫௫௧] ஸ்ரீபகவான் சொல்லலாயினார் :—மேல்வேருள்ளதும், கீட்கிளையுள்ளதுமான அசுவத்தத்தினை(அரசினை) (ஜைமினிமுதலியோர்) அவ்வியயமென்பர். எதற்குச் சந்தசுகள் இலைகளாயிருக்கின்றனவோ அதனை எவன் அறிகின்றானோ அவன் வேதமுணர்ந்தவனாவன். (க)

अधश्चोर्ध्वं प्रसृतास्तस्य शाखा गुणप्रवृद्धा विषयप्रवालाः ।
अधश्च मूलान्यनुसंततानि कर्मानुबंधीनि मनुष्यलोके ॥ २ ॥

[௫௫௨] அதன் கிளைகள் கீழும் மேலுமாகவிரிந்திருக்கின்றன. குணத்தினால் மிகவிருத்தியடைந்திருக்கின்றன. விஷய

மாகிய இளந்தளிர்களையுடையன. கீழே மனுஷ்யலோகத்தில் தொடர்ந்தனவும், கர்மத்தால் பின்பற்றப்படுவனவுமான விழுதுக(அவாந்தரகாரணங்க)ளுள்ளனவாம். (உ)

न रूपमस्येह तथोपलभ्यते नांतो न चादिर्न च संप्रतिष्ठा ।
अश्वत्थमेनं सुविरूढमूलमसंगशस्त्रेण दृढेन छित्त्वा ॥ ३ ॥

[ருருரு] இங்கே(பிரஹ்மத்தில்)இதனுடைய அத்தன்மையான(சத்தியமான)வடிவம் அறியப்படுகிறதில்லை; (பிரவாக அநாதியாகலின்)ஆதியும் அறியப்படுகிறதில்லை. (ஞானபரியந்தம் கெடாமையின்)அந்தமும் அறியப்படுகிறதில்லை. (மித்தையாதலின்)இருப்பும்(லயஸ்தானமும்) அறியப்படுகிறதில்லை.

மிகத்திடமானவேர்(விழுது)களையுடைய இவ்வச்சுவத்தத்தினை திடமான அசங்க(பற்றின்மையாகிய) ஆயுதத்தினால் சேதித்து,

ततः पदं तत्परिमार्गितव्यं यस्मिन्गता न निवर्तंति भूयः।
तमेव चाद्यं पुरुषं प्रपद्ये यतः प्रवृत्तिः प्रसृता पुराणी ॥ ४ ॥

[ருருச] அதன்பின் எதில்சென்றவர்கள் மறுபடியும் நீங்குகிறதில்லையோ, அப்பதம் விசாரிக்கத்தக்கதாம். எவனிடத்திலிருந்து பழைமையான பிருவிருத்தி(படைப்பு)விரிந்திருக்கின்றதோ அவ்வாதிபுருஷனையே அடைகின்றேன். (ச)

निर्मानमोहा जितसंगदोषा अध्यात्मनित्या विनिवृत्तकामाः।
द्वंद्वैर्विमुक्ताः सुखदुःखसंज्ञैर्गच्छंत्यमूढाः पदमव्ययं तत् ॥ ५ ॥

[௫௫] மானமோகங்களில்லாதவர்களும்,(யானென்னதெனு ம் அபிமானமாகிய)சங்கதோஷத்தை வென்றவர்களும், அத்தி யாத்மவாயிலாக நித்திய(பரமாத்மசொரூப விசாரத்தில் தற்பர) ரும், காமமொழிந்தவரும், சுகதுக்கப்பெயருள்ளனவாகிய துவந்துவங்களினின்று விசேஷமாய் விடுபட்டவர்களுமாகிய விவேகிகள் அந்த அவ்வியயமான(அழிவின்றிய)பதத்தை அடைகின்றனர். (௫)

न तद्भासयते सूर्यो न शशांको न पावकः ।
यद्गत्वा न निवर्तंते तद्धाम परमं मम ॥ ६ ॥

[௫௬௯] எதனையடைந்து திரும்பாரோ அதனைச் சூரியனும்

விளக்குகிறதில்லை ; சந்திரனும் விளக்குகிறதில்லை ; அக்கினியும் விளக்குகிறதில்லை. அது என்னுடைய மேலானதாம(ஸ்வரூப)மாம். (சு)

ममैवांशो जीवलोके जीवभूतः सनातनः ।

मनःषष्ठानीन्द्रियाणि प्रकृतिस्थानि कर्षति ॥ ७ ॥

[ருருள] ஜீவலோக(க்ஷேத்திர)த்தில் என்னுடைய அம்சமேயான நித்தியமான ஜீவவடிவமாயுள்ளவன் பிரகிருதியிலுள்ளனவாகிய மனதை ஆறாவதாகவுடைய இந்திரியங்களை இழுக்(வெளிப்படுத்து)கிறான். (எ)

यतंतो योगिनश्चैनं पश्यंत्यात्मन्यवस्थितम् ।
यतंतोऽप्यकृतात्मानो नैनं पश्यंत्यचेतसः ॥ ११ ॥

[ருகூக] முயலுகின்ற யோகிகள் ஆத்மாவி(புத்தியி)லிருக்கும் இவனைக்காண்கின்றனர். முயற்சி செய்பவராயினும் அந்தக்கரணசுத்தியில்லாத அவிவேகிகள் இவனைக்காணார். (கக)

यदादित्यगतं तेजो जगद्भासयतेऽखिलम् ।
यच्चंद्रमसि यच्चाग्नौ तत्तेजो विद्धि मामकम् ॥ १२ ॥

[ருகூஉ] ஆதித்தனிடத்திருப்பதாய் எந்தத்தேஜஸிருக்கின்றதோ, சந்திரனிடத்து எஃதிருக்கின்றதோ, அக்கினியினிட

த்து எஃதிருக்கின்றதோ, சகலஜகத்தையும் விளக்குகின்றதோ, அத்தேஜசு என்னுடைய தென்று அறி. (௧௨)

गामाविश्य च भूतानि धारयाम्यहमोजसा ।

पुष्णामि चौषधीः सर्वाः सोमो भूत्वा रसात्मकः ॥ १३ ॥

[நிசுரு] யான் பலத்தினால் பூமியில் (உலகத்துப்) பிரவேசித்து பூதங்களைத் தாங்குகிறேன். இரஸவடிவ சோமனாகி எல்லா ஔஷதி (பயிர்) களையும் புஷ்டியாக்குகின்றேன். (௧௩)

अहं वैश्वानरो भूत्वा प्राणिनां देहमाश्रितः ।

प्राणापानसमायुक्तः पचाम्यन्नं चतुर्विधम् ॥ १४ ॥

[௫௪௪] யான் வைசுவானரனாகி (உதராக்னியாய்)ப்பிராணிகளின் தேகத்தை ஆசிரயித்தவனாய், பிராணாபானன்களோடு கூடியவனாய் நால்வகை உண்டியினையும் பாகஞ்செய்கின்றேன். (௧௪)

सर्वस्य चाहं हृदि संनिविष्टो मत्तः स्मृतिर्ज्ञानमपोहनं च ।
वेदैश्च सर्वैरहमेव वेद्यो वेदांतकृद्वेदविदेव चाहम् ॥ १५ ॥

[௫௪௫] யான் எல்லோருடைய இருதயத்திலும் செவ்வையாய்ப்பிரவேசித்துளன். என்னிடத்திலிருந்து ஸ்மிருதியும், ஞானமும், (அவற்றின்) நீக்கமும் உண்டாகின்றன. சகலவேத

ங்களினுலும் யானே அறியத்தக்கவன்; வேதமுடிவினைச்செய்பவன். யானே வேதமுணர்ந்தவன். (௧௫)

द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च ।
क्षरः सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते ॥ १६ ॥

[நிகசக] உலகத்தில் க்ஷரமும் அக்ஷரமுமாகிய இவ்விரண்டே புருஷருளர். (அவர்களுள்) க்ஷரம் சர்வபூதங்களுமாம். கூடஸ்தன் அக்ஷரம் என்றும் சொல்லப்படும். (௧௬)

उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः ।
यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः ॥ १७ ॥

[ருசுஎ] எந்த அவ்வியயாசுவரன் மூன்றுலகத்தையும் பிரவேசித்துத் தாங்குகின்றானே, அவ்வுத்தமபுருஷனே அந்நியன். அவன் பரமாத்மாவென்று சொல்லப்படுகிறான். (கஎ)

यस्मात्क्षरमतीतोऽहमक्षरादपि चोत्तमः ।
अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः ॥ १८ ॥

[ருசுஅ] எதனால் யான் க்ஷரத்திற்கு அப்பாற்பட்டவனாயும், அக்ஷரத்தினும் மேலானவனாயுமிருக்கின்றேனே, அதனால் உலகத்திலும் வேதத்திலும் பிரசித்தமான புருஷோத்தமனாயிருக்கிறேன். (கஅ)

यो मामेवमसंमूढो जानाति पुरुषोत्तमम् ।
स सर्वविद्भजति मां सर्वभावेन भारत ॥ १९ ॥

[ருசுகூ] பாரதா! எந்த அறிஞன் என்னை இவ்வாறு புருஷோத்தமனென்று அறிகிறானோ அந்தச்சர்வஞ்ஞபுருஷன் எல்லாத்தன்மையாலும் என்னை அடைகின்றான். (கசு)

इति गुह्यतमं शास्त्रमिदमुक्तं मयानघ ।
एतद्बुद्ध्वा बुद्धिमान् स्यात्कृतकृत्यश्च भारत ॥ २० ॥

[ருஎ௦] பாபமற்றவனே! பாரதா! என்னால் இப்படிமிக

விரகசியமான இச்சாஸ்திரம் சொல்லப்பட்டது. இதனையறிந்து புத்திமானும் கிருதகிருத்தியனு மாகின்றான். (உ0)

॥ इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ॥

॥ श्रीकृष्णार्जुनसंवादे ॥

॥ पञ्चदशोऽध्यायः ॥

இவ்வாறு ஸ்ரீபகவத்கீதையாகிய உபநிஷத்தில்

ஸ்ரீகிருஷ்ணார்ஜுனசம்வாதத்தில்

பதினைந்தாம் அத்தியாயம் முடிந்தது.

॥ ॐ ॥

॥ षोडदशोऽध्यायः ॥

பதினாறும் அத்தியாயம்.

॥ दैवासुरसंपद्विभागयोगः ॥

தெய்வாசுரசம்பத்துவிபாகயோகம்.

॥ श्रीभगवानुवाच ॥

अभयं सत्त्वसंशुद्धिर्ज्ञानयोगव्यवस्थितिः ।
दानं दमश्च यज्ञश्च स्वाध्यायस्तप आर्जवम् ॥ १ ॥

[நளக] ஸ்ரீபகவான்சொல்லலாயினர் :–அபயம், சத்துவ (அந்தக்கரண)சுத்தி, ஞானத்திலும் யோகத்திலும் நிஷ்டை, தானம், தமம், யஞ்ஞம், சுவாத்தியாயம், தவம், ஆர்ஜவம் (நேர்மை), (க)

अहिंसा सत्यमक्रोधस्त्यागःशांतिरपैशुनम् ।
